# மஹான் முஹம்மத் நபி

(சல்அம்)

# سيرة الرسول

"தாருல் இஸ்லாம்" ஆசிரியரும்
குர்ஆன் மொழிபெயர்ப் பாசிரியரு மாகிய
அல்ஹாஜ் பா. தாவூத்ஷா பீ. ஏ.,
(கார்ப்பொரேஷன் ஆல்டர்மேன்)
அவர்களால் தையாரிக்கப்பட்டது.

SHAHJAHAN BOOK DEPOT
MADRAS

ஷாஜஹான் புக் டெப்போ
30, சாந்தோம் :: சென்னை - 4

இதன் விலை] 1947 [ரூ. 1—12—0

44109

First Edition—1000 (1941)

Second (revised) Edition—1000 (1947)

Q7:33
N41-2

110575

44109

All Rights Reserved

M. I. P. PROJECT
Microfilmed

Printed at the Sadhu Press, Madras - P.I.C. No. M. S. 115
for The Shahjahan Book Depot, Madras-P.I.C. No. M.S. 218

# முன்னுரை

"நபிகள் நாயக மான்மியம்" என்னும் மாபெரிய நூல் சற்றேறக்குறைய ஏழாண்டுகளுக்கு முன்னே (1933-இல்) எழுதி முடிக்கப்பெற் றிருந்தும், இன்றுகாறும் அதன் இரண்டாவது, மூன்றாவது பாகங்கள் பிரசுரிக்கப் படாமலே மூலையில் உறங்கிக் கிடக்கின்றன. நந்தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்கு நல்லுணர்ச்சி பிறக்குங்கால் அவ் வெஞ்சியுள்ள பகுதிகளிரண்டும் ஆண்டவ னருளால் வெளிப்படுதல் கூடும். அந்த நாயக மான்மியத்தைத் தொடர்ந்து குலபாயெ ராஷிதீன் என்னும் வரிசையின் கீழே அபூபக்ர் சித்தீக்ரலி என்னும் நூல் வெளியா யிருப்பது நுங்களுக் கெல்லாம் இதற்கு முன்பே நன்கு தெரியும்; இப்பொழுது உமரே பாரூக்ரலி என்னும் அரிய நூல் ஒன்று அச்சிலிருந்து வருவதையும் நீங்கள் அறிந்துள்ளீர்கள்; இன்னம் சில வாரங்களில் அது வெளியாய்விடும்.*

அதற்கிடையில் மேற்கூறிய "குலபாயெ ராஷிதீன்" வரிசைக்கு ஏற்றதாகவும், "நபிகள் நாயக மான்மியம்" என்னும் விரிந்த நூலுக்கொரு சுருக்கமாகவும் இருக்கத் தக்க முறையிலே இதுபொழுது மஹான் முஹம்மத் நபிசல்அம் என்னும் இச் சிறுநூல் வெளியிடப்பட் டிருக்கின்றது. இஃது இவ்வாண்டாகிய 1413-ஆவது நபி ஜனன தின (பெருமங்கல) விழாவிற்கு உரியதாகவும் வெளியிடப்பட் டிருக்கின்றது. எனவே, இச் சிறுநூல் சாதாரண காலங்களில் எல்லாரும் படிப்பதற்கும், மீலாத்ஷரீபு வைபவங்களில் வினியோகிப்பதற்கும், புத்த

---

* இதுபொழுது, அபூபக்ர்ரலி உமர்ரலி உதுமான்ரலி அலீரலி ஆகிய நான்கு கலீபாக்களின் உண்மைச் சரிதைகளும் வெளிவந் துள்ளன— பா. தா.

காலயங்களில் வாங்கி வைப்பதற்கும் பொதுவாகவே உபயோகமாய் வரக்கூடு மென்பதே எமது அபிலாஷை யாகும்.

காகிதக் கிரயமும், ஏனை யச்சுக்கூடச் சாமான்களின் விலையும் ஒன்றுக்குநான்காய் உயர்ந்து நிற்கும் இவ் யுத்த கால நெருக்கடியில், (1) இலங்கை யாழ்ப்பாணத்து ஹாஜிகளாய ஆலிஜனுப் வீ. எம். எம். எஸ். அப்துல் காதிறு தம்பதிகள் ரூபாய் ஒரு நூறும், (2) தூத்துக்குடி மாபெருவர்த்தகர் ஆலீ ஜனுப் எஸ். கே. எம். ஜீ. காதர் மொஹிதீன் தரகனாரும் அவர்தம் சகோதரரும் ரூபாய் ஐம்பதும் நன்கொடையளித் துதவியிருப்பதால், இது பொழுது இந்நூல் இவ்வாண்டு மீலாத்ஷரீபு முடியு மட்டும் ப்ாதிக் கிரயமாகிய 4 அணுவுக்கே விற்கத்தக்க வசதி ஏற்பட்டிருக்கிறது; இனிச் சாதாரண காலங்களில் இதன் விலை 8 அணுவாகத்தான் இருந்துவரும். எனவே, மேற் கூறப்பட்டுள்ள முஸ்லிம் பேரபிமானிகளுக்கு நாமும், நந்தமிழ்நாட்டு முஸ்லிம் பெருமக்களும் என் றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட் டுள்ளோம். இவ்வாறே ஏனை முஸ்லிம் பேரபிமானிகளும் தத்தம்மா லியன்ற தொகையைச் சம்மானமாக அல்லா(ஹ்)வின் பொருட்டு அருளக் கூடுமாயின், அவர்கள் பெயராலும் அவரவ ரளிக்கும் ரூபாய்களைப் போன்ற நான்கு மடங்கு அதிகமாயுள்ள இந்நூற் பிரதிகளை 4 அணுவீதமே பொது மக்களுக்குக் கொடுத் துதவலாம்.

எடுத்துக்காட்டாக, ஒரு தனவந்தர் ஒரு நூறு ரூபாய் வெகுமதி யளிப்பதாய் வைத்துக் கொள்வோம்; அப் பொழுது 400 பிரதிகள் வரை அவர் பெயரால் 4 அணு வீதமே 400 மக்களுக்கு விநியோகிக்கப்படல் கூடும். எனவே மாஹன் முஹம்மத் நபி ஸல்அம் அவர்களைப்பற்றிய சுருக்கமாயுள்ள விருத்தாந்த மொன்று இத் தமிழ்நாடு முழுதும் இலக்ஷக்கணக்கில் பரவுவதற்குத் தக்க ஏது

உண்டாய்விடும். இவ் ஆலோசனையை அனைவரும் தங் கருத்திலிருத்திப் பிரசாரம் புரியத் தலைப்படுவார்களென்றே யாம் திண்ணிதாய் எண்ணியிருக்கின்றோம்.

இதற்கு வேண்டிய நல்ல இருதயத்தை எல்லார்க்கும் எல்லாம்வல்ல இறைவன் ஈந்தருளக் கடவானாக. ஆமீன்!

சென்னை,
31—3—'41.

தங்க ளுண்மையுள்ள,
பா. தாவூத்ஷா

---

## 2-ஆம் பதிப்பின் முகவுரை

இந்நூல் இரசூல் நாயகத்தைப் பற்றி உள்ளவாறு உணரவிழையும் அயல்மத வாதிகளை யுள்ளிட்ட அனைவரும் அறிந்துணருமாறே வரையப்பட்டுள்ளது. எனவே, இப்பதிப்பில் அயல்மதப் பெரியார்களின் அபிப்பிராயங்கள் பல சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதற்குப் பணஉதவி செய்தவர்கள்......

இன்னம் பலர் உதவிபுரிந்தால், பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டுப் பரத்தலாம். அயல்மத சோதரர்கட்கு இனாமாகப் பிரதிகள் கொடுக்கப்பட வேண்டியிருப்பதால், இதற்கு இத்தமிழ்நாட்டுப் பெருந்தனிகர்கள் உதவிபுரிய மாட்டார்களா? பேனாவின் பிரசாரப் பெருமையை உணர மாட்டார்களா? "அல்லா(ஹ்)வுக்கு அழகான கொடையாகக் கொடைகொடுப்பவன் எவனோ? அப்பால், அவன் அதனை அதிகமான இரட்டிப்புக்களாக இரட்டிக்கச் செய்கிறான்; அல்லா(ஹ்)வே (ஐசுவரியத்தை) விரிக்கிறவனா யிருக்கிறான்; இன்னம், அன்னவன் பக்கலே நீங்கள் மீட்பிக்கப் பெறுவீர்கள். (குர். 2 : 245)

தங்கள் பக்ஷம் மறவாத :

30, சாந்தோம்,
15-9-'47.

பா. தாவூத்ஷா

بلغ العلى بكماله ❁ كشف الدجى بجماله

حسنت جميع خصاله ❁ صلوا عليه وآله

"பகுத்தறிவைக் காட்டினும் மேலானதை யாவது, அல்லது அதைக் காட்டினும் முழுப் பரிபூரணமானதை யாவது, அல்லது அப் பகுத்தறிவைக் காட்டினும் மிக அழகானதை யாவது ஆண்டவன் இவ்வுலகினில் (ஏதொன்றையும்) படைக்கவில்லை. இந்தப் பகுத்தறிவின் பயனாகத்தான் ஆண்டவன் நமக்கு நன்மையை அளிக்கிறான்; காரியா காரியங்களின் நன்மை தீமையும் இந்தப் பகுத்தறிவினாலேதான் உண்டாகின்றன. மேலும் ஆண்டவனுடைய கோபமும் நாம் நம்முடைய பகுத்தறிவைச் செவ்வனே உபயோகிக்காததனால்தான் உண்டாகின்றது. இன்னம், இதன் காரணமாகத்தான் நமக்குச் சம்மானமும் தண்டனையும்கூடக் கிடைக்கின்றன."

—(நாயக வாக்கியம்)

# விஷய அட்டவணை


| எண் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| | முன்னுரை | | iii |
| 1. | அரப் நாட்டின் ஆதிகால நிலைமை | ... | 1 |
| 2. | திரு நபியவதாரமும் பால்ய பருவமும் | ... | 6 |
| 3. | நபிபெருமான் மதப் பிரசாரம் | ... | 16 |
| 4. | முஸ்லிம்களின் முதல் ஹிஜ்ரத் | ... | 21 |
| 5. | நபி பெருமான் தாயிபுக்குச் சென்றது | ... | 26 |
| 6. | மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்லல் | ... | 31 |
| 7. | மக்கமா நகர் பிடிபடல் | ... | 42 |
| 8. | நபி பிரான் நிர்யாண மடைதல் | ... | 49 |
| 9. | நபி பெருமானது மாபெரும் வெற்றி | ... | 50 |
| 10. | இஸ்லாமும் வாளாயுதமும் | ... | 67 |
| 11. | இஸ்லாத்தைத் துறந்தவர் கதி யாது | ... | 78 |
| 12. | பாபமற்ற புண்ணிய சீலர் | ... | 81 |
| 13. | பலதார மணம் | ... | 82 |
| 14. | எத்தகைய வாழ்க்கை நடாத்தப்பட்டது | ... | 96 |
| 15. | எப்பொழுது பலதாரங்கள் கொள்ளப்பட்டனர் | ... | 108 |
| 16. | ஜைனபின்ரலி திருமணம் | ... | 112 |
| 17. | நான்காவது பருவம் | ... | 115 |
| 18. | நடக்கையும் ஒழுக்கமும் | ... | 121 |
| 19. | அஹ்மத் நபியைப்பற்றி அன்னியரநேகர் அறைவன | ... | 138 |
| 20. | கொடுமை யிழைத்தனரென்னும் குற்றச்சாட்டு | ... | 194 |

# தாருல் இஸ்லாம்

(இஃதொரு சீரிய செந்தமிழ்ச் சஞ்சிகை)

ஆசிரியர் : அல்ஹாஜ் பா. தாவூத்ஷா பீ. ஏ.

தூங்கிக் கிடந்த நந்தமிழ் முஸ்லிம்களைத் தட்டியெழுப்பி, மூடிக்கிடந்த கண்களை முழுக்கத் திறந்து வைத்து, மூடக் கொள்கைகளை மூன்றுகாதம் முடுக்கி விட்டு, மார்க்கபக்தியை அனைவர்க்கும் அள்ளிச் சொரிந்து, சமூக அனுசார விபரீதப் போக்கை வேருடன் களைந்து, முஸ்லிம் வாலிபர்களின் உதிரத்துள் உணர்ச்சிமிக்க உத்வேகத்தை ஊட்டி, கல்வித் துறையில் முன்னேற்றத்துக்கு வழிகோலி, உங்களெல்லீரின் உள்ளத்துள்ளும் என்றென்றும் மிகப் பெருமையுடன் சென்ற கால்நூற்றாண்டு காலம் நின்றிலங்கித் திகழ்ந்த தா. இ. த்தின் இம் மாசிகை இதுபொழுது மீண்டும் உங்களிடையே அரசியல், சமூக, சமய, பொருளாதாரக் கல்வித் துறைகளில் சேவைசெய்ய முன்வந்திருக்கிறது. இதன் முதல் இதழ் 1947 அக்டோபர்மீ முதல் வெளியாகி வருகின்றது.

வருஷ சந்தா இந்தியா, சிலோன் ரூ. 4 8 0

தனிப்பிரதி அணு 6.

பர்மா, மலாயா ரூ. 6 தனிப்பிரதி அணு 8.

பொறுப்பாசிரியர் : N. B. அப்துல் ஜப்பார் பீ. ஏ.

இங்ஙனம் :

மானேஜர் : இ. அப்துர் ரஹ்மான்

"தாருல் இஸ்லாம்", 30, சாந்தோம், சென்னை—4

بسم الله الرحمن الرحيم

نحمده ونصلي ونسلم على رسوله محمد خاتم النبيين

# மஹான் முஹம்மத் நபி

(சல்அ'ம்)

## நபிநாயகர் துதி

கவியால் உரைத்தபுகழ் பெறுவார் மிகுத்தகவி
அடைவார் கலக்கம் அறவே
செவியார மெய்ப்பொருளை யறிவார் மனத்தினுறு
செயல்கே(டு) அகற்றி விடுவார்
புவியார மொய்த்தநெறி மறைநாவி னுக்குமொரு
பொறியாய் உதித்த வடிவார்
நவியார் சுவர்க்கபதி நயினார் பதத்துணையை
நடுநாவில் வைத்த வர்களே—சீரு.

## அரப் நாட்டின் ஆதிகால நிலைமை

நம் மஹான் அரப் நாட்டின் தலைநகராய திரு மக்காவிலே, கி. பி. 571-இல் ஒரு திங்கட்கிழமை விடியற் காலையில்—"யானை யாண்"டின் ரபீஉல் அவ்வல் மாதம் பிறை 9-இல்—அத் தேயத்தின்கண் சிறப்புற்று விளங்கிவந்த சிரேஷ்டம் வாய்ந்த கோத்திரமாம்

குறைஷி குலத்தில், அப்துல் முத்தலிபின் கனிஷ்ட குமாரராகிய அப்துல்லாவுக்கு, அவருடைய பிரிய பாரியாள் ஆமினு என்பவர் திருவயிற்றிலே உதிக்கலாயினார்;—(அல்லாஹ்வின் ஆசியும் சாந்தியும் அன்னவர் மீது அமையக்கடவன.) அதுகாலை அரப்நாடு மட்டுமல்லாமல், இக் குவலயத்தின் ஏனைப் பகுதிகளெல்லாமுங்கூட அஞ்ஞான மென்னும் அந்தகாரத்துள்ளே அதிகம் ஆழ்ந்து தாழ்ந்து கிடந்தன வென்பதற்கு அவ்வத்தேயச் சரித்திரங்களே சான்று பகர்ந்துகொண்டிருக்கின்றன. நம் மஹானுபாவருக்கு ஐந்து நூற்றுண்டுகளுக்கு முன்னேதான் இயேசுகிறிஸ்து (ஈஸா நபி) ஆசியாவின் மேற்குப் பகுதியிலும், அவருக்கு ஐந்து நூற்றுண்டுகளுக்கு முன்னேதான் கௌதம புத்தர் ஆசியாவின் கிழக்குப் பகுதியிலும் அவதரித்து, ஆத்மஞான உபதேசம் புரிந்து சென்றிருந்தும், கி. பி. ஆருவது நூற்றுண்டில் எல்லா மேற்குத்தேசங்களும், எல்லாக் கிழக்குத் தேசங்களும் நாகரிகத்திலும் நல்லொழுக்கத்திலும், ஞானவிகாசத்திலும்மோனப்பெருவெற்றியிலும் மிகமிகத் தாழ்ந்த அதலச் சேற்றிலே அதிகம் ஆழ்ந்துபோய்க் கிடந்தன.*

---

*" நெறிநிலை திரியா மருள்மதம் மிகுந்து
நெடுநிலம் எங்கணும் பரந்து
துறவறம் தவறி இல்லறம் மடிந்து
சுடரிலா மனையது போலக்
குறைபடும் காலம் இருளெனும் குபிரின்
குலமறுத்(து) அறநெறி விளக்க
மறுவிலா(து) எழுந்த முழுமதி போல
முஹ(ம்)மது நபிபிறந் தனரே"—சீறு.

நம் பெருமானார் திருவவதாரம் புரிந்த அப்பண்டைக் காலத்தில், இத்தரணியின் வேறெந்தப் பகுதியிலும் கண்டிருக்க முடியாத மாதிரியிலே அத்துணைக் கொடுமையான விக்கிரகத் தொழும்பினுள்ளே அவ்வரப்நாடு சிக்கிச் சுழன்றுகொண்டு கிடந்தது. அந்நாட்டின் ஆத்மஞான சாகரத்தின் மத்திபஸ்தானமாய் விளங்கிவந்த கஃபா வென்னும் ஏகேசுவர ஆலயத்தின் உட்புற முழுதும் சற்றேறக்குறைய 360-க்குக் குறையாத விக்கிரஹங்கள் நிறுவப்பெற்றிருந்தன; அதுவேயுமன்றி, ஒவ்வொரு வீட்டிலும் 'குலதெய்வ' மென்ற 'சாமி' யொன்று கும்பிடப்பட்டே வந்தது. செதுக்கப் படாத கரடுமுரடான கற்கள், மரங்கள், மணல்மேடுகள் ஆதியவெல்லாங் கூடத் தெய்வங்களென்றே பக்திசிரத்தையுடன் பலவாறு வணங்கப் பட்டு வந்தன. இத் தன்மைத்தாய, அகன்று ஆழமாய் வேரூன்றிக் கிடந்த விக்கிரஹ வணக்கம் (உருவ வழிபாடு) அந்நாடு முழுதும் அதிகமாயே மலிந்து காணப்பட்டு வந்தும், அக்கால அரபிகள் அநேகமாய் லோகாயதர்களாகவே யிருந்துவந்தார்கள்; ஏன்னெனின், அவர்கள் பாடிவந்த பாடல்களுள் பெரும்பான்மையன, "அருந்துங்கள், பருகுங்கள், அனுபவியுங்கள்," என்று சொல்லக் கூடிய சுகபோக வாழ்க்கைக்குரிய சிற்றின்பச் செய்திகளே நிரம்பப் பெற்றனவாய் மிளிர்ந்துகொண் டிருக்கின்றன.

மரணத்துக்குப் பின்னால் மனிதனுக்கொரு மறுவுலக வாழ்க்கை யுண்டென்பதை அம்மக்கள் ஏற்றுக் கொண்டன ரில்லை; ஆகவே, ஒருவர் தம்முடைய

செய்கைக்குத் தாமே ஜவாப்தாரி யென்னும் உத்தர வாதக் கொள்கையையும் அன்னுர் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனாலும், அன்னவர்கள் பூதபைசாசங் கள்மீது நம்பிக்கை மிக்கவர்களாயே யிருந்துவந்தார் கள்; கொடிய ஷைத்தான்களாலேயே வியாதிகள் உற் பத்தியாகின்றன வென்று அன்னவர்களால் எண்ணப் பட்டு வந்தது. அஞ்ஞான மென்பது அனைவரா லும்—சிறியோர் பெரியோர் ஆகிய எல்லோராலும்— பொதுவாக மேற்கொள்ளப்பட்டே வந்தது; ஆகவே, அம்மக்களுள் மிகப்பெரிய மனிதர்களும் தமக்குள்ள அறியாமையைக் குறித்தும் அஞ்ஞானத்தைக் குறித் தும் பெருமையாகவே பேசிக்கொள்வர். ஒழுக்கத் தைப் பற்றிய சட்டமொன்றும் அவர்கள்பால் இருந்த தில்லை; எனவே, தீயொழுக்கமென்பது அம் மாகா ணத்து மறமாக்கள்பால் முகடுமுட்டியே போய்விட் டிருந்தது. சதிபதி சத்தொழுக்கமென்பது மிகவும் கயமையான நிலைமைக்கே சென்று இழிந்து கிடந்தது. அஸப்பியமான அருவருப்புள்ள பாடல்களும் பாட்டுக் களுமே பகிரங்கக் கூட்டங்களில் சர்வ தாராளமாய்ப் பாடப்பட்டு வந்தன. வியபிசாரத்துக்குத் தண்டனை யொன்றும் விதிக்கப்படுவது அவ்வரப் நாட்டில் அனுஷ்டானத்தி லில்லை; ஆசாரத்துக்கு அஃதோர் இழுக்கென்று கொள்ளப் படுவதும் கிடையாது. அவ் வாறு, வியபிசார மென்னப்படுவது ஒரு கௌரவ ஹானியான தோஷமென்று கருதப் படாமையால், பெரும்பெரும் தலைவர்களும் வியபிசார விடுதிகள் பல வைத்து வியாபாரம் செய்துவருவா ராயினர்கள்.

ஸ்திரீகள், "மகா கேவலமான அந்தஸ்தில், ஹிந்துஸ் தானத்தின் மனுவினுடைய சட்டங்களில் பெண்மணி கள் அளிக்கப் பெற்றுள்ள அந்தஸ்தைப் பார்க்கினும் மிகவும் இழிவான அந்தஸ்திலே" இருந்துவந்தார்கள்—(பாஸ்வொர்த் ஸ்மித்).

ஸ்திரீ ரத்னங்கள் ஆடுமாடுகளைக் காட்டினும் அதிகங் கேவலமான அந்தஸ்திலே வெறுந் தட்டு முட்டுச் சாமான்களே போலத்தாம் நடாத்தப்பட்டார்கள். அப் பெண்மணிகள் தாய்தந்தையர் சொத்தினின்று ஒருசிறிதும் பாகம்பெறுமற் போவதுடன் நில்லாது, அவர்களேயும் ஒரு பாகப்பிரிவினைக் குரிய அனந்தரச் சொத்தாய்ப் பாவிக்கப்பட்டு வந்தார்கள்; தனைய ஞெருவன் தந்தையின் மறுதாரங்களைத்—தன்னுடைய சொந்த மாற்றாந்தாய்மார்களைத்—தனக்கு வேண்டிய 'வைப்புக்க'ளாக வைத்துக்கொள்ள விரும்பாத வேளை களில் அம் மாதரார்களை, ஆடுமாடுகளை விற்பதேபோல் விற்ருே, அல்லது ஏலம்போட்டோ விலக்கிவிடுவான்.

அக் காலத்தில் ஒழுங்கான சட்டரீதியா யுள்ள அரசாங்கம் ஒன்றும் அந்நாட்டில் இருந்ததில்லை; நியா யப்பிரமாண ஒழுங்கென்பதே அவ் வரபிகளுக்கு அணுத்துணையும் தெரியாது. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்பதுதான் அம் மறமாக்கள்பால் அதி கம் காணப்பட்டு வந்த ஒரே ஒழுங்குமுறையா யிருந் தது. அவர்களெல்லாரும் ஒரே மக்களினத்தைச் சார்ந் தவர்கள்; மேலும், ஒரே மொழியையே பேசிவந்தார் கள். எனினும், அன்னவர்கள் தங்களுக்குள்ளே மிக வதிகம் பிளவுபட்டுக் கிடந்தார்கள். சர்வ சாதாரண

விஷயங்களுக் கெல்லாமும் ஒரு கோத்திரத்தார் மற்றொரு கோத்திரத்தார்மீதும், ஒரு குடும்பத்தினர் பிறிதொரு குடும்பத்தினர்மீதும் போரைக்கிளப்பி, பல தலைமுறைவரை அதனை நீடித்துக்கொண்டே செல்வர். அதுபொழுது அவர்களுள் பலாட்டியர் பலஹீனர்மீது ஏறித் தொகைத்து, அவ் வெளியாரின் உரிமைக ளனைத்தையும் அந்த வலியார் தகைந்தொழித்து விடுவர்; ஆனால், அவ்வெளிய மக்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகட் கெல்லாம் எவ்விதப் பரிகாரமும் தேடிக்கொள்ள முடியாதவர்க ளாகவேயிருந்துவந்தார்கள். ஆகவே, அநாதக் குழந்தைகளும் அகதி விதவைகளும் மிக மிகப் பரிதபிக்கத்தக்க முறையிலே உதவுவாரற்றுக் கிடந்தார்கள்; அடிமைகளோ, அந்தோ! மிகவுங் கொடிய முறையிலே கொடுங்கோன்மையுடனே நடாத்தப்பட்டு வந்தார்கள்.

---

## திருநபி யவதாரமும் பால்ய பருவமும்

இப்படிப்பட்ட மாபெரு முழுமக்க ளிடையேதான் நம் மஹானுபாவர் அக் காலத்திலே அவதாரம் புரிந்தார்கள்; நம்மஹான் ஜனனமாவதற்குச் சில மாதங்களுக்கு முன்னே அன்னவரின் தந்தையார் தேகவியோகமாய்ப் போய்விட்டார். அவதரித்து ஆறு வய தாயக்கால், அன்னை ஆமினுவும் ஆண்டவனது திருவடிநிழலை அடைந்துவிட்டார். அரபிகளுள் மகா ஸெளாக்கியம் பெற்று விளங்கிவந்த குறைஷி குலத்தின் ஒருயரிய குடும்பத்திலே—ஹாஷிம் குடும்பத்தில்—நம்

மஹறான் அவதரித் திருந்தும், ஏனையெல்லா அரபிமக்களையும் போலவே இன்னாரும் பள்ளிக்கனுப்பப் பட்டுப் படிப்பிக்கப்படவே யில்லை; எனவே, இவர்கள் எழுதப் படிக்கத் தெரியாத உம்மியாகவே யிருந்து வந்தார்கள். இவர்கள் அதிபால்யத்தில் சிலகாலம் வரை ஆடுகளை மேய்த்துவந்தார்கள்; என்னெனின், மேற்குல மக்களும் இத்தகைய மேய்க்குந் தொழிலை ஓரிழிய செயலெனக் கருதுவது அந்நாட்டில் வழக்கமில்லை.

அன்னையும் பிதாவுமற்ற ஆறுவயது முஹம்மதை^(ஸல்) அப்பால் அவருடைய பாட்டனார் அப்துல் முத்தலிப் ஈராண்டுகள் வரை ஆதரித்து வரலாயினர்; அதன் பின்னால், அப் பாட்டனாரும் இறந்துபட்ட பிறகு வாலிப முஹம்மதின்^(ஸல்) பெரிய தந்தையாய் விளங்கிவந்த அபூத்தாலிபின் மீதே அவ்வநாதச் சிறுவரை ஆதரிக்க வேண்டிய பொறுப்பனைத்தும் வந்து வீழ்ந்து விட்டது. அப் பெரிய தந்தையார், நம் மினைஞருக்கு வயது 25 ஆகுமட்டும் தம்மிடத்தே வைத்திருந்து, சிரியா—(ஷாம்) முதலிய பகுதிகட்கெல்லாம் சென்று வர்த்தகம் செய்துவரும் முறையைக் கற்றுக் கொடுத்து வந்தார். ஆனாலும், இச்சிறுப் பெரியார் பால் ஆதிமுதலே காணப்பட்டுவந்த மிகவு மேலான ஒழுக்கத்தின் உயர்வுகளே இன்னாரை ஏனைய அரபிகளை விட்டுத் தனியாகப் பிரித்துக் காண்பித்துக்கொண்டிருந்தன. நபிகள் திலகத்தின் உயிர் வாழ்க்கையைக் குறித்து மிகமிக உண்மையுள்ள விஷயங்களை யெல்லாம் உரைத்துக்கொண் டிருக்கும் குர்ஆன் ஷரீபா

னது, நம் மஹானுபாவர் உத்தமோத்தம உயரிய குணங்களை யெல்லாம் நிரம்பப் பெற்றவ ரென்று வருணித்துக்கொண் டிருக்கிறது (68: 4). இவர்கள் பொதுவாகவே எவருடனும் கலவாது தனித்திருக்கும் சுபாவம் நிரம்பப்பெற் றிருந்தமையால், மக்காவாசிகளால் அதிசிலாக்கியத்துடன் கொண்டாடப்பட்டு வந்த அத்துணைப் பெரிய நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளுடனேயே நட்புப்பூண்டு நடந்துவருவார்கள். இவர்களது சத்திய சீலத்தைப்பற்றிக் குர்ஆன் ஷரீபு மெத்த விளக்கத்துடனே அத்தாக்ஷி கூறியிருக்கின்றது (6: 33). இம் மஹானுக்கு நபிப்பட்டம் கிட்டுமுன்னே அம் மக்கா வாசிகளுடனே நாற்பதாண்டுகள் மட்டும் ஒன்றித்து வாழ்ந்துவந்தும், அன்றுகாறும் இன்னவர்கள் பால் ஒழுக்கத்தின் விழுப்பத்தில் ஏதேனுமொரு மாசு மறுவையும் சுட்டிக்காட்ட முடியுமா வென்று இவர்களுடைய ஜன்மவிரோதிகளை எதிர்த்து அறைகூவியழைக்கின்றது எமது திருமறையாம் குர்ஆன் ஷரீபு (10: 16).

பிள்ளைமைப் பருவமுதலே இந்தயுவர் வாய்மையுடைமை, தீமையின்மை, யோக்கியப் பொறுப்பு, ஒழுக்கப்பெருமை, நம்பிக்கைக்குரிய தன்மை ஆதிய சற்குண சன்மார்க்கங்களில் தலைசிறந்து விளங்கியிருந்தமையால், அல் அமீன்—"சரியான நம்பிக்கைக் குரியவர்"—என்னும் இணையில்லாப் பட்டத்தை அத்தேச மக்களால் அளிக்கப்பெற்று,* அம் மக்காவிலே ஒரு

*இப்படிப்பட்ட பட்டத்தினை இவ்வுலகினில் இதுகாறும் வேறெவருமே வேறெங்குமே பெற்றுக்கொண்ட தில்லை யென்க.

தலைமுறைக்கு மேலாகவே வாழ்ந்து வந்தார். விக்கிரஹ வணக்கமே தங்களுடைய நித்தியப் பழக்கமெனக் கொண்டொழுகி வந்த அந்த அரபிமாக்கள் வாழ்ந்து வந்த ஒரு தேசத்தில் நாற்பதாண்டுகள் வரை நடுமத்தியில் வசித்துவந்த நம்மஹானுபாவர் தமது சிறுபிராய முதற்கொண்டே அவ்விக்கிரஹ ஆராதனையை (உருவ வழிபாட்டை) அடியுடன் வெறுத்து வந்தனர்; எந்த விதமான விக்கிரஹத்தின், பூசைக்குரிய பொருளின் முன்னும் இப் பெருமானார் எப்பொழுதுமே தமது சிரத்தைச் சாய்த்து வணக்கம் புரிந்ததில்லை யென்பதற்கு மறுபடியும் குர்ஆன் ஷரீபே சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றது (109: 4). இவரது பால்யத்தில் இவருடைய குணாதிசயம் மகா பரிசுத்தமுள்ளதாயிருந்துவந்த தென்னும் உண்மையை, இன்னாரின் ஜீவியத்தை மிகப்பொல்லாத முறையிலே முழு அழுக்காற்றுடனே வரையத் துணிந்துள்ள ஸர் வில்லியம் மூய்ரும் [இவர் முன்னம் வங்காள கவர்னராயிருந்தவர்] பின்வருமாறு பெருமைப்படுத்திப் பேசியிருக்கின்றார்: "முஹம்மதின் பால்யத்தில், மக்கா வாசிகள்பால் மிகவும் அருகிப்போய்க் காணப்பட்ட அத்தகைய ஒழுக்கத்தின் அடக்கமும், ஆசாரத்தின் விழுப்பமும் மல்கிக் கிடந்தன வென்று நம்முடைய மேற்கோளாசிரியர்களெல்லாம் ஏகோபித்து எழுதிவைத்திருக்கின்றார்கள்." இன்னம், அவரே இவ்வாறும் வரைகின்றார்: "களங்கமற்ற உள்ளமும் விரும்பத்தக்க அபிருசியும் வாய்க்கப் பெற்றவராய், தனித்திருக்கும் சுபாவமும் தியானத்துள் மூழ்கும் இயற்கை யுணர்வும் நிரம்பப் பெற்ற

வராய், இவர் அநேகமாய்த் தம்மைத்தாமே சிந்தனைக் குள் ளாக்கிக்கொண்டு வாழ்ந்துவந்தார்; இவரது ஹிருதயம் ஆராய்ந்துவந்த சிந்தனையானது, முரட்டுச் சுபாவமுள்ள விளையாட்டுக்களிலும் தீநெறிகளிலும் வேறு கீழ்த்தரமாக்கள் செலவிட்டுவந்த அத்தகைய ஓய்வு நேரங்களுக் கெல்லாம், ஐயமில்லாமலே ஒரு நல்ல வேலையைக் கொடுத்துக்கொண்டு வந்தது. பிறர் 'ஜோலி'யில் தலையிடா திருந்துவந்த இந்த வாலிபர் மாட்டுக் காணப்பட்டுவந்த நேர்த்தியான குணுதிசய மும், கண்ணியம் வாய்ந்த நல்ல நடக்கையும் இவரு டைய சகபாடிகளாய உள்ளூர்வாசிகளின் மெச்சு தலைப் பெற்றுக்கொண்டு விட்டன; எனவே, அவர்க ளெல்லாருடைய ஏகோபித்த ஆமோதிப்பின்மீது இன்னவர் அல் அமீன்—சரியான நம்பிக்கைக் குரிய வர் — என்னும் பட்டத்தைப் பெற்றுக் கொண்டு விட்டார்."

மூன்றுவேளை ஆகாரமும், ஐந்துவேளை மதுபான மும் செய்துவந்த அம்மக்கத்து மறமாக்கள் மத்தியிலே நம் மஹானுபாவர் நன்கு வாழ்ந்துவந்தும், இவர்க ளுடைய இதழ்களை ஒரு சிறு மதுத்திவலையும் எப் பொழுதுமே தொட்டது கிடையாது. இவரது பால் யத்தில் அத்தியந்த நண்பராய் இன்னவருடன் நெருங் கிப் பழகிவந்த ஹஜ்ரத் அபூபக்ரும்[ரலி] ஒருபொழுதும் மதுவைத் தொட்டு உருசிபார்த்ததில்லை. மக்காவி லுள்ள மாந்தர் சதா சூதாடுவதிலே பெரிதும் மூழ்கிப் போய்க் கிடந்தனர்; எனினும், அத் தன்மைத்தாய பொழுது போக்குக்களில் நம் மஹான் ஒருசிறிதும்

கலந்துகொண்டன ரில்லை. சாராயம் அருந்துவதே போலத்தான் சண்டையி லிறங்குவதும் அவ் வரபி களுக்கு ஒரொழியாத துர்வழக்கமா யிருந்துவந்தது; ஆனாலும், அதிலும் நம் மஹானுபாவருக்கு ஒருசிறிதும் பற்றுக்கோடு இருந்தது கிடையாது. "இது பொழுது இவருக்கு வயது சற்றேறக் குறைய இருபது ஆகியும், இவர் இன்னம் ஆயுதம் ஏந்துதற்குரிய அபிலாஷையை அடைந்துகொள்ள வில்லை," என்று அந்த மூய்ர் துரையே மொழிந்திருக்கின்றார். எனினும், ஒருகால் குறைஷிகளுக்கும் ஹவாஸி(z)ன் களுக்கும் நான்காண்டுகள் மட்டும் இடைவிடாது நடைபெற்றுவந்த அந்தப் பெயர்போன தெய்வதூஷணையாய யுத்தத்தின் போழ்து நம் பெருமானார் ஒருமுறை அதில் ஈடுபடவேண்டிய ஆவசியகம் ஏற்பட்டுவிட்டது; ஆனால், அதுகாலை, எதிரிகள்மாட் டிருந்து எய்து வந்துசேர்ந்த அம்புகளைச் சேகரித்துத் தம்முடைய பெரிய தந்தைகள்பால் சேர்ப்பித்ததைத் தவிர்த்து வேறெந்தக் காரியமும் இப்பெருமானார் செய்துவிட வில்லை. நபி பெருமானார் (சல்அம்) செல்வஞ் சேகரிப்பான் வேண்டி வர்த்தகத்தில் ஈடுபட வில்லை; ஆயின், தங்களுடைய பெரியதந்தை அபூத்தாலிபுக்கு உதவிபுரிவான் வேண்டி—என்னெனின், அன்னவர்பால் இன்னவர்கள் பெரியதொரு பிரியம் பாராட்டி வந்தார்கள்—அவ்வாறு அவருடைய வர்த்தகத்தில் கலந்துகொண் டிருந்தார்கள். வில்லியம் மூய்ர் துரையும் இதுகுறித்து இவ்வாறு கூறத் துணிந்துள்ளார் :—

"முஹம்மத் ஒருபொழுதும் செல்வஞ் சேகரிப்பதில் பேராசை மிக்கவராய் இருந்துவந்தனரில்லை; அல்லது தமது வாணுளில் எக்காலத்திலுமே, செல்வத்தின் பெருமையை யுன்னி, அதனை அதிகம் திரட்டத் துணிந்தனரில்லை. இவரை வாளா விட்டிருந்தால், வர்த்தக யாத்திரையால் விளையும் சந்தடியையும் கவலைகளையுங்காட்டில் இவர் தமக்கு இதுபொழுது கிடைத்துள்ள ஜீவியத்தின் அமைதியையும் அடக்கத்தையுமே ஒருகால் பெரிதும் விழைந்திருப்பர். இவர் சுயமே வலுவில் அத்தகைய வர்த்தக யாத்திரையைக் கிளப்ப நாடியிருக்க மாட்டார். ஆனால், அதற்குரிய ஆலோசனையொன்று கூறப்பட்டபொழுது, இவரது தாராள ஹிருதயம், இவருடைய பெரிய தந்தைக்குரிய சிரமத்தை நிவர்த்திப்பான்வேண்டித் தன்னாலாயவற்றையெல்லாம் செய்துமுடிக்க வேண்டுமென்னும் அவசியத்தை உணர்ந்துகொண்டு விட்டது; ஆகவே, இவர் அத்தியந்த சந்தோஷத்துடனே அக்கருமத்தினை ஏற்று நடக்கத் துவக்கினர்," என்க.

ஏனையெல்லாவற்றையுங் காட்டில், நம்மஹானின் வாலிபப்பிராய வாழ்க்கையானது ஒருவித உத்கிருஷ்டமான உன்னத சற்குணத்தால் மிளிர்ந்து காணப்பட்டது;—அற்றைநாள் அரபு நாட்டில் மிகவும் அரிதாய் வறந்துகிடந்தது அத்தகைய உத்தம சத்தொழுக்கமேயாகும். அஃதாவது, ஏழையெளியோர்கள், அநாத மக்கள், விதவைகள், வியாதியஸ்தர்கள், பலஹீனர்கள், உதவியற்றவர்கள், அடிமைகள் ஆகியோர்பால் அனுதாபங் காட்டி இரங்குதல். எம் மஹானுபாவருக்கு

எவ்விதச் செல்வமும் கிட்டுமுன்னர், ஒடுக்கப்பட்டு அடக்கப்பட்டுக் கிடந்தார்களுக்குப் பக்கபலமாய் நிற்ப தென்று உறுதிமொழி செய்துகொண்டு, துன்புற் றோர்க்குத் துயர்துடைப்ப தெனத் தாங்களெல்லாம் ஒரு சங்கமாய்ச் சேர்ந்துகொண்டு விட்ட ஒரு தொகுதி மக்களுள் நம் பெருமானாரும் ஒரு முக்கிய உறுப்பின ராய் மாறிப்போய் விட்டார்கள். எம் பெருமானாருக் குப் பிராயம் இருபத்தைந்து ஆகியபொழுது, இவர் கள் அம் மக்கமா நகரில் செல்வச் சீமாட்டியாய் விளங்கிவந்த கதீஜா வென்னும் விதவைப் பெருமாட் டியைத் திருமண முடித்துக்கொண்டார்கள்;* அப் பால் அவர்களுடைய செல்வத்திலின்று இவர்கள் ஏழை மக்களின் உதவிக்காகச் சர்வ தாராளமாய்ச் செலவுசெய்யத் துணிந் தெழுந்தார்கள். அடிமை யொருவன் இம்மகானது இல்லத்துள் காலடியெடுத்து வைத்தவுடனே விடுதலை யளிக்கப்பட்டுப் போய்விடு வான். ஏழை மக்களுக்கு எப்பொழுதும் இவர்கள் செய்துவந்த உதவியால் இன்னாரின் கீர்த்தி எங்கும்

---

*இதற்கு முன்னே, மக்காவின்கண் 40 பிராயத்தை யடைந்து வைதவ்ய கோலம் எய்தியிருந்த கதீஜா வென்னும் பெயரிய பணக்காரச் சீமாட்டியின் வர்த்தகத் தலைவராய் நபிகட்டிலகம்சல் தேர்ந்தெடுக்கப் பட் டிருந்தார்கள். அம்மாது சிரோமணியின் ஷாம் தேச வியாபாரத் தில் நம்பிக்கையுடன் நடந்து நல்ல இலாபத்தையும் காண்பித்துத் தந்த மையால், இன்னாரது யோக்கியப் பொறுப்பிலும், வர்த்தக வாய்மையி லும், களங்கமற்ற ஒழுக்கத்திலும் பெருமதிப்புக் கொண்டுவிட்ட கதீஜா பிராட்டியார் இவரையே திருமணம் புரிந்துகொண்டு விட்டார். அது பொழுது எம்பெருமானாருக்கு வயது 25 தான்.

உயர்ந்தோங்கத் துவக்கிக்கொண்டது; எனவே, நபிப் பட்டம் வந்துற்ற பின்னர் நம்பெருமானு ரவர்களைக் கொலைசெய்யத் தங்கள்பால் கொடுத்துவிடுமாறு குறைஷியர் வந்து அபூத்தாலிபிடம் கேட்டுக்கொண்ட பொழுது, அவ் வயோதிகர் அதற்கு இடங்கொடுக்க முடியாதென்று மறுத்துக் கூறி, ஒரு கவியின் வாயிலாய் இப் பெருமானுரை "அனுதைகளையும் விதவைகளையும் ஆதரித்து வந்த" அஸ் ஸையித் (தலைவர்) என்று வருணித்து வாழ்த்தி யிருக்கின்றார். இந்தச் சம்பவத்துக்கு முன்னே, நம்பெருமானுருக்கு நபிப்பட்டம் வந்துற்றக்கால், இவர்கள் தங்களுடைய தேசமக்களைச் சீர்திருத்துவதென்னும் இம் மாபெருங் காரியத்தில் வெற்றிபெறும் சக்தி தங்களுக்குத் தனிமுறையிலே வாய்த்துள்ளதோ வெனச் சற்றே ஐயுற்றுத் தயங்கியபொழுது, இப் பெருமானுரின் பிரிய பாரியாளான கதீஜா பிராட்டியார் முன்வந்து, இம் மஹானுபாவர் களைத்துப்போனவர்களின் கடுஞ்சுமையைத் தாங்கியும், எளியமக்களுக்கு இனியஉதவி புரிந்தும், சங்கடத்துள் சிக்கியவர்களுக்குத் தக்க சகாயம் செய்தும், விருந்தினர்களைக் கண்ணியத்துடனே நடாத்தியும், தங்களுடைய உறவினர்களை யெல்லாம் பக்ஷத்துடனே பாராட்டியும் வந்திருந்தமையால், ஆண்டவன் ஒருகாலும் இவர்களை அவமானப்படுத்தி விடமாட்டானென்று சமாதானங் கூறித் தைரியமூட்டி வைத்தார்கள்.

மேற் கூறிய மாபெரும் பெருங் குணுதிசயங்களுடனே, அந்தகாரப் பாதலத்தில் ஆழ்ந்து தாழ்ந்து

போய்க் கிடக்கும் மானிடவர்க்கத்தை உஜ்ஜீவிக்கும் கவலை யொன்றும் வந்து கலந்துகொண்டு விட்டது. இது குறித்துக் குர்ஆன் ஷரீபு அடிக்கடி பிரஸ்தாபித்த வண்ணமே யிருந்துவருகின்றது. நாளேறவேற அவ் வரபிகள்மாட்டுக் காணப்பட்டு வந்த அந்த அக்கிரம விக்கிரஹத் தொழும்பும், அன்னவர்பால் மல்கிக் கிடந்த பல்வேறுவிதத் தீநெறி யொழுக்கங்களும் இம் மஹானின் உள்ளத்தை எல்லையில்லாது உறுத்தத் துவக்கிக்கொண்டு விட்டன; ஆகவே, நம்பெருமானார் அடிக்கடி மக்காவைச் சூழ்ந்துள்ள மலைக் கெபிகளுக்குச் சென்று, அநேக மநேக ஜாம நேரங்கள்வரை தனித்திருந்து விழித்திருந்து பசித்திருந்து தியானம் புரிவார்கள். அப்பால் இப் பெருமானார் ஹிரா மலைக் குகைக்குச் சென்று, பலதினங்கள்வரை "தஹன்னு" தென்னும் யோகநிஷ்டையிலே மூழ்கியிருந்து விடுவார்கள். அப்பொழு தெல்லாம், இவ்வுலக மன்பதையின் அஞ்ஞானத்தைப் போக்கிச் சுஞ்ஞானத்தைப் புகட்டுதற்கும், இவர்களை யெல்லாம் ஏகதெய்வத்தின் அடியவர்களாகவே அமைத்தற்கும், எனவே, இவர்களுக்குள்ளே ஏகசகோதரக் கொள்கையை நிலைபெறுத்தற்கும் ஆண்டவனாலே நேர்வழியொன்று காட்டப்படமாட்டாதா வென்று அல்லுபகல் அனவரதமும் சிந்தாகுலரா யிருந்து வந்தார்கள். இவ்வாறு முஹம்மத் (சல்அம்) அவர்கட்கு நாற்பதாவது பிராயம் நடைபெற்று வந்தபொழுது, ஒரு ரமலான் மாத இருளிரவிலே வானவர் ஜிப்ரீல் வாயிலாய் அல்லாஹுத் தஆலாவின் ஞானஜோதியானது தனக்குரிய முழுத்

தேஜஸுடனே இம்மஹானுபாவர்மீது இக் குவலய முழுமைக்குமாக வந்து இறங்குவதாயிற்று.

---

## நபிபெருமான் மதப்பிரசாரம்

முதன்முதலில், நபிபெருமான்^ஸல் தங்கள்பால் ஒப்படைக்கப்பட்ட அம் மாபெருங் கடமையை நிறைவேற்றி வைக்கும் அபாரசக்தி தங்களுக்கு அமைந்துண்டோ வென்று அச்சம் பூண்டு சிறிதுபொழுது ஐயுற்று நின்றார்கள்; அப்பால் இப் பெருமானார், என்ன நேரிட்டாலும் இறுதியில் சத்தியமே ஜயமடையு மென்று துணிவுகொண்டு எழுந்து நிற்கலாயினார்கள்; இதற்குரிய திடசித்தமும் ஒழியாத ஊக்கமும் நிரம்பப் பெற்றவர்களாய், நம்பெருமான்^ஸல் இஸ்லாத்தின் இனிய உபதேசங்களை யெல்லாம் அம் மக்களுக்கு எடுத்தோதத் துணிந்து, அதன் பயனாய் விளைந்த அம்முழு அரப்நாட்டின் கொடிய எதிர்ப்புக்க ளனைத்தையும் தைரியத்துடனே சமாளித்து வந்தார்கள். ஆயின், நம் மஹானுபாவர் கொணர்ந்த சத்திய இஸ்லாம் அவ் வரபிகளுக்கு மட்டுமே யென்று நீங்கள் தவறாகக் கருதிவிட வேண்டாம். ஆதி முதற்கொண்டே இவ்வுண்மை மார்க்கம் அரபிகளுக்கும், யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், மஜூஸிகளுக்கும் பொதுவாகவே போதிக்கப்பட்டு வந்தது; மேலும், அப்போதனை மக்கமா நகருக்கு மட்டுமே யென்றும் எவரும் எண்ணிவிடா திருக்கட்டும்; என்னெனின், திருமக்காவானது அத் தேயத்

தின் நடுநாயக நகரமா யிருந்து வந்தமையான், ஆண்டு தோறும் பல்லாயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் அத் தீபகல்பத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் அத் தலைநகருக்கு வந்து அதிகம் குழுமுவார்கள்; அவர்கள் மூலமாய் இஸ்லாத்தின் இனிய உபதேசங்களனைத்தும் அவ்வரப் நாட்டின் நெடுநெடுந் தூரத்திலுள்ள மூலை முடுக்குக்களுக் கெல்லாம் சென்று சேர்ந்து கொண் டிருந்தன.

நபிகட் டிலகத்தின்<sup>சல்</sup> பிரிய பிராட்டியார் கதீஜா<sup>ரலி</sup> அவர்களே முதன்முதலில் இம் மார்க்கத்தில் நன்னம்பிக்கை கொண்டார்கள்; அவர்களைப் பின்பற்றி மற்றும் பலரும் அப்பால் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டார்கள்; அவர்களெல்லாரும், நபிகள் நாயகத்தின் மகா அத்தியந்த நண்பர்க ளாகவேனும், இம் மஹானை மிகநன்கு யறிந்திருந்த நெருங்கிய உறவினர்க ளாகவேனும் இருந்து வந்தார்கள். “இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் இதில் சேர்ந்துவந்த மனிதர்கள் பேரிய ஒழுக்க முள்ளவர்களா யிருந்ததோடு மட்டும் போகாது, இப்பெரியாரின் நெருங்கிய நண்பர்களாகவும் இவரது இல்லத்துக்குரிய மாந்தர்க ளாகவுமே அமைந்து கிடந்தார்கள் என்பதிதான்றே, முஹம்மதின் உண்மைக்குப் போதிய சாக்ஷியமா யிருந்துவருகின்றது ; இன்னவர்க ளெல்லாம் இம் மஹானது இரகசிய வாழ்க்கையை நன்கறிந்துகொண் டிருந்தனராதலின், ஒருவர் நயவஞ்சகமாக வெளியுலகில் ஒருவிதம் நடித்துவிட்டுத் தமது வீட்டிற்குள்ளே வந்து வேறுவிதம் நடப்பதெனின், அவ்விரு திறப்

பட்ட வேஷங்களுக்கிடையில் காணப்படக்கூடிய வித்தியாசங்களையெல்லாம் மிகநன்றாகக் கண்டுகொள்வதில் தவறிழைத்துவிட மாட்டார்கள்," என்று மூய்ர் துரையும் முன்னின்று சான்று பகர்கின்றார்.

இம் மஹானுக்கு ஆரம்பகாலத்தில் வெளியாக்கப்பட்ட வேத வாக்கியங்களில், அல்லாஹுத்தஆலாவின் மாபெரிய வன்மையும் மாட்சிமையும், இறுதித் தீர்ப்புநாளொன்று வந்தே தீருமென்னும் நிச்சயமும் மிகவாய் வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன. முதன்முதலில் குறைஷியர் நபிபெருமானை ஏளனம் செய்தனர்; அப்பால் இவர்களை உதாசினத்துடன் அவமதித்தனர்; எனவே, இம் மஹானுபாவரை ஒரு "பித்துக்கொள்ளி" யென்றே தீர்மானித்து ஒதுக்கித் தள்ளினர். எனினும், இரண்டிரண்டாகவும் மும்மூன்றாகவும் இப்பெருமானார் நவ் முஸ்லிம்களை மெல்லமெல்லச் சேர்த்துக்கொண்டே சென்றார்கள்; இவ்வாறாக முதல் நான்காண்டுகளுக்குள்ளே நாற்பது மனிதர்கள்வரை இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டு விட்டார்கள்; எனவே, எதிரிகளின் இம்சையும் நாளுக்குநாள் உயர்ந்தோங்கியே பெருகிக் கொண்டு வந்தது. ஆரம்பத்தில் அடிமைகளே இம்சைக் குள்ளாக்கப் பட்டார்கள்; பிலால் என்னப்பட்ட அபிஸ்ஸீனிய நாட்டடிமை அரபநாட்டில் எறிக்கும் உச்சியுரும வெயிலில் கொதிக்கின்ற மணலில் மல்லாத்திப்போட்டு வெதுப்பப்பட்ட பொழுது, அப்புண்ணிய சீலர், தம்மைத் துன்புறுத்தும் மக்கள் பிரமித்துப் போகக்கூடிய முறையிலே, " அஹதுன் !

அஹதுன்!"—'ஒன்றேதான்! ஒன்றேதான்!' என்றே கூறினர். அப்பால் இப்படிப்பட்ட கொடுமைகளெல்லாம் ஏழைகளுக்கு மட்டுமேயல்லாமல், பணக்காரர்கட்கும் பெரிய மனிதர்கட்குங்கூட இழைக்கப் படலாய்விட்டன. நபிகள் திலகமும் இத்தகைய இன்னல்களுக்கு நாளடைவில் ஆளாக்கப் படாது போய்விடவில்லை. முஸ்லிம்கள் ஒரு பகிரங்க ஸ்தலத்தில் ஒன்றுகூடவேனும் ஆண்டவனைத் தொழுது கொள்ளவேனும் இயலாமலிருந்துவந்தார்கள். எனினும், புதுப்புது மனிதர்கள் இஸ்லாத்தில் மேன்மேலும் சேர்ந்து கொண்டுதான் வந்தார்கள்; எனவே, எதிரிகளும் தாங்களிழைக்கும் இன்னல்களையும் இடையூறுகளையும் பன்மடங்கில் பெருக்கிக்கொண்டே சென்றார்கள். இதன் பயனாய், ஒருசில ஏழை முஸ்லிம்கள் மிகவும் அருவருக்கத்தக்க முறையிலே மிருகத்தனமாய்க் கொல்லப்பட்டும் போயினர். ஆனாலும், அவர்களுள்ளிருந்து ஒருவரேனும் தீனுல் இஸ்லாத்தை விட்டு விக்கிரக வணக்கத்தின் பக்கல் ஓடிப்போய்விடவில்லையென்னலாம்.

அப்பால், மக்காவிலுள்ள மறமாக்களாய கொடுங் குறைஷியர் — குப்பார்கள் — தங்களுடைய விக்கிரக ஆராதனைக்கும், வேறு பலதெய்வக் கொள்கைக்கும், தாங்கள் வகித்துவந்த மக்காவின் தலைமைப் பதவிக்கும் பேராபத்து வந்து விளைந்துவிட்டதெனக் கண்டு, இச் சன்மார்க்க முயற்சியை அடியுடன் கல்லியெறிந்து விடுவதே சாலச் சிறந்த உபாயமெனக் கொண்டு, அதற் குரிய ஏற்பாடுகளையெல்லாம் தீவிரமாக எடுத்துக் கொண்டார்கள். இவ்வாறு அக் குறை

ஷியர் செய்துவந்த பற்பல சாம பேத தான தண்டங்களாலெல்லாம் அம்முஸ்லிம்களை ஒறுத்துப் பார்த்தும், ஒன்றும் பலப்பிராப்தி பெருது போய் விட்டதைக் கண்டு, அம்மக்கா வாசிகள் சில தூதுவர்களை யனுப்பி, நபிகள் நாயகத்திற்குப் பொன்னும், பெண்ணும், அரச பதவியுங் கூட அளிப்பதாக உறுதி கூறினார்கள். இதற்கும் நம் நபிபெருமானார் இணங்கி வாராமை கண்டு, அவர்கள் அபூத்தாலிபிடம் சென்று, அந்த இஸ்லாமிய பிரசார இயக்கம் இனி அடியுடன் நிறுத்தப்படாவிடின், உள்நாட்டுக் கலகமே உண்மையில் விளையுமென அச்சுறுத்தினார்கள். அது பொழுது அபூத்தாலி பவர்கள் வேண்டிக் கொண்டதற்கு நபி கட்டிலகம், அவ் வெதிரிகள் சூரியனைக் கொணர்ந்து தம் வலக்கரத்திலும், சந்திரனைக் கொணர்ந்து தம் இடக்கரத்திலும் வைத்த போதினும், தமது சத்திய சன்மார்க்க பிரசாரத்தை ஒருசிறிதும் விட்டுவிட முடியா தென்றும், இம் முயற்சியில் இறுதிவரை வெற்றிபெற முடியாவிடின், தாம் மடிந்து தீருவதே சரத மென்றும் உறுத்திக் கூறிவிட்டார்கள்.*

———

* "பரிதி யைக்கொணர்ந்(து) அணிவலக் கரத்திடை பதித்தும்
அரிதி னிற்சசி கொணர்ந்திடக் கரத்தினில் அமைத்தும்
ஒருமொ ழிப்பட இனத்தவர் ஒருங்குற நெருங்கிப்
பொரு(து) அடக்கினும் நம்மனம் பொருந்திலா(து) இருந்தும்"
"ஈத லாற்சில இடரினை அடுக்கினும் இறையோன்
தூதன் இயானெனச் சுருதியை விளக்குவ(து) அலது
பேதி யாதென(து) அகமென முஹ(ம்)மது பிரியாத்
தாதை யோடுரைத் தனரிரு விழிமழை தயங்க"—சீறா

## முஸ்லிம்களின் முதல் ஹிஜ்ரத்

இவ்வாறெல்லாம் ஒன்றும் பலியாதது கண்ட குறைஷியரின் கொடுமை இன்னம் பன்மடங்கில் மகா உக்கிரத்துடனே தலைவிரித்துத் தாண்டவமாடத் தொடங்கிற்று. ஏழை முஸ்லிம்கள்—ஆண்களும் பெண்களும்—எதிரிகள் கரத்தால் அடைந்து வந்த இம்சைகளைக் கண்டு, எம்பிரான்ஸல் அவர்களுடைய இளகிய உள்ளம் இன்னமதிகம் உருகத் தலைப்பட்டு விட்டமையால், கோபாவேசத்திற்குப் பெரிதும் ஆளாய்க்கிடந்த அந்தக் குறைஷியர் மத்தியில் தாங்கள் மட்டுமே தனிமையாய்ச் சிக்கிக்கொள்ள நேருமென்பதை அணுத்துணையும் பொருட்படுத்தாது, தங்களுடைய சிஷ்யர்களாய அச்சிறு ஆண் பெண் கூட்டத்தினர் ஒரு பத்திரமான இடத்திற்குச் சென்று பாதுகாப்பைத் தேடிக்கொள்ளட்டுமென்று ஆலோசனை கூறினார்கள். ஆகவே, நுபுவ்வத் (நபிப் பட்டம்) வந்து ஐந்தாவதாண்டில் பதினைந்து ஆண்களும் பெண்களுமாய்ச் சேர்ந்து செங்கடல் கடந்து, அபிஸ்ஸீனியா (ஹபஷா) நாட்டிலிருந்த நஜ்ஜாஷீ யென்னும் கிறிஸ்தவ எதியோப்பிய மன்னன்பால் சென்று அடைக்கலம் புகுந்துகொண்டார்கள். அப்பொழுதும் அவர்களை வாளா விடாது, குறைஷிகள் சிலரை அம்மன்னன்பால் தூதாக அனுப்பி, அம் முஸ்லிம்களைத் திருப்பிக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார்கள். அதுகாலை அம் முஸ்லிம்களின் வாதம் அவர்களுடைய தலைவரால் அந்தக் கிறிஸ்தவ மன்னன்

முன்னிலையில் பின்வருமாறு விஸ்தரித்துக் கூறப்பட்டது :—

" ஏ அரையர் பெருமானே! யாங்கள் மௌட்டியமும் அனுசாரமும் நிறைந்த ஓர் அறிவற்ற இனத்திலே தோன்றியிருந்தோம். விக்கிரக வணக்கமே எங்கள் தொழிலா யிருந்துவந்தது. தானேசெத்த பிராணிகளின் சவத்தையும் தின்றுகொண் டிருந்தோம். யாங்கள் செய்துவந்த துஷ்கிருத்தியங்களுக் கோர் உறையிட்டுக் கூறமுடியாது. உற்ருர் உறவினர்களையெல்லாம் துன்புறுத்திக்கொண்டு வந்தோம்; அண்டை அயலவர்களிட மெல்லாம் அக்கிரமம் புரிந்து வந்தோம். எங்களது சமூகத்துக் குள்ளேயே இடைவிடா அக்கிரமங்க ளெல்லாம் நடந்தேறிக்கொண்டு வந்தன; பலமுள்ளவர்கள் பலஹீனர்களை இம்சித்துக் கொண் டிருந்தனர். இவ்வாருய நிலைமையிலே எங்கள் முன் ஒருவர் தோன்றினர்; அவருடைய சீரையும் சிறப்பையும், உண்மையையும் உறுதியையும் நாங்கள் நன்குணர்ந்து கொண்டோம். பிறகு அவர் 'இஸ்லாம்' என்னும் மார்க்கத்தின் பக்கல் எங்களை அழைக்கத் தொடங்கினர். விக்கிரகங்களுக்கும், மற்றுமுள்ள இயற்கைப் பொருள்களுக்கும் வணக்கம் புரிவது கூடா தென்றும், சத்தியத்தையே சதா பேச வேண்டுமென்றும், நம்பிக்கைத் துரோகம் ஒருபொழுதும் புரியவேண்டா மென்றும், கொலை களவு முதலியன செய்யக்கூடாதென்றும், அகதிகளின் ஐசுவரியங்களை அக்கிரமமாக அபகரிக்க வேண்டாமென்றும், உற்ருர் உறவினர்கட்கு நல்ல சந்துஷ்டியை யளிக்கவேண்டுமென்றும், அண்டை அயலவருடனே சுமுகமாய் வாழ

வேண்டு மென்றும், பதிவிரதைகளான பெண்மணிகள்மீது வீண்பழிகளைச் சுமத்துவது கூடாதென்றும், தினமும் தெய்வந்தொழ வேண்டுமென்றும், நோன்பு நோற்க வேண்டு மென்றும், ஜ(க்)காத்தென்னும் ஏழை விகிதத்தைக் கொடுக்க வேண்டு மென்றும் நல்லுபதேசம் பண்ணினார். எனவே, இவர் கூறியதை யாங்கள் ஏற்றுக்கொண்டு, ஈமான்—நன்னம்பிக்கை—கொண்டோம். அன்றுமுதல் விக்கிரக வணக்கத்தையும் அடியோடு தொலைத்துத் தலைமுழுகி விட்டோம். துஷ்கிருத்தியங்களான எல்லாச் செய்கைகளைவிட்டும் அப்புறப்பட்டு விட்டோம். இவ்வாறாகப் புண்ணிய கைங்கரியங்களை யெல்லாம் நாங்கள் புரிந்துகொண்டு வருகிறோ மென்றே எங்கள் சமூகத்தவர்கள் எங்கள்மீது அளவுகடந்த கோபங்கொண்டு எங்களை எவ்வாற்றானும் பழைய பாதாளப் பாப கிருத்தியங்களான படுகுழிக்குள்ளேயே கொண்டு, போய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணியிருக்கின்றார்கள். அன்னவர்களின் கொடுமைகள் அளவுக்கு மீறிவிட்டமையான், நாங்கள் ஓடிவந்து தங்களுடைய தர்பாரிலே அடைக்கலம் புகுந்துகொண்டோம்; இவ்விடத்தில் எங்களுக்கொன்றும் தீங்கு விளையாதென்றே யாங்கள் எண்ணி யிருக்கின்றோம்."

மீக் கூறிய முறையீட்டைக் கேட்டு, அந்த நஜ்ஜாஷீ மன்னன் மிகவும் மனமுருகிப் போய்விட்டான்; அதற்கு மேலே ஒரு குர்ஆன் திருவாக்கியமும் அவன் முன்னே ஓதிக் காண்பிக்கப்பட்டது. அப்பால் அந்தக் கிறிஸ்தவ மன்னன் அம் முஸ்லிம்களனைவரையும் குறைஷியரிடம் ஒப்புக்கொடுக்க மறுத்துவிட்டான்.

ஆகவே, அப்பால் சிறுகச் சிறுக 101 முஸ்லிம் ஆண்களும் பெண்களுமாய் அந்த ஹபஷா நாட்டிற்குச் சென்று அடைக்கலம் தேடிக்கொண்டு விட்டார்கள். மக்கத்துக் குறைஷியர் அவ்வாறு முஸ்லிம்கள் அபிஸ்ஸீனியா (எதியோப்பியா) வுக்குப் புறப்பட்டுச் செல்வதைத் தடுக்க எல்லா முயற்சிகளேயும் எடுத்துப் பார்த்தார்கள்; ஆனல், ஒன்றும் நற்பயன் விளேயவில்லே. எனவே, அம் மறமாக்கள் அளவுக்கு மீறிய ஆத்திரங் கொண்டு விட்டார்கள்; அப்பால் மக்காவில் எஞ்சியிருந்த முஹம்மதையும்^ஸல் ஏனே முஸ்லிம்களேயும் மிகவுங் கொடிய துன்பங்களுக்கு ஆளாக்கத் துணிந்து விட்டார்கள். அபூஜஹ்ல் என்னும் மாகொடிய துஷ்டன் நபிகட்டிலகத்தை ஒருநாள் ஏசி இம்சித்துவிட்ட செய்தி கேட்டு, நம் மஹானின் சிற்றப்பராகிய ஹம்ஜாவும் அந்த அபூஜஹ்லேப் பதிலுக்குத் தமது தனுவைக் கொண்டு புடைத்து விட்டு, இஸ்லாத்தில் சுயமே சேர்ந்துகொண்டுவிட்டார். இச்செய்தி கேட்ட குறைஷிகளெல்லாரும் ஆத்திரம் அதிகம் கொண்டு விட்டார்கள். ஆதலின், அபூஜஹ்ல் உமரென்னும் வாலிபரை யழைத்து, முஹம்மதைக் கொன்றுவிட்டு வருமாறும், அதற்குத் தக்க சம்மானம் அளிப்பதாகவும் உறுதிகூறி யனுப்பினன். ஆயின், ஆண்டவனது நாட்டம் வேறுவிதமாக இருந்துவந்தமையால், முஹம்மதைக்^ஸல் கொல்லச் சென்ற அந்த உமரே—பின்னல் உலகப் பிரசித்திபெற்று இரண்டாவது கலீபாவாய் விளங்கிய பெரியார்—நந் தீனுல் இஸ்லாத்தில் வந்து வலுவிலே சேர்ந்துகொண்டுவிட்டார். இந்தச் செய்தி

யையுங் கேட்டு, அந்தக் குறைஷியர் பட்ட அவதிக்கோர் அளவேயில்லை யென்னலாம்.*

ஆகவே, அபூத்தாலிபின் வாயிலாய்த் தூதுபோக்கியதும் பயன் பெருது, நேரிற்சென்று பொன்னும் பெண்ணும் அரசபதவியுங் கூட அளிப்பதாய்க் கூறிய ஆசைவார்த்தைகளும் பிரயோஜன மற்றுப் போய் விட்டதையுங் கண்டு, அந்தக் குறைஷிக் குப்பார்கள் இறுதியாக ஒரு யோசனை செய்து, ஒரு சங்கமாய்ச் சேர்ந்துகொண்டு, முஸ்லிம்களையும், எல்லா ஹாஷிம் குடும்ப மக்களையும் மக்காவி லுள்ள ஒருசிறு பகுதியிலே கொண்டுபோய் மடக்கி வைத்து, ஜாதிக் கட்டென்னும் ஆசாரக் கட்டுப்பாட்டிற் குள்ளே அடைத்து வைத்து, ஒடுக்கியடக்கி விட்டார்கள்; அங்கிருந்தபடியே அவர்கள் மூன்று நெடிய ஆண்டுகள் மட்டும் மிகவுங்கொடிய வறுமைப்பிணிக்கெல்லாம் ஆளாக்கப்பட்டு வந்தார்கள்; ஹஜ்ஜின் காலங்களில் மட்டுமே அக் கட்டுப்பாடு சிறிது தளர்த்தப்படும். முஸ்லிம்கள் மிகவும் பொல்லாத துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உட்படுத்தப்பட்டு வந்தது அந்த மூன்று ஆண்டுகளாகவே யிருந்து வந்தன; எனவே, அதுபொழுது இஸ்லாத்தின் வளர்ச்சியும் மிகவாய்த் தடைப்படுத்தப்பட்டு வாளா அடங்கி யொடுங்கிக் கிடந்ததெனல் வேண்டும்.

---

* ஹஜ்ரத் உமர்ரலி ஈமான் கொண்டு இஸ்லாத்தைத் தழுவிய விவரத்தை எமது "உமரெ பாரூக்" என்னும் நூலிலே பரக்கக் காணலாம்.

## நபிபெருமான் தாயிபுக்குச் சென்றது

இறுதியிலே ஒரு சில மக்கா வாலிபர்களால் அக் கட்டுப்பாட்டுச் சீட்டுக் கிழித்தெறியப்பட்டு, அடைபட்டிருந்தவர்களெல்லாம் விடுதலை செய்யப்பட்டார்கள். அதன் பின்பு நபிப்பட்டம் வந்து 10-ஆவது ஆண்டில் அபூத்தாலிபும் கதீஜா பிராட்டியும் காலகதியால் தேகவியோகமாய்ப் போய்விட்டார்கள். இதனால் நபி பெருமானாருக்குப் பக்கபல மென்பது ஒருசிறிது அம் மக்காவின்கண் தளர்வுறத் தலைப்பட்டது கண்டு, எதிரிகளும் அதிகம் துள்ளத் துவக்கி விட்டார்கள். அதுகாலை நாலாபக்கமும் அந்தகாரமும் அதைரியமுமே அதிகமாய்ச் சூழ்ந்து காணப்பட்டும், சத்தியமே ஜயமென்னும் சித்தாந்தத்தில் நபிகட் டிலகம் முன்போலவே முற்றும் உறுதியுற்றே யிருந்துவந்தார்கள். எனவே, மக்காவாசிகள் இஸ்லாத்தின் இனிய போதனைகளைச் செவிமடுக்க மறுத்துவந்தமையான், நம் பெருமானார்சல் வேறுதிக்கை நோக்கித் திரும்பலாயினார்கள்; ஆதலால், மக்காவை யண்மியுள்ள தாயி பென்னும் மற்றொரு நகரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். ஆனால், அவ்விடத்தி லுள்ள மறமாக்கள் மக்கா வாசிகளை மிகைக்கக்கூடிய அத்துணைப் பெரிய மா மறமாக்களாகவே காணப்படுவா ராயினார்கள்; ஆகவே, அவ்வூரில் பத்து நாட்களுக்குமேலே நம் பெருமானாரைத் தங்கவும் இடங்கொடாது, அன்னார் காவாலிகளைத் தூண்டிவிட்டுக் கல்லாலெறிந்து காலில் உதிரம்சொரியத் துரத்திவிட்டார்கள். அவ்வாறு அவர்கள் பாதங்

களினின்று குருதிவெள்ளம் சொரிந்துகொண்டிருந்த பொழுது, அத் துன்மார்க்கர் நபி பெருமானைக் குந்தவும் இடங் கொடாது, நின்ற நிலையிலே துரத்தியடித்துக்கொண்டு சென்றார்கள்; ஆகையால், நம் பெருமானார் மிக்க மனவேதனையுடனே மக்காவுக்குத் திரும்பிவந்து சேர்ந்தார்கள். அவ்வாறு திரும்பிவருங்கால், மானிடர்கள் இவர்களுடைய நல்லுபதேசங்களைச் செவிமடுக்க மனமில்லாது போய்விட்டாலும், எல்லாம் வல்ல அல்லா(ஹ்)வின்பாலேனும் தங்கள் குறை முறைகளைக் கூறித் தீர்த்துவிடுவதெனத் தீர்மானித்துக் கொண்டு விட்டார்கள்; என்னெனின், அவ்வேக வல்லோன் தங்கள் குறைகளுக்குக் காது கொடுத்து நியாயம் புரிவானென்று நபிகட்டிலகம் உறுதியாய் நம்பியிருந்தார்கள். ஆகவே, இடைவழியில் இவர்கள் பின்வருமாறு பிரலாபிக்கத் துணிந்தெழுந்தார்கள் :—

"ஏ என்னிறைவா! எனது பலஹீனத்தின் மென்மையைப் பற்றியும், எனது திக்கற்ற வறியநிலையைப் பற்றியும், பொதுஜனப் பார்வையிலே எனக்கிருந்துவரும் அற்பத் தன்மையைப் பற்றியும் நின்பாலே யான் குறையிரந்து கொள்ளுகிறேன். தயாளமூர்த்திகளுக் கெல்லாம் நீயே மகா தயாளமுள்ளவனாயிருக்கின்றாய். ஏழைகளின் இரக்ஷகனும் நீயேயாவாய். எனவே, என்னை நீ எவரிடம் ஒப்படைக்கப் போகின்றாய்? என் மீது கோபாக்கினியுடனே தாவும் ஓர் அபிமானமற்ற எதிரியின் கைவயத்திலா? அல்லது என் விஷயத்தை முற்றிலும் மேற்பார்வை செய்து கண்காணிக்கக் கூடிய ஒரு

நெருங்கிய நண்பரிடத்திலா ? எனக்கு நினது பாது காப்பிருக்கவேண்டுமேயல்லது, மற்றப்படி வேறொன் றுக்காகவும் யான் கிஞ்சித்தும் கவலை கொண்டே னில்லை. உனது திருமுக விலாசத்தின் ஜோதியிலே யான் பாதுகாப்புத் தேடுகின்றேன். வானுலகத்தைப் பிரகாசிக்கச்செய்து எல்லாவிதமான இருள்களையும் பறந்தோடச் செய்யும் ஜோதி ! இவ்வுலக காரியங்க ளனைத்தையும், மறுவுலக காரியங்க ளனைத்தையும் அடக்கியாளும் திராணிபெற்ற ஜோதி ! யான் நினது கோபத்துக் குள்ளாகாமலும், நீ என் மீது கோபங் கொள்ளாமலும் இருக்கவேண்டு மென்பதே எனது கோரிக்கையாகும். நின்னைக்கொண் டல்லது, எனக்கு வேறு சக்தியும், சாமர்த்தியமும், கதியும் கிடை யாவே !''

நபிகட்டிலகம் (சல்அம்) தங்கள் உபதேசங்கட் கெல்லாம் சாமான்ய மக்கள் செவிதாழ்த்த மறுத்து வந்தன ரென்பதைச் செவ்விதா யுணர்ந்துகொண்டு விட்டார்கள் ; எனினும், இறைவனது சற்குண தயா ளத்தின் மீது இவர்கட் குண்டாயிருந்த துளக்குறு நம்பிக்கையும், தாங்கள் எடுத்துக்கொண்டுள்ள உத்தம கைங்கரியத்தின் இறுதிவெற்றியில் இவர்கட் கேற்பட் டிருந்த அசைக்க முடியா உறுதியும் முன்னைப் பொழுதும் இருந்துவந்த படியே இப்பொழுதும் இருந்துவருவன வாயின. ஆண்டவ னொருவனே இப் பெருமானார்க்குப் போதுமானவனா யிருந்துவந்தான் ; எனவே, இக்குவலய முழுவதும் எதிர்த்துத் திரண்டு வரினும், இவர்கட்கு அதனாலொன்றும் அதைரியம்

ஏற்பட மாட்டாது. நம்பெருமானார் மகா ஆச்சரிய கரமான அமைதியுடனே மிகவுங் கடினமான துன்பங்களனைத்தையும் துயரங்களனைத்தையும் சகித்துக் கொண்டிருக்கிறார்கள்; மேலும், தங்கள்மீது மிகக் கொடிய சித்திர வதைகளை யெல்லாம் பேரானந்தத்துடனே புரிந்துவரும் அக்கொடியமாக்களைப் புனருத்தாரணம்பண்ணி உஜ்ஜீவிக்கச் செய்வான் வேண்டியே இப் பெருமானார் இத்துணைக் கடிய இன்னல்களையும் இடையூறுகளையும் மிக்க சந்தோஷத்துடனே சகித்துக்கொண்டு புன்முறுவல் பூக்கின்றார்கள். அல்லாஹுத் தஆலாவின் அருட்பெருங் கருணைமட்டும் கிடைத்துவிடக் கூடுமாயின், அப்பால் இத்தகைய துன்பங்களும் துயரங்களும் அற்பமாயேதான் போய் முடிந்துவிடுமென்று இம் மஹானுபாவர் இயம்பத் துணிந்து விட்டார்கள். அல்லா(ஹ்)வின்மீது என்ன அசைக்கமுடியாத உறுதி! அவனது முடிவான நாட்டத்திற்கு என்ன சந்துஷ்டிகரமான தலைச் சாய்ப்பு! என்ன களங்கமற்ற ஆத்மஞான முற்போக்கு!

நபிகள் பெருமானார் (சல்) தாயிபிலிருந்து திரும்பி, மீட்டும் மக்காவிற்கே வந்து, யாத்திரா காலங்களில் வெளியூர்களிலிருந்து அங்கு வந்து விஜயம்செய்யும் மனிதர்களைப் பார்த்து, தீனுல் இஸ்லாத்தைப் பைய உபதேசம் புரியத் துவக்கினார்கள்; அவர்களுள்ளே ஒருசிலர் செவி தாழ்த்துவதும், வெகு பலர் உதாசினம் செய்வதுமாயே சிலகாலம் கழிந்து சென்றது. பிறகு ஒருமுறை மதீனாவிலிருந்து மக்காவிற்கு விஜயஞ் செய்திருந்த அறுவர் நம் மஹானின் திருவுபதேசத்தைக்

கேட்டு, தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டார்கள்; ஆகவே, அடுத்த ஆண்டில் அவ்வறுவரும் மற்றுமோர் அறுவருடனே வந்து, இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள். இது நிகழ்ந்தது நபிப்பட்டம் வந்து பதினோராவது ஆண்டிலாகும். பிறகு அடுத்த ஆண்டிலே மதீனாவிலிருந்து 75 ஆண்களும் பெண்களுமாய* மனிதர்கள் மக்காவிற்கு விஜயஞ் செய்து, தங்கள் ஹஜ்ஜை முடித்துக்கொண்டு, நபிகள் நாயகத்தின்மீது விசுவாசம் பூண்டு இஸ்லாத்தை மனமாரத் தழுவிக் கொண்டார்கள். அம் மதீனா வாசிகள், நபிகள் நாதரைத் தங்களூருக்கு† வந்துவிடுமாறும், தாங்கள் தங்கள் மனைவி மக்களைக் காத்து ரக்ஷிப்பதைப் போலவே, இப்பெருமானாரை இன்னாரின் எதிரிகளை விட்டு, தங்களுயிரைக் கொடுத்தேனும் தற்காத்து வைப்பதாகவும் வாக்குறுதி செய்து கொடுத்தார்கள்; என்ன நேரினும், இஸ்லாத்தைத் தற்காத்துக் கொள்ளாது வாளா விடுவதில்லையென்பதே அன்னவர்களின் கடைப்பிடியா யிருந்துவந்தது. எனவே, நபிபெருமானும் அதற்கு அனுமதி யளித்து விட்டமையால், அபிஸ்ஸீனியாவிற்கு ஹிஜ்ரத் சென்றுவிட் டிருந்த முஸ்லிம்க ளல்லாத ஏனையோ ரெல்லாம் சிறுகச் சிறுக அநேகமாய் யத்ரிபுக்குச் சென்று சேர்ந்து விட்டார்கள். ஆனால், நாளேறவேறத் தங்கள் வைஷம்யத்தில் மிகவும் ஆழமான வேரையே ஊன்றப்பெற்று வந்த

---

* அவர்களுள் இருவரே பெண்மணிக ளென்ப.

† அதுபொழுது யத்ரிபென்று வழங்கப்பட்டு வந்த நகரம்.

அம் மக்கத்து மறமாக்களாய குறைஷிக் குப்பார்களுக்கு மத்தியிலே நபிகட்டிலகம் தனித்திருந்து ஆவன செய்யக் கடமைப்பட் டிருந்தார்கள்; என்னெனின், அந்த நவ்முஸ்லிம்க ளெல்லாரும் தங்களுக் குரிய புதியஸ்தலத்தில் க்ஷேமத்துடனே சென்று குடியேறுவதைக் கவனத்துடன் மேற்பார்வை செய்யவேண்டிய பொறுப்பு இக்குருமஹானையே சார்ந்ததாய்க் காணப்பட்டு வந்தது. இதனால் நம் மஹானுபாவர் தங்களுடைய சிஷ்ய கோடிகள்மாட்டு எத்துணைப் பெரிய அக்கரையும் ஆர்வமும் பூண்டு நின்றார்கள் என்னும் உண்மை நன்கு புலனாகின்றது; இவர்கள் தங்கள் சொந்த க்ஷேமத்தில் கவலை செலுத்தியதைப் பார்க்கினும் அதிகமான கவலையே தங்களுடைய சிஷ்யர்கள் பால் செலுத்திவந் திருக்கிறார்கள். எனவே, இரண்டு மாத கால அடைவிற்குள்ளே சற்றேறக்குறைய 150 முஸ்லிம் ஆண்களும் பெண்களும் மக்காவைத் துறந்து மதீனாவிற்குப் புறப்பட்டு விட்டார்கள்; ஆதலால், இறுதியிலே எம் பெருமானாரும்[ஸல்] இவர்களுடைய இரு பெருந் தோழர்களுமே—ஹஜ்ரத் அபூபக்ரும்[ரலி] ஹஜ்ரத் அலீ[ரலி] அவர்களும்—உள்ளூரின்கண் தாமதித்திருந்தார்கள்.

---

## மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்லல்

அப்பால், நபிப்பட்டம் வந்து 13-ஆவது ஆண்டின் ஆரம்பத்திலே, நபிபெருமானும் யதுரிபுக்குப் புறப்பட்டு விடலா மென்னும் ஆண்டவனது ஆணை வந்து

கிட்டிற்று; அவ்வாறே அஹ்மத் நபியவர்களும்* அம் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செல்லத் துணிந்தெழுந்தார்கள். இதற்கு முன்னே எல்லா முஸ்லிம்களும் அவ்வூருக்குத் தப்பியோடி விட்டார்கள்; எனவே, இதுபொழுது ஏற்பட்டுள்ள தக்க தருணத்தை அம் மக்கத்துக் குறைஷியர் தப்பவிடக் கூடாதென்றும், இந் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் இரண்டிலொன்றைப் பார்த்துத் தீர்த்துவிட வேண்டுமென்றும் முடிவுகட்டிக்கொண்டு முனைந் தெழுந்தார்கள். நபிகட்டிலகத்தை 'வேலை தீர்த்துவிடுவ' தென்று இன்றுகாறும் தனித்தனி மனிதர்களால் செய்யப்பட்டு வந்த முயற்சிகளனைத்தும் வீணாகவே வெற்றி பெறாது போய் முடிந்துவிட்டிருந்தன. எனவே, இதுபொழுது இக்கணமே இறுதியான பெருமுயற்சி யொன்று எடுத்துக்கொள்ளப் படாவிடின், நபிபெருமான்ஸல் மதீனாவிற்குத் தப்பியோடி, தங்கள் கரங்களுக் கெட்டாத நெடுந்தூரத்துக் கப்பாலே போய்விடக் கூடுமென்று அம்மக்கத்து மறமாக்கள் சிந்தாகுல ராய்விட்டார்கள். ஆதலினால், அவர்களுடைய எல்லாக் கோத்திரத்தார்களும் ஒன்று திரண்டு ஒரு தீர்க்கமான முடிபுக்கு வந்து சேர்ந்தார்கள்: ஒவ்வொரு கோத்திரத்தினின்றும் ஒவ்வொரு யுவன் வீதம் பலர் பொறுக்கி யெடுக்கப்பட்டனர்; இவர்க ளெல்லாரும் ஒருமிக்கத் திரண்டு ஓரேசமயத்தில் ஒன்றாகவே நம்பெருமானார் மீது தாவிவீழ்தல்

* அஹ்மத் என்பது முஹம்மத் என்பதன் பிறிதொரு பேதம். 'அஹ்மத்' என்பது 'புகழ்கிறவர்' என்றும், 'முஹம்மத்' என்பது 'புகழப்பட்டவர்' என்றும் பொருள்கொள்ளும்.

வேண்டும்; அப்பால் அக்கொலைக்கு ஒருவனும் தனி முறையிலே உத்தரவாதியாக மாட்டான்; ஆனால், எல்லாக் கோத்திரத்தார்மீதும் ஹாஷிம் குடும்பத்தினர் ஏககாலத்தில் பழிதீர்த்துக் கொள்ளத் துணியார் என்பது அன்னவர்களின் அசைக்க முடியாத் துணிபாயிருந்து வந்தது.

ஆதலால், அந்த இரத்தவெறி பிடித்த இளவல்களெல்லாம் ஒருநாள் நள்ளிரவில் ஒன்று சேர்ந்துவந்து, நபிகள்நாயகம் இருந்த வீட்டைச் சூழ்ந்து முற்றுகை போட்டு விட்டார்கள். அதுதெரிந்து நபிகட் டிலகம் தங்கள் படுக்கையில் அபூத்தாலிபின் மைந்தர் அலீரலி என்னும் தங்களுடைய (பிற்கால) மருகரை உறங்கச் செய்துவிட்டு, அதிக தைரியத்துடனே, அல்லா(ஹ்)வின்மீது வைத்த நம்பிக்கையின் திட்டத்தின்மீது உறுதி மிகக் கொண்டவர்களாய், அவ் விருளிரவிலேயே அவ் வில்லத்தை விட்டுத் தெருக்கதவைத் திறந்து கொண்டு வெளிப்புறப்பட்டுச் சென்றார்கள்; என்னெனின், எல்லா யுவர்களும் இறைவனது சோதனையால் உறங்கி மயங்கிப் போய்க் கிடந்தார்கள். அப்பால் நம்பெருமானார்சல் தங்களுடைய பிரதம சிஷ்யரான ஹஜ்ரத் அபூபக்ர்ரலி அவர்களுடனே அந் நடுநிசி யிருளில் புறப்பட்டு மக்காவின் வீதிகளையெல்லாங் கடந்து, அப்பால் வெளியிலுள்ள “தௌர்” என்னுங் கரடு முரடான மலைக் குன்றின் மீது ஏறி, அங்குள்ள குகை யொன்றுள்ளே தங்கிவிட்டார்கள். பொழுது புலர்ந்தது; எதிரிகள் தங்கள் திட்டம் தவறிப்போய் விட்டதைக் கண்டுகொண்டார்கள்;

எனவே, ஏமாந்த சோணகிரிகளே போல் அந் நகர் முழுதும் அலைந்தலைந்து துருவித் துருவித் தேடியோடி னார்கள்; வெளியிலும் எங்கும் ஓடியோடிப் பார்த் தார்கள். ஒரு சாரார் தௌர்க் குகையின் வாயில் வரை கூடச் சென்றுவிட்டனர்; உள்ளிருந்து ஓரிடுக்கு வழியே ஹஜ்ரத் அபூபக்ர்[ரலி] குகைவாயிலில் வந்து நின்றுகொண்டிருந்த அப்பகைவர்களாய கொலைபாத கர்களைக் கண்ணுற்று மனக்கலக்கம் கொண்டு, "யா ரஸூலல்லா(ஹ்)! நாம் இருவர்தாமே இங்கிருக் கின்றோம்! அவர்கள் அநேகம் பேராய் இருக்கிறார் களே!" என்று கவலுற்று மொழிந்த பொழுது, இரசூல் நாயகமவர்கள் அத் தோழரை நோக்கி, "இதற்காக நீர் கவலுற வேண்டா; இறைவனும் நம் முடன் கூடவே யிருக்கிறான்," என்று தைரியம் கூறி னார்கள். எம் பெருமானாருக்கு எத்துணைக் கெத்துணை நிர்க்கதியாய்ப் போகும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடு கிறதோ, அத்துணைக் கத்துணையே அல்லாஹுத் தஆலாவின்மீது அசைக்க முடியா நம்பிக்கை அதிக மாய் உறுதிப்பட்டு விடுகின்றது. எனவே, எதிரி களின் கரம் இப் பெருமானார்மீது வீழ்வதற்கு மிக வும் அண்மிவரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிச்சய மாக ஒரு கட்புலனாகாத கடவுட் சக்தியே வந்து குறுக்கிட்டுத் தடுத்து, இவர்களைக் காப்பாற்றி வைக் கின்றது. அப்படியே இப்பொழுதும் நம் மஹானு பாவர் மகா அற்புதமாய்க் காத்து ரக்ஷிக்கப் பட்டார் கள். அப்பால் மூன்று நாட்கள் வரை நபிபெருமான்[ஸல்] அக் குகையினுள்ளே தங்கியிருந்துவிட்டு, நான்காவது

நாளன்று புறப்பட்டு மதீனுநோக்கிச் சென்றுர்கள். அதுகாலை ஸுராக்கா வென்னும் ஒரு மக்காவாசி, முஹம்மத் நபியின் சிரத்தைக் கொய்துவந்து கொடுத்துப் பரிசு பெறுவான்வேண்டி நபிகள் நாயகத்தைத் துரத்திச் சென்றுன். ஆயின், அவனுடைய அசுவம் இடைவழியில் பலமுறை இடறிவிழுந்து, ஸுராக்காவையும் கீழே தள்ளிவிட்டமையால், நாயகத்தைக் கொல்ல மனந்துணியாது அஞ்சி, அன்னவன் மன்னிப்புப்பெற்று மக்காவிற்கே வாளா திரும்பிவிட்டான். பிறகு சுகமே நபிபெருமானுர்ஸல் ஹிஜ்ரத் புறப்பட்டு, ஹஜ்ரத் அபூபக்ருடனே மதீனுபோய்ச் சேர்ந்தார்கள். இதுதான் நாயகத்தின் சரித்திரத்தில் "ஹிஜ்ரத" என்று பிரபலமாய்ச் சொல்லப்பட்டு வருகிறது; இதிலிருந்தேதான் முஸ்லிம்களின் ஹிஜ்ரீயாண்டும் கணிக்கப்பட்டு வருகின்றது.

மக்காவி லிருந்தபொழுது நபிகள் நாயகம்ஸல் மட்டுமே அத்துணை மனப்பொறுமை யுடனே சற்றேறக்குறைய 13 ஆண்டுகள் வரை எல்லாவிதக் கஷ்ட நிஷ்டூரங்களையும் அல்லா(ஹ்)வின் பொருட்டுச் சகித்துக்கொண் டிருந்தார்க ளென்று நீங்கள் கருதிவிட வேண்டாம்; நபி பெருமானுரை யேற்றுப் பின்பற்றத் துணிந்தவர்க ளெல்லாருமே அவ்வாருகத்தான் முழு மனத்திருப்தியுடனே அந்தக் கொடிய சித்திரவதைக ளனைத்தையும் சகித்துக் கொண்டு வாளா இருந்தார்கள். நபிகட் டிலகத்தால் அம்மக்கள் பால் உற்பத்தி செய்துவிடப்பட்ட புத்துயிரின் பெருமையைக் கண்டு, ஸர் வில்லியம் மூய்ர்போன்ற

எதிர்மத வாதியாலுங் கூடச் சிலாகித்துப் பேசாது இருக்க முடியவில்லை :—

"நன்னம்பிக்கை கொண்டவர்கள் (எதிரிக ளிழைத்த) இடுக்கண்களை யெல்லாம் பொறுமை யுடன் கூடிய தாராள மனப்பான்மை யுடனேதான் சகித்து வந்தார்கள்......ஒரு நூறு ஆடவரும் பெண் டிரும் தங்களுடைய விலையேறப்பெற்ற சன்மார்க் கத்தைத் துறந்துவிடுவதைப் பார்க்கினும் தங்க ளில் லத்தைத் துறந்து, அந்தக் கடும்புயல் சிறிது ஓய் வடைந்து தணியுமட்டும், அபிஸ்ஸீனியாவுக்கு நாடு கடந்து சென்று புகலிடம் தேடிக்கொள்வா ராயினர் கள். அன்றியும், இதுபொழுது மறுபடியும் அதனி னும் பெருந்தொகையினராயுள்ள மனிதர்கள், நபி நாயகத்தையும் உள்ளிட்டவர்களாய், தங்களுக்கு அத்தியந்த பிரியமா யிருந்துவந்த சொந்த நகரத்தை, அதிலுள்ள பரிசுத்த ஆலயத்துடனே—அதுதான் அவர்கட்கு இத் தரணியின்மீது மகா புண்ணியம் வாய்ந்த மத்திப ஸ்தலமா யிருந்துவந்ததைத்— துறந்து வெளிப்பட்டு, மதீனாவை நோக்கி ஓடுகிறார் கள். அவ்விடத்தில், அதேவிதமான அதிசய வசீகர சக்திதான் இரண்டு மூன்று வருடங்களுக்குள்ளே, தங்களுடைய உதிரத்தைச் சிந்தியேனும் நபிகள் நாயகத்தையும் அவருடைய சிஷ்யர்களையும் தற்காப் பதற்குத் தையாராயுள்ள ஒரு சகோதர கோஷ் டியை அன்னவர்களுக்காகச் சித்தஞ் செய்து கொடுத்துவிடுகிறது. யூதர்களின் மதக்கொள்கையே (அதற்கு முன்னே) நெடுங் காலமாக மதீனத்து மக்கட்செவியில் ரீங்காரம் செய்துகொண் டிருந்தது;

ஆனால், அவர்கள் இந்த அரப் நாட்டுத் தீர்க்கதரிசியினால் உண்டு பண்ணப்பட்ட, ஆத்மாவைக் கிளறி விடத்தக்க அரிய முயற்சிகளைச் செவிமடுத்த பின்னரே தங்களுக்குரிய உறக்கத்தினின்று விழித்தெழுந்து, ஒரு புதிய ஊக்கமுள்ள உயிர் வாழ்க்கையின் பக்கல் திடீரெனக் குதித்தெழுந்தார்கள்.''

இவ்வாறு, மக்காவைவிட்டு வடக்கே சுமார் 300 மைல்களுக் கப்பாலுள்ள மதீனாவுக்குச் சென்றும், குறைஷியர்மட்டும் அம்முஸ்லிம்கள்மீது வைத்திருந்த வர்மத்தைச் சிறிதும்மறந்துவிட்டனரில்லை. முதலில் ஒருசில முஸ்லிம்கள் செங்கடல் கடந்து அபிஸ்ஸீனியாவுக்குப் புறப்பட்டுச் சென்றபொழுது, அவர்களை அந் நாட்டினின்று திருப்பிக் கொண்டுவர மக்கத்துக் குறைஷிகள் தங்களாலியன்ற முயற்சிகளை யெல்லாம் செய்துபார்த்தன ரென்பதை நாம் இதற்கு முன்பே படித்திருக்கிறோம். ஆகவே, இதுபொழுது உள்நாட்டிலே வடக்கே சிறிது தூரத்திற் கப்பாலுள்ள மதீனாவிலிருந்து நந் தீனுலிஸ்லாம் தழைத்தோங்கி வருவதை அவர்கள் பார்த்துக் கொண்டு எவ்வாறு வாளா சகித்திருத்தல் சாலும்? எனவே, இவ் விஸ்லாத்தை யொழித்து விடுவான் வேண்டி ஆயிரம் வரையுள்ள குறைஷியர்—தக்க ஆயுத பலத்துடன் கூடிய போர் வீரர்—ஹிஜ்ரீ 2-இல் அம்மதீனாவின்மீது படையெடுத்துச் சென்றனர். இதனை யறிந்த நபிகணாதர்[ஸல்] தம்வயமிருந்த, சிறுவர்களும் வயது முதிர்ந்தவர்களும் பல ஹீனர்களுமாய 313 முஸ்லிம்கள் சேர்ந்துள்ள ஆயுத பாணிக ளல்லாத ஒரு சிறு படையை யழைத்துக்

கொண்டு, மக்காவிலிருந்து வரும் குறைஷிப்படையை இடைவழியிலே எதிர்த்துத் தடுக்கச் சென்றார்கள்; ஆகவே, மதீனாவிலிருந்து மூன்றுநாட் பிரயாண தூரத்திலும், மக்காவிலிருந்து பத்துநாட். பிரயாணதூரத்திலுமுள்ள பத்ரென்னு மிடத்திலே இரு திறத்தாரின் சேனைகளும் நேருக்கு நேராய்ச் சந்தித்தன. அன்று நிகழ்ந்த கடும் போரில் எதிரிகள் மிகச் செம்மையாய் வெரிநொடிய* முறியடிக்கப்பட்டுத் தோல்வியுறச் செய்யப்பட்டதுடன், அவர்களுடைய தலைவர்களெல்லாருமே அநேகமாய் (ஒன்பதின்மர்) மாண்டொழிந்து போயினார்கள். அபூஜஹ்லும் அன்றே எமலோகம் ஏகிவிட்டான்.

ஆனாலும், அடுத்த ஆண்டில், அதே சமயத்தில் குறைஷியர் 3,000 வீரர்களுடனே அபூஸுஃபியான் தலைமையின் கீழே வந்து மதீனாவுக்கு வடக்கே மூன்று மைல் தூரத்திலே பாடிவீடு செய்துகொண்டார்கள்; அதுகாலை அன்னவர்களை யெதிர்க்க 700 முஸ்லிம்களே சேகர மாயினார்கள். அவ்விரு படைகளும், அம் மதீனாவிற்கு வடக்கே யுள்ள உஹதென்னும் மலையடிவாரத்தில் சந்திக்கலாயின; முஸ்லிம்கள் அதிக தீரத்துடனே போர்புரிந்து, அங்கு வந்த எதிரிகளைச் சின்னாபின்ன மாக்கிவிட்டனர். ஆயின், சில முஸ்லிம் வில்லாளிகள் அம்மலைச்சிகரக் கணவாயில் நின்று, எதிரிகள் பின்பக்கமாக வந்துவிடாதவாறு தடுத்துக்கொண் டிருந்தனர்; அடி

---

* வெரிந் - முதுகு.

வாரத்தில் என்ன நிகழ்ந்தாலும், அந்த வில் வீரர்கள் தங்களுக்குரிய அக் கணவாயை விட்டுச் சிறிதும் சறுகக்கூடா தென்று நபிகளுைதர் மிகக் கடுமையாகக் கட்டளை யிட்டிருந்தார்கள். எனினும், எதிரிகள் தோல்வியுற்றுக் கலைந்தோடுவதைக் கண்ட அவ் வில்வீரர்கள் தங்கள் இருப்பிடத்தை விட்டுக் கீழேயுள்ள சமவெளிக்கு வந்துசேர்ந்தார்கள். இதனை யுணர்ந்த எதிரிகள் மீட்டும் பின்புறமாகவந்து, அக் கணவாய் வழியே ஏறி நுழைந்து, அணிகலைந்து நின்ற அம் முஸ்லிம்களை யெல்லாம் பின்புறமாயே தாக்கத் துணிந்தார்கள்; இதனால் மீட்டும் அப்போர் மிகக் கடுமையாய் மாற, நபிகளுயகமும் ஒரு பள்ளத்துள் வீழ்ந்து, எதிரிகள் எறிந்த கவண்கல்லால் இரண்டொரு தந்தங்களையும் இழந்துவிட்டார்கள். அதுபொழுது முஹம்மத்[ஸல்] இறந்துவிட்டாரென்னும் ஒரு வதந்தியையும் அவ்வெதிரிகள் கிளப்பிவிட்டார்கள்; அதன் பயனாக முஸ்லிம்களெல்லாரும் அவ்வெதிரிகளால் செவ்வனே தாக்குண்டு, ஆங்கிருந்து அல்லோல கல்லோலப்பட்டு ஓட்டம்பிடிக்க லாயினார்கள். பிறகு நபிகளுயகரும் ஒருசில முஸ்லிம்களும் சேர்ந்து எதிரிகளைத் தாக்கிக்கொண்டே, ஆங்கிருந்த ஒரு குன்றின் மீது போய் ஏறிக்கொண்டார்கள். பிறகு எதிரிகள் ஒன்றுஞ் செய்யவியலாது வெறுமனே திரும்பி விட்டார்கள்,

அப்பாலும் ஈராண்டு கழிந்து, அந்தக் குறைஷிகள் அரபுநாடுமுழுதும் சுற்றுப்பிரயாணம்செய்து, எல்லா அரபிக் கூட்டத்தினரையும் மதீனாவிலுள்ள

முஸ்லிம்களுக்கு விரோதமாய்க் கிளப்பிவிட்டார்கள். மதீனாவிலிருந்த யூதர்களையும் தூண்டிவிட்டார்கள். முஸ்லிம்களுள்ளும் ஒருசிலரைக் கிளப்பி விட்டு நய வஞ்சகமாய் நடிக்குமாறு பித்தலாட்டம் பண்ணி விட்டார்கள். இவ்வாறெல்லாம் செய்துகொண்டு, குறைஷிகளும் ஏனைக்கூட்டத்தினரும் 25,000 படைகள்*வரை திரட்டிக்கொண்டு, ஹி. 5-இல், மதீனாவிற்கே சென்று அந்நகரைச் சூழ்ந்து முற்றுகை போட்டு விட்டார்கள். எனவே, இதனை "நேசப்படையினர் யுத்தம்" அல்லது "அகழிப்போர்" என்று சரித்திரம் சான்று கூறும். அந் நகரத்துக்குள்ளே யூதர்களும் முஸ்லிம் நயவஞ்சகர்களும் எந்த நேரத்திலும் எத்தகைய துரோகமும் செய்யக்கூடிய நிலையிலிருந்தும், நபி பெருமானார் தங்களுக்குக் கிடைத்த 3,000 முஸ்லிம் வீரர்களுடனே சென்று, மதீனாவைச் சூழ ஓர் அகழி வெட்டிக்கொண்டு, யுத்தத்திற்குச் சன்னத்தராய் நின்றார்கள்; எனவேதான் இஃது "அகழி யுத்தம்" என்றும் அழைக்கப் படுகிறது. எதிரிகள் இவ் வகழியைத் தாண்ட முடியாது, உத்தேசம் ஒரு மாத காலம் வரை வெளியில் நின்றே அம் முற்றுகையை நடாத்தலாயினார்கள். இறுதிலே இறைவன் சோதனையால், ஏற்பட்ட ஒரு நடுநிசிக் கடும்புயலாலும் மாபெருங் குளிராலும் சகிக்கமாட்டாத பெருந்திகி லொன்று கொண்டு, அந் நேசப்படையினர் அனைவரும் தங்கள் ஆயுதங்களையும் பிற தட்டு முட்டுச் சாமான்களையும்

---

* 10,000 தான் என்றும் ஒருசிலர் கூறுவர்.

எறிந்துவிட்டு, விடியுமுன்னே மக்காவை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள்.* அப்பால் அவர்கட்கு மதீனாவின் மீது மறுபடியும் படையெடுத்துச் செல்லத் தைரியம் எழாமலே போய்விட்டது. எனினும், அக் குறைஷியர் வேறு மக்களைத் தங்களால் இயன்றவரை யெல்லாம் அம் முஸ்லிம்கள்மீது ஏவிவிட்டுக் கொண்டேயிருந்துவந்தனர்; எனவே, எம்பெருமானாரும்[சல்] அவ்வக்கோத்திரத்தார் மீதெல்லாம் அடிக்கடிபடையெடுத்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் உள்ளாக்கப்பட்டே வந்தார்கள்.

பிறகு ஹி. 6-இன் இறுதியிலே நபிபெருமானார் சுமார் 1,500 தோழர்களுடனே திருமக்காவை நோக்கி ஹஜ்ஜு செய்யப் புறப்பட்டார்கள். ஆனால், மக்காவுக் கருகிலுள்ள ஹுதைபிய்யா வென்னும் இடத்திலே குறைஷியர் எதிர்கொண்டுவந்து, அம் முஸ்லிம்களைத் தடுத்துவிட்டார்கள். அதுபொழுது முஸ்லிம் வீரர்கள் யுத்தத்திற்குச் சித்தமாயிருந்தும், நபிகளாயகரின் கருத்திற்கிணங்கக் குறைஷியருடன் பத்தாண்டுக்குரிய ஓர் உடன்படிக்கையைச் செய்து முடித்துக் கொள்ள இணங்கினார்கள். அதில் காணப்பட்ட ஒரு நிபந்தனையின் பிரகாரம், இருகக்ஷியினரும் தத்தமக்குரிய வேறு கோத்திரத்தாருடனே சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளலாம். ஆனால், குறைஷியரின் நண்பர்களை முஸ்லிம்கள் எதிர்ப்பது கூடாது; அவ்வாறே முஸ்லிம்களின் நண்பர்களையும் குறைஷியர்

---

*"God blew with His wind and they were scattered."

தாக்குவது தகாது. எனினும், இவ் வுடன்படிக்கை எழுதப்பட்டு இரண்டாவ தாண்டிலே குறைஷியரின் நேசக்கூட்டத்தினர் சிலர் முஸ்லிம்களின் நேசக் கூட்டத்தினரை அகாரணமாய்த் தாக்கிக் கஃபா வென்னும் தேவாலயத்துள்ளும் துரத்திச்சென்று, ஒருசிலரைப் படுகொலையும் புரிந்துவிட்டார்கள்; அது காலைக் குறைஷிகளும் தங்கள் நண்பர்களுடனே சேர்ந்துகொண்டு, முஸ்லிம்களின் நேயர்களைத் தாக்கினர்கள். இதற்குரிய சமாதானம் யாதெனக் கேட்டனுப்பியக்கால், அந்த மக்காவாசிகள் ஒன்றும் திருப்திகரமான சமாதானம் கூருது, முஸ்லிம்களை யுத்தத்திற்கு வருமாறு அழைத்தார்கள்.

---

## மக்கமாநகர் பிடிபடல்

எனவே, ஹி. 8-இல் நபிபெருமானர்ஸல் 10,000 முஸ்லிம் வீரர்களுடனே மக்காவின்மீது உறையுட் சொருகிய வாளுடனே படையெடுத்துச் சென்றார்கள்; ஆனல், அம் மக்காவாசிகளால் ஒன்றுஞ் செய்ய இயலாதுபோய், வாளா இருந்து விட்டார்கள். நபிகணாயகர்ஸல் அந் நகரைக் கைப்பற்றி, அங்குள்ளா ரனைவர்க்கும் சர்வ தாராளத்துடனே பெருந்தன்மை யான மன்னிப்பை யளித்துவிட்டார்கள். ஆகவே, ஒருதுளி யுதிரமுஞ் சிந்தப்படாமலே ஒரு பெரிய தலை நகரம் கைப்பற்றப் பட்டுவிட்டது. அப்பால் அங்குச் சிரங்குனிந்து நின்ற எல்லாக் குறைஷியரையும் நோக்கி நபிகட் டிலகம், “சகோதரர்காள்! நீங்கள் என்

மாட்டிருந்து எத்தகைய நியதியை எதிர்பார்க்கின்றீர்கள் ?" என்று வினவலுற்ருர்கள் ; அம் மறமாக்கள் அதிகாரபீடத்தில் அமர்ந்திருந்தக்கால், இஸ்லாத்தின் மூலவேரையே கல்லியெறியவும், முஸ்லிம்களை இத் தரணியிலில்லாது அழித்தொழிக்கவும் எடுத்துக்கொள்ளாத முயற்சி எதுவுமே இல்லையென்னலாம்: அம்முஸ்லிம்களையெல்லாம் ஊரைவிட்டுத்துரத்தினர் ; மக்கமாநகரைவிட்டு வெளியூர் சென்று, நெடுந்தூரத்துக்கப்பால் புகலிடம் தேடிக் கொண்டும், அவ்வேழை முஸ்லிம்களை அமைதியுடன்வாழ அம் மறமாக்கள் வாளாவிட்டுவிட வில்லை ; நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை இணையில்லாத் துன்பங்களுக் கெல்லாம் ஆளாக்கியதுடன் நில்லாது, நிரபராதிகளா யிருந்த பல ஆண்களையும் பெண்களையும்—ஏக இறைவனை ஏற்றுக் கொண்ட ஒரே காரணத்திற்காகவே—சித்திரவதை புரிந்து உயிரைப் போக்கினர். ஆனாலும், அம் மக்காக் குறைஷியர் தங்கள் பண்டைய "அல்அமீனை"ச் செவ்விதா யறிந்திருந்தனர் ; இப் பெருமானார் தங்கள் அகன்ற மார்பகத்துள்ளே விரிந்த ஹிருதய கமலத்தை வாய்க்கப் பெற்றிருந்தனர் என்பதையும் நன்கறிந்தேயிருந்தனர். ஆகவே, அவர்களெல்லாரும், "நீர் ஒரு மேலான சகோதரரா யிருக்கின்றீர்; ஒரு மேலான சகோதரர் புத்திரரா யிருக்கின்றீர்," என்று சிறிதும் தயங்காது சட்டென விடையளித்தார்கள். ஆனாலும், நபிபெருமானார்சல் அம்மக்களைநடாத்தியவிதம், அன்னவர்களால் எதிர்பார்க்கப்பட்டு வந்தவற்றையெல்லாங் காட்டில் மிகவு மதிகமாயே போய் முடிந்துவிட்ட

தெனல் வேண்டும். என்னெனின், யூஸுபுநபி அலை தம் முடையசோதரர்கட்குக்கூறியுள்ளவாறேஇம்மஹானு பாவரும், "இன்று உங்களுக் கொன்றும் இடித்துக் கூறும்கண்டனமொழிகூட இல்லை," என்றுசர்வசாதா ரணமாய்ச் சொல்லிச் சைகையென்று கூட உச்சரிக்காது உதார குணத்துடனே உள்ளபடியே மன்னித்து விட்டு விட்டார்கள்.

அன்றுவரை அம் மக்காவாசிகளனைவரும் இஸ் லாத்தை ஏற்காமலே யிருந்து வந்தார்கள்; அவ்வா றிருந்தும், அவர்களுடைய கொடிய நடைகளுக்காக வெல்லாமும் சிறிதுங் கண்டிக்காது வாளா விட்டு விட்ட நம் மஹானின் தாராள மனப்பான்மையை நீங்கள் உற்று நோக்குங்களே; அது போகட்டும். இனி அவர்கள் என்செய்யவேண்டுமென்பது குறித்தேனும் அன்னவர்பா லிருந்து ஓர் உறுதி மொழியை வாங்கிக் கொண்டார்களாவென்றால், அதுவுமில்லை. "நீயுன் பகைவனை நேசிக்கக் கடவாய்," என்னும் மேலான வாக்கியத்துக் குரிய பிரத்தியக்ஷ பூர்வமா யுள்ள திருஷ்டாந்தம் இதோ இருக்கின்றது, பாருங்கள்; எனவே, மக்கமாநகர் மட்டுமே அப்பொழுது வெற்றி கொள்ளப் பட்ட தென்று எண்ணி விடாதிர்கள்! அதனுடனே தீனுலிஸ்லாத்தின் ஜன்மப் பகைவர் களின் ஹிருதயங்களுங்கூட வெற்றிகொள்ளப்பட்டுப் போய்விட்டன. அரப்நாடு முழுதும் எதிர்த்து நின்று பார்த்தும், அவ்வெல்லா எதிர்ப்பின் முடிவும், எல்லாப் பகைவர்களின் மத்தியிலே தன்னந்தனியாய் நின்ற ஒற்றை மனிதரது வாசாவினின்று வெளிப்போந்த

அந்தச் சக்திவாய்ந்த சத்தியத்தின் முன்னே எவ்வாறு அடியுடன் முறியடிக்கப்பட்டுப் போய்விட்டதென் பதைத் தங்களுடைய நேத்திரங்களைக் கொண்டே அவர்கள் நிதரிசனமாய்ப் பார்த்துக்கொண்டுவிட்டார் கள். ஆதலினால், இதுபொழுது, இச் சத்திய சன் மார்க்கத்தின் உண்மையான தன்மை அவர்கட்கெல் லாம் பட்டப் பகல்போலே திட்டமாய்த் தெரிய லாயிற்று; எனவே, இப்பால் ஆடவரும் பெண்டிரும் திரள்திரளாக வலுவிலே வந்து, இம் மார்க்கத்தைத் தழுவிக் கொள்ளத் துணிந் தெழுந்தார்கள். ஒருவர் கூடப் பலாத்காரமாக இஸ்லாத்தில் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்தப்படவே யில்லை. இன்றளவும் இஸ்லாத்தில் சேராதவர்க ளெல்லா ரும், இதற்கு முன்பே சேர்ந்து கொண் டிருந்த வர்களைப் போலவே ஒரே மாதிரியில் உடன் பிறந்த சோதரர்களைப் போலே நடாத்தப்பட்டு வந்தார்கள். மூயிர் துரையாலும் இவ் வுண்மையை ஒத்துக் கொள் ளாதிருக்க முடியவில்லை :—

"மக்கமா நகர் நபிகள் நாயகத்தின் அதிகாரத்தை மெத்த சந்தோஷத்துடனே ஏற்றுக்கொண்ட போதி னும், ஆங்கிருந்த எல்லா மக்களும் இன்றுகாறும் இப் புதிய மதத்தினைத் தழுவிக்கொள்ளவு மில்லை; இவரு டைய நபித்துவ உரிமையை வெளிப்படையாக அங்கீ கரிக்கவு மில்லை. ஒருகால், இவர் மதீனாவின்கண் அனு சரித்து வந்த முறையினையே இங்கும் அனுஷ்டித்து, பொது மக்கள் இஸ்லாத்தைத் தழுவுதற்குரிய காரி

யத்தை நிர்ப்பந்த மில்லாது சிறுகச் சிறுக முடிவு பெற்று வரவே விட்டுவிட எண்ணி யிருந்தனர் போலும்.''

மக்காவின் வெற்றி அரப்நாட்டிற்கே ஒரு வழி காட்டியாக அமைந்துவிட்டது. என்னெனின், உண்மையிலே மக்காவிலுள்ள குறைஷிகளே நபிபெருமானாருக்கு விரோதமாய்க் கிளப்பப்பட்ட எல்லாப் பெரிய எதிர்ப்புக்களுக்கும் பொதுப்படையான மூல காரணமா யிருந்துவந்தார்கள். மக்கமா நகர் பிடிபட்ட பின்பு உடனே கிளப்பப்பட வேண்டியிருந்த, ஹவாஜின் வர்க்கத்தினர்க்கு விரோதமாய்ப்புறப்பட்ட ஹுனைன் யுத்தம் ஒன்றைத் தவிர்த்து, முஸ்லிம்களுக்கும் அரப்நாட்டிலிருந்த எல்லா முஸ்லிமல்லாதார்களுக்கும் இடையிலே நடைபெற்றுவந்த சகலவித யுத்தங்களும் அடியோடு முடிவுபெற்றுப் போய்விட்டன வென்னலாம்; மீக்கூறிய ஹுனைன் யுத்தத்தில் முஸ்லிம்களுடனே மக்கத்து முஸ்லிமல்லாத மக்களும் சேர்ந்தே ஹவாஜின்களை எதிர்த்துச் சண்டை செய்தனர்.

இது போழ்து இஸ்லாம் உள்நாட்டுக் குழப்பங்களை விட்டு ஒருவாறு நீங்கி அமைதிபெற்ற தென்றால், வடதிசையிலுள்ள கிறிஸ்தவ அரசாங்கத்தினர் இஸ்லாத்தின் மகா சக்தியையும் பெருவெற்றியையுங் கண்டு பொறாமையுடன் கூடிய புழுக்கத்தைக் கொள்ளத் தலைப்பட்டு விட்டனர்; ஆகவே, அரப் நாட்டின் மீது படையெடுத்து வர உரோம ராஜ்ஜியத்தார்

ஆயத்தஞ் செய்துகொண் டிருந்தார்கள் என்று அடிக்கடி மதீனாவுக்கு வந்துகொண்டிருந்த செய்திகளை முஸ்லிம்கள் புறக்கணிக்க முடியாதவர்களாய் விட்டார்கள். எனவே, நபிகட்டிலகம் 30,000 படைகளைத் திரட்டிக் கொண்டு தாங்களே தலைமை வகித்து வடக்கெல்லையை நோக்கிப் புறப்பட்டார்கள்; எனினும், இப்பெருமானார் தபூக்கென்னும் இடத்தை யண்மிய பொழுது, தங்களுடைய முன் ஜாக்ரதையால் எதிரிகள் தங்கள் முயற்சியில் முற்றிலும் பின்னிடைந்து போய் விட்டார்க ளென்று தெரிந்துகொள்ள லாயினார்கள். ஆதலினால், அங்கு யுத்தகளத்தில் எதிரிப்படை ஒன்று மில்லாமை கண்டு, நபிபெருமானார்ஸல் எந்த மனிதர்களையும் தாக்காமலும், உரோமர்கள்மீது உயுத்தம் தொடங்காமலுமே வாளா திரும்பி விட்டார்கள். ஏனென்றால், உண்மையிலே எப்பொழுதுமே நபிகட்டிலகம் குர்ஆன் ஷரீபிலுள்ள யுத்தகாலச் சட்டங்களையே—அஃதாவது, முஸ்லிம்கள்மீது முதலில் யுத்தந் தொடங்க வாளையுருவும் பகைவர்கள்மீது மட்டுமே அப்பால் முஸ்லிம்களும் தற்காப்பிற்காகத் தங்கள் வாளையுருவலாம் என்னுங் கட்டளையையே—முற்றிலும் பின்பற்றி யொழுகிவருவா ராயினார்கள்.

தபூக்கிலிருந்து திரும்பிவந்த பின்பு, அரப்நாடு முழுதும் சாந்தியும் சமாதானமும் நன்கு நிலைபெற்று விட்டன; (ஆனாலும், ஆங்காங்கே இஸ்லாத்தின் எல்லைக்குள்ளே கொள்ளைக் கூட்டத்தாரின் தொல்லைகள் மட்டும் சிறிது காணப்பட்டு வந்தன.) அப்பால் தான் நெடுந்தூரத்தி லிருந்தும் சமீபத்தி லிருந்து

மெல்லாம் தூது கோஷ்டியினர் பலப் பல பேர்கள் நபிகளுைதரிடம் விஜயஞ் செய்து, தீனுல் இஸ்லாத்தின் தத்துவங்களைப் பற்றியெல்லாம் தெரிந்துகொண்டு செல்லத் தலைப்பட்டுவிட்டார்கள்; இவ்வாருய முறை யாலே அடுத்த ஒன்றரை யாண்டுக்குள்ளே அநேக மாய் அரப்நாடு முழுவதுமே இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டுவிட்டதென்னலாம். எனவே, ஹி. 9-இல் நடைபெற்ற ஹஜ்ஜின்போது நபிபெருமானது அர சப்பிரகடனம் ஒன்று மக்கமா நகரில் படிக்கப்பட் டது: அதன் வாயிலாய், இனி விக்கிரகத் தொழும் பர்கள் கஃபாவுக்கு வந்து ஹஜ்ஜு செய்ய அனு மதியளிக்கப்பட மாட்டார்களென்றும், அதற்கு முன்னே பண்டைப் பாமரர்கள் செய்துவந்ததேபோல, இனியொருவரும் ஆடையில்லாது அம்மணமாய் அவ் வாலயத்தைச் சுற்றி இடம்வரக் கூடாதென்றும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆகவே, அப் பழுக் கற்ற, அதிபரிசுத்த, இணையற்ற ஏகதெய்வக் கொள்கையை இனி மேற்கொள்வான் வேண்டி அம் மக்க ளனைவரும் தங்களுடைய பண்டைப் பாமர விக்கிரக வணக்கத்தை விட்டொழித்தது மட்டுமே தான் அன்று இவ் விஸ்லாத்தினுல் செய்யப்பட்ட இணையிலாச் சீர்த்திருத்த மென்று எவரும் எண்ணி விடா திருப்பாராக; இல்லை. அவ் விஸ்தீரண அரப் நாட்டின் ஒரு கோடி முதல் மறுகோடி வரையுள்ள எல்லா மக்களும் எல்லா விஷயத்திலும் மேலான சீர் திருத்தத்தையே அடைந்து கொண்டு விட்டார்கள்: உயிர்வாழ்க்கையின் மாட்டுள்ள அறியாமை, மூடக்

கொள்கை, முழுமக்கட் டன்மை ஆதிய வெல்லாம் ஒழிந்து, நாகரிகம், நல்லொழுக்கம், பகுத்தறிவு போன்றவைகளே அவ்விடத்தில் நிலைபெறுத்தப் பட்டுப் போய்விட்டன.

---

## நபிபிரான் நிர்யாணமடைதல்

நபிகளுநாயகரின்^ஸல் காரியாதிக ளனைத்தும் இவ்வாறு முற்றிலும் வெற்றியுடனே நிறைவேறி முடிந்த பின்பு, இம் மஹானுபாவர் ஹி. 10-ஆவது ஆண்டின் இறுதியிலே தங்களுடைய ஒன்றரை யிலக்ஷம் சிஷ்ய கோடிகளுடனே புறப்பட்டு, மக்கமா நகர் சென்று, தங்களுடைய இறுதி ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொண்டார்கள்; அதுகாலை அரபாத் மைதானத்திலுள்ள நடுமலை (ஜபலெரஹ்மத்)மீது ஏறிநின்று, எம்பெருமானார்^ஸல் அவர்கள் ஓர் இனிய சொற்பொழிவும் ஆற்றி முடித்தார்கள். அதில், ஏக தெய்வக் கொள்கையும், ஏக சகோதர வாஞ்சையும், பெண்மணிகளின் உயர்வும், அடிமைகளின் மேன்மையும், அண்டை அயலவர்களுடனும் உற்றார் உறவினர்களுடனும் நடந்துகொள்ள வேண்டிய முறைகளும் மிகவும் வற்புறுத்திக் கூறப்பட்டன; கொலை, களவு, காமம், கள், சூது, அனாதைகளின் பொருளை அபகரித்தல் ஆதியவற்றைப் பற்றியும் அழகாக வற்புறுத்தப் பட்டது. இறுதியாக எம்பெருமானார்^ஸல் அவர்கள், தங்கள் 63-ஆவது வயதிலே, ஹி. 11-இல், ரபீஉலவ்வல் மாதம் முதற்றேதி யன்று* (கி. பி. 632-இல்)

---

* 2-ஆந் தேதி யென்பர் வேறு சிலர்.

திங்கிட்கிழமை பிற்பகலில், *" ஆண்டவனே நெருங்கிய மேலான சிநேகிதன் "† என்று திருவாய் மலர்ந்தருளியவண்ணம் எல்லாம் வல்ல இறைவனது திருவடி நீழலைப் போயடைந்து விட்டார்கள்.—(இன்னு லில்லாஹி வ இன்னு இலைஹி ராஜிஊன்.)

---

## நபிபெருமானது மாபெரும் வெற்றி

மஹான் முஹம்மத் நபி (சல்அம்) அவர்களுடைய ஜீவியசரிதை மிகவும் சுருக்கமாகவே மேலே வரையப் பட்டிருக்கின்றது. மீக்கூறிய சரித்திரம் எத்துணைச் சுருக்கமா யிருப்பினும், அதினின்றும் ஒரு முக்கியமான விஷயத்தை மட்டுமேயும் நீங்கள் கவனியாது போய் விடுவது சாலாது: அதுதான் நபிபெருமானுரவர்கள் அடைந்துள்ள பிரமிக்கத்தக்க மஹா ஜயமாகும். ஒரு கால்நூற்றுண்டைப் பார்க்கினும் குறுகிய கால எல்லைக்குள்ளே இம் மஹானுபாவர் செய்து முடித்துள்ள சீர் திருத்தங்களுக்கு நிகரான சம்பவத்தை இவ்வுலகிலுள்ள வேறெந்தத்தேயத்துச் சரித்திர ஏடுகளிலும் நீங்கள் மெய்யாகவே கண்டுகொள்ள மாட்டீர்கள். அத்துணைப் பெரிய தேசத்தில் வசித்து வந்த அத்தனை மக்களையும் ஒரே தலைமுறையில் அத்துணை முழுக்கமுழுக்கச் சீர்திருத்தஞ்செய்து எல்லாவற்றிலுமே உச்சத்தில் கொண்டுவந்துவிட்ட மற்றொரு

*இப்பெருமானார் ஜனனமாயது, கி. பி. 571, ரபீஉ லவ்வல் மாதம் 9-ஆந் தேதி, திங்கட்கிழமை விடியற்காலையிலாம்.

†" அல்லாஹும்ம 'ர்ரபீ:க்கில் அஃலா. "

சீர்திருத்தக் காரரை நீங்கள் உண்மையிலே ஓரிடத்திலும் பார்த்திருக்க மாட்டீர்கள்; இனியும் பார்க்கப் போவதில்லை. உண்மையிலே நபிகணநாதர்(சல்) அந்த அரபிகளைக் கண்டதேபோன்ற அத்துணை யாழமான பாதலப் படுகுழியிலே, வேறெந்தச் சீர்திருத்தக்காரரும் தம்முடைய மக்களைக் கண்டது கிடையாது; மேலும், நம் மஹானுபாவர் தம்மக்களை இகத்துக்கும் பரத்துக்கு முரிய ஒழுக்க வழக்கங்களிலும் ஆத்ம ஞான முன்னேற்றத்திலும் மிகவு முயரிய மகா முகட்டை யடையுமாறு தூக்கிவிட்டதே போல வேறெவரும்— எந்த மகானும், எந்தமஹாத்மாவும்— தம் மக்களைத் தூக்கிவிட்டது கிடையாது. அந்த அரபிகளின் விக்கிரகத் தொழும்பு (உருவ வழிபாடு) அதிபாதலம்வரை மிகவும் வேரூன்றிப் போய்க் கிடந்தமையாலும், அன்னவர்களின் மூடக் கொள்கைகளும் முழுமக்கட் பழக்க வழக்கங்களும் மகா சக்திகளுடனே மிகவும் பிற்போக்கடைந்துபோய்க் கிடந்தமையாலும், ஒருவர்பின் ஒருவராக யூதர்களும் கிறுஸ்தவர்களும் தங்களுக்குப் பின்னால் மிக்க செல்வாக்குள்ள அரசாங்கப் பலமுழுவதையும் வைத்துக்கொண்டு, நூற்றாண்டுக் கணக்காய்ப் பிரசாரம் புரிந்துவந்தும், அன்னவர்களா லெல்லாம் ஒருசிறிதும் அவ்வரபிகளைச் சீர்திருத்தம் செய்யவியலாது போய்விட்டது. உள்நாட்டிலே அவ் வரபிகள் மத்தியிலே தோன்றிய ஹனீபுகளின் இயக்கமும் படுதோல்வி யடைந்தே போய்விட்டதெனல் வேண்டும். எவரெவ ரெல்லாம் வந்து, என்னென்ன விதமாக வெல்லாம் முயன்று

பார்த்தும், அந்த அரப் ஜாதியார் எப்பொழுதும் போலவேதான் தங்கள் மதத்திலும் ஆசாரத்திலும் அணுத்துணையும் முன்னேறாமலே பாதலப் படுகுழியுள்ளே படுத்துக்கொண்டு கிடந்தனர்.

ஆனால், நபிகள் பெருமானார்சல் அவதரித்து, இருபத்து மூன்றே ஆண்டுகள்தாம்— (40-ஆம் பிராய முதல் 63-ஆம் பிராயம் வரை) பாடுபட்டார்கள்; அதற்கு முன்னே துருப்பிடித்த இழிய இரும்பாய்க் கிடந்த அரபிகள் அப்பால் மெருகேற்றப் பெற்ற பத்தரை மாற்றுப் பசும் பொன்னாய் மாறி உயர்ந்து விட்டார்கள். வானத்தின் கீழே பூமியில் எங்கிருப்பினும், விக்கிரக வணக்கமும், வேறு பலதெய்வ வணக்கங்களும் மனித இனத்தையே இழிவுசெய்து வைக்கக் கூடியன வென்றே இப்பால் செவ்வனே கருதப்படலாயின. எனவே, இஸ்லாம் வேரூன்றத் தலைப்பட்டபின்னர் விக்கிரகத்தின் அடிச்சுவடே அவ்வரப் நாடு முழுவதும் இல்லாமலே மறைந்தொழிந்து போய் விட்டது. மனிதஇனம் முழுவதுமே, மன்பதைக்குரிய உண்மையான உயரிய அந்தஸ்து இன்னதுதானென்பதை உள்ளவாறே உயிர்த்தெழுந்து உணர்ந்துகொண்டுவிட்டது; குர்ஆன் ஷரீபால் மிகவும் விளக்கமாய்க் கூறப்பட்டிருப்பதே போல, மனிதனால் ஆட்டிப் படைப்பதற்கென்றே சிருஷ்டிக்கப் பட்டுள்ள சேதன அசேதனப் பொருள்கள் முன்னேயும், அவனால் அடக்கியாளப்படுதற்கென்றே சிருஷ்டிக்கப்பட்டுள்ள பிரபஞ்ச இயற்கைச் சக்திகள் முன்னேயும் மனிதன் தண்டனிட்டுச் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கு

வது தவறென்பதை, தன்மதிப்பிற்கு இழிவானதென்பதை அன்னவன் செவ்விதா யுணர்ந்துகொண்டு விட்டான். மூடபக்தி யென்பது பகுத்தறிவு மார்க்கத்துக்கு இடங்கொடுத்து வழிவிலகிப் பின்னிடைந்து போய்ப் பதுங்கிவிட்டது. அந் நாட்டு அரபிகள்பால் காணப்பட்டு வந்த அதிக அனுசாரமுள்ள கொடிய பழக்கவழக்கங்க ளெல்லாம், பகிரங்க துராசாரமான வெட்கங்கெட்ட ஆண்பெண் ஒழுக்கக் கேட்டுடனே அடியோடு அழித்தொழிக்கப்பட்டுப் போய் விட்டதுடன் நில்லாது, ஒரு தேசத்திற்குமட்டும் அல்லது ஒரு ஜாதியாருக்குமட்டும் ஊழியம் புரிவதோடு திருப்தி யடையாது, அதனைப்பார்க்கினும் பன்மடங்கில் சிரேஷ்டம் வாய்ந்துள்ள பேரூழியமாகிய மனித இனத்திற்கே சேவகம் புரிவதென்னும் கைங்கரியத்தில் ஈடுபடுவதே முற்றிலும் சாலச்சிறந்த தென்னும் ஓர் உயரிய முடிபிற்கு அன்னூர் வந்து சேர்ந்து விட்டனர்.

எளியவர்களுக்கும் அடக்கி யொடுக்கப்பட்டவர்களுக்கும் இழைக்கப்பட்டு வந்த அநீதியாய பண்டை வழக்கங்க ளனைத்தும், ஒரு மந்திரவாதியின் மாத்திரைக்கோலால் அப்புறப் படுத்தப்பட்டனவே போல், அறவே அப்பால் அகற்றப் பட்டுப் போய்விட்டன; அவற்றின் ஸ்தானத்திலே நியாயமும் நல்லொழுங்கு முள்ள மானுஷீக சட்டங்களே நிரூபணம் செய்து நிறுவப் பெற்றன. நெடுங்காலமாயே அவ்வரப்நாட்டில் அனுஷ்டானத்தில் இருந்துவந்த "குடிப்பழக்கம்" என்னப்பட்டது,

மதுவருந்துதற் கென்று அன்னவர்களால் உபயோகிக் கப்பட்டு வந்த குப்பிகளும் பிப்பாக்களும் இருந்தவிடம் தெரியாது மறைந்து போகக்கூடிய தன்மையிலே, அடியோடு மறக்கப்பட்டுப் போய்விட்டது. சூதாடுவ தென்பதும் அவ்வாறே அடிச்சுவடற்றுப் பறந்து போய் விட்டது. ஆண்பெண் காந்தர்வக் கூட்டுற வென்பது— (களவொழுக்கம்) இப்பொழுது மிகவும் கடுமையான சரியான சதிபதியொழுக்கத்திற்குக் கீழே கொண்டுவந்து ஸ்திரப்படுத்தி வைக்கப்பட்டது. அறி யாமையையே ஓர் ஆபரணமாக அணிந்துகொண் டிருந்த அம்மறமாக்கள், இப்பால் அறிவின் வேட்கை மிகுதியால் எங்கெங்கும் ஓடி, ஞானமென்பது எங்குக் காணப்படினும் அது முஸ்லிம்களுக்குரிய காணமற் போன ஒட்டகமெனக் கொண்டு, கட்டிப்பிணிக்கத் தலைப்பட்டுவிட்டனர்.

மேற் கூறிய எல்லாவற்றையுங் காட்டில் மற் றொரு முக்கிய சீர்திருத்தம் அந்நாட்டில் நம்பெருமா னவர்களால்சல் நிறைவேற்றி வைக்கப்பட்டது. அஃது யாதெனின்: அந்நாட்டு மக்களெல்லாம் எப்பொழு தும் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டே கிடப்பர்; அதனால் அத்தேய முழுதுமே, குர்ஆன் ஷரீபு மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறியிருப் பதே போல, "ஓர் அக்கினிக் குண்டத்தின் விளிம் பிலே" யிருந்துவந்த தென்று சொல்லக் கூடிய முறையிலே தளும்பிக்கொண் டிருந்தது. இத் தன் மைத்தாய பூசல்களும் போர்ச்சச்சரவுகளும் மலிந்து

கிடந்த பல்வேறு திறப்பட்ட அந்த அரபமாக்களை யெல்லாம் நபிகணுயர்சல்அம் ஒரே ஜாதியினராக, உஜ்ஜீவிப்பும் உத்வேகமும் நிரம்பியுள்ள ஒரு கட்டுப்பாடுள்ள ஜாதியினராக மாற்றி யமைத்து விட்டார்கள். எனவே, இப்புதிய மதவுணர்ச்சி மிக்குள்ள அவ்வரப் ஜாதியாருக்கு முன்னே, அப் புராதனவுலகின் மஹா ராஜ்யங்களும் சாம்ராஜ்யங்களு மெல்லாம் உதிர்ந்து நொறுங்கும் விளையாட்டுப் "பொம்மை"களே போலச் சுக்குச்சுக்காய்த் தகர்ந்து சிதறுண்டு போய் விட்டன. நபிகட் டிலகத்துக்கு முன்னே யாகட்டும், அல்லது அவர்கட்குப் பின்னே யாகட்டும், ஒருவரும் இதுகாறும் ஒருபொழுதும் இம் மஹானுபாவரே போல், இப்படிப்பட்ட ஒரு புத்துயிரை அத்துணைப் பெரிய விசாலமுள்ள ஒரு விஸ்தீரணத் தேயத்தின் மீது — அஃதாவது, மனித வாழ்க்கைக் குரிய எல்லாத் துறைகளிலும்— உண்டுபண்ணி விட்டன ரில்லை. எவ்வாறெனின், தனி மனிதன், கூட்டுக் குடும்பம், சமுதாயம், தேசம், ஜாதி ஆகிய எல்லாவற்றிலும் புத்துணர்ச்சி ; புதிய சீர்த்திருத்தம் எனல் வேண்டும் ; புதிய உத்வேகம்! உலக வியவகாரங்களிலும் ஒழுக்காசாரங்களிலும், அறிவுத் துறைகளிலும் ஆத்மஞான முற்போக்குக்களிலும் அம்மக்கள் விழிப்படையச் செய்யப்பட்டார்கள். இதன் கீழே சிற்சில அத்தாக்ஷிகளை முஸ்லிம்களல்லாத— இல்லை, முஸ்லிம்களுக்கு விரோதமாயுங்கூட வுள்ள— ஆசிரியர்களுடைய எழுத்துக்களிலிருந்து எடுத்தெழுதுவாம் :—

" முஹம்மதின்(சல்) பால்ய தசையில் அத் தீப கல்பத்தின் நிலைமையானது சற்றும் முற்போக்குக்கு இடமில்லாது ஒரே மந்தகதியி லிருந்து வந்தது; இன்னமும், அதற்குமுன் எப்பொழுதும் சீர்திருத்த மென்பது அத்துணை முடியாத காரியமாய்க் காணப் பட்ட தில்லை.''— (மூய்ர்)

* * * * *

" முஹம்மதுக்கு முன்னே அரப்தேசம் இருந்து வந்த நிலைமையானது, அத் தேசத்தாரின் மதவிஷயத் திலும், தேசீய விஷயத்திலும், ஜாதீய விஷயத்திலும் சிறிதும் சீர்திருத்தம் செய்வதற்கு இடங்கொடாத தாகவே காணப்பட்டது. அந்த அராபியரின் மதக் கொள்கையானது, அதிகமாய் வேரூன்றிப் போய்க் கிடந்த விக்கிரகத் தொழும்பே யாகும்; எனவே, எகிப்திலிருந்தும் சிரியாவிலிருந்தும் வந்த ஒவ்வொரு விதமான மத மாற்றச் சீர்திருத்த முயற்சிக்கும் முன் னிலையில் எந்தவிதமான பிரத்தியக்ஷ மாறுதலுமில் லாமல் பல நூற்ருண்டுக ளாகவே முன்னிருந்த நிலைமையிலேயே அத்தேச விஷயம் இருந்துவந்தது.'' — (மூய்ர்)

* * * * *

" திருப்திகரமான முடிபைச் சாதித்துக் காட்டு வதற்குச் சுயமே வெளித் தோற்றத்தில் ஒரு தனி மனிதனல் பற்பல விஷயங்கள் செய்து நிறைவேற்றப் படுவதைக் காணுங்கால், அவ்வவற்றிற் குரிய காரணங்கள் இன்ன இன்னவை யென்று பலவித மான பொய்க் காரணங்களைக் கூற இவ்வுலகோர் முற் படுவ துண்டு: முஹம்மத் (சல்அம்) தோன்றினூர்;

உடனே அந்த அராபிய ரெல்லாரும் ஒருவிதமான நூதனப் பாரமார்த்திகக் கொள்கைக்குள்ளே வந்து சேர்ந்துவிடக்கூடிய உணர்ச்சியைப் பெற்றுவிட்டார்கள். இதனுல் ஏற்படும் முடிபு யாதெனின், அரப் தேசமானது சீர்திருத்தத்துக் குரிய பரிபக்குவத்தை யடைந்து வந்தது என்பதேயாம். ஆதலின், அத் தேயம் அத்தகைய மாறுபாட்டை உடனே ஏற்றுக் கொண்டுவிட்டது என்பதுமேயாம். ஆனுல், புராதன சரித்திரத்தை நிதானத்துடனே ஆராய்ந்து பார்க்கும் எமக்கு, இஸ்லாத்துக்கு முற்பட்ட சரித்திரமென்பது இத்தகைய முடிபை ஏற்றுக்கொள்ள இடங் கொடுக்க வில்லை.''— (மூய்ர்)

* * * * *

"ஞாபகத்திற்கு அப்பாற்பட்ட காலமுதற் கொண்டே மக்காவும் அந்தத் தீபகல்ப முழுவதும் பாரமார்த்திக சம்பந்தமாயுள்ள உறக்கத்தினுள்ளே ஆழ்ந்து தாழ்ந்துபோய்க் கிடந்தன. யூதமதம், கிறிஸ்துமார்க்கம், அல்லது தத்துவார்த்த விசாரணை போன்ற தொன்ருல் அராபியர்பால் உண்டுபண்ணப் பட்ட இலேசானவும் எளிதில் அழியக்கூடியனவுமாய சிற்சில திருத்தங்கள், ஓர் அமைதியுற்ற ஏரியின் நீர்மட்டத்தில் அங்குமிங்கும் காணப்படும் சின்னஞ் சிறு அலைகளே போலத்தாம் இருந்துவந்தன ; அந்த நீர்மட்டத்துக்குக்கீழே எல்லாம் சாந்தமாகவும் சலன மற்றுமே வாளா அமைந்து கிடந்தன. அந்த ஜனங்கள் மூடக்கொள்கை, கொடுமை, தீமை...... ஆகியவற்றி னுள்ளே ஆழ மூழ்கிப்போய்க் கிடந்தனர். அவர்களது மதம் வெறும் பரிபூரண வெறுக்

கத்தக்க விக்கிரக வணக்கமாகவே யிருந்துவந்தது? அவர்களது நம்பிக்கை, கட்புலனாகாத வஸ்துக்கள் மாட்டுள்ள மௌட்டியம் மலிந்த பயங்கரமாகவே காணப்பட்டு வந்தது.........ஹிஜ்ரத்துக்குப் பதின் மூன்று ஆண்டுகளுக்கு முன்னே மக்காவானது இத் தகைய கயமையான தாழ்மையிலேயே உயிரற்றுக் கிடந்தது. இப்பொழுது இந்தப் பதின்மூன்று ஆண்டு களும் எத்தகைய மாறுதல்களை உற்பத்தி செய்துவிட் டிருக்கின்றன!.........யூதர்களின் மதக்கொள்கையே (அதற்கு முன்னே) நெடுங் காலமாக மதீனத்து மக்கட் செவியில் ரீங்காரம் செய்துகொண்டிருந்தது; ஆனால், அவர்கள் இந்த அரப் நாட்டுத் தீர்க்கதரிசி யினால் உண்டுபண்ணப்பட்ட, ஆத்மாவைக் கிளறி விடத்தக்க அரிய முயற்சிகளைச் செவிமடுத்த பின் னரே தங்களுக்குரிய உறக்கத்தினின்று விழித் தெழுந்து, ஒரு புதிய ஊக்கமுள்ள உயிர்வாழ்க்கை யின் பக்கல் திடீரெனக் குதித் தெழுந்தார்கள்.''— (மூயிர்)

*            *            *            *            *

“இன்னம், ஆதியில் தோன்றிய முஸ்லிம்களின் வாழ்க்கையில் நாம் காணும் விஷயங்களைப் பார்க் கினும் அதிக உற்சாகத்துடனே அதிக ஆச்சரியத் துடனே நம்முடைய மனோராஜ்ஜியங்களை வந்து தாக்குதற்குரிய விஷயங்கள் வேறு சரித்திரஏடுகளில் பெருமையுடனே காணப்பட மாட்டாவென்று நாம் மெய்யாகவே கூறிவிடலாம்; அந்தப் பெரிய தலை வரை யாதல், அவருடைய அமைச்சர்களாய் விளங் கிய அந்தப் பெயர்போன பெரியார்களை யாதல்

எவரை நாம் சீர்தூக்கிப் பார்த்தாலும், சரிதான்; அல்லது அவர் வென்ற பற்பல தேயங்களின் நிலைமைகளை நாம் கவனித்துப் பார்த்த போதினும், சரிதான்; அல்லது அவருடைய படைத்தலைவர்கள் பாலும் போர்வீரர்கள் பாலும் சமமாகவே இருந்து வந்த தைரியம், சற்குணம், நல்லெண்ணம் ஆகியவைகளேயானாலும், சரிதான்.''— ('' முஹம்மதின் ஜீவியம் '' — பூலென் வெல்லியேர்ஸின் கௌண்ட் எழுதியது)

* * * * *

''திடீரென அந்த அற்புதம் நிகழும் வரை அரபிகளைக் காட்டினும் அதிகம் பிளவுபட்டுக் கிடந்த ஒரு ஜாதியினரைப் பார்ப்பது அரிதா யிருந்திருக்கும்! ஒருவர் தோன்றினார்; அன்னவர் தமது பெருமிதத் தோற்றத்தைக் கொண்டும், ஆண்டவனால் தமக்கு நேரில் கற்றுக்கொடுக்கப்பட்ட வழிகாட்டி யென்று தம்மால் உரிமை பாராட்டப் பட்டதைக் கொண்டும், செய்யமுடியாததை— அஃதாவது, ஒருவரோடொருவர் சதா சண்டையிட்டுக் கொண்டு கிடந்த எல்லாக் கக்ஷியினரையும் ஒன்றுபடுத்திய வெற்றியை— மெய்யாகவே செய்து முடித்துவிட்டார்.''—(''மெஸபொட்டேமியாவின் வரலாறுகள் '')

* * * * *

'' இஸ்லாத்தின் மூலமாக அராபியர் அழைத்துச் செல்லப்பட்டதைப் பார்க்கினும் அதிதுரிதமாய் வேறெந்த ஜாதியாரும் நாகரிகத்தின்பக்கல் எப்பொழுதுமே திண்ணமாக ஈர்த்துச் செல்லப்பட்டது கிடையாது.''— (''புதிய ஆராய்ச்சிகள் '' — ஹிர்ஷ் பெல்டால் எழுதப்பட்டது)

* * * * *

"மிகச் சுருக்கமாய்க் கூறுமிடத்து, அப்பால் அவ்வாருகத்தான் அராபியரின் சமுதாய நிலையும் சமயநிலையும் இருந்து வந்தன; அதுகாலை, வால்ட்டேர் கூறிய வர்ணனையை யுபயோகிக்க வேண்டுமாயின், ......'அரேபியாவின் முறை வந்துற்றது;' அது பொழுது மிகவும் முழுமையா யுள்ள, மகா திடுமென்று தோன்றிய, மிகமிக அசாதாரணமா யுள்ள புரட்சி— இத்தரணியின் மீதுள்ள வேறெந்த ஜாதியாருக்கும் நேரிட்டிருக்கமுடியாத அத்துணைப் பெரிய புரட்சி—க்குரிய வேளை வந்து தோன்றிவிட்டது."— (பாஸ்வொர்த் ஸ்மித்)

* * * * *

"இவ்வுலகில் தோன்றியுள்ள எல்லா நபிமார்களுள்ளும் மத மஹான்களுள்ளும் முஹம்மதே மஹோன்னத ஜயசீலராக விளங்குவா ராயினர்."— (பிரிட்டிஷ் சர்வவித்யா கோசம், 11-ஆவது பதிப்பு, கட்டுரை 'கொரான்')

அதுவேயுமன்றி, மற்றெல்லா மதாசாரியர்களேயும் விட்டு, இஸ்லாத்தில் தீர்க்கதரிசியை வேறு பிரித்துக் காட்டுதற்குரிய இன்னமோர் அரியவிஷயம் யாதெனின், ஏனைய வெல்லா மதத்தலைவர்களும் பெற்றுள்ள வெற்றி பொதுவாக மக்களின் ஒவ்வோர் அம்சத்தையே சார்ந்துநிற்க, எம்பெருமானார் (சல்அம்) அவர்களுடைய பெரு வெற்றியானது இவ்வுலக மன்பதை எல்லார்க்குமுரிய எல்லா அம்சங்களையும்—துறைகளையும்— அடைய வளைந்துகொண்டு கிடக்கின்றது என்பதேயாம்: உதாஹரணமாக, அதிபாதலத் துள்ளே

ஆழ்ந்து தாழ்ந்து போய்க் கிடந்த ஒரு ஜாதியினரை உஜ்ஜீவிக்கச் செய்து, புனருத்தாரணத்தால் புத்துயிர் பெற்றெழச் செய்வதுதான் பெருவெற்றியென்னப்படு மாயின், பிறகு அக்கால அராபியரைப் போலே அதி பாதாளத்துள்ளே ஆழ்ந்து தாழ்ந்து போய்க் கிடந்த ஒரு தேசத்து மக்கள்களை யெல்லாம் புத்துயிர்பெற் றெழச்செய்து, இத்தரணி முழுமைக்குமே நாகரிகத் தையும் நற்கல்வியையும் சுமந்து செல்லக்கூடிய பேரா சிரியர்களாகப் பண்ணி விட்ட இம் மஹானுபாவரை யன்றி வேறியாரே அத்தகைய வெற்றிக்கு அருகதை பெற்றவராவர்? சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு திறப்பட்ட பகைமைகளால் பிளவுபட்டுக் கிடந்த மக்களை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பிணித்து, ஒரே கட்டுப்பாடுள்ள ஜாதியினராகச் சேர்த்து நிலை நிறுத்துவதுதான் பெருவெற்றி யென்னப்படு மாயின், பிறகு அற்றைநாள் அராபியரைப் போலே தலைமுறை தலைமுறைகளாய் வளர்ந்துவரும் இரத்தக் கொலை களால் சுக்குச் சுக்காய்ச் சிதறிக் கிடந்த ஒரு ஜாதி யினரை ஒன்று சேர்த்துப் பிரிய சகோதரர்களாய்ப் பிணைத்துவைத்துச் சென்ற இம்மஹானையன்றி வேறி யாரே அத்தகைய வெற்றிக்கு அருகதை பெற்றவரா வார்? அந் நாட்டுப் பாலைவனத்தில் உதிர்ந்து கிடக்கும் மணல்களே போலக் குலைந்து கட்டுப்பா டற்றுக் கிடந்த அவ் வராபிய ரெல்லாம், நபிகள் பெருமா னது அவதாரத்துக்குப் பின்னால் ஒரே நெருக்க முள்ள கற்கோட்டையே போல இறுகப் பிணித்து வைக்கப்பட்டுப் போய்விட்டார்கள். மூட நம்பிக்கை

கள், கொடிய பழக்க வழக்கங்கள், ஏனைய வெல்லாத் தீய வொழுக்கங்கள் ஆதியவற்றை யெல்லாம் அடியுடனே கல்லி யெறிவதுதான் பெருவெற்றி யென்னப்படுமாயின், பிறகு அவ்வரப் நாட்டில் படிந்து கிடந்த மேற்கூறியவற்றை யெல்லாம் ஆணிவேருடனே அப்புறம் கல்லி யெறிந்துவிட்ட அஹ்மத் ஸல் நபியையன்றி வேறியாரே அத்தகைய வெற்றிக்கு அருகதை பெற்றவராவார்? மிகவு முயரிய ஒழுக்கக் குன்றின்மீது உச்சியி லேறி நிற்பதுதான் பெரு வெற்றி யென்னப்படு மாயின், பிறகு "அல் அமீன்" என்று நண்பர்களாலும் பகைவர்களாலும் ஒரு சேரப் புகழ்ந்து பாராட்டப்படும் இப்பெரியாரை யன்றி வேறியாரே அத்தகைய வெற்றிக்கு அருகதை பெற்றவராவார்? யுத்தகளத்தில் ஜயபேரிகை கொட்டுவதுதான் பெரு வெற்றி யென்னப்படு மாயின், பிறகு ஓர் உதவியற்ற மிகவுஞ் சிறுவராயிருந்து பின்னுல் ஒரு மஹா ஜயசீல ராகவும் பேரரச ராகவும் உயர்ந்துவிட்ட நபிகட்டிலகத்தை யன்றி வேறியாரே அத்தகைய வெற்றிக்கு அருகதை பெற்றவ ராவார்? இல்லை! இப் பெருமானுரால் அன்று நிறுவப்பட்ட இஸ்லாமிய ராஜ்யம் இன்று காறும், சென்ற பதினுன்கு நூற்ருண்டுகளாக இவ்வுலக சாம்ராஜ்யங்க ளனைத்தும் ஒன்றுசேர்ந்து எதிர்த்தும், சிறிதும் நிலைகுலையாது திண்ணிதாயே கண்ணியத்துடன் நிலைபெற்று நின்றிலங்கி வருகின்றது. ஒரு தலைவரால் விட்டுச் செல்லப்படும் உணர்ச்சி மிக்குள்ள உத்வேகத்தைக் கொண்டே

தான் அன்னாரின் பெருமையை யுணர்ந்துகொள்ளுதல் சாலுமென்று சொல்லப் படுமாயின், நபி பெருமான்ஸல் அவர்களுடைய திருநாம மானது, இன்றும் இக் குவலயத்தின்கண் காணப்படும் 60 கோடி முஸ்லிம்களின் உள்ளத்தி னூடேயும் ஒரு மின்சார அதிர்ச்சி போன்ற மாந்திரீகச் சுறுக்குச் சக்தியை உந்தியெழச் செய்துவிடுகின்றது; தேச வித்தியாசம், நிற மாறுபாடு, ஜாதி பேதம் ஆகிய ஒன்றுமே யில்லாது, எல்லா அறுபது கோடி முஸ்லிம்களையும் அத் திருநாமமானது ஒரே சகோதரத்துவத்தின் வட்டத்திற்குள்ளே கொண்டுவந்து இருப்புச் சங்கிலியால் இறுகப் பிணித்து வைத்துவிட்டிருக்கின்றது.

நபிகளுயகரால் (சல்அம்) பொதுப்படையாக மன்பதையின் முழுமைக்குமே செய்துவிட்டுச் செல்லப்பட்டுள்ள பெருநன்மைகளுள், — இக் காரணத்தினலேயே இம்மஹானுபாவர் இறைவனுலுங்கூட "ரஹ்மத்துன் லில் ஆலமீன்"—[எல்லா உலகு (மக்கள்) களுக்கும் ஒரு கருணையாளர்] என்று வருணிக்கப்பட்டிருக்கின்றார்— ஒன்றைமட்டுமே யாம் ஈண்டெடுத்து விவரிப்பாம்: இம் மஹான், வேறெந்த மதத்தலைவரும் உபதேசிக்காத ஒரு சிறந்த உண்மையை எடுத்துபதேசித்துச் சென்றிருக்கின்றார்: ஒவ்வொரு ஜாதியாருக்கும் ஒவ்வொரு தீர்க்கதரிசி ஆண்டவனுல் அனுப்பப்பட்டே யிருக்கின்றார்; ஆகவே, ஒவ்வொரு முஸ்லிமும், நபிகள் நாயகம் முஹம்மத் முஸ்தபா ரஸூல்ஸல் அவர்கள்மீது நன்னம்பிக்கை கொள்

வதேபோல, அவ்வெல்லாத் தீர்க்கதரிசிகள் மீதும் நன்னம்பிக்கை கொண்டிடுதல் கடமையா யிருந்து வருகிறது. "தங்களுக் குள்ளே ஓர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியவர் அனுப்பப்பெறாத ஜாதியார் எவருமே யிருந்ததில்லை," என்று குர்ஆன் ஷரீபு கூறி யிருக்கின்றது. இன்னம், அவ் வேதமானது, "உமக்கு வெளியாக்கப்பட்டதன் மீதும் உமக்கு முன்னே வெளியாக்கப்பட்டதன் மீதும் நன்னம்பிக்கை வைப்பவர்க"ளே உண்மையான முஸ்லிம்களா யிருக்கிறார்களென்று இலக்ஷணம் வகுத்திருக்கின்றது. இத் தன்மைத்தாய வசனங்களை வைத்துக்கொண்டு, நபிகணாதர் ஒரு விசுவ சகோதரத்துவத்துக்கு வேண்டிய அஸ்திபாரத்தைப் போட்டு வைத்திருக்கிறார்கள். இப் பெருமானார், ஒரு மனிதன் மற்றொரு மனிதனுடனே எவ்வாறு சமாதானத்துடன் உயிர்வாழ முடியுமென்னும் மார்க்கத்தைக் கற்றுக் கொடுத்ததோடு நில்லாது, வெவ்வேறு இனத்தவரும் குலத்தவரும் எவ்வாறு ஒருவரோடொருவர் ஒன்றித்துச் சாந்தியுடனும் சமாதானத்துடனும் வாழ்ந்துவரக் கூடுமென்னும் ரஸ்தாவையும் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கு மேலாக, இவருக்கு முன்னே எவரும் செய்யத் துணியாத ஒரு மாபெருங் காரியத்தையும் நம் நபிகணாயகர்^ஸல் அவர்கள் சாதித்து முடித்திருக்கின்றார்கள்: அஃது என்னவெனின், இப் பூவுலகிலுள்ள பல்வேறு மாறுபட்டுழலும் மதங்களுக் கிடையிலே எவ்வாறு சமாதானத்தை நிறுவுவதென்பதேயாம். இத் தரணியின்கண் தங்களுக்கென்று ஆண்ட

வனு லனுப்பப்பட்ட ஒரு திருத்தூதரைக் கிடைக்கப் பெருத ஜாதியார் எவருமே யிருந்ததில்லை யென்னும் உண்மையை இம்மஹானுபாவர் உபதேசித்துச் சென்றுளார்; ஆனால், இவருக்கு முன்னே வேறெந்தத் தீர்க்கதரிசியும் இவ்வுண்மையை இவ்வுலக மக்களுக்கு எடுத்துக் கூறியது கிடையாது. வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மக்களிடையே எழுப்பப்பட்டுள்ள மதாசாரியர்கள் மீதெல்லாம் நம்பிக்கை வைப்பதுதான், வெவ்வேறு தீர்க்கதரிசிகள்மீது விசுவாசங் கொண்டு வெவ்வேறு விதமாய் ஒழுகி முரண்பட்டுக் கிடந்துழலும் வெவ்வேறு மக்களிடையே ஒற்றுமையையும் ஒன்றிய சமாதானத்தையும் நிலைநிறுத்தற்குரிய ஒரே மார்க்கமாய்க் காணப்படாநின்றது. எனவே, இத்தகைய ஏக சகோதர சரிசமானத்தை நிலை பெறுத்துதற்கென்றே நபி முஹம்மத் முஸ்தபா ரஸூல் (சல் அம்) அவர்கள், ஒவ்வொரு தேச மக்களிடையேயும் தீர்க்கதரிசி எழுப்பப்பட்டுள்ளாரென்றும், ஒவ்வொரு முஸ்லிமும் எல்லா நபிமார்மீதும் நம்பிக்கை வைக்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறியிருக்கின்றுர்கள். எனவேதான், இதுகாலை இப் பூவுலகிலுள்ள எல்லா வேதங்களும் காலக்கிரமத்தில் மனித சேஷ்டையால் மாற்றப்பட்டுக் கிடந்தும், ஒவ்வொரு மதத்திலும் ஒரு சிறிது உண்மையில்லாது போய்விடவில்லை யென்று இஸ்லாம் இயம்பிக்கொண்டிருக்கின்றது.

இவ்விடத்தில் நாம் மற்ரெரு விஷயத்தையும் மறந்துவிடுவது கூடாது: வேறு ஜாதியார்களுக்கு அனுப்பப்பட்டுள்ள நபிமார்கள்மீது நம்பிக்கை வைக்க வேண்டுமென்று கூறிய மாத்திரத்தில், குர்ஆன் ஷரீபில் பெயர்குறித்துக் கூறப்பட்டுள்ள நபிமார்கள் மீது மட்டுமேதாம் விசுவாசங் கொள்ள வேண்டுமென்று நாம் தவறு யெண்ணி விடுவது தகாது. என்னெனின், குர்ஆன் ஷரீபில் இரண்டிடத்தில் இவ்வாறு வெளிப்படையாக வற்புறுத்தப்பட்டிருக்கிறது: "உமக்குக் குறிப்பிட்டுக் காட்டியுள்ள தூதர்களை நாம் அனுப்பியுள்ளோம்; இன்னம் உமக்குக் குறிப்பிட்டுக் காட்டாத தூதர்களையும் நாம் அனுப்பி யிருக்கிறோம்." இக் காரணத்தினாலேதான், நபிகளுதரின் தோழர்கள் பாரசீக தேசத்திலிருந்த மஜூஸிக ளென்னும் மக்கள்களுடனே நெருங்கிப் பழக நேர்ந்தபொழுது, அன்னவர்கள் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் காட்டிய கௌரவத்தையே அவர்களுக்கும் காண்பித்தார்கள்; இதனால் அம் முஸ்லிம்கள் அந்த மஜூஸிகளை "அஹ்லெ கித்தாப்"— வேதத்தை யருளப்பெற்றவர்கள் — என்று கொண்டே நடாத்தி யிருக்கிறார்க ளென்பது செவ்விதாய்ப் புலனாகின்றது. "தங்களுக் குள்ளே ஓர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யக்கூடியவர் அனுப்பப் பெறாத ஜாதியார் எவருமே யிருந்ததில்லை," என்னும் குர்ஆன் ஷரீபின் வெளிப்படையான சொற்கள் அவர்களுடைய செவிகளில் சதா ரீங்காரம் செய்து கொண்டிருந்தக்கால், அன்னார் அப்படி யொழுகாது

வேறு எப்படித்தான் ஒழுகியிருப்பர்? எனவேதான், இந்தியா போன்ற இப் பெரிய பூபாகத்திலும் அல்லா(ஹ்)வினு லனுப்பப்பட்டுள்ள பல தீர்க்கதரிசிகள் தோன்றியிருக்க வேண்டுமென்று முஸ்லிம் அறிஞர்கள் பலர் அறைந்திருக்கின்றார்கள்.

---

## இஸ்லாமும் வாளாயுதமும்

பொதுவாகவே எல்லா முஸ்லிமல்லாத மக்கள்பாலும் நபிபெருமானாரின்ஸல் பிரசாரத்தைக் குறித்து ஒரு தவறான அபிப்பிராயமே யிருந்துவருகிறது; நபிகளுதர்ஸல்அம் தீனுல் இஸ்லாத்தை வாளின் உதவி கொண்டே பரத்தினார்களென்று அவர்களனைவரும் நம்பி யிருக்கின்றனர். இவ்வாறு எண்ணுவதானது ஒரு வெறுங் கட்டுக்கதை யாகத்தான் இருந்துவருகிறது. இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கை — அஃதாவது, இத்தரணியில் அவதரித்துள்ள எல்லா நபிமார்கள் மீதும் நன்னம்பிக்கை கொள்ளவேண்டுமென்பது ஒன்றே மீக்கூறிய குற்றச் சாட்டை நிராகரிப்பதற்குப் போதுமானதாக அமைந்து கிடக்கிறது. இவ்வுலகில் தோன்றியுள்ள எல்லாச் சமயாசாரியர் பாலும் நேசமும் மரியாதையுமட்டும் கொள்வதோடு தம்முடைய சிஷ்யர்கள் நின்றுவிடாது, அப்பாலும் சென்று, அன்னவர் மாட்டெல்லாம் நன்னம்பிக்கையும் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தி வந்த ஒரு தாராளச் சித்தம் குடிகொண்டுள்ள விரிந்த மனப்பான்மையுடன் கூடிய பெரியா ரொருவர் அத்தகைய

சமயங்கள்பாலே தாராள மனப்பான்மை யற்று வெறுத்துப் பகைத்தற் குரிய குறுகிய நிலைமைக்கு இழிந்துவிட்டாரெனக் கூறுதல் சாலவும் பொருத்த மற்றதாயே காணப்படாநின்றது. இஸ்லாம் ஏனைச் சமயங்கள் மாட்டுக் காண்பித்துவரும் மாவிரிந்த மனப்பான்மையை உள்ளவாறே உறுத்திக் காட்டுதற் குப்போதிய வார்த்தை உண்மையிலே "மததாராளம்" என்னும் சொல்லாயிருப்பது சாலாது. என்னெனின், முஸ்லிம்கள் எல்லா நபிமார்கள் மாட்டும் ஒரே மாதிரி யான நேசம், ஒரே தினுசான மரியாதை, ஒரே விதமான நம்பிக்கை வைக்க வேண்டுமென்று இம் மார்க்கம் வற்புறுத்திக்கொண் டிருக்கின்றது.

அதுவேயுமன்றி, மதத்தின் எல்லைக்குள்ளே நிர்ப் பந்த மென்பதை நுழையவிடாது அப்புறப்படுத்தி வைத்திருக்கும் ஒரு வேதம் மததாராளத்துக்கே இடங்கொடுப்ப தில்லையென்று கூறத் துணிவதானது ஒரு சர்வசாமான்ய மடமையென்றே ஒதுக்கித் தள் ளப்படுதல் வேண்டும். "மதவிஷயத்தில் பலவந்த மில்லை" (2: 256) என்பது குர்ஆன் ஷரீபிலுள்ள ஒரு முக்கிய வெளிப்படை வாக்கியமாகும். உண்மை யிலே, "உங்களுடைய மார்க்கம் உங்களுக்காக இருக் கும்; மேலும், என்னுடைய மார்க்கம் எனக்காக இருக்கும்," (109 : 6) என்பனவே போன்ற பற்பல திருவாக்கியங்களைக் கொண்டு குர்ஆன் ஷரீபானது, இந்தச் சமயத்தை அல்லது அந்தச் சமயத்தைத் தழுவிக்கொள்வது அவரவருக்குரிய சொந்த விஷயமா யிருக்கிறதென்றும், தத்தமக்கு விருப்பமுள்ள மார்க்

க்த்தை ஏற்பதற்கும் ஏற்காமற் போவதற்கும் அவ ரவருக்கும் அபிப்பிராய உரிமை கொடுக்கப்பட் டிருக்கிற தென்றும் நிரூபித்துக்காட்டக் கூடியதாய் அமைந் திருக்கிறது ; அஃதாவது, ஒருவன் சத்தியத் தைக் கடைப்பிடிப்பது அவனுடைய சொந்த நன் மைக்கே உதவி புரியக்கூடியதாகும் ; அவ்வாறின்றி, அவன் அசத்தியத்தைக் கடைப்பிடிப்பா னுயின், அஃது அவனுடைய சொந்த தீமைக்கே ஆஸ்பதமாய்ச் சென்று முடியக்கூடியதா யிருக்கிறது. இதற்குச் சான்று பகரக்கூடிய சில குர்ஆன் திருவாக்கியங்களை இதன் கீழே யாம் தருகின்றேம் :—

" நாம் அவனுக்கு(ச் சரியான) வழியைக் காண்பித்துக் கொடுத்திருக்கிறேம் ; அவன் நன்றி செலுத்தட்டும், நன்றி செலுத்தாமலே போகட்டும்." —*(76 : 3)*

" சத்திய மென்பது உங்கள் ரக்ஷகன்மாட் டிருந்து வந்திருக்கிறது; ஆகலான், விருப்பமுள்ளவன் நன்னம்பிக்கை கொள்ளட்டும் ; மேலும் விருப்ப மில்லாதவன் நம்பாமலே போகட்டும்."—*(18 : 29)*

" மெய்யாகவே, உங்கள் ரக்ஷகன்மாட் டிருந்து தெளிவான பிரமாணங்கள் உங்கள்பால் வந்து சேர்ந் திருக்கின்றன ; ஆதலால், எவனொருவன் (கண் கொண்டு) காண்கிருனே, அஃது அவனுடைய ஆத்மா வுக்கே நன்மை பயப்பதாகும் ; மேலும் எவனொரு வன் நிராகரிக்கிருனே, அஃது அவனுக்கே விரோத மாய் வந்து விளையும்."—*(6 : 105)*

" நீங்கள் நன்மை செய்வீர்களேல், உங்கள் ஆத் மாக்களுக்கே நன்மை செய்து கொள்வீர்கள்; நீங்கள்

தீமை யிழைப்பீர்களேல், அஃதும் அவைகளுக்கே (தீமையாக) இருக்கும்.''—(17 : 7)

உண்மையிலே, நபிபெருமானார்சல் சண்டை செய்ய அனுமதி யளிக்கப்பெற் றுள்ளார்கள்; ஆனால், அதன் கருத்துத்தான் என்ன? இஸ்லாத்தில் சேராமலிருந்தவர்களை யெல்லாம் இம்மார்க்கத்தில் சேர்ந்து கொள்ளுமாறு செய்வதன்று அதன் அந்தரங்க நோக்கம்; என்னெனலின், இவ்வாறு நிர்ப்பந்தப் படுத்துவது, நம் பெருமானார்சல் உபதேசித்துவந்த விரிந்த சற்போதங்களுக் கெல்லாம் முற்றிலும் நேர்மாறாகவேயிருந்து வருகிறது. இல்லை! மத சுதந்தரத்தை நிலைநிறுத்தவும், சமயத்தின் பெயரால் ஒருவருக்கொருவர் இடுக்கண் விளைத்துத் துன்புறுத்துவதை யெல்லாம் தடுக்கவும், எல்லாச் சமயவாதிகளும் தெய்வந்தொழும் ஆலயங்களனைத்தையும்— அவற்றுள்ளே மஸ்ஜித்களும் அடங்கியிருக்கின்றன— பாதுகாத்து வைக்கவுமே வாளையுருவும் அனுமதி நபிகட்டிலகத்துக்கு அளிக்கப்பட்டது. இதற்கு வேண்டிய குர்ஆன் அத்தாக்ஷிகள் கீழே வரையப்படுகின்றன :—

"மேலும் சில ஜனங்களை ஆண்டவன் வேறு சிலருடன் எதிர்த்துத் தாக்கச் செய்திராமற் போயிருப்பின், மடாலயங்களும், மாதா கோயில்களும், யூதர்களின் ஜபாலயங்களும், அல்லா(ஹ்)வின் நாமம் அதிகம் தியானிக்கப்படுகின்ற மஸ்ஜித்களும் தகர்ந்து நொறுக்கப்பட்டே போயிருக்கும்.''—(22 : 40)

"மேலும், இடுக்கண் விளைக்கும் புரட்சி அடியோடொழிந்து, அப்பால் மார்க்கம் அல்லா(ஹ்)

வுக்கே (யென்று) ஆகும்வரை அவர்களை வதைபுரி யுங்கள்.''—(2 : 193)

"மேலும், இடுக்கண் விளைக்கும் புரட்சி அடியுடனொழிந்து, அப்பால் எல்லா மதங்களும் அல்லா(ஹ்) வுக்கே (யென்று) ஆகும்பரியந்தம் அவர்களை வதைக் கக் கடவீர்கள்.''—(8 : 39)

எனவே, மீக்கூறியவற்றால், நபிபெருமானுக்கு வாளையுருவும் அதிகாரம் எத்தகைய நிபந்தனைகள் மீது அளிக்கப்பட்டிருந்த தென்பது இதுபொழுது செவ்வி தாய்ப் புலப்படக் கிடக்கின்றது. இஸ்லாம் மக்காவிலே வேரூன்றவேண்டி யிருந்தக்கால், நபிகளுதரும்[சல்] அன்னாரின் சிஷ்யர்களும் எத்தகைய மாகொடிய துன்பங்களுக்கும் துயரங்களுக்கு மெல்லாம் ஆளாக் கப்பட்டு வந்தார்க ளென்பது இஸ்லாமிய சரிதை யறிந்த ஒவ்வொரு சாதாரண மாணவனுக்குங்கூட மிகநன்ருய்ப் புலப்படாது போய்விடுவ தில்லை. நூற் றுக்கு மேற்பட்ட ஆண்பெண் முஸ்லிம்கள் துன்பந் தாளாது ஹபஷாவுக்கு ஓடிப் புகலிடம் தேடிக் கொண்டார்கள்; ஆயின், அப்பாலே அம்மக்கத்துப் பகைஞர்கள் தாங்க ளிழைத்த தொந்தரைகளில் மிக்க வன்னெஞ்சம் குடிகொண்டவராய்ப் போய் விட்டார்கள். இறுதியிலே எல்லா முஸ்லிம் ஆண் பெண்களும் — நபிகளுத ருட்பட — நெடுந்தூரம் — பதின்மூன்றுநாட் பிரயாணதூரம் — வடக்கேயுள்ள மதீனாவுக்குச் சென்று, அடைக்கலம் தேடிக்கொண்ட னர்; ஆங்குச்சென்றும், அவர்கள் வாளாவிடப்பட்டன ரில்லை. அங்கிருந்த முஸ்லிம்களையும், அன்னவரின்

இஸ்லாத்தையும் அடியோடு குழிதோண்டிப் புதைத்துத் தீர்த்துவிடுவதென்னும் கெட்ட எண்ணத்துடனே பலமுறை பெரும்படை திரட்டிக்கொண்டு யுத்தம் புரியப் புறப்பட்டுச் சென்றனர். இதற்கு வேண்டிய சான்று எமது திருமறையில் இவ்வாறு பொறிக்கப்பட்டிருக்கின்றது: "எவர்கள்மீது யுத்தம் தொடங்கப் படுகின்றதோ, அவர்களும் யுத்தம் தொடங்க அனுமதி யளிக்கப் படுகின்றது; என்னெனின், அவர்கள் துன்புறுத்தப் படுகிறார்கள்; ஆண்டவனும் அன்னவர்கட்கு உதவிபுரியப் பெரிதும் போதுமானவனா யிருக்கிறான். 'எங்கள் இரக்ஷகன் ஆண்டவனே' என்று அவர்கள் கூறியதைத் தவிர்த்து வேறு நியாயமான காரணமொன்றும் இல்லாமலே அன்னவர்கள் தங்கள் இல்லங்களை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கின்றார்கள்"—(22 : 39, 40). அப்பால் அந்த யுத்தத்திற்கு வேண்டிய வெளிப்படையான சட்டம் இவ்வாறு பகிரங்கப் படுத்தப்பட்டது: "மேலும், உங்களுடன் யுத்தம் புரிகின்றவர்களாய அவர்களுடனே நீங்களும் அல்லா(ஹ்)வின் பாதையிலே யுத்தம் புரியுங்கள்; மேலும், இவ்விஷயத்தில் நீங்கள் வரம்பைக் கடவாதீர்கள்; என்னெனின், நிச்சயமாகவே அல்லா(ஹ்) வரம்பைக் கடப்பவரை நேசிப்பதில்லை."—(2: 190)

ஆகவே, குர்ஆன் ஷரீபு வேதமானது யுத்தத்திற்கு அனுமதி யளித்திருப்பதெல்லாம், வன்மை மிக்குள்ள விரோதிகளால் துயருழன்ற எளிய மக்களை அத்துன்பத்தினின்று காப்பாற்றி வைப்பதற்கே யாம்.

எனவேதான், எதிரிகளால் இழைக்கப்படும் இன்னல்களும் இடையூறுகளும் நிவர்த்தியாய்விட்டவுடனே அன்னவர்கள்மேல் தொடுக்கப்பட்ட யுத்தங்களும் நிறுத்தப்பட வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கின்றது: "பின்னர், (அவர்கள் வெறுமனே) விலகிக்கொண்டு விடுவார்களாயின்,—நிச்சயமாகவே அல்லா(ஹ்) மன்னிப்பவனாகவும் கருணைமிக்கவனாகவும் இருக்கிறான்......பிறகு அவர்கள் விலகிக்கொண்டு விடுவார்களாயின், (நீங்களும் விட்டுவிடுங்கள்)"—(*2 : 192, 193*). எதிரிகள் சமாதானத்தைக் கோருவார்களாயின், அதனை முஸ்லிம்கள் ஏற்கமறுப்பது கூடாது; அதனால் அப்பகைவர்கள் முஸ்லிம்களை ஏய்த்துவிட வேண்டுமென்று எண்ணியிருப்பினும், சரியே: "மேலும், அவர்கள் சமாதானத்தின்பக்கல் சாய்ந்து விடுவார்களாயின், நீரும் அதன்பக்கலே சாய்ந்து விடுவீராக; மேலும், அல்லா(ஹ்)வின் மீது நம்பிக்கை வைக்கக் கடவீர்; அவன் கேட்கிறவனாகவும் நன்கு அறிகிறவனாகவும் இருக்கிறான். மேலும், அவர்கள் உம்மை ஏமாற்ற எண்ணுவார்களாயின், பிற்பாடு நிச்சயமாகவே உமக்கு அல்லா(ஹ்) போதுமானவனாயிருக்கிறான்."—(*8 : 61, 62*)

நபிகட் டிலகம்[சல்அம்] தங்கள் எதிரிகளுடனே உடன்படிக்கை செய்துகொள்வார்கள்; அத்தகைய உடன்படிக்கைகளுள் ஒன்றுதான் ஹுதைபிய்யாவிலும் நிகழ்த்தப்பட்டது; அந்தப் பெயர்போன உடன்படிக்கையில் வரையப்பட்ட நிபந்தனைகள் முஸ்லிம்கட்குப் பாதகமாயிருந்ததோடு போகாது,

அவர்கட்கு அதிக அவமானத்தையும் உண்டுபண்ணத் தக்கனவாய்ப் பொறிக்கப்பட்டிருந்தன. அவ்வுடன் படிக்கையில் காணப்பட்ட ஒரு ஷரத்தின்படி, "ஒரு காபிர் இஸ்லாத்தைத் தழுவி மதீனாவிலுள்ள முஸ்லிம்களுடனே போய்ச் சேர்ந்துவிட்டால், அவன் மக்காவிலுள்ள எதிரிகள்பாலே திருப்பிக் கொடுக்கப்பட்டு விடுதல் வேண்டும்; ஆனால், முஸ்லிமொருவன் குப்பார்கள்பால் போய்ச் சேர்ந்துவிடுவனாயின், அவன் அம் முஸ்லிம்கள்பால் திருப்பி யனுப்பப்பட மாட்டான்." இவ்வொரு நிபந்தனையே, நபிகளுயகர்சல் மதவிஷயத்தில் பலாத்காரத்தை உபயோகித்துவந்தார்க ளென்னும் வீண்பழியை வேருடனே கல்லியெறியக்கூடியதா யிருந்து வருகிறது. இதனால், முஸ்லிம்கள் காபிராய் (முர்த்தத்தாய்) மாறிப்போய்விட மாட்டார்க ளென்றும், நபிகட்டிலகம் அடைக்கலமென்னப்படும் பாதுகாப்பை யளிக்க மறுத்துவிட்ட காரணத்தால் புதியமனிதர்கள் இனி இஸ்லாத்தைத் தழுவுவதினின்று தடுக்கப் பட்டுப்போய் நின்றுவிட மாட்டார்க ளென்றும் இம் மஹானுபாவர் எத்துணை யழுத்தமா யெண்ணி யிருந்தார்க ளென்னும் உண்மையும் மிகச் செவ்விதாய்ப் புலனாகின்றது. மேலும், இவ்வாறு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களும் மெய்யாகவே வந்து நிறைவேறத் தலைப்பட்டுவிட்டன; என்னெனின், ஒரு முஸ்லிமேனும் காபிராய்த் திரும்பிப் போய்விடவில்லை; ஆனால், அநேகங் குப்பார்கள் இஸ்லாத்தில் சேர்ந்துவந்தார்கள்; இவர்களுக்கு மதீனாவில் புகலிடம் அளிக்கப்படாது போய்விடவே, இரு

வருக்கும்* சொந்தமல்லாத ஒரு நடுநாடு கண்டு, ஆங்குச் சென்று இந் நவ்முஸ்லிம்களெல்லாம் குடியேறிவிட்டார்கள்.

முஸ்லிம்கள் தற்காப்பி னிமித்தமாயே வாளை யோச்சலா மென்னும் இந்நிபந்தனை பிறகெப்பொழுதேனும் வாப்பஸ் வாங்கப்பட்டு விட்டதென்றோ, அன்றி ரத்தாகிவிட்ட தென்றோ கூறத்துணிவது ஒரு தவறான கூற்றேயாகும். "உங்களுடனே யுத்தம் புரிபவர்களுடன் நீங்களும் யுத்தம் புரியுங்கள்," என்னும் இக்கட்டளை இறுதிவரை அமலில் இருந்து கொண்டே யிருக்கிறது. நபிகள் திலகத்தால் இறுதியில் கிளப்பப்பட்ட படையெடுப்புத் தபூக்குப் படையெடுப்பே யாகும்; அந்தப் பெயர்போன படையெடுப்பின்போது நபிபெருமானார்[சல்] முப்பதினாயிரம் வீரர்களைத் திரட்டிக்கொண்டு வடக்குநோக்கி நெடுந்தூரம் சென்றும், இதற்கு முன்பே எழுதியிருப்பதேபோல, மேற்கூறிய நிபந்தனையின் கீழே அந்தக் கிறிஸ்தவ எதிரிகள் வந்தமையவில்லை யென்பதைக் கண்டுகொண்ட நம்பெருமானா ரவர்கள் அவ் வெதிரிகளையேனும் அன்னாரின் நாடுகளையேனும் தாக்கத்துணியாது வாளா திரும்பிவிடுகிறார்கள். நம் மஹானுபாவரால் இஸ்லாத்தைப் பரத்தும்பொருட்டு எவ்விதப் படையெடுப்பும் எந்தப் பிராந்தியத்தை நோக்கியும் அனுப்பப்பட்டதேயில்லை; இன்னம், சுருக்கிச்சொல்ல வேண்டுமாயின், நபிகட்டிலகம்[சல்] தங்கள் ஆயுட்

*மதீனாவிலுள்ள முஸ்லிம்களுக்கும், மக்காவிலுள்ள குப்பார்களுக்கும்.

காலத்திலே எந்த ஒரு மனிதனையும் இஸ்லாத்தைத் தழுவாவிடின் மரணதண்டனை யளிக்கப்படு மென்று கூறி, அச்சுறுத்தி இச்சத்திய சன்மார்க்கத்திலே சேர்ந்து கொள்ளுமாறு வற்புறுத்தியது அறவே கிடையாது. எனவே, அம்முஸ்லிம்கள், இஸ்லாத்தை யேற்காத அயல் மதவாதிகளை யெல்லாம் இதனை ஏற்றுக்கொள்ளுமாறு நிர்ப்பந்தப் படுத்துவான்வேண்டியே அன்னவர்கள்மீது யுத்தம்புரியப் புறப்பட்டார்கள் என்று கூறப்பட்டுவரும் கதைமுழுதும் வெறும் பொய்யான வீண் கட்டுக்கதையே யாகும். இல்லை! இதற்குமாறாய், அவ்வெதிரிகளே முஸ்லிம்கள்மீது, அன்னார் தீனுல் இஸ்லாத்தைவிட்டு ஓடிவந்துவிட வேண்டுமென்னும் கெட்ட எண்ணத்துடனே, வலியச் சண்டை செய்யப் புறப்பட்டார்கள்; குர்ஆன் ஷரீபே இது குறித்து இவ்வாறு எடுத்தோதுகின்றது; "மேலும் (குப்பார்கள்) சக்தி பெறுவார்க ளாயின், நுங்கள் மார்க்கத்தை விட்டு நுங்களை அவர்கள் திரும்பச்செய்யும் வரை உங்களுடனே அவர்கள் யுத்தம் செய்வதை (ஒருபோதும்) நிறுத்த மாட்டார்கள்." —(2 : 217)

சிற்சில சமயங்களில், முஸ்லிம்கள் அயல்மத வாதிகளுடன் நட்புரிமை பாராட்டக்கூடா தென்று குர்ஆன் ஷரீபு கட்டளையிட்டிருப்பதாகப் பொய்ப் பிரசாரம் செய்யப்படுவ துண்டு; அயல்மதக் கன்னிகை யொருத்தியை முஸ்லிம் மணமகனொருவன் விவாகம் பண்ணிக்கொள்ளலா மென அனுமதியளித்துள்ள குர்ஆன் திருமறை (5: 5) அதே மூச்சில் எவ்

வாறு முஸ்லிம்கள் அன்னிய மதஸ்தர்களுடனே நட்புரிமை பாராட்டக் கூடாதென்று தடையுத்தரவு பிறப்பித்திருத்தல் கூடும்? மணமகன் மணமகளுக்கிடையிலுள்ள பரிசுத்தமான பரஸ்பரக் காதலே இவ்வுலகிலுள்ள ஏனைய எல்லா நட்புத்தளைகளைப் பார்க்கினும் மிகவும் நெருங்கிய அன்னியோன்னிய அந்தரங்க நட்புரிமையா யமைந்துகிடக்கின்றது. எனவே, இத் தன்மைத்தாய காதல் நட்புக்கு இடமிருக்குங்கால்,—இதற்கு எம் திருவேதம் பகிரங்க அனுமதியளித்திருக்குங்கால், எம் முஸ்லிம்கள் ஏனைச் சமய வாதிகளுடனே சாதாரண நட்புரிமையில் நெருங்கிப் பழகக்கூடா தென்று எண்ணுவது 'சுத்தப் பைத்தியக்காரத்தனமே' யாகும் என்பது திண்ணமேயாம். ஆனாலும், உண்மை என்னவெனின், முஸ்லிம்கள் வேறெவருடனேனும் சினேகம் வைத்துக்கொள்ளக் கூடாதென்று எப்பொழுதேனும் தடுக்கப்பட்டதுண்டேல், அஃது அம் முஸ்லிம்களுடன் யுத்தந் தொடங்கியிருக்கும் எதிரிகளுடனேயே சினேகம் பாராட்டக் கூடாதென்று தடுக்கப்பட் டிருப்பதே யாகும்; இவ்வுண்மை குர்ஆன் ஷரீபில் இவ்வாறு குறிப்பிடப்பட் டிருக்கிறது :—

> " நுங்கள் மதத்தின் காரணத்தால் நுங்கள் மீது போர் தொடங்காதும் நுங்களை நுங்க ளில்லங்களை விட்டுத் துரத்தாதும் இருந்துவரும் மனிதர்களைப் பற்றியென்றுலோ, நீங்கள் அன்னவர்கட்குப் பக்ஷங்காட்டக் கூடாதென்றும் அவர்களுடனே நியாயத்துடன் நடந்துகொள்ளக் கூடாதென்றும்

ஆண்டவன் நுங்களைத் தடுத்துவைக்க வில்லை. என்னெனின், நியாயம் புரிகிறவர்களை ஆண்டவன் நேசிக்கிறான். நுங்கள் மதத்தின் காரணத்தால் நுங்கள் மீது போர் தொடங்கியும், நுங்களை நுங்களில்லங்களை விட்டுத் துரத்தியும், நுங்களைத் துரத்தும் விஷயத்தில் ஏனையோர்க்கு உதவிபுரிந்தும் இருந்து வரும் மக்களைப்பற்றி யென்றாலோ, அன்னவர்களுடனேதாம் நீங்கள் நட்புக் கொள்ளக் கூடாதென்று ஆண்டவன் நுங்களைத் தடுத்துவைத்திருக்கிறான்; அவர்களுடனே எவர்கள் நட்புரிமை கொள்கின்றார்களோ, அத்தகையினரே அநியாயக்காரராவர்.''—(60: 8, 9)

---

## இஸ்லாத்தைத் துறந்தவர் கதி யாது

தீனுல் இஸ்லாத்தைப் பற்றி அயல் மதவாதிகள் கொண்டுள்ள மற்றொரு பிரசித்தம் வாய்ந்திருக்கும் குற்றச்சாட்டையும் ஈண்டு யாம் கவனிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். இஸ்லாத்தைத் துறந்து (முர்த்தத்தாய்) வெளியேறுகிறவர்கட்கெல்லாம் குர்ஆன் ஷரீபு மரண தண்டனையையே விதித்திருக்கிறதென்று அன்னவர்களால் பொதுவாக நம்பப்பட்டு வருகிறது. இவ்வாறு முடிவுகட்டுவதற்கு எமது திருமறையில் ஆதாரமொன்றும் இல்லையேயில்லையென்னும் உண்மை, இவ்வேதத்தை ஆழ்ந்து நோக்கும் ஒவ்வொருவருக்கும் மிகச் செவ்விதாய் அறியக் கிடக்கின்றது. இஸ்லாத்தில் நம்பிக்கை கொண்ட பின்னர் இதனைவிட்டு முர்த்தத்தாய்ப்

போய்விடுங் கருமத்தைக் குறித்துக் குர்ஆன் ஷரீபு அடிக்கடி கூறியிருக்கின்றது; ஆனால், ஓரிடத்தில் கூட அப்படிக் காபிராய் மாறிப்போய்விடும் மக்கள் கொல்லப்பட வேண்டுமென்றோ அல்லது தண்டிக்கப்படவேண்டுமென்றோ இவ்வேதம் கட்டளையிடவே யில்லை. கீழேயுள்ள மேற்கோள்களை நீங்களே படித்துப் பாருங்கள்:—

"மேலும், உங்களுள் எவரேனும் தமது மார்க்கத்தை விட்டுத் திரும்பி விடுவாராயின், பின்னர் அவர் நிராகரிப்பவராகவே (யிருந்து) மரணமடைந்தும் விடுவாராயின், தங்களுடைய செயல்களனைத்தும் இவ்வுலகிலும் மறுவுலகிலும் பாழாய்ப்போனவர்கள் அவர்களே (யாவார்கள்)."— (2 : 217)

"ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! உங்களுள் ஒருவன் தனது மதத்தை விட்டுத் திரும்பிவிடுவனாயின், பின்னால் ஆண்டவன் வேறொரு (கூட்ட) மக்களை — அவர்களை அவன் நேசிப்பான்; மேலும், அவர்களும் அவனை நேசிப்பார்கள்; — (இங்குக்) கொண்டு வருவான்."— (5 : 54)

"நிச்சயமாகவே, எவர், தாங்கள் நன்னம்பிக்கை கொண்டதன் பின்பு (இஸ்லாத்தை) நிராகரித்தனரோ, பின்னரும் அந்நிராகரிக்குந் தன்மையையே அதிகப்படுத்திக்கொண்டு சென்றனரோ, அவர்களது பாபமன்னிப்புக் கோரல் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது. இன்னம், அன்னவர்களே தாம் வழிதவறிப் போனவர்களா யிருக்கின்றார்கள்."— (3 : 89)

ஆனால், மேற்கூறியதற்கு மாறாய், குர்ஆன் ஷரீபு வேறொரு சம்பவத்தைப் பற்றிக் கூறியிருக்கின்றது:

அஃதாவது, அக்கால யூதர்கள் இஸ்லாத்தை இழிவு செய்து காட்டுவான்வேண்டி ஒரு தந்திரயுக்தி செய்து வந்தனர்: அவர்கள் முதலில் இஸ்லாத்தைத் தழுவுவதேபோல் பாசாங்கு செய்வர்; அப்பால் இம்மார்க்கத்தைத் துறந்து வெளியேறி விடுவர். இதனால், இஸ்லாம் மனித அந்தஸ்துக்கு ஏற்றதன்றென்னும் ஒரு கெட்ட அபிப்பிராயத்தை ஹீராலால் (அப்துல்லா) காந்தி செய்து நடித்ததேபோல, உண்டுபண்ணிவிடப் பார்த்தனர்— (3 : 71). இஸ்லாத்தைக் கைவிட்டு வெளிப்படுவ தென்பது— மூர்த்தத்தாய்ப் போய்விடுவது—மரணத்தைக் கொண்டு வருவதற்குரிய ஒரு குற்றமாய்க் குர்ஆன் ஷரீபிலே கருதப்பட் டிருப்பின், முஸ்லிம் ஆட்சியே நடைபெற்று வந்த அம்மதீனாவிலே வாழ்ந்துவந்த அந்த யூதர்களுடைய மண்டையுள் அத்தகைய அசட்டுத் துணிச்சல் ஒருபொழுதும் நுழைந்திருக்க மாட்டாது. ஆயின், இஸ்லாத்தைத் துறந்தால் மரண தண்டனை யென்னும் தவறான கொள்கை ஒருசில அயல்மத வாதிகள் மூளையுள் புகுந்துவிட் டிருப்பதற்குக் காரணம் யாதெனின், சிற்சிலர் தீனுல் இஸ்லாத்தைத் துறந்ததோடு நில்லாது, இஸ்லாத்தின் எதிரிகளுடனும் சேர்ந்துகொண்டு விட்டனர்; அதனால் அவர்கள் முஸ்லிம்களால் பகைவர்களென்றே பாராட்டப்பட்டு வந்தார்கள்; அல்லது, ஒருமுறை ஒரு மனிதன் மூர்த்தத்தாய்ப் போய், ஒரு முஸ்லிமையும் கொலை செய்துவிட்டான்; அப்பொழுது அந்தக் காபிர் கொலைத்தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டான்; இவன் கொல்லப் பட்டது இஸ்லாத்தைத்

கைவிட்டதற்காகவன்று; ஆனால், ஒரு குற்றமற்ற முஸ்லிமைக் கொன்றதற்காகவே யாம்.

---

## பாபமற்ற புண்ணிய சீலர்

ஒரு கால்நூற்ருண்டின் கால அளவிற்குள்ளே ஒரு தேசமக்களை முற்றிலும் புத்துயிர் பெற்றெழு மாறு புனருத்தாரணம் பண்ணிவிட்ட ஒரு மஹான்! இப் பெரியார் தன்னந் தனியாகவும் பக்கபலமில்லா மலும் ஒன்றியாய் நின்று கொண்டே, அத்தேசமுழு தும் மலிந்துகிடந்த ஒழுக்கவீனங்களையும், வேறுபல பாபகிருத்தியங்களையும் அடியோடு அப்புறப்படுத்தி விட்டார்கள்;— வன்மை மிக்க தமது பிரசார சக்தி களை யெல்லாங்கொண்டு யூதர்களும் கிறிஸ்தவர்களும் அவ்வரப் நாட்டைச் சீர்திருத்தப் பலகாலும் பெரும் பாடுபட்டுப் பார்த்தார்கள். அவ்வா றிருந்துவந்த அந்நாட்டை நம் மஹானுபாவர் அவதரித்து, தங்க ளுடைய சொந்த நடக்கையையும் திருஷ்டாந்தத்தை யுமே ஆயுதமாகக் கொண்டு சீர்திருத்தி, ஒரு பெருந் தொகுதியான மக்கட்பூண்டை அக்கினி குண்டத்தி னின்று அப்புறப்படுத்தி விட்டார்கள்.—இத்தன்மைய ராகிய புண்ணியவான் ஒருவர் தாம் சுயமே பாபச்சுழ லில் சிக்கி யுழல்பவராக இருந்திருந்தல் சாலுமோ? ஒரு பரிசுத்தமான ஒழுக்கமற்ற மனிதன் எவ்வாறு முன்னுக்குப்பின் முரண்பாடில்லாது மற்றை யோருக்கு நல்லுபதேசம்—அதுவும் ஆசாரசீலத்தைப் பற்றிப்— புரிந்திடுதல் சாலும்? அவன் எவ்வாறு

பாபச் சேற்றினின்று பதிதர்களைக் கைப்பிடித்துக் கரையேற்றிவிடுதல் சாலும்? அப்படிப்பட்ட மனிதன் எவ்வாறு தன்னுடைய சிஷ்யர்களை ஆசாரத்தின் வாயிலுக் குள்ளே அழைத்து, அன்னவர்பால் புத்துணர்ச்சியையும் புதிய உத்வேகத்தையும் புகுத்தி விடுதல் சாலும்? தானே இருட்கிடங்கிலே கிடந்து தத்தளித்துக்கொண் டிருக்குங்கால், அம்மனிதன் எவ்வாறு ஏனைமக்களை வெளிச்சத்தின் பக்கலே ஈர்த்து வருதல் சாலும்?

---

## பலதார மணம்

உண்மை இவ்வா றிருந்துவருங்கால், அத்துணைப் பெரிய அரிய காரியங்களை யெல்லாம் சாதித்து வெற்றியுடனே முடித்துவைத்த நபிபெருமான் முஹம்மத் முஸ்தபா ரஸூல் ஸல் அவர்களை, இப் பெருமானார் பலதாரமணம் புரிந்துகொண்டார்க ளென்னும் ஒரே காரணத்திற் காக, ஒரு சித்தவிகாரம் மிக்குள்ள காமாந்தகாரர் என்று இன் றும் பலர் பலவிடங்களில் வருணிக்கத் துணிந்துவிடுகின் றனர். என்னே விந்தை! ஆண் பெண் ஆசாரத்தில் அதிபாதலத் துள்ளே ஆழ்ந்து தாழ்ந்துபோய்க் கிடக்கும் ஓர் ஒழுக்கமற்ற (இற்றை நாள்) உலகம் பலதார மணத்தைப் பற்றி என்னவிதஅபிப்ராயம்கொண்டிருப்பினும், முற்காலப் பெருப்பெரும் மதத்தலைவர்களெல்லாம் பலதாரமணத்தில் ஈடுபட்டே யிருந்தார்கள் என்பதுமட்டும் ஒரு மறுக்கமுடியாத உண்மையே யாகும். ஆயினும், அன்னவர்க ளெல்லாம் அப்பழுக்கற்ற பரிசுத்த வாழ்க்

கையையே மேற்கொண் டொழுகினுர்கள் என்பதும் பொதுஜன அபிப்பிராயமே யாகும். நபி இப்ராஹீம்[அலை] (ஆபிரஹாம் தீர்க்கதரிசி) — இவருடைய மார்க்கத்தை இன்றும் இத்தரணியிலுள்ள மாந்தரில் அரைப் பங்கினர்க்கு அதிகமானவர்கள் (முப்பெரு மதத்தினர்) பின்பற்றியே வருகிருர்கள்— ஒரு தாரத்திற்கு மேலே திருமண முடித்துக்கொண் டிருந்தார்கள். அவ்வாறே யஅக்கூப்[அலை] மூஸா[அலை] தாவூத்[அலை] சுலைமான்[அலை] ஆகிய இஸ்ரவேல் (பனீ இஸ்ராயீல்) தீர்க்கதரிசிகளும் பலதார மணம் புரிந்திருக்கிருர்கள். ஹிந்து மதத்தின் மாபெருந் தலைவர்களுள் பலப்பல பெரியார்கள் பலதார மணம் புரிந் திருக்கிருர்கள். [ஆனுல், இயேசு கிறிஸ்துவின் விஷயம் வேறு; விவிலிய வேதத்தின் பிரகாரம் அவர் விவாகமே செய்து கொள்ள வில்லை. ஆகவே, அப் பெரியாரின் முன் மாதிரியை அனைவரும் பின்பற்றுவதா யிருந்தால், இப் பூவுலகு நெடுநாட்க ளாகுமுன்னமே மனிதப் பூண்டே யில்லாது வெறும் பொட்டல் வெளியாய்ப் போய்விடுதல் கூடும்.]

ஆதலால், அம்மதப் பெரியார்க ளெல்லாம் பலதார மணம் செய்து கொள்ளத் துணிந்தது, சித்த விகாரத்தால் முளைத்தெழுந்த காமாந்தகாரத்தினுலேதான் என்று எவரும் கூறத் துணிவது இதுகாறும் வழக்கத்தி லில்லை. அந்தரங்க பகிரங்க விஷயங்களி லெல்லாம் அவர்கள் மேற்கொண் டொழுகிவந்த ஒழுக்கத்தின் விழுப்பமே அன்னுரின் உயிர் வாழ்க்கைக் குரிய உயர்குண விசேஷணமா

யிலங்கிவந் திருக்கின்றது. எனவே, இஃதொன்றே, அவர்கள் செய்துகொண்ட பலதார மணத்தின் காரணமாய் அம் மஹான்களை யெல்லாம் காமாந்த காரச் சித்தவிகாரப் புருடர்களெனக் கண்டிக்க முயலும் இழிசெயலைக் கண்டித் தொழிக்கக் கூடியதா யமைந்து கிடக்கின்றது. அந்தப் பண்டைய தீர்க்க தரிசிகள் ஏன் அவ்வாறு பலதார மணம் செய்து கொண்டன ரென்று இதுகாலைக் காரணம் கண்டு பிடிப்பது ஓர் இயலாத காரியமாயே யிருந்துவருகின்றது; என்னெனின், அன்னவரின் சரித்திரங்க ளெல்லாம் பொதுவாகவே அந்தகாரத்தில் ஆழ்ந்து மந்தார மாய்ப்போய்க் கிடக்கின்றது. ஆனால், மஹான் முஹம்மத் நபி[சல்] அவர்களது சரிதையோ, சரியான சரித்திர பூர்வமாயுள்ள ஆதாரத்தின்மீது நிறுவப்பெற் றிருத் தலினால், இம் மஹானுபாவரின் விஷயத்தை மட்டும் யாம் இதன்கீழே எடுத்து நுணுகி ஆராயக்கடவோம்.

மஹான் முஹம்மத் நபியின்[சல்] மணவாழ்க்கை சம்பந்தமாயுள்ள சரித்திரத்தை நாம் நான்கு பகுதி களாகப் பிரித்துக் கொள்ளலாம்: இம்மஹான் தங்களுக்குப் பிராயம் இருபத்தைந்து ஆகுமட்டும் பிரம சரிய வாழ்க்கையிலே இயம நியமத்துடனே இருந் திருக்கிறார்கள்; இருபத்தைந்துக்கு மேலே ஐம்பத்து மூன்று வயதுவரை ஒரே மனைவியுடனே ஒன்றித்து இன்பமுற்று வாழ்ந்து வந்தார்கள்; ஐம்பத்துநான்குக்கு மேலே அறுபதாவது பிராயம்வரை பற்பல மனைவிமார்களை மணமுடித்துக் கொண்டார்கள்; இறுதியாய் அறுபதுக்குமேலே தங்கள் நிர்யாணபரியந்

தம் (மூன்ருண்டுகள் வரை) ஒருவரையுமே விவாகம் முடித்துக்கொள்ள வில்லை. நம் மஹானுபாவர் தங்களுடைய சித்தவிகாரத்துக்கு அடிமைப்பட்டுத்தாஞ கிடந்தார்களென்பதைப் பரீக்ஷித் தறியக்கூடிய முக்கியமான பருவம் யாதெனின், அதுதான் இவர்களுடைய பிரமசரிய வாழ்க்கைக்குரிய ஆதி கௌமார பருவமா யிருந்துவருகிறது. இவர்கள் தங்களுடைய சித்தத்தின்மீது முழு ஆதிக்கமும் கொண்டிராமல் இருந்திருப்பின், இவர்களால் அந்தக் கௌமாரக் காலைப் பருவத்திலே முற்றிலும் பரிசுத்தமான ஒழுக்க வாழ்க்கையை நடாத்தி யிருப்பது முடியாது; இக்காரணத்தினுலும் இப் பெருமாஞருக்கு "அல் அமீன்" என்னும் சீரிய பட்டமொன்று அவ்வூர் மக்களால் அளிக்கப்பட்டிருந்தது. மனித உறுப்புக்கள் அதி சீக்கிரத்திலே பக்குவமடைந்து சித்த விகாரங்களும் வெகு துரிதத்திலே பருவமுதிர்ந்து வருதற்குரிய அரப் நாடு போன்ற ஓர் உஷ்ணப் பிரதேசத்தில் இருபத்தைந்து பிராயமென்பது பெரியதொரு 'பிரமாதமான' பருவ மென்றே கொள்ளப்படுதல் வேண்டும். பிறகொருகால் அறைகூவி யழைக்கப்பட்ட பொழுது, இம் மஹானின் ஜன்ம விரோதிகளாலும் இவர்களுடைய குணக்குன்றில் ஒருசிறு கறையையும் (மாசு மறுவையும்) எடுத்துக்காட்ட வியலாது போய்விட்டது—(குர். 10: 16). நாம் இதற்குமுன்பே எடுத்துக் காட்டியுள்ளபடி, ஸர் வில்லியம் மூயிர் போன்ற இஸ்லாத்தின் பரமவைரியும், "முஹம்மதின் பால்யத்தில், மக்காவாசிகள்பால் மிகவும் அருகிப்போய்க் காணப்

படும் அத்தகைய வொழுக்கத்தின் அடக்கமும், ஆசாரத்தின் விழுப்பமும் மல்கிக் கிடந்தன வென்று நம்முடைய மேற்கோளாசிரியர்களெல்லாம் ஏகோபித்து எழுதிவைத் திருக்கின்றார்கள்," என்று வரைந்து வைத்துளார்.

பொதுவாகக் கூறுமிடத்து, வாலைப்பருவந்தான் சித்தவிகாரங்கள் கட்டுத்தறியை முறித்துக்கொண்டு மீறியோடி விடுதற்குரிய காலைப்பருவமா யிருந்து வருகிறது. எனவே, அந்தப் பால்யபருவத்தில் தனது சித்தத்தை யடக்கிச் சும்மா இருத்தல்— ஒழுங்கான பிரமசரியத்திலே ஒழுகிவருதல்— அருமையெனினும், அவ்வருமையை நீங்காது கடைப்பிடித்தொழுகும் ஒரு மனிதன் பின்னுல் 54 வயதுக்கு மேலே (நரை திரை மூப்பெல்லாம் வந்தெய்திய பின்னுல்) காமாந்தகாரத்துள்ளே மூழ்கித் திளைக்கத் தலைப்படுவ னென்பது ஒருகாலும் இத்தரணியில் நிகழக்கூடிய காரியமன்று. ஆகவே, நம்பெருமானுர்சல் அவர்கள் தங்கள் முதற்பருவத்திலே 25-ஆவது பிராயம் வரை தங்கள் சித்தத்தை யடக்கிப் பரிசுத்த பிரமசாரியாகவே யிருந்துவந்த தொன்றே, இவர்கள் தங்கள் பிற்கால வாழ்க்கையில் ஒழுக்கத்தில் இழுக்கடைய மாட்டார்களென்று கூறியமைதற்குப் போதிய சான்றா யிருந்து வருகின்றது. இதன் சார்பாய் ஆராய்ச்சிசெய்யத் துணியுங்கால், இன்னமொருவிஷயத்தையும் மறந்துவிடுவது கூடாது: அற்றை நாள் அரப்நாட்டிலே மக்களை ஒழுக்கத்தில் இழுக்குற்று வீழ்ச்சியுறாது தடுப்பதற்கு ஒருவித ஆசாரத்தடையும் மதச்சார்பாய் இருந்துவந்ததுகிடை

யாது; ஆதலினால், இப் பெருமானாரைத் தவற்றொழுக் கத்தில் இழியாது தடுத்துநிறுத்த அந்நாட்டில் ஒன் றும் சட்ட பூர்வமான, அல்லது ஆசாரபூர்வமான தடை முறை இருந்ததில்லையென்க. ஆயின், அதற்கு மாறாய்க் 'குடி'யும் 'கூத்திப்பழக்க'மும் அந் நாட்டிற் குரிய விசேஷ அனுஷ்டானங்களா யிருந்துவந்தன வென்னலாம். இத்தன்மைத்தாயஅருவருப்புமிக்குள்ள அமல்களில் மூழ்கி அளவிறந்த பெருமை யடித்துவந்த ஒரு சமுதாய மக்களிடையே அவதரித்துத் தங்க ளுடைய இருபத்தைந்தாம் பிராயம்வரை ஒருதுளி மதுவையும், ஒருசிறு கன்னியின் வதனத்தையும் ஏறெடுத்துப்பாராமலே யிருந்துவந்த தொன்றே இம் மஹானின் குணதிசயத்தைப் பெரிதும் சிறப்பித்துக் காட்டக்கூடியதா யமைந் திருக்கிறது. என்னே இவரது இணையில்லா மேன்மை!

இப்பொழுது நாம் இவர்களது இரண்டாவது பகுதியை எடுத்துக்கொள்வோம்; இதுதான் ஐம்பத்து மூன்று பிராயம்வரை ஏகபத்தினி விரதத்துடனே இருந்துவந்த அருமைக் காலமாகும். நபிகட்டிலகத் திற்கு வயது இருபத்தைந்து ஆகியபொழுது, தங் களைவிடப் பதினைந்தாண்டு முதிர்ந்திருந்த— ஒரு வித வையாய்ப் போய் நாற்பதாவது பிராயத்தை யெட்டி யிருந்த— கதீஜாபிராட்டியை[ரலி] மனமொத்து மண முடித்துக் கொள்கின்றார்கள். நபி பெருமானது ஐம்ப தாவது பிராயத்திலே அப் பெருமாட்டியார் நிர்யாண மடைந்துபோகுமட்டும் இருவரும் ஓருயிரும் ஈருடலு மாகவே யிருந்து, மணியும் ஒளியும்போலே இல்லற

வாழ்க்கையை இன்பத்துடனே இனிதுற நடாத்திவரு கின்றனர். ஆனாலும், அப்பொழுதெல்லாம் அவ்வரப் நாட்டில் பலதாரமணமே ஒரு பொதுவிதியாய், இல்லை, வியாதியாய், எங்கும் வியாபித்துக் கிடந்தது. ஒரு கணவன் பன்னூற்றுக் கணக்கான மனைவியரை மண முடித்து வருங்கால், முதலில் வாழ்க்கைப்பட்ட பட்ட மகிஷி ஒன்றும் ‘புகார்’ சொல்ல மாட்டாள்; சொல் லவுந் துணியாள்.

பலதார மண மென்பது பணக்காரர்களுக்கே உரிய உயரிய அந்தஸ்தென்று கருதுவது கூடாது; ஏழைகளும் அவ்வாறு செய்துகொள்வதுண்டு. எனி னும், கதீஜாபிராட்டியாரைத் திருமண முடித்துக் கொண்டமையால், நபி பெருமானார்ஸல் செல்வவா னாகவே யுயர்ந்து விட்டார்கள்; அப்பால் இவர்கள் பல தாரங்களை—இளம்பிராயமுள்ள நங்கையரை— மணமுடித்திருக்கலாம்; கதீஜாபிராட்டியும்ரலி குறை கூறியிருக்க மாட்டார்கள். ஏழைகள் விஷயத்தை எடுத்துக்கொண்டாலோ, மனைவியொருத்தி உண்மை யிலே தன் கணவனுக்குப் பொருளீட்டும் விஷயத்தில் உடனுழைத்து உதவிபுரிகின்றாள்; எனவே, எத்தனை தாரங்களைக் கணவன் மணந்துகொண்டாலும், அவ னுக்கேனும், அம் முதல் மனைவிக்கேனும் ஒன்றும் சிரமமே வாய்ப்பதில்லை. நபிகள் திலகமோ, குறைஷி குலத்தில் ஒருயரிய குடும்பத்திலே அவதரித்திருந்தார் கள்; ஆதலால், அன்னவர்கள் மறுதாரமொன்றை மணமுடித்துக் கொள்வதாய் விழைந்திருப்பின், நம் பெருமானாருக்கு ஒரு நேர்த்தியான கன்னியைக்

கொடுக்க ஒருவரும் தயங்கி யிருக்க மாட்டார். எனினும், எம்பிரான் ^ஸல்^ அவர்கள் தங்கள் 25 முதல் 50 வயதுவரை யுள்ள எல்லா நடுப் பிராயத்தையும் மனமொருமித்த மகிழ்ச்சியுடனே அவ்வேக பத்தினியுடன் ஒன்றித்தே வாழ்ந்துவந் திருக்கின்றார்கள். கதீஜா பிராட்டியார் ^ரலி^ தேகவியோகமாய்ப் போய்விட்ட பின்னர் நபிநாயகர் (ஸல்அம்) ஒரு வயோதிகப் பருவ மெய்தியிருந்த ஸௌதா வென்னும் நாமம் புனைந்திருந்த கிழவிதவையை மணந்துகொண்டார்கள்; இம் மாதரார்க்கிருந்த ஒரேசலிகை, இன்னவர், நபிகள் பெருமானுக் கொரு பிரிய சிஷ்யராயிருந்து குறைஷிகளிழைத்த கொடுமை தாளாது ஆதியிலே அபிஸ்ஸீனியாவுக்கு ஹிஜ்ரத் சென்றுவிட்டிருந்த ஒரு முஸ்லிமின் மனைவியாயிருந்த கௌரவம் ஒன்றேதானகும். எனவே, ஆடவர் தங்கள் இல்லறவாழ்க்கையில் சாதரணமாக முடித்துக்கொள்ள வேண்டிய திருமணம் ஒன்றேதான் என்னும் படிப்பினையை நபிகணாதர்(ஸல்அம்)தங்கள் 25 முதல் 53 வரையுள்ள நடுப் பிராய ஏக பத்தினி விரத வாழ்க்கையிலிருந்து நன்கு நிரூபித்துக் காண்பித்துச் சென்றுளார்கள்.

இப்பொழுது நாம் இம் மஹானுபாவரின் மூன்ரும் பகுதியை யெடுத்துக்கொள்வோம். இவர்கள் மணமுடித்துக் கொண்ட எல்லா மனைவியருள்ளும் பீபீ ஆயிஷா ^ரலி^ அவர்கள்மட்டுமே கன்னிப்பெண்ணுயிருந்தார்கள்.* அக் கன்னிகையின் தந்தையாய ஹஜ்

* எகிப்திலிருந்து இனமா யனுப்பப்பட்டிருந்த கிப்தீ யினத்தைச் சார்ந்துள்ள மாரியாவும் (இப்ராஹீமை ஈன்ற தாய்) ஒரு கன்னிப் பெண்ணேயாம்.

ரத் அபூபக்ர்[ரலி]— நபிகள் பெருமானுடைய பிரதம சிஷ்யரா யிருந்ததுடன் பிரிய நண்பராகவும் இருந்து வந்த காரணத்தால்—தங்குமாரியை இம் மஹானுக்கு மணமுடித்து வைக்க விரும்பினார்கள்; இதற்குக் காரணம் இரண்டுண்டு: ஒன்று, கதீஜா பிராட்டி யார்[ரலி] மரித்துப்போய் விட்டார்கள்; மற்றொன்று, இப்பெருமானாரின் பெரிய தந்தையாகிய அபூத்தாலிபும் காலகதியால் தேகவியோகமாய்ப் போய்விட்டார்கள். சிறுமி ஆயிஷாவின்பால்[ரலி] அரிய பல சிறந்த குணங்க ளெல்லாம் இயற்கையாகவே பொதிந்து கிடந்த காரணத்தால், மன்பதைக்கெல்லாம் ஒரு பரிபூரண முன்மாதிரியாய் விளங்க வேண்டியிருந்த இறுதி நபி யின் இல்லக்கிழத்தியா யிருந்து வருதற்குரிய லாயிக்கு வாய்ந்தவரே இப் பெண்மணி யென்று நபிகட்டிலக மும்[சல்] ஹஜ்ரத் அபூபக்ரும்[ரலி] ஏக அபிப்பிராயத் துடனே அங்கீகரித்துக் கொண்டார்கள். ஆகவே, நபிபெருமான்[சல்] ஆயிஷா[ரலி] அவர்களை மணமுடித்துக் கொள்ளச் சம்மதித்தார்கள்; ஆனால், அதுகாலை அக் கன்னிகை புஷ்பவதியாகா திருந்தார்கள். ஆதலினால், வீடுகூட லென்னும் வைபவம், ஹி. 2-ஆவ தாண்டின் இறுதிக்குச் சமீபத்திலே நிறைவேற லாயிற்று.*

---

* நபிகள் திலகம்(சல்) ஆயிஷா(ரலி) அவர்களை மனைவியா யேற் றுக்கொண்ட பொழுது, அந்த ஸ்ரீமாட்டிக்கு எத்தனை வயது ஆகி யிருந்தது? என்பது குறித்து ஒரு பெரிய தவறான அபிப்பிராயம் இருந்துவருகிறது. இப்னு ஸஅத் "தபக்காத்"தில், ஹஜ்ரத் அபூபக் ரவர்களை, ஆயிஷா பிராட்டியை நபிகள் நாயகத்துக்கு மணமுடித்து வைக்குமாறு ஒருசிலர் வேண்டிய பொழுது, அந்தப் பெரியார் தம்

ஹி. 2-ஆவது ஆண்டு முதற்கொண்டே குறைஷிகளுடன் மல்லாட வேண்டிய போராட்டங்கள் தொடங்கிக் கொண்டன; அவர்களுடன் ஏனை அராபியரும் சேர்ந்து கொண்டுவிட்டனர். அத்தகைய யுத்தங்களா லெல்லாம் முஸ்லிம்களின் ஆடவர் எண்ணிக்கை மிகவாய்க் குறைந்துகொண்டே வந்தது;

---

முடைய குமாரி அதற்கு முன்பே ஜுபைருக்கு நிச்சயார்த்தம் செய்யப்பட்டிருந்ததாகவும், இப்பால் அக் கன்னிகையை நபி பெருமானுக்கு மணமுடித்து வைப்பதாயின் அம்முதல் நிச்சயார்த்தத்தை ஜுபைருடனே முதன்முதலில் ரத்து செய்துகொள்ள வேண்டுமென்று பதில் கூறியதாகவும் வரைந்து வைத்துள்ளார். இதிலிருந்து, அதுகாலை பீபீ ஆயிஷா பூப்புக்குரிய பக்குவத்தை எய்தியிருத்தல் வேண்டுமென்று நாம் தெரிந்துகொள்கிறோம். இன்னம், நபிகளுதரின் திருக்குமாரியாகிய பீபீ பாத்திமத்துஜ் ஜொஹ்ரா(ரலி) அவர்கள் ஜனனங் குறித்துக் கூறுகையில், "இஸாபா"வில் இவ்வாறு வரையப்பட்டிருக்கிறது: அப் பெருமாட்டியார் நபிப்பட்டம் அருளப்படுதற்கு ஐந்தாண்டுகள் முன்னரே அவதாரம் புரிந்தார்கள்; ஆகவே, அப் பெருமாட்டி ஆயிஷா பிராட்டியாரைப் பார்க்கினும் சற்றேறக்குறைய ஐந்தாண்டுகள்வரை மூத்திருந்தார்கள். எனவே, ஆயிஷா (ரலி) நபிபெருமானுக்கு நிக்காஹ் செய்துவைக்கப்பட்ட பொழுது, சற்றேறக்குறையப் பத்து வயதை—வேறு சிலர் கூறுவதேபோல், ஆறுவயதை யன்று—அடைந்திருத்தல் வேண்டும். இவ்வுண்மை வேறொரு வாயிலாலும் நன்கு நிரூபண மாகின்றது: அஃதாவது, "சந்திரன்" என்னும் குர்ஆன் ஷரீபிலுள்ள அத்தியாயம் (54-ஆவது ஸூரா) வெளியாக்கப்பட்டபொழுது, தங்களுக்கு விளையாடும் பிள்ளைமைப் பருவமா யிருந்ததென்றும், அதுகாலை இறக்கப்பட்ட சிற்சில திருவாக்கியங்களும் தங்களுக்கு நன்கு ஞாபகமிருக்கிற தென்றும் பீபீ ஆயிஷா(ரலி) அவர்களே கூறியுள்ளதாக ஒரு விஷயம் காணப்படாநின்றது. ஆனல்,

அன்னவர்களே தத்தம் குடும்பங்களுக்கு வேண்டிய உண்டியையும், உடையையும் சம்பாதிக்க வேண்டிய வர்களா யிருந்தமையின், அவர்களுக்குப் பின்னே அவ் விதவைகளின் நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கதாய்ப் போய்க்கொண் டிருந்தது. மேற்கூறிய யுத்தங்களெல் லாம் ஹி. 8 வரை நீடித்துக்கொண்டே சென்றன.

---

அந்த 54-ஆவது அத்தியாயம் நபிப்பட்டம் வந்து ஆருவது ஆண் டிற்கு முன்னரே வெளியாயிருத்தல் வேண்டும். இவ்வெல்லாச் சான்று களும் ஒரே முடிபைத்தான் சுட்டிக்காட்டிக்கொண் டிருக்கின்றன: அஃதாவது, ஆயிஷா பிராட்டியார் நபிபெருமானுக்கு "நிக்காஹ்"— இது வெறு நிச்சயார்த்தத்தையே அநேகமாய் நிகர்த்து நிற்கிறது— செய்து வைக்கப்பட்ட பொழுது, பத்து வயதுக்குக் குறைந்திருந் திருக்க மாட்டார்கள் என்பதுதானுகும். தபக்காத்தில் வேறெரு விஷ யமும் முக்கியமாய்க் காணப்படாது போகவில்லை: அஃதென்ன வெனின், நிக்காஹின்போது பீபீ ஆயிஷாவுக்கு ஒன்பது பிராயம் ஆகி யிருந்தது. இன்னம், எல்லாராலும் ஏகோபித்து ஏற்றுக்கொள்ளப் படும் விஷயமும் இங்கொன்று இல்லாது போய்விடவில்லை: அஃதா வது, ஆயிஷா பிராட்டியின் நிக்காஹ் நுபுவ்வத் வந்து பத்தாவது வருட ஷவ்வால் மாதத்திலேதான் நிகழ்வுற்றதென்றும், பிறகு வீடு கூடலென்னும் வைபவம் ஹிஜ்ரீ 2-ஆவது வருட அதே ஷவ்வால் மாதத்திலேதான் நடைபெற்றதென்றும், கொள்ளக் கிடக்கின்றது. இதனுல், அந்த நிக்காஹுக்கும் இந்த வீடுகூட லென்னும் வைபவத்துக்கும் இடையிலே ஐத்தாண்டுகள் வரை பூர்த்தியாய்க் கழிந்திருந்தன வென்னும் உண்மை நன்கு விளக்கமாகின்றது. ஆகவே, அப்பிராட்டியாருக்கு நிக்காஹின்போது ஆறு அல்லது எழு வயதே ஆகியிருந்ததென்றும், வீடு கூடியக்கால் ஒன்பது வயதே எட்டி யிருந்ததென்றும் கூறப்பட்டுவரும் பொதுஜன அபிப்பிரா யம் சரித்திர ஆராய்ச்சியின் பிரகாரம் தவறுகவே யிருந்து வருகிற

அந்தக் காலத்திலேதான் நபிபெருமானர், இற்றைநாள் மனப்பான்மைக்கு அருவருப்பாய்த் தோற்றும்(?) அத்தனை விவாகங்களையும் முடித்துக்கொண்டார்கள்; ஆனல், இத் திருமணங்களை யெல்லாம் அக்காலத்திலிருந்த நண்பர்களேனும், பகைவர்களேனும் ஆக்ஷேபித்தன ரில்லை. ஏன் ஆக்ஷேபிப்பர்? எல்லாரும், அத்தகைமணங்களால் கருணையே அதிகம் புரியப்பட்டு வந்ததென்பதைக் கண்கூடாய்க் கண்டுகொண்டிருந்தனரே! அவற்றுளொன்றும் சித்தவிகாரத் தன்மை வெளிப்படவில்லை யென்பதையும் அன்னர் அறியாது போய்விட வில்லை. இவ்வுண்மையை ஒரு கிறிஸ்தவர் கூட ஒத்துக்கொண் டுள்ளார்: "ஆயினும், முஹம்மதின் விவாகங்களுள் பெரும்பான்மையன, குறைந்த பக்ஷம், அவருக்கு அங்கு அவதியுள் சிக்கியுழன்ற மக்கள்பால் தோன்றிய நிலைமையாலேற்பட்ட இரக்கத்தின் காரணத்தாலே என்னும்,— இதையன்றி வேறு நோக்கங்களும் இருந்தன வென்னலாம்— சமாதானம்

---

தென்பது வெள்ளிடை விலங்கலாகும். என்னெனின், நிக்காஹுக்கும் வீடு கூடலுக்கும் இடையிட்டகாலம் இரண்டு அல்லது அதிகப்படியாயிருந்தால் மூன்றுவருடங்க ளென்றே அன்னரது அபிப்பிராயப்படி சுருங்கிவிட வேண்டியதா யிருக்கிறது. ஆனல், அந்த இடையிட்டகாலம் சரியாக ஐந்தாண்டுகள் என்பது திட்டமான சரித்திரச் சான்றாகும். எனவே, எல்லா விஷயங்களையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கட்கு நிக்காஹ் நிறைவேறிய பொழுது பிராயம் ஒன்பது அல்லது பத்தென்றும், வீடு கூடும் விசேஷம் நிகழ்வுற்றபொழுது பதினன்கு அல்லது பதினைந்து என்றும் நாம் செவ்விதாய்த் தெரிந்துகொள்கிறோம்.

கூறிவிடலாம் என்னும் விஷயம் நினைவிலிருக்க வேண்டும். அவர்களுள், அநேகமாய் அத்தனை மனைவியார்களும் விதவைகளாகவே யிருந்துவந்தனர்; ஆனால், அன்னவர்கள் தங்களுடைய எழிலுக்கோ, செல்வத்துக்கோ பெயர்போனவர்க ளல்லர்; ஆயின், அவற்றிற்கு நேர்மாறு யிருந்தார்கள்," என்று அவர் வருணித் திருக்கின்றார்.

ஏழைகளுக்காக இரங்கவேண்டுவதைத் தவிர்த்து, வேறு என்னகாரணம் அப் பலதாரமணத்துக்கு இருந்திடுதல் கூடும்? இவ்விஷயத்தில் நாம் உண்மையை ஊன்றிப் பார்ப்பது அத்தியாவசிய மாகும். நபிகள் திலகத்தின் இல்லத்தில் அழகிய யுவதி ஆயிஷா[ரலி] ஒரு மனைவியா யிருந்துவருகின்றார். அப்பால் மணமுடித்துக் கொள்ளப்பட்ட வேறெந்த மனைவியும் யௌவனத்திலேனும், எழிலிலேனும் ஹஜ்ரத் ஆயிஷாவுக்கு[ரலி] நிகரா யிருந்ததில்லை. எனவே, எழிலின் காரணத்தால் எம்பெருமானார் வேறெவரையும் மணம்புரிந்து கொண்டார்க ளென்று சொல்வதற் கில்லை. இம் மஹானுபாவர் தங்கள் 25-ஆவது பிராய முதல் 53-ஆவது பிராயம் முடியுமட்டும் தங்கள் சித்த விகாரத்தை அலையவிடாது முற்றிலும் கட்டுப்படுத்தியே வந்தார்க ளென்று நாம் இதற்கு முன்னமே செவ்விதாய்த் தெரிந்துகொண்டிருக்கிறோம். இருபத்தைந்து வயதுவரை சுத்த பிரமசரியத்துள்ளே யிருந்து, சிறிதும் அப்பழுக்கற்ற குணக்குன்றாய் மிளிர்ந்து வந்த ஒருவர், பிறகு ஐம்பது ஆண்டுகள்மட்டும் தங்களினும் பதினைந்து பிராயம் முதிர்ந் துள்ள ஒரு விதவை

யுடனே, (அதிலும், இருமுறை மணந்து இருமுறை விதவையாய்ப் போய் விட்டிருந்த ஒரு பேரிளம் பெண்ணுடனே) மன மொருமித்து மகிழ்வு குன்றாது வாழ்ந்துவந்த ஒரு மஹான்—அதுவும், அக்காலத்தில், பலதார மணமென்பது சர்வசாதாரணமாய ஒரு பெரு வழக்கமா யிருந்துவந்த நிலைமையிலே, மேலும் நபிகள் பிரானும் வேறொரு மனைவியை மணந்துகொண்டு வந்திருந்தால் எவரும் ஆக்ஷேபித்திருக்க முடியாத நிலைமையிலே அவ்வாறு ஏகபத்தினி விரதத்துடனே அடங்கி யொடுங்கி யிருந்த ஒரு பெரியார் — தமது ஐம்பத்து நான்காவது வயதுமுதிர்ந்த பிராயத்துக்குப் பின்னர்த் திடீரென்று மோகப்பித்தேறிய காமாந்த காரராய் மாறிப்போய் விட்டா ரென்று கூறத்துணி வது வெறு வாய்வீறுப்பே யாகும்; என்னெனின், வாலிபதசையில் தமது சித்த விகாரத்தைச் சிறிதும் அடக்கிக் கொள்ள முடியாத துஷ்டர்களுங் கூட ஐம்பத்துநான்கு வயதுக்கு மேலே எல்லா ஆர்வ ஆவேசமும் அதிகமாய்ச் சமனப்பட்டுச் சர்வசாதாரண மாய்த் தணிந்துபோவதே வழக்கமாம். எனவே, எம் பெருமானாரின் வயோதிகப் பலதார மணங்க ளெல் லாம் அவ் வனிதையர்பால் காண்பிக்கப் பட்ட இரக் கத்தினு லல்லது வேறு சித்தவிகாரத்தால் நிகழ்த்தப் படவில்லை யென்பது நன்கு புலனாகின்றது. அவ்வா றின்றிச் சித்தவிகாரமே அவற்றிற்கெல்லாம் ஆதி காரணமா யிருந்திருப்பின், அப்பொழுது அத்தகைய தேர்தல், எழில்மிக்க யௌவன நங்கையர்மீதே வீழ்ந் திருத்தல் வேண்டும்; அதுகாலை நபி பெருமானுக்கு

இருந்து வந்த அந்தஸ்திற்கும், அளவிலாத கௌரவத்திற்கும் எத்தனையோ எழில்மிக்க யௌவனக் கன்னிப் பெண்கள் இவர்கட்குக் கிடைத்திருப்பரே!

---

## எத்தகைய வாழ்க்கை நடாத்தப்பட்டது

இருபத்தைந்து பிராயம் வரை எவ்விதக் குற்றச்சாட்டுக்கும் இடங்கொடாது மகா பரிசுத்தத்துடனே வாழ்ந்துவந்த ஒருவரது வாழ்க்கையில் ஐம்பத்தைந்து வயதுக்கு மேலே திடுமென்று மோகப் பித்து வந்து மூண்டுவிட முடியாதென்று மேலே நாம் விவரித் துரைத்தோம்; இளங்கன்னியரின் எழில்மிக்க தன்மை யௌவனப் பருவத்தில் ஒருவரது உள்ளத்தைக் கலைத்துத் தவற்றொழுக்கத்தில் திருப்பிவிட முடியாதபொழுது, அத்தகைய ஆவல் அன்னாரை எவ்வாறு முதிர்ந்த வயதுடைய கிழப்பருவத்திலே கலைத்துக்கெடுத்துவிட முடியுமென்றும் நாம் வினா விடுத்திருந்தோம். அதுவேயு மன்றி, அக்காலத்தில் நபிபெருமானார் எவ்வாறு மதீனாவில் காலங்கழித்து வந்தார்கள்? இப் பெருமானார் அதுகாலை அந்நகரத்தில் சுகபோகத்திலும் கவலையற்ற இன்ப வாழ்க்கையிலுமா காலங் கடத்தினார்கள்? இல்லை, இல்லை! அது மிகவுங் கடினமான ஓர் உயிர் வாழ்க்கையே யாகும்; என்னெனின், அப்பொழுதுதான் இம்மஹான் இஸ்லாத்தின் எதிரிகளுடனே உயிருக்கு மல்லாடவேண்டிய நெருக்கடியான காலமாயிருந்து வந்தது. பெரும்பெரும் படைகளெல்லாம்

அடிக்கடி மதீனாவிலுள்ள அச்சிறு தொகையினராயுள்ள முஸ்லிம்களை அடியுடனே நசுக்கி யழித்துவிடுவான் வேண்டிப் போருக்குப் பின் போருக்காய்ப் புறப்பட்ட வண்ணம் இருந்தன. சுருக்கிச் சொல்ல வேண்டுமாயின், அரப்நாடு முழுதுமே நபி நாயகத்திற்கு விரோதமாய்க் கிளம்பிவிட்டதெனல் வேண்டும்; ஆதலால், ஒரு நிமிஷ ஓய்வும் இம்மஹானுக்கு அதுபொழுது கிடைப்பது அரிதாய்விட்டது; அதற்கேற்பப் பாதுகாப்பும் குதிரைக்கொம்பாய் விட்டதெனல் வேண்டும். ஆகவே, ஒன்றுக்குப் பின் மற்றொன்றாய்ப் போர்கள் பல புரியப்பட வேண்டியிருந்தன; படையெடுப்புக்கள் பல ஏற்பாடு செய்து கிளப்பியனுப்பப்பட வேண்டியனவா யிருந்தன. எனவேதான், அம் முஸ்லிம்கள், "யா ரஸூலல்லா ! யாங்கள் இரவுபகலாய் இவ்வாறு ஓயாத ஆயுதபாணிகளாய் இருந்திருந்து அலுத்துப்போய் விட்டோமே!" என்று எம்பெருமானாரிடம் குறை கூறத் துணிந்து விட்டனர். இதற்கு விடையில் இம் மஹானுபாவர் அரப்நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை பிரயாணி யொருவன் ஆயுதம் பூணாமலே பாதுகாப்புடன் செல்லத்தக்க வேளையொன்று சீக்கிரத்திலே உதயமாய்விடுமென்று தங்கள் சிஷ்யர்களுக்கெல்லாம் கூறித் தைரியமூட்டி வந்தார்கள். மக்கத்து விக்கிரஹத் தொழும்பர்களுடனே மதீனத்து யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஒன்றுசேர்ந்து கொண்டனர். நபிகட்டிலகத்தின் முக்கியமாயுள்ள நண்பர்கள் பலர் யுத்த களத்திலோ, நம்பிக்கைத் துரோகிகளின்

கட்கத்திலோ சிக்கி, அடிக்கடி மாண்டுவந்தனர். இத்தன்மைத்தாய நிலைமையிலே ஒருவர் இலேசான வாழ்க்கையிலே சுகபோகத்துடனே உயிர்வாழ்ந்து வர இயலுமா வென்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள். அவ்வாறு சுகபோக வாழ்க்கையில் மூழ்கித் திளைக்க ஒருவருக்கு விருப்பமிருப்பினும்,— எல்லாச் சான்றுகளைக் கொண்டும் எம்பெருமான் சல் ஒருசிறிதும் அவ்வாறு விழைந்ததில்லை யென்பது செவ்வனே அறியக் கிடக்கின்றது — அதுவன்றே அதற்குரிய சௌகரியமான காலமும்! மதினாவின் உள்ளேயும் எதிரிகள்; அதனைச் சூழவும் பலப்பல பகைஞர்கள்; எதிரிகளின் எண்ணிக்கையுடன் ஒப்புநோக்குங்கால், முஸ்லிம்களின் தொகை மிகவும் சிறியதாயே காணப்பட்டுவந்தது; எல்லாத் திக்குக்களிலிருந்தும் எதிரிகள் எண்ணில்லாதவர்களாய்ப் புறப்பட்டு வருகிறார்களென்னும் புரளி சதா வந்துகொண்டேயிருந்தது. இப்படிப்பட்ட நிலையிலே, எப்படிப்பட்ட காமாந்தகாரனும் தனது சுகபோக வாழ்க்கையுள் சொக்கிப்போயிருக்கத் துணியான்; இயற்கையின் போக்கு இவ்வாறு இருந்துவருங்கால், எத்தகைய பெண்ணாசையாலோ, மண்ணாசையாலோ, பொன்னாசையாலோ அசைக்கப்பட முடியாதவாறு இருந்துவந்த ஒரு பரிசுத்த மிக்க மஹானுபாவர் எவ்வாறு அதுகாலை ஒரு காமாந்தகாரராய் மாறிப்போயிருத்தல் சாலும்?

அக் காலத்தில் பகற்பொழுதெல்லாம் அவ்வாறாய்க் கழிந்துவந்ததென்றால், நபிகள்நாயகம் சல் தங்

கள் இராப்பொழுதை எவ்வாறு கழித்துவந்தார்களென்றும் நாம் இங்கே சிறிது தெரிந்துகொள்ளுதல் அத்தியாவசியமா யிருக்கிறது. இப் பெருமானார்பால் அப்பொழுது பல பிராட்டிமார்— சட்டபூர்வமாகத் திருமண முடிக்கப் பெற்றவர்கள்— இருந்து வந்தார்கள்; எனினும், எம்பெருமானார்^ஸல் இராக் காலத்தை அத் தேவிமா ரில்லத்தில் கேளிவிலாசங் கொண்டாடிச் சிற்றின்ப வாழ்க்கையிலே கழித்து முடிப்பது வழக்க மில்லை. குர்ஆன் ஷரீபிலும் (73: 1—4, 20) ஹதீது ஷரீபிலும், நபிபெருமானாரவர்கள் இரவில் சரிபாதி நேரத்தை, சில வேளைகளில் அதனினும் அதிகமான காலத்தை அல்லா(ஹ்)வை வணங்குவதிலும் அவ் வணக்கத்தில் நின்றபடியே குர்ஆன் ஷரீபை ஓதி யொப்பிப்பதிலுமே செலவு செய்து வந்தார்க ளென்பதற் குரிய பிரத்தியக்ஷ அத்தாக்ஷிகள் நிரம்பவும் காணப்படாநின்றன. இவர்கள் அத் தொழுகையில் நின்று ஓதும் காலநீடிப்பால் கால்களில் இரத்தங்கட்டிச் சுரந்துவிடுவ துண்டாம். இத்தகைய இபாதத் (வணக்கத்)துக் குரிய பெரியார் இராக் காலங்களில் தங்கள் பிராட்டிமா ருடனே கூடிக் குலாவிக் குதூகலங் கொண்டாடுவ தென்பது எங்ஙனம் சாத்தியமாகும்? ஆனால், அதற்கு மாறாய், இம் மஹானுடைய ஜீவியத்துக்குரிய ஒவ்வொரு நுண்ணிய கருமமும் விடாமல் பதிவு செய்யப்பட்டுள்ள தினசரிப் பட்டியை உற்று நோக்குங்கால், இவர்களுடைய இரவு பகல் இருபத்து நான்கு மணி நேரத்தையும் மிகவும் கடுமையான பொதுக் காரியங்

களிலும் வணக்கக் காரியங்களிலுமே செலவுசெய்து வந்தார்க ளென்றும், வேறு வீட்டுக் காரியங்களை யேனும், சாப்பாட்டுக் காரியங்களையேனும் கிஞ்சித்தும் கவனித்துவர வில்லை யென்றும் நாம் நன்கு தெரிந்து கொள்ளுகிறோம். அது மிகமிகக் கடினமான வாழ்க்கைதான்!

இப்பொழுது நாம் வேறொரு விஷயத்தையும் எடுத்துப் பரிசீலனை செய்வோம்: நபிகட் டிலகம் (சல்அம்) ஒரு நாட்டினுக்குரிய அரசரா யுயர்ந்த பின்பு இம்மஹானது இல்லற வாழ்க்கையில் உண்மையிலே ஏதும் மாற்றம் காணப்பட லாயிற்றோ? "வனாந்தரத்தில் ஆடு மேய்த்தபோ திருந்த வாழ்க்கையிலும், சிரியா நாட்டுக்கு வர்த்தகத்தின் பொருட்டுச் சென்ற போதிருந்த வாழ்க்கையிலும், ஹிராமலைக்குகையில் தனித்திருந்து விழித்திருந்து தியானம் புரிந்தபோ திருந்த வாழ்க்கையிலும், தன்னந்தனியாய் ஒரு தனிப்பட்ட சிறுபான்மையினராய் நின்று சீர்த்திருத்தம் செய்தபோ திருந்த வாழ்க்கையிலும், மதீனாவுக்குள் நாடு கடத்தப்பட்டவராய் நுழைந்து சென்றபோ திருந்த வாழ்க்கையிலும், (பிறகு) வெற்றிமுரசு கொட்டியவ ரென்று அனைவராலும் அங்கீகரிக்கப் பட்டபோ திருந்த வாழ்க்கையிலும், பாரசீகக் கிஸ்ராவுக்கும் உரோம் தேச ஹிரக்கிலுக்கும் சரிசமானரென உயர்ந்து ஓங்கியபோதிருந்த வாழ்க்கையிலும் ஒரே திண்மையான ஒற்றுமை யென்பது ஊடுருவி நிற்பதை நாம் நிச்சயமாய்க் காணக்கூடும். புறமாறுதல்கள் அத்துணை யதிகமாய் வேறுபட்டுவந்த வேறு

இ7:33
N41



எந்த மனிதனும் அம்மாற்றங்கட் கேற்ற முறையிலே தானும் வேறுபாடடையாது வெறுமனே யிருந்து வந்தானென்று என்னல் எண்ணமுடியவில்லை. காலதேச வர்த்தமானங்களெல்லாம் முற்றும் மாறுபட்டுப் போய்விடுகின்றன; எனினும், (உள்ளேயுள்ள) இயல்பு மட்டும் எல்லா நிலைமைகளிலும் ஒரே தன்மையாகத்தான் இருந்துவருவதாய் எனக்குத் தோற்றுகின்றது.''— (பாஸ்வொர்த் ஸ்மித்)

பிறந்ததுமுதல் இறந்ததுவரை நபிகள் நாயகம்^ஸல் பல்வேறு திறப்பட்ட மாறுதல்களினூடேயெல்லாம் நுழைந்து நுழைந்து சென்றிருக்கிறார்கள்;— இத்துணை விதம்விதமாய வெவ்வேறு மாறுதல்களெல்லாம் இத்தரணியில் வேறெந்தத் தனி மனிதன் வாழ்க்கையிலும் நேரிட்டதில்லை. அநாதக் குழந்தை யென்பது, வறுமையுள்ளெல்லாம் மிகவுங் கொடிதாய வறுமையைச் சுட்டிக்காட்டும்; ஆனால், அரசபதவி யென்பதோ, அதிருஷ்டத்தின் உச்சத்தையும் அதிகாரத்தின் உச்சத்தையுமே எடுத்துக் காட்டும். நம்பெருமானார் ஆறுவயதளவிலே அன்னையும் பிதாவு மற்ற அகதியாயிருந்து, அறுபதாம் பிராயத்தை அடையுமுன்னே அரப்நாடு முழுமைக்கும் அரசராய் உயர்ந்துவிட்டார்கள்; ஆயினும், அதனாலெல்லாம் இம்மஹானுபாவரின் இல்லற வாழ்க்கையில் ஏதும் மாறுபாடு தோன்றிவிடவில்லை. முன் போன்ற அதே மாதிரியான எளிய உணவருந்தியும், அதே மாதிரியான எளிய உடையுடுத்தியும் காலங்கழித்து வந்தார்கள்; சுருக்கிச் சொல்லுமளவில், இப்பெருமானார் ஆருமற்ற அகதிக

110575

குழந்தையா யிருந்தபோது நடாத்திவந்த குடித்தனப் பாங்கையே பின்னால் பேரரசராய போதும் பின் பற்றி யொழுகிவர லாயினார்கள். அரசபதவியைத் துறந்து ஆண்டியாய்ப் போய்விடுவ தென்பது ஒரு சிரமமான கருமமேயாகும்; ஆயின், அதனினும் சிரம மானது, அரசருக்குரிய அதிகாரம் கைவய மிருந்து வருங்காலே ஓர் ஆண்டியே போல உயிர்வாழ்ந்து வருவ தென்பது; அதிகாரமும் ஐசுவரியமும் கைவய மிருந்துவருங்கால், அவற்றினை யெல்லாம் ஏனையோ ரின் நன்மைக்கென்றே செலவு செய்வ தென்பதும் அத்துணைச் சிரமமான காரியமேயாகும்; இன்னமும், ஒருவருடைய நேத்திரத்தின் முன்னே மகாவசிகர முள்ள ஆகர்ஷண சக்திகளெல்லாம் வந்து தாண்டவ மாடித் திமிதமிட்டுத் திரிந்துகொண் டிருக்குங்கால், அவற்றால் அணுத்துணையும் அலைக்கழிவுறாது சலன மற்ற சாந்தநிலையிலே ஒரே ஸ்திரமாய் நிற்பதென் பதும் அதேபோன்ற சிரமசாத்தியமான காரியமே யாகும்.

நபி பெருமானார்சல் அரப்தேசத்தின் ஏகசக் ராதிபதியாய் உண்மையிலே உயர்ந்துவிட்டபொழுது, படுத்துறங்க ஒரு பேரீச்சை யோலைப் பாயும், நீரருந்த ஒரு மண்கூஜாவுமே இவர்களது இல்லத்தி லுள்ள தட்டுமுட்டுச் சாமான்களா யிருந்துவந்தன. பற்பல இரவுகளில் நபிகள்நாயகம் உண்ண உணவில்லாது பட்டினியாயே படுத்துறங்கி விடுவார்கள்; அநேக தினங்கள் மட்டும் இவர்க ளில்லத்தில் ஆகாரம் சமைக்க அடுப்பு மூட்டப்படாமலே காளான் பூத்துக்

கிடக்கும்; அதுபொழு தெல்லாம் இவர்கள் விடுதியிலுள்ள மக்களனைவரும் வெறும் பேரீந்தின் கனிகளையே புஜித்துக் காலங் கடத்துவர். இங்கு, " ஆடு நனி மறந்த கோடுய ரடுப்பின், ஆம்பி பூப்பத் தேம்பு பசி யுழவாப், பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி, இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை, சுவைத்தொறழூஉந் தன் மகத்துமுக நோக்கி, நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென், மனையோ ளெவ்வ நோக்கி நினை இ, நிற்படர்ந் திசினே!" * என்று குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியுள்ள புறநானூற் றடிகளே (164) எமக்கு நினைவில் வருகின்றன. அப்பொழு தெல்லாம் ஓர் ஆனந்த வாழ்க்கையை நடாத்த இப்பெருமானாருக்கு வசதிக்குறை வொன்றும் ஏற்பட்டிருந்த தில்லை; இவர்களுடைய இன்ப வாழ்க்கைக்கென அரசாங்கப் பொக்கிஷப் பண்டார முழுதுமே இவர்கள் கைவயம் இருந்துகொண் டிருந்தது. இல்வாழ்க்கைக் குரிய எத்தகைய சுகபோகங்களையும் இப்பெருமானார் விழைந்திருப்பார்க ளாயின், அவற்றினையெல்லாம், தங்களுடைய குருமஹானுக்காக உடல் பொருள் ஆவி யனைத்தையும் தத்தஞ்செய்யச் சித்தமா

---

* (இ-ள்) அடுதலை மிகவும் மறந்த புடையோங்கிய அடுப்பின்கட் காளாம்பி(காளான்) பூப்ப உடம்பு மெலியும் பசியான் வருந்திப் பாலின்மையால் தோலாந் தன்மையுடனே திரங்கித் துளை தூர்ந்த பொல்லாத வறிய முலையை வறிதே சுவைக்குந்தோறும் அழுகின்ற தனது பிள்ளையது முகத்தைப் பார்த்து நீரால்நிரம்பிய ஈரிய இமையையுடைய குளிர்ந்த கண்ணையுடைய என் மனைவியது வருத்தத்தைப் பார்த்து இந்த வருத்தந் தீர்த்தற்குரியாய் நீயென நினைந்து நின்பால் வந்தேன்...(எ-று).

யிருந்து வந்த இம் மஹானுபாவரின் சிஷ்யர்களுள் செல்வர்களா யுள்ளவர்கள் பலர் அக்கணமே பூர்த்தி செய்து கொடுக்கப் பெரிதும் பிரியங்கொண்டு முன் வந்திருப்பர். ஆயின், இவ்வுலக சுகபோகங்க ளனைத்தும் எம்பெருமானார்[சல்] பார்வையில் எத்தகைய மதிப்பையும் எட்டுணையும் பெற்றுக்கொண்டு விடவில்லை. ஏழைமையின் போழ் தாகட்டும், ஏக சக்ராதிபதியாய் எழிலுடனே உயர்ந்துவிட்ட பின்ன ராகட்டும், இவ்வுலக இச்சையென்பது எம்பெருமான்[சல்] அவர்களை ஒரு சிறிதும் தடுமாற்றமுறச் செய்து விட மாட்டாது. இம்மஹான் ஏதும் உதவியற்று, பெரிதும் சங்கடப்பட்டு வந்த காலத்தில் அந்நாட்டுக் குறைஷியரால் வாக்களிக்கப்பட்ட பொன்னையும் பெண்ணையும் மண்ணையும் (அரப் நாட்டுக் குரிய அரசர்பதவி) வேண்டாமென்று உதறித் தள்ளியதே போலத்தான், அல்லா(ஹ்)வி னருளால் அவையனைத்தும் இவர்கட்குப் பிற்றைநாளில் வலியவந்து குவிந்தக்காலும், இப்பெருமானார் அவற்றின்பால் அதே விதமாய உதாசினத்துடனும் உபேக்ஷயுடனுமே யிருந்துவந் திருக்கிறார்கள். என்னே எம்பெருமானது எளிய வாழ்க்கை!

எம் பெருமானார் மட்டுமே இவ்வாறு ஓர் எளிய மனிதனுக்குரிய வாழ்க்கையை மேற்கொண்டொழுகினார்களென்று எண்ணிவிடாதீர்கள்; இவர்கள் தங்களுடைய மனைவிமார்களையும் செல்வத்தின்பால் சிறிதும் பிரியங் கொள்ளாதவாறே தடுத்து வைத்துவிட்டார்கள். மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்று சேர்ந்த

வுடனே முஸ்லிம்களின் நிலைமை அபிவிருத்தி யடையத் தொடங்கிற்று : என்னெனின், அவர்கள் வியாபாரத்துறையி லீடுபட்டுப் பொருளீட்டம் செய்யத் துவக்கினார்கள் ; அதுவேயு மன்றி, அப்பால் கிடைததபற்பல வெற்றிகளாலும் அம் முஸ்லிம்களது வாழ்க்கை நலன்கள் மிகமிக முன்னேற்ற மடையலாய் விட்டன. அதுகாலை நபிபெருமா னுடைய பிராட்டிமா ருள்ளத்திலின்றும் ஒரு சர்வசாதாரண — ஆனாலும், நியாயமா யுள்ள — ஆர்வம் ஒன்று ஜனித்தெழுவ தாயிற்று : ஏனைக் குடும்பங்களிலுள்ள எல்லா மாதர்களையும் போலே தாங்களும் இகலோகப் போக போக்கியங்களை அனுபவிக்கலா மென்ற எண்ணம் தோன்றிற்று. இதிலென்ன ஆக்ஷேப மிருந்திடுதல் கூடும்? எனவே, எம்பெருமானா ருடைய பிராட்டிய ரெல்லாரும் ஒன்றுசேர்ந்து, தங்களுக்கும் இவ்வுலகப் போகபோக்கியங்களுக் குரிய சுகசௌகரியங்க ளனைத்தும் சட்டப்படி நல்கப்பட வேண்டுமென்று வேண்டிக்கொள்ளும் பொருட்டுத் தங்களுடைய பர்த்தாவினிடம் தூதுசென்றார்கள். அதுபொழுது இதன் கீழ்க்காணும் குர்ஆன் திரு வாக்கியம் இவ்வாறு அறிவுறுத்தத் தலைபட்டு விட்டது : "ஏ நபியே! நீவிர் நும் மனைவியர்க்குச் சொல்லக் கடவீர் : 'நீங்கள் இவ்வுலக வாழ்க்கையையும் இதற்குரிய அலங்காரங்களையும் விழைவீர்களாயின், இப்படி வாருங்கள் ; நான் உங்களுக்கு வேண்டிய சாமக்கிரியைகளை யளித்து, நீங்கள் நல்லமுறையிலே (என்னைவிட்டுப்) பிரிந்துசெல்ல உங்களுக்கு அனுமதியும் அளித்

திடுவேன்.' மேலும், நீங்கள் அல்லா(ஹ்)வையும், அவனுடைய திருத்தூதரையும், இறுதிவாழ்க்கையை யும் விழைவீர்க ளேல், பின்பு நிச்சயமாக அல்லா(ஹ்) உங்களுள் நன்மை புரிகிறவர்கட்கு ஒரு பெரிய பிரதி பலனைச் சித்தஞ் செய்து வைத் திருக்கிறான்'' —(33 : 28, 29).

இவ்வாறாக அவர்கட்கு இரண்டி லொன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதற்குரிய உரிமையளிக்கப் பட்டது: ஒன்று, அப்பிராட்டிமார் இவ்வுலக இன் பங்களை நாடி வெளிப்பட்டு விடுதல் வேண்டும்; அன்றி, அன்னவர்கள் நபிபெருமானார் இல்லத்திலே ஏழை களா யிருக்கச் சம்மதித்திடுதல் வேண்டும். அவர்கள் இவ்வுலக இன்பங்களை விழைவார்க ளாயின், அன்ன வர்கட்கு வேண்டியவை அளவிறந்து அகப்படக் கூடும்; ஆனால், அவர்கள் அல்லா(ஹ்)வின் அரியநபி வீட்டில் பிரிய மனைவியரா யிருத்தற்குரிய கௌர வத்தை அடியோடு இழந்துவிடல் வேண்டும். பெண் கள் மோகத்திலே சிக்கி யுழல்பவரது விடை இப் படியா யிருக்கும்? சித்தவிகாரத்துள் சிக்கித் தவிப் பவன் தன்னுடைய காமாந்த காரத்துக் குரிய கட்டழகியாரைத் திருப்திசெய்ய அக் காதற்கிழத்திய ரின் பைத்தியக்காரத் தனத்துக் கெல்லாம் தலைவணங்கி யல்லவோ கூத்தாடத் தொடங்கி விடுவான்! அம் மட்டோ? அவனே வலுவில் தன்னுடைய மோக னாங்கியர் மிகவு மழகிய ஆடையாபரணங்க ளுடனே மிளிர்ந்து, இவ்வுலக உல்லாசத்திலே இன்புற்றுத் திளைக்கவேண்டு மென்று சுயமே விழைந்துநிற்பான்.

ஐயஞ் சிறிது மில்லாமலே, அஹ்மத் நபியவர்கள் ஸல் தங்கள் பிராட்டிமார்பால் அளவிறந்த அன்பும் அபிமானமும் பாராட்டி வந்தார்கள். "உங்களுள்ளே மிகச் சிறந்தவர் தம்முடைய மனைவியரை மிகவும் நல்ல முறையிலே நடாத்துபவராவார்," என்று நபிகள் நாயகமே நவின்றருளி யுள்ளார்கள். இதனால், இம் மஹானுக்குப் பெண்பாலார்மாட்டு எத்துணைப் பெரிய கரிசன முண்டென்று நாம் நன்கு தெரிந்து கொண்டு விடுகிறோம். பெண்க ளுரிமையில் இப் பெருமானாருக்குப் பெரியதொரு கவனமே யிருந்து வந்தது; எனவே, இவர்கள் அவர்களுக்காகச் சதாபரிந்து பேசியே வந்திருக்கிறார்கள். ஆயின், இப் பெருமானாருடைய பிராட்டிமார் சட்டவிரோத மல்லாதிருந்த சிறிது உலகபோகத்தை— சில அழகிய ஆடைகளும் ஆபரணங்களும் வேண்டுமென்று— விரும்பியக்கால், அன்னவர்கட்கு இன்னவையெல்லாம் தேவைப்படுமாயின், அவர்கள் அப்பால் அல்லா(ஹ்)வின் திருத்தூதர் வீட்டில் பிராட்டிமாரா யிருத்தற்குரிய உரிமையை இழந்து விடுவார்களென்று அறிவிக்கப் பெறுகிறார்கள். மாதரார்மாட்டு மயக்கங்கொண்டு சித்தவிகாரத்துள்ளே சிக்கியுழல்பவர் இத்தகைய நியாயமான வேட்கைக்குமா சிறிதும் இடங்கொடாது அத்துணைக் கடுமையான விடையையளித்து நிற்பர்? இதுதான், எம் பெருமானார் இருதயம் எத்துணைப் பரிசுத்தத்துடனே சித்தவிகாரக் காமாந்தகாரத்தை விட்டு மெத்த சுகத்துடனே மேன்மையுற்று மிளிர்ந்து நின்றதென்பதை நன்கு நிரூபித்துக் காட்டப் போது

மான திருஷ்டாந்தமா யிருந்து வருகின்றது. நபிகட்டிலகம்சல் தங்கள் பிராட்டிமாருக்குப் பொருத்தமற்றதென்று தீர்மானித்திருந்த ஒரு காரியத்திற்கு— அஃதாவது, இவ்வுலக சம்பந்தமாயுள்ள அழகிய ஆடையாபரணங்கள் தேவையென விரும்பிய ஒரு விஷயத்திற்கு— இணங்கிப் போவதைக் காட்டினும் தங்களுடைய எல்லா மனைவிமார்களையும் "தலாக்" குக் கொடுத்து விவாகவிமோசனம் செய்து, வீட்டிற்கனுப்பி விடுவதே சாலச் சிறந்ததென்று தீர்மானித்து விடுகிறார்கள். எனவே, எம் பெருமானார் செய்துகொண்ட திருமணங்க ளெல்லாம் கேவலம் சித்தவிகாரத்தினும் வேறாய காரணங்களுக்காகவே நிகழ்த்தப்பட்டன வென்று இது பொழுது நாம் திட்டமாய்த் தெரிந்துகொண்டு விட்டோம்.

---

## எப்பொழுது பலதாரங்கள் கொள்ளப்பட்டனர்

நாம் மீட்டு மொருமுறை, நபிகளுதர்சல் ஹி. 3 முதல் ஹி. 7-க்குள் உள்ள மிகச்சுருங்கிய கால அடைவாகிய ஐந்தாண்டுகட் குள்ளே பற்பல மனைவியரை மணந்து கொள்ளுதற்குரிய ஆவசியகம் நேரிட்ட காரணந்தான் என்ன வென்பதாய சரித்திரசம்பவத்தை ஊன்றிக் கவனிக்கக் கடவோம்: அதற்கு முன்னே சற்றேறக்குறைய முப்பதாண்டுகள் மட்டும் நம் மஹானுபாவர் தங்களினும் பதினைந்து வயது முதிர்ந்திருந்த ஒரு விதவையுடனே ஒன்றித்து ஏகபத்தினி விரதத்துடன் கூடியே உயிர்வாழ்ந்து வந்

திருக்கின்றார்கள். ஆனால், இவர்கள் பல பிராட்டிமாரைப் பாரியைகளாக வரித்துக்கொண்ட இந்த ஐந்தாண்டுகளும், முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதார்களுக்கும் இடையிலே தொடர்ச்சியான யுத்தங்கள் பல நிகழ்வுற்று வந்த அதேகால அடைவுடன்கூட ஒன்றித்துப் போய்க் காணப்படுகின்றன. அது பொழுதெல்லாம் முஸ்லிம் சகோதரகோஷ்டி மிகவும் சுருங்கிய வட்டமுள்ளதாயே குறுகிக் கிடந்தது. ஆகவே, அடிக்கடி நிகழ்வுற்றுவந்த அந்தயுத்தங்களால் ஆடவரின் தொகை சுருங்கியும் பெண்டிரின் (விதவைகளின்) தொகை விரிந்தும் வந்துகொண்டிருந்தன ;* அத்தகைய இடைவிடா யுத்தகளங்களில் ஆண்மக்கள் மடிய, அன்னாரின் விதவைகட்கு ஜீவனோபாய மார்க்கமொன்றைக் கண்டுபிடிக்கவேண்டுவது ஓர் அத்தியாவசியக் கடமையாய் வந்துமுடிந்து விட்டது. ஆனால், குறுகிய திருஷ்டியுள்ள ஒருசில ராஜீயவாதிகளால் தவறாக எண்ணப்பட்டு வருவதேபோல, இத்தகைய விதவைகட்கு வயிற்றுப்பசிப்பிணியைப் போக்க ஒரு வழியைக் கண்டுபிடிப்பது மட்டுமே போதிய சாதனமாக மாட்டாது. “ சதிபதிக் காதல் ” என்பதொன்று இயற்கையாகவே மனித சுபாவத்துடன் சேர்த்துச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது ; எனவே, இத்தன்மைத்

* 1 - 9 - 1939 முதல் ஹிட்லரால் ஆரம்பமாகி, 2-9-1945-ஆம் தேதியோடு ஜப்பானால் சரணாகதிப்பத்திரம் கையெழுத்திடப்பட்டவரை நடைபெற்ற சென்ற உலக மகாயுத்தத்தைப் பாருங்களேன்! எத்தனை ஆடவர் குறைவு ! எத்தனை பெண்டிர் மலிவு ! ஆண்பெண் ஒழுக்கக்கேட்டால் எத்தனை “ யுத்தக்குழந்தைகள் ” !— War babies.

தாய ஸ்திரீ - புருஷ பரஸ்பர இச்சையென்பதை அல க்ஷியஞ் செய்துவிடும் எத்தன்மைத்தாய ராஜ்யதந்திர நிபுணனும் மனித சமுதாயத்தை ஒழுக்கவீன மென்னப்படும் படுகுழியுள்ளே தான் கொண்டு போய்ச் சேர்த்து விடுவான்; இதனுல், காலக்கிரமத்தில் அத் தேசமக்கள் அனைவருமே தவற்றெழுக்கத்தின் பயனுய்த் தலைகீழாய் மாறிப்போய்த் தாறுமாருக அழிந்து போய் விடுவர். ஆயின், மக்களின் ஒழுக்கமே பிரதானமான அம்சமென்று சதா எண்ணிச் சீர்திருத்தம்செய்யத் துணிந்து நிற்கும் ஒரு சீர்திருத்தவாதி யென்பார் விதவைகளின் குக்ஷியுபாதியை—(வயிற்றுப் பசிப் பிணியை) நிவர்த்தி செய்தற்குரிய உண்டியைமட்டுமே பிரதானமா யெண்ண மாட்டார். எனவேதான், அன்னவருக்குவேண்டிய உண்டியையும் உடையையுங் காட்டில் அவர்கட் குரிய கற்புநிலையே மிகமிக முக்கியமான தென எம்பெருமானு ரவர்கள் எண்ணத் துணிந்து விட்டார்கள். என்னெனின், உடலினும் உள்ளமே ஒழுக்கப் பரிசுத்தத்தால் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டுமன்ருே? "ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம், இழிந்த பிறப்பாய் விடும்," என்ருர் குறளுக் குடையாரும். ஆதலினுற்ருன், பலதார மணமென்பது அனுமதியளிக்கப்பட வேண்டுவ தாயிற்று. இக் காரணத்தினுலேதான், இடைவிடாது யுத்தங்கள் பல நடைபெற்று வந்த அக்காலத்தில் எம்பிரான்[ஸல்] அவர்கள் அநேக விதவைகளை விவாகம் முடித்துக் கொள்ள வேண்டிய ஆவசியகமும் ஏற்பட்டுவிட்டது. ஹஜ்ரத் ஆயிஷா[ரலி] அவர்களையன்றி, ஏனைப் பிராட்

டிய ரெல்லாம் விதவைகளாகவே யிருந்துவந்தனர். ஆனால், காமாந்தகாரம் குடிகொண்ட சித்தவிகாரப் புருஷரது நாட்டம் அழகற்ற அமங்கலிகள் மீது வீழ்வது வழக்கமில்லை; மனைவிமார் மரிக்க மரிக்க நான்காவது ஐந்தாவது ஆறுவதுதாரம் கொள்வானும் கன்னிப்பெண்ணையே வேண்டுவது இவ்வுலகஇயற்கையாயிருந்து வருகிறது. அன்றியும், கன்னிப்பெண்கள் அதுகாலை அரப்நாட்டில் கிடைப்பதும் அரிதாய்ப் போய்விடவில்லை. மேலும், நபிபெருமானுடைய மாதுலராய்ச் சமைய எந்த முஸ்லிமும் அந்த நேரத்தில் அளவிறந்த ஆவல் மிக்கவராவே யிருந்திருப்பர்; என்னெனின், அஃதோர் எவரும் விழையதக்க உயரிய அந்தஸ்தாகவே யிருந்துவந்தது. ஆனால், நபிபெருமானரின் சல் நோக்கம் வேறொரு மேலான இலக்ஷியமாகவே— தங்கள் நண்பர்களுடைய விதவைகளைப் பராமரித்துப் பாதுகாப் பதாகவே— இருந்துவந்திருக்கிறது. அதுகாலை அம் முஸ்லிம்சமூகம் இருந்துவந்த நிலையில் பலதார மணமொன்றே அச் சமுதாயத்தின் பாதுகாப்பிற் குரிய ஒரு பத்திரமான மார்க்கமாய்க் காணப்பட்டு வந்தது.

மற்றும், வேறுசில ராஜதந்திரக் காரணங்களும் ஒருசில மணங்களுக்குரிய மூலகாரணமாய்க் காணப்படாநின்றன; பனீ முஸ்தலிக் வர்க்கத்தைச் சார்ந்த ஜுவைரிய்யா என்னும் பெண்ணை நபிகட் டிலகம் மணமுடித்துக் கொண்டது இத்தகைய காரணத்தினாலே யாகும்; இன்னம், ஒரு யூதத்தலைவனுடைய விதவையா யிருந்த ஸபிய்யாவை இவர்கள் மணந்து

கொண்டதும் இப்படிப்பட்ட காரணத்தினாலேதான். என்னெனின், நபிபெருமானா ரவர்கள் (சல்அம்) அவ்விரு வர்க்கத்தாருக்கும் சமரசத்தை யுண்டாக்கிச் சமாதானத்தை ஏற்படுத்த முயன்றார்கள். அந்நோக்கம் அவ்வாறே பலப்பிராப்தியை யளித்துவைத்த தென்னலாம்.

---

## ஜைனபின்ரலி திருமணம்

ஆனாலும், நபிபெருமானார்சல் பீபீ ஜைனபைரலி மணந்துகொண்ட விருத்தாந்தத்தை மட்டும் சிறிது விவரமாய் ஈண்டு விரித்தெழுத வேண்டியதா யிருக்கின்றது. என்னெனின், இவ்விவாகங் குறித்து எதிர் மதவாதிகள் ஒருசிலர் இல்லாத அபவாதங்களையெல்லாம் எழுதிப் பரத்தத் துணிந்து முன்வருகின்றனர். ஹஜ்ரத் ஜைனப்ரலி அவர்கள் நபிகள் நாயகத்தின் சொந்த அத்தையின் புத்திரியா யிருந்து வந்தார்கள். இவர்கள் பருவகாலத்தை யடைந்தபொழுது, இவர்களுடைய சகோதரர் இக் கன்னியரை நபிபெருமானுக்கே மணமுடித்து வைப்பதற்கு முயன்றுபார்த்தார். ஆனால், இஸ்லாத்தில் ஜாதிபேதமேனும் நிற வேறுபாடேனும் இல்லையென்பதை எண்பித்துக் காண்பிப்பான்வேண்டி, நபிகட்டிலகம் அந்த அத்தையின் புத்திரியை ஜைதென்னும் ஒரு விடுதலை யடைந்திருந்த அடிமைக்கு— நபிபெருமானாலே விடுதலை செய்யப்பட்டு, நபிநாயகமவர்கள்பால் அத்தியந்த அபிமானம் பூண்டிருந்த அந்த ஜைதுக்கு— மணமுடித்து வைத்

தார்கள். ஆயின், அவ்விருவரும் மனமொத்த மண வாழ்க்கை இனிதுற நடாத்த முடியாமற் போய்விட்டனர்; ஆகவே, சிறிதுகாலத்திற் குள்ளே ஜைதென்பார் தமது திருமணத்தை முடிவு செய்துகொள்ள விரும்பினர். ஆனால், குர்ஆன் ஷரீபில் மிகத் துலக்கமாய் விளக்கப்பட்டிருப்பதே போல (33: 36, 37) நபிகணாயகர்^ஸல் ஜைதை அவ்வாறுசெய்ய வேண்டாமென எவ்வளவோ வற்புறுத்திப் பார்த்தார்கள். எனினும், இறுதியிலே அவ்விவாகம் முறிவு செய்யப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

பொதுவாய், விவாகவிமோசனம் பெற்ற பெண்மணிகளெல்லாம் சாதாரண மக்களால் சிறிது இழிவாயே இத்தரணியில் கருதப்படுவது வழக்கம். இவ்விவாக விலக்கிலோ, ஒரு விடுதலைபெற்றுள்ள அடிமை ஓர் உயர்குல நங்கையைத் "தலாக்குக்" கொடுத்து விலக்கியுள்ளார். எனவே, இத்தகைய மங்கையை மணந்துகொள்வதால், தலாக் கென்னும் விவாகவிலக்குப் பெண்மணிகட்குச் சமுதாயத்தில் ஒருவிதக் கௌரவஹானியை யுண்டாக்கி விடுகிறதென்னும் அபவாதத்தை நீக்கியொழிக்க நாடினர்கள் நம்பெருமான்^ஸல் அவர்கள். ஜைனப்^ரலி முதன் முதலில் நபிபெருமானுக்கே மணமுடித்து வைக்கப்பட வேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டது; இப்பெருமானரே அவ் வத்தைமகளைத் தங்கள்பால் விடுதலை பெற்றிருந்த அடிமைக்கு மணமுடித்து வைத்தார்கள். ஆனாலும், அம் மணமானது "தலாக்" கிலே வந்து முடிவுற்றது. ஆதலினலே, அம்மங்கையை மறுபடியும் மணவாழ்க்

கையில் நிலைபெறுத்தி வைக்க வேண்டுவது நபிபெருமானாரது முக்கியக் கடமையா யிருந்து வந்தது; எனவேதான், எம்பிரான்ஸல் அவர்கள் தாங்களே அந்த விவாகவிலக்குப் பெற்றிருந்த ஜைனபை மறுமண முடித்து, தலாக்குப்பெறும் பெண்மணிகளின் அந்தஸ்தை உண்மையிலே உயர்த்திவிட்டார்கள்; இன்றேல், இன்றளவும் விவாக விமோசனம் பெறும் அத்தகைய இரங்கத்தக்க ஸ்திரீரத்னங்களின் கதி சமூக வாழ்க்கையில் ஓர் ஆயுள்முழுதுமே பரிதபிக்கத்தக்க பாழ்ங் கதியாகத்தான் போய்விட் டிருக்கும். இவ்வாறு ஜைனபைரலி மறுமண முடித்துக்கொண்டதில் ஏதேனும் சுயநயச் சித்தவிகாரம் சிறிதும் இருந்திருக்குமாயின், அல்லது அம்மங்கைமீது விகாரமோக மிருந்திருக்குமாயின், கன்னியா யிருந்தபொழுது அன்னவர் நம் பெருமானுக் கென்று வாக்குச் சொல்லப்பட்ட அன்றே விருப்பத்துடன் மணமுடித்துக் கொண் டிருப்பார்கள். ஆதியில் மணமாகா மங்கையா யிருந்தபொழுது வேண்டாமென்று மறுத்துக்கூறி, பின்னல் விவாக விமோசனம் பெற்றுச் சமூகத்தில் சிறிது அந்தஸ்துக் குறைவைப் பெற்றுக்கொண்ட பிறகு அவரையே மணந்துகொண்ட தொன்றே, இத் திருமணத்தால் எம்பெருமானருக்குச் சுயநலச் சித்தவிகார மென்பது ஒன்றும் இருந்திருக்கவில்லையென்னும் உண்மை உள்ளவாறே உணரக் கிடக்கின்றதன்றோ?

---

# நான்காவது பருவம்

நாம் இப்பொழுது நபிகள்நாயகத்தின்[சல்] இல்வாழ்க்கைக்குரிய நான்காவது பகுதிக்கு வருகின்றோம். ஹி. 8- இல் மக்கமாநகர் பிடிப்பட்டதுடன் உள்நாட்டுச் சண்டையென்பன ஒருவாறு முடிவடைந்து போய்விட்டன. அங்கங்கே சிறுசிறு கலகங்கள் நடைபெற்று வந்தாலும், அநேகமாய் அந்நாடு முழுவதுமே சமாதானம் நிலவிவர லாயிற்று; மக்களெல்லாரும் அமைதியுடனே வாழத் துவக்கினார்கள். எனவே, ஹி. 8 முதல் எம்பிரானின் நிர்யாணபரியந்தம் இவர்கள் எத்தகைய புதியமணமும் புரிந்துகொள்ள வில்லையென்பது அறியக்கிடக்கின்றது. இதனால் ஏற்படும் முடிபு யாது? இதுதான் அதுவா யிருந்துவருகிறது: இப் பெருமானார் யுத்தங்களில் சிக்கியுழன்ற அப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்திலேதான் பற்பல பிராட்டிமாரை மணந்து கொள்வா ராயினார்கள்; என்னெனின், அதுபொழுது ஆடவர் எண்ணிக்கை சுருங்கிப் பெண்டிரின் கணக்கு — விதவைகள் எண்ணிக்கை — பெருகி வரலாயின. அதுசமயம் ஓர் அளவுக்குள் ளாக்கப்பட்ட பலதார மணமென்பது (நான்குக்கு மேற்படாது) அனுமதி யளிக்கப்பெற்றிராவிடின், அநேக விதவைகள் அகமொன்றும் இல்லாமலும், ஆதரிக்க அகமுடையாரும் ஒருவரும் இல்லாமலும் வீணாய்ப்போய் வெறுமனே தெருவில் அலைய விடப்பட்டிருப்பர் என்பது ஒருதலை. நபிகள்திலகம்[சல்] தற்காப்பு யுத்தங்களில் இறங்க

நேரு முன்னே ஏகபத்தினியா ருடனேயே மன மொத்து மணவாழ்க்கை நாடாத்திவந்தார்கள் ; அவ் வாறே அத்தகைய யுத்தங்கள் நின்றுவிட்ட பின்பும் புதுமண மொன்றும் புரிந்துகொண்டார்க ளில்லே. இவ்விஷய மொன்றே நபி பெருமானது விவாக மனப்பான்மை எவ்வாறு இருந்துவந் திருக்கிற தென் பதைச் செவ்விதாய்ப் புலப்படச் செய்துவிட்ட தென் னலாம். இவர்கள் செய்துகொண்ட எல்லா இடைக் கால மணத்திலும் பொதிந்துகிடந்த இரகசியம், பெண்மணிகளின் கற்புநிலேக்குரிய உயரிய ஒழுக்கக் குன்று ஒன்றே யாகும். "ஒழுக்கம் விழுப்பம் தர லான் ஒழுக்கம், உயிரினும் ஓம்பப் படும்," என்ருர் திருவள்ளுவ ருரும். நபிகள் நாயகரது வாழ்க்கையில் ஒருவித நூதன இக்கட்டான நிலேமை ஏற்பட்டுவிட் டது: அஃதாவது, இவர்கள் உபதேசித்துவந்த மத போதத்துக்கும் ஒழுக்க போதனேக்கும் ஒற்றுமை யான முறையிலே பலதார மணம் புரிந்துகொள்ளா திருப்பதென்பது இயலாத காரியமாய்ப் போய்விட் டது என்பதுதா ருகும். எனவே, இத்தகைய பல தார மணம், நபி பெருமாருரது சித்த விகாரத்தை வெளிப்படுத்திக் காட்டியதைப் பார்க்கினும் இப்பெரு மாருருக்கு அவ் விதவையர்மாட் டுள்ள டக்ஷத்திரு லும் பச்சாத்தாபத்திருலுமே அந்த விவாகங்களெல் லாம் நிகழ்த்தப்பட்டன வென்னும் உண்மையினேயே உதஹரித்துக் காட்டுகின்றது.

பலதார மணம் சர்வ சாதாரணமாய் நடை பெற்றுவந்த ஒருநாட்டிலே அவதரித்திருந்தும், நபிக

ஞூதர் இயற்கையிலே அத்தன்மைத்தாய பலதார மணத்தை விரும்பினுர்களில்லே. இவர்கள் தங்கள் கௌமார, மத்திப பருவத்தினே 53-ஆம் பிராயமுடிய ஒரே மனேவியின்— அதிலும் ஒரு விதவையின்— ஒப்புவமை யற்ற அருமந்தக் கணவராயே இனிது வாழ்ந்து வருகிருர்கள்; இதனுல் ஒரு புருஷனும் ஒரே மனேவியும் ஒன்றித்து வாழ்வது தான் இயற்கையான இல்லறத்தின் சாதாரணச் சட்டமென்பதை இம் மஹானுபாவர் இவ்வுலகினர்க்கு எண்பித்துக் காட்டி யுள்ளார்கள். ஆனுல், சமுதாய வாழ்க்கையில் அசாதாரண நிலேமை யொன்று தோன்றி விட்டக்கால், இவர்கள் ஒரு வெறு வாய் வேதாந்தியே போல, தாங்கள் மேற்கொள்ள வேண்டிய கடமையினின்று சற்றும் வழுவுதற்கு மனந்துணிந்தன ரில்லே. பலதார மணம் அனுமதி யளிக்கப்பெருது போய்விடுமாயின், அப்பால் ஆரணங்குகளின் கற்புநிலேக்குப் பெரியதொரு பங்கம் வந்து விளேந்துவிடக் கூடுமென்பதைக் கண்கூடாய்க் கண்டுகொண்டு விட்டார்கள்; "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும், திண்மையுண் டாகப் பெறின்," என்ருர் திருவள்ளுவப் பெரியாரும். எனவே, அத் தன்மைத்தாய ஓர் உயரிய நோக்கத்தின் பொருட்டு, ஒரு தடுக்கமுடியாத சந்தர்ப்பத்திலே விளேந்துவிட்ட ஒரு விலக்குவிதி (புறனடை) யாயுள்ள நிலேக்காக எம்பெருமாஞர்சல் இத்தகைய பலதார மணத்தை யனுஷ்டிக்க அனுமதி யளித்துள்ளார்கள். இவ்வாருகத்தான் எம்பிரான்சல் அவர்கள், இயற்கையிலே யுத்தத்தின்மீது விருப்பமில்லா திருந்

தும், அவசியத்தி னிமித்தம் அந்த யுத்தங்களில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தத்தி னுள்ளே சிக்கிக் கொண்டு விட்டார்கள். நபிப்பட்டம் (நுபுவ்வத்) அருளப் பெரு முன்னே நபிபிரான்^சல் வாட்படைக ளெல்லாம் சர்வ சாதாரணச் சிலம்பக் கழிகளே போல வீசப்பட்டுவந்த ஒரு மாகொடிய துஷ்டர்கள் வாழும் பொல்லாத நாட்டிலே நாற்ப தாண்டுகள் வரை ஜீவித்துவந் திருக்கிருர்கள் ;— அவ்வரப் தேசத்தில் சண்டைகளும், சச்சரவுகளும் சாமான்னிய நித்தியப் பழக்கமாகவே நிலவிவந் திருக்கின்றன; சிறுசிறு அற்ப விஷயங்களுக்காக வெல்லாம் அம்மக்கள் ஒருவருயிரை யொருவர் வெகுதிரணமாய் மதித்து மாய்த்துவிடத் துணிவர் ; காட்டு மிருகங்களே போல ஒருவர் உதி ரத்தை யொருவர் சிறிதும் தயை தாக்ஷிண்யமின்றிச் சொரிந்து வருங்கால், எவருமே அத்தேயத்தில் வாட் படையின் துணையின்றி உயிர்வாழ்வ தென்பது ஒரு சிறிதும் சாலாது. அவ்வா றிருந்தும், நபிகள் நாயகம் மட்டும் அந்த 40 ஆண்டுகளிலும் ஒருமுறை கூட வாளையுருவி ஓர் எதிரியின் உயிரைப் போக்கியது கிடையாது. இவ்வா ருகத்தான் நுபுவ்வத் வந்து பதிமூன் காண்டுகள்வரை வாளின் மூஞ்சியிலே விழிக் காது எல்லாவிதக் கஷ்ட நிஷ்டூரங்களையும் பொறு மையுடனே இவர்கள் சகித்துக்கொண் டிருந்தார் கள். இம் மஹானுபாவர் இயற்கையிலே சமாதா னப் பிரியராகவே யிருந்துவந்தார்க ளென்பது, அத் தகைய சமாதானத்தைப் பற்றிக் குர்ஆன் ஷரீபில் மிகவும் விளக்கமாய்க் கூறப்பட்டுள்ள சட்டஙயி

லிருந்து ஸ்டஷ்டமாக வெளிப்படாநின்றது : "மேலும், அவர்கள் சமாதானத்தின் பக்கல் சாய்ந்துவிடுவார்களாயின், நீரும் அதன்பக்கலே சாய்ந்துவிடுவீராக ; மேலும், அல்லா(ஹ்)வின்மீது நம்பிக்கை வைக்கக் கடவீர் ;...... மேலும், அவர்கள் உம்மை ஏமாற்ற எண்ணுவார்களாயின், பிற்பாடு நிச்சயமாகவே உமக்கு அல்லா(ஹ்) போதுமானவனு யிருக்கிறுன். —(8 : 61, 62).

ஹுதைபிய்யா உடன்படிக்கையின் நிபந்தனைகள் முஸ்லிம்களுக்கு முற்றிலும் அவமானகரமாகவே அமைந்திருந்தும், அம்முஸ்லிம்களெல்லாரும் அந்தக் கேவல நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதைக் காட்டினும் தங்களுயிர்களை விட்டுவிடுவதே சாலச் சிறந்ததென்று துணிந்துநின்றும், அவ்வுடன்படிக்கையை நபிகளுயகர்சல் ஏற்றுக்கொள்ள முற்பட்டதொன்றே இப் பெருமானுர்க்குச் சமாதானத்தின் மீது எத்துணைப் பெரிய பற்றுண்டென்னும் உண்மை நிதரிசனமாய் வெளியாகின்றது. ஆனுலும், தங்களுடைய சிஷ்யர் குழாத்தினைத் தற்காத்து வைக்கும் ஆவசியகம் நேரிட்டுவிட்ட பொழுது, இப் பெருமானுர் எத்தனையோ மடங்கில் பல்கிப் பெருகிக்கிடந்த எதிரிகளுடனே போர் புரிவான் வேண்டித் தங்களுடைய உடைவாளை உருவச் சிறிதும் தயங்கினுர்களில்லை. எல்லா யுத்தகளங்களிலும் இவர்கள் கூர்த்தமதியுள்ள ஒரு சாதுரிய தளபதியாகவே நடந்துவந் திருக்கிறுர்கள் ; அவசியம் நேர்ந்துழி ஒரு தீரமிக்க போர்வீரராகவே ஆண்மையுடன் போர்புரிந் திருக்கிறுர்

கள். முஸ்லிம்களை அடியோடு முறியடித்தற்குரிய பலத்தையும் ஒற்றுமையையும் பெற்றுக்கொள்ளா முன்னரே தக்க தருணத்தில் அவ்வெதிரிகளைக் கலைத்து விரட்டுதற்குரிய சாமர்த்திய சமயோசித யுக்தி இம் மஹானுக்கு நிரம்ப உண்டு. உதாஹரணமாக, ஹுனைன் யுத்தகளத்தில் எதிரி வில்லாளிகள் எய்த பாணவர்ஷக் கொடுமையைச் சகிக்கவியலாது முஸ்லிம் படையினர் சிதறுண்டு சின்னு பின்னப்பட் டோடிய பொழுது, அவர்களெல்லாரும் மீட்டும் வந்து குழுமு மட்டும் நபிகணுயகர்சல் மட்டுமே தன்னந்தனியராய் எதிரிகளை நோக்கி முன்னேறிச் சென்றார்கள்.

இயற்கையிலே இம் மஹானுக்குப் போரிட விருப்பமில்லா திருந்தும், இவர்களை யுத்தகளங்களுக்கு ஈர்த்துச் செல்லுதற்குரிய அத்தியாவசிய சந்தர்ப்பங்கள் வலியவந்து முளைத்துவிட்டன; அப்பால் இப் பெருமானார் ஒருயரிய தளபதிக்குரிய புத்தி சாதுரியத்தையும், ஒரு தீரப் போர்வீரனுக் குரிய அஞ்சா நெஞ்சத்தையும் வெளிக்காட்ட லாயினார்கள். இவ் வண்ணமாயே இயற்கையிலே இவர்கட்குப் பலதார மணத்தில் விருப்பமில்லா திருந்தும்,— என்னெனின், இருபத்தைந்து பிராயம்வரை மஹா பரிசுத்தமுள்ள ஒரு சுத்தபிரமசாரியா யிருந்தும், அப்பால் ஐம்பதாவது பிராயம்முடியத் தம்மினும் பதினைந்து பிராயம் முதிர்ந்துள்ள ஒரு விதவையுடனே யொன்றித்தும் ஏகபத்தினி விரதத்துடன் இனியில்லாவண்ணம் இல்லற வாழ்க்கையை இனிதுற நடாத்திவந்திருக்கின்றார்கள் ;— பற்பல விதவைகளைத் தங்களுடைய

ஆதரவின் கீழே கொண்டு வந்து பாதுகாத்தற்கு வேண்டிய அவசியம் நேர்ந்துழி, இப் பெருமானுர் அந்தக் கடமையை ஏற்றுக்கொள்ளச் சற்றும் பின் வாங்கினுர்களில்லை. ஆனுல், இதன் சார்பாய் வேருெரு முக்கிய விஷயத்தையும் இவண் எடுத்துக் கூருது விடுக்க இயலவில்லை. என்னவெனின், பலதாரமணம் ஆண்டவனுல் அனுமதி யளிக்கப்பெற்ற பின்னர் அந்த எண்ணிக்கை நான்குக்கு மேலே போகக்கூடா தென்னும் நிபந்தனை யொன்றும் அவனுலே விதிக்கப்பட்டது. ஆகவே, இந் நிபந்தனை ஏற்படுமுன்பே எம் பெருமானுர்^சல் அத்தனை விதவைகளையும் மணந்து கொண்டார்களென்று சொல்லவேண்டிய திருக்கிறது; என்னெனின், இவர்கள் மணந்துகொண்ட எல்லா மனைவியரையும் தங்கள் ஆதரவின் கீழேயே வைத்து ரக்ஷித்துவர வேண்டுமென்னும் கட்டளை மிக விளக்கமாய் வெளியாக்கப் பட்டிருக்கின்றது—(குர். 33:50). இக்கட்டளை பிறந்தபின்பு எம்பெருமான் (சல்அம்) வேறு விதவையரை எப்பொழுதுமே மணந்து கொண்டார்களில்லை.—(33 : 52)

---

## நடக்கையும் ஒழுக்கமும்

இம் மஹானது இச்சரிதை மிகச்சுருக்கமாய் வரையப்பட் டிருந்தும், இவர்களுடைய நடக்கையைப்பற்றியும் ஒழுக்கத்தைப் பற்றியும் ஒருசிறிது கூருதவரை இந்நூல் பூர்த்தியடைந்து விட்டதாய் எண்ணப்பட மாட்டாது. இவர்களது இல்லறவாழ்க்

கையின் நல்லற உள்வயணங்கள் முழுமையையும் உற்றுணர்ந் தறிந்திருந்த ஹஜ்ரத் ஆயிஷா ரலி அவர்களையண்மி நாயகத்தின் குணாதிசயங்களைப் பற்றி விசாரித்த பொழுது, அப்பிராட்டியார், "கான குல்(க்) குஹுல் குர்ஆன் " (அவர்களுடைய குணாதிசயங்கள் குர்ஆன் ஷரீபே யாகும்) என்று சட்டென விடையளித்தார்கள். அஃதாவது, நபிபெருமான் சல் மாட்டுக் குர்ஆன் ஷரீபி லுள்ள எல்லா உயரிய நல்ல குணங்களும் சாலப் பொருந்தியிருந்தன என்பது தானாகும்.

எளிமையுடனும் உண்மையுடனும் எப்பொழுதும் ஒழுகிவருவதே, இப் பெருமானாருக் குரிய குணாதிசயங்களுக்கெல்லாம் ஒரு திறவுகோலா யமைந்திருக்கின்றது. எனவே, இவர்கள் எல்லாக் காரியங்களையும் தங்கரங்கொண்டே இயற்றி முடிப்பார்கள். இவர்கள் தங்கள் பிராட்டிமார்க்கு வீட்டுக்காரியங்களில் எல்லாவித ஊழியமும் புரிவார்கள். தங்கள் ஆடுகளின் பால் தாங்களே பால் கறப்பார்கள் ; தங்கள் ஆடைகளைத் தாங்களே தைத்து அப்புப் போட்டுக் கொள்வார்கள்; தங்கள் செருப்புக்களைத் தாங்களே பழுதுபார்த்துத் தைத்துக் கொள்வார்கள். தாங்களே தங்களில்லத்தைப் பெருக்கிச் சுத்தஞ்செய்வார்கள்; தாங்களே தங்கள் ஒட்டகங்களைக் கட்டித் தீனிபோட்டுச் சுயமே மற்றெல்லா மேற்பார்வைகளையும் கவனித்துக்கொள்வார்கள். எத்தகைய சிறுகாரியமும் இவர்கள் பார்வையில் அற்பமாய்ப் புலப்படுவதில்லை. மதீனாவின் மஸ்ஜிதைக் கட்டியபொழுதும், மதீனாவைச்சூழ ஒருமுறை ஓர் அகழி வெட்டியபொழுதும் நபிபெருமான் சல் ஒரு சர்வ

சாதாரண எளிய கூலியாளே போல எல்லாருடனும் கலந்து நின்று வேலைசெய்தார்கள். இவர்கள் சுயமே நேரிற்சென்று கடைச்சரக்குக்களை வாங்கிவருவார்கள்; தங்களுக்கு வேண்டிய பண்டங்களையன்றி, அண்டையயல் வீட்டுக்காரர்களுக்கும் அகதியாய்ப் போய்விட்ட அபலைப் பெண்மணிகளுக்கும் தேவைப்படும் சாமான்களையும் வாங்கிக்கொண்டு வந்து கொடுத் துதவுவார்கள். அல்லா(ஹ்)வின் அருள் ததும்பிய திருநபியாகவும், ஒப்பாருமிக்காரு மற்ற ஒருயரிய அரசராகவும் இலங்கி வந்த காலத்தும், எத்துணை யற்பக் காரியத்தையும் இம்மஹானுபாவர் அற்பமென்று உதாசினத்துடனே உதறித்தள்ளுவது கிடையாது. இவர்கள், துறவிகளுக் குள்ளெல்லாம் அரையராகவும் அரையர்களுக் குள்ளெல்லாம் துறவியாகவுமே (kingliest of saints and saintliest of kings) இருந்திருக்கிறார்கள். எனவே, ஒரு மனிதன் செய்துவரும் தொழிலைக் கொண்டே அவனது மேன்மையோ தாழ்மையோ உண்மையிலே உள்ளவாறு தீர்மானிக்கப்பட மாட்டாதென்னும் மெய்ம்மையினை எம்பெருமானாரவர்கள் தங்கள் சொந்த திருஷ்டாந்தத்தைக்கொண்டே நிரூபணம் செய்து காண்பித்து விட்டார்கள். சாலையில் வேலை செய்யும் கூலிக்காரன், காட்டில் விறகுவெட்டிப் பிழைக்கும் கோடாலிக்காரன், கிணறுகளிலிருந்து தண்ணீர் தூக்கி வயிறுபிழைக்கும் காவடிக்காரன் ஆதியவெல்லாரும் இஸ்லாத்தில் பெரும்பெரும் வர்த்தகர்கள் மிராஸ்தார்கள் பட்டதாரிகள் ஆகிய பெரிய மனிதர்களெனப்படுபவருடனெல்லாம் சரிசமான சம

அந்தஸ்தை வகித்தவர்களாகவே கருதப்பட்டு வரு கின்றார்கள். எனவே, இம் மார்க்கத்தில் அரசனும் ஆண்டியும் ஒன்றே! வெள்ளையரும் கறுப்பரும் ஒன்றே! மங்கோலிய மஞ்சள்நிற மக்களும் மற்று முள்ள கபிலவர்ண மக்களும் ஒன்றே!

எம்பெருமானின் நடக்கைகளும் செய்கைகளும் மிகமிக எளியனவாயே முற்றிலும் அமைந்துகிடந்தன. இவர்கள் வரும்பொழுது இவர்களுடைய சிஷ்யர்கள் மரியாதையின் பொருட்டு எழுந்துநிற்பது கூடாது; ஒருமுறை இவர்கள் அவர்களை நோக்கி, "அரபிகளல் லாத அறியாதமாக்கள் செய்வதேபோல நீங்கள் என் னைக்கண்டு எழுந்துநிற்க வேண்டாம்," என்று கட்டளை யிட்டார்கள்; இன்னம், ஏனையோர் உண்பதேபோ லுண்டும், ஏனையோர் உட்காருவதே போ லுட்காந் தும்வரும் அல்லா(ஹ்)வின் ஒரு தாழ்மையுள்ள சிருஷ் டியே தாங்களென்று கூறினார்கள். மற்றொருமுறை ஒருமனிதன் நபிகட் டிலகத்தின் கரத்தினை முத்தமிட முயன்றான்; அதுகாலை இவர்கள், அவ்வாறு முத்த மிடுவது அரபிகளல்லாத மக்கள் தங்கள் அரசர்கட்குச் செய்யும் ஒரு பழக்கமெனக் கூறி, தங்கள் கையை வெடுக்கென இழுத்துக்கொண்டார்கள். ஓர் அடிமை யால் விருந்துக் கழைக்கப்பட்டபோதினும், அதனை எம்பெருமான் ^சல்^ மனமுவந்து ஏற்றுக் கொள்வார்; எல்லாவித மக்களுடனும்— அடிமைகளுடனுங்கூட— அமர்ந்து சமபந்தி போஜனம் செய்வார்கள். பொது மக்களுடன் கலந்து குந்தியிருக்குங்கால், இப்பெருமா னாரை ஏனையோரை விட்டுப் பிரித்துக்காட்ட எவ்வித வேறுபாடும் செய்யப்படுவது வழக்கமில்லை.

நபி பெருமான் சல் தங்கள் நண்பர்கள் மாட்டு அத்தியந்த பிரியம் பாராட்டிவந்தார்கள். அன்னவர்களுடன் கைலாகுகொடுத்து 'முஸாபஹா' செய்யுங்கால், இவர்கள் தங்கரத்தினை ஒருபொழுதும் முதலில் இழுத்துக்கொள்ள மாட்டார்கள். இம்மஹான் எவரைக் கண்டாலும் புன்முறுவலுடனே தான் பூர்வ பாஷியாய்* முகமன் கூறுவார்கள். ஜரீர் இப்னு அப்துல்லா(ஹ்) நபி பெருமானை மந்தஹாஸமில்லாது வெறு வதனத்துடனே எப்பொழுதும் தாம் கண்டதில்லை யென்று கூறியதாயுள்ள விஷயமொன்று ஆதார கிரந்தங்களில் அகப்படுகின்றது. இப்பெருமானுர் சர்வசாதாரணமாகவே சம்பாஷிப்பார்கள்; தாங்கள் புத்தியாலோ தத்துவத்தாலோ உயர்ந்தவர்களென்னும் கருத்துப்பட ஒருபொழுதும் தங்கள்பால் ஒரு செயற்கையான 'தன் மதிப்பை' உண்டு பண்ணிக் கொள்ள மாட்டார்கள். இவர்கள் சின்னஞ்சிறு குழவிகளை மடிமீதேந்திப் போஷிப்பார்கள்; எவரும் புறங்கூறலை இம்மகான் விரும்பமாட்டார்கள்; எவரேனும் தங்கள் நண்பர்களைக் குறித்துக் கோள்மூட்டலையும் விழைய மாட்டார்கள். எதிரில்வரும் சகோதரரை முகமன்கூறி வரவேற்பதிலும், அன்னுருடனே கைலாகென்னும் முஸாபஹா கொடுப்பதிலும் நபிகளுயகரே எப்பொழுதும் முந்திக்கொள்வார்கள்.

'எதிரிகள்மாட்டும் தாராளப்புத்தி' யென்பது இவ்வுலக சரித்திரத்திலேயே எம்பெருமானுர்பாலே தான் இணையில்லா வண்ணம் அமைந்து கிடக்கின்

---

* பூர்வபாஷி-முதலில் பேசுபவர்.

றது. மதீனவி லிருந்துவந்த முஸ்லிம் நயவஞ்சகர் (முனபிக்கீன்) களின் தலைவனாய் விளங்கிவந்த அப்துல்லா ஹிப்னு உபை யென்பான் நபிகள் திலகத்தின் — இல்லை, இஸ்லாத்தின் — ஜன்ம சத்துருவாயே விளங்கிவந்தான். அவன் தன்னுடைய இரவுகளையும் பகல்களையும் அம் முஸ்லிம்கட்கு இன்னல் விளைப்பதிலேயே செலவு செய்துவந்தான். ஆனாலும், அன்னான் இறந்துபட்ட பொழுது, நபி பெருமானார் அவனது பாப மன்னிப்புக்காக அல்லா(ஹ்)வின்பால் அதிகம் குறையிரந்து மன்றாடினார்கள்; மேலும், தங்கள் மேலங்கியைக் கொடுத்து அந்தப் பிரேதத்தை நல்லடக்கம் செய்யச் சொன்னார்கள். நபிகள் நாயகத்தையும் இவர்களுடைய தோழர்களையும் சற்றேறக்குறைய நெடிய இருபத்தொரு வருட காலமட்டும் சதா துன்புறுத்தி மகாமௌட்டிய மிகுந்த இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் ஆளாக்கிவந்த அந்த மக்கத்து மறமாக்களாய குறைஷியரை யெல்லாம் இப்பெருமானார் தாராளமாய் மன்னித்துவிட்டதுடன் நில்லாது, அவர்க ளனைவரையும் சீ யென்றுகூடத் திட்டாது வாளா விட்டுவிட்டார்கள். என்னே எதிரிகள்மாட்டு இருந்த தயை! "அத்துணை நெடுங்கால மட்டும் இவரை வெறுத்தும் ஒதுக்கியும்வந்த ஓரின மக்களை முஹம்மத்[சல்] நடாத்திய பெருந்தகைமை எல்லாவித மெச்சுதல்கட்கும் உரியதா யமைந்து கிடக்கின்றது," என்று மூய்ர் துரையும் மொழிந்திருக்கின்றார். நிரபராதிகளாயுள்ள மக்களைக் கொன்று குருதிவெள்ளம் சொரிந்தும், உதவுவா ரற்றுக் கிடந்த ஆண்களையு

பெண்களையும் பிள்ளைகளையும் சிறிதும் கருணையென்பதே யில்லாது கஷ்டத்துடனே நடாத்தியும், நபி பெருமானைக் கொன்று முஸ்லிம்களையும் இத்தரணியி லில்லாது செய்துவிடத் தம்மாலியன்ற பகீரத பிரயத்தனங்களை யெல்லாம் செய்து கொண்டும் வந்திருந்த அந்த ஜன்ம சத்துருக்களாய குறைஷிக் குப்பார்களை யெல்லாம் நபிபெருமானார் பெருந்தன்மை யுடனே மன்னித்து விட்டதைப் போன்ற மற்றோர் உதாஹரணத்தை இப்பூவுலக சரித்திரத்தின் வேறெந்த ஏட்டிலும் நீங்கள் கண்டு கொள்ள மாட்டீர்கள் என்பது திண்ணமேயாம்.

யுத்தக்கைதிகள் அநேகமாய் எல்லாச் சமயங்களிலும் பரிக்கிரயம் வாங்கப்படாமலே விடுதலை செய்யப்பட்டுப் போயுள்ளார்கள். ஆயின், பத்ரின் யுத்தத்தின்போழ்து பிடிபட்ட கைதிகள்மாட் டிருந்து மட்டுமே பரிக்கிரயம் வேண்டப்பட்டது; அதற்கப்பால் அநேக நூற்றுக்கணக்கா யுள்ள யுத்தக்கைதிகள்—ஹவாஜின் வர்க்கத்தாருடன் நிகழ்த்தப்பட்ட யுத்தத்திலே அகப்பட்ட 6,000 கைதிகளுட்பட— ஒருபைசாவும் பரிக்கிரயம் வாங்கப்பெறாமலே விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். உஹுத் யுத்தகளத்தில் நபிபெருமான் ஸல் காயம்பட்டு ஒரு பள்ளத்துள்ளே வீழ்ந்துவிட்டபொழுது, ஒரு தோழர் நெருங்கிச் சென்று, எதிரிகளை எம்பிரானவர்கள் சபிக்க வேண்டுமென்று வேண்டுகிறார்; இதற்கு எம்பெருமானார், "நன்மையின் பக்கலும் கருணையின் பக்கலும் அழைக்கும் ஒருவனாகவே யல்லது, சபிக்கும் மனிதனாக நான்

அனுப்பப்பட வில்லை. ஏ ரக்ஷகா! என்னுடைய மக்களை நீ நேர்வழியிலே நடாத்தி வைப்பாய்; என்னெனின், அவர்கள் அறியாதவர்களா யிருக்கின்றார்கள்," என்று பதில் கூறுகின்றார்கள். ஒரு முறை ஒரு பத்துவானவன் வந்து, தனது அங்கவஸ்திரத்தை நபிகணாதர் கழுத்தைச் சுற்றிப் போட்டு முறுக்கியிழுத்தான்; இதற்கந்தக் காட்டரபியை ஏன் அவ்வாறே சிக்ஷிக்கக்கூடாதென்று வினவப் பட்டக்கால், எம்பெருமான்சல் தாங்கள் தீமைக்குத் தீமை திருப்பிச் செய்யும்பொருட்டு அனுப்பப்பட வில்லை யென்று சமாதான விடையளித்து விட்டார்கள்.

நியாயம் வழங்குவதில் நபிகட் டிலகம் மிகவும் நிஷ்பக்ஷபாதமான முறையிலேயே நடந்துகொண்டார்கள். அவர்கள் பார்வையில், நியாய முறைப்படி முஸ்லிம்களும் முஸ்லிம்க ளல்லாதாரும் நண்பரும் பகைவரும் ஓரேவிதமாகத்தான் காணப்பட்டு வந்தார்கள். நபிப்பட்டம் வழங்கப் பெறுதற்கு முன்னேயும் இவர்களுடைய பக்ஷபாதமற்ற நெறி, யோக்கியப் பொறுப்பு, சத்தியசீலம் ஆதிய வெல்லாம் அவ்வரபிகளுக் கெல்லாம் செவ்வனே அறியப் பட்டே கிடந்தன; எனவேதான், எல்லா மக்களும் இவர்கள்பாலே தங்களுடைய எல்லா வழக்குக்களையும் கொண்டு வந்து நியாயம் வேண்டுவர். மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றபின்னர் இம்மஹான் அரசாங்கத் தலைவரென அங்கீகரிக்கப்படா முன்னரே யூதர்களும் விக்கிரக ஆராதனைக்காரர்களும் தங்களுக்குள்ளே எழும் வியவகாரங்க ளனைத்தையும் இவர்கள் பாலே நியதிபெறு

வான் வேண்டிக் கொண்டு வருவார்கள். யூதர்கள் இஸ்லாத்தின்மீது இனியில்லா விரோதங்களை யெல்லாம் நிரம்பப் பெற்றுக்கொண் டிருந்தும், ஓரமயம் ஒரு யூதனுக்கும் ஒரு முஸ்லிமுக்கும் வழக்கேற்பட்டு, அது நபிகள்நாயகத்திடம் நியாயமுடிபிற்காகக் கொணரப்பட்டக்கால், இவர்கள் அந்த வழக்கை அம் முஸ்லிமுக்கு விரோதமாயே முடிவு செய்து தீர்ப்புங்கூறினர்கள் ;— இதனுல் அந்த முஸ்லிம்— இல்லை, அவரைச் சார்ந்த எல்லா இனத்தவரும்— நபிபெருமானுர்மீது வெறுப்பும் விரோதமும் கொண்டுவிடுதற்குரிய ஏது விருந்தும், அவ்வாறு அந்த யூதனுக்குச் சார்பாயே அத் தீர்ப்பைச் செய்துதீர்த்தார்கள். இம் மஹானுபாவர் தங்களுடைய ஜன்ம விரோதிகள்பால் வியவகாரம் நடத்தும்பொழுதும், குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டுள்ள அம்முக்கியக் கட்டளையையே எப்பொழுதும் மறவாது பின்பற்றி யொழுகுவார்கள் : "(சரியான) நீதிவழங்காதிருத்தற் குரிய முறையிலே ஓரினத்தவர் மீதுள்ள வெறுப்பு உங்களைத் தூண்டிவிடா திருக்கட்டும் ; நீங்கள் (சரியான) நீதியை வழங்குங்கள் ; அதுதான் பக்திக்கு அணித்தாயிருக்கின்றது"—(5 : 8). எனவே, எம்பிரான்[சல்] அவர்கள் தங்கள் மரணப்படுக்கையிலிருந்த பொழுது, நிர்யாண மடைதற்குச் சற்று முன்னே, "எவருக்கேனும் யான் ஏதும் கொடுக்க வேண்டி யிருந்தால், அவர் அதை இப்பொழுது திருப்பிக் கேட்கலாம் ; எவருக்கேனும் யான் ஏதும் துன்பமிழைத்திருந்தால், அவர் அதற்காக இப்பொழுது

திருப்பி வெஞ்சந் தீர்த்துக் கொள்ளலாம்," என்று பகிரங்கமாய்ப் பிரகடனப்படுத்தி வைத்தார்கள்.

ஏனையோருடன் 'லேவாதேவி'* செய்யப் புகுங்கால், எம்பெருமானார்^ஸல் தங்களுக்கென்று விசேஷ சலிகையொன்றையும் எதிர்பார்ப்பது வழக்கமில்லை. இவர்கள் மதீனாவில் அரசராய் வீற்றிருந்தபொழுது, ஒருநாள் இவர்கட்குக் கடன் கொடுத்திருந்த ஒரு யூதன் இன்னவர்கள்பால் பணம் வசூல்செய்ய வந்து, இப் பெருமானாரைக் கண்டபடி ஏசினான்; அது பொழுது ஹஜ்ரத் உமர்^ரலி அவர்கள் கோபாவேசங் கொண்டு, அவனைத் தாக்க முற்பட்டார்கள். அது கண்டு நபிகள் நாதர்^ஸல், "நீர் எங்க ளிருவருக்கும்—கடன்வாங்கிய எனக்கு நன்றியுடனே அக்கடனைத் திருப்பிக் கொடுத்துவிடுமாறும், கடன் கொடுத்த அவருக்கு அதனை இன்னம் சிறிது மரியாதையான முறையுடனே கேட்குமாறும்— அறிவுறுத்தி யிருப்பின், அஃது உமக்கு மிகப் பொருத்தமா யிருந்திருக்கும்," என்று கண்டித்துக் கூறினார்கள்; உடனே அந்த யூதனுக்குச் சேர வேண்டியதைவிட அதிகமான தொகை சிறிதும் சேர்த்துக் கொடுத்தனுப்பினார்கள். மற்றொரு முறை நபிகட்டிலகம் தங்கள் நண்பர்களுடன்கூடி வனத்துள் சென்றிருந்தபொழுது, சமையல் செய்யவேண்டிய வேளை வந்துற்றது. அதுகாலை ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையைச் செய்யத் துவக்கினார்; நபிகள் பெருமானாரோ, விறகு பொறுக்கும்

*கொடுக்கல், வாங்கல்— "லேன் தேன்."

வேலையை மேற்கொண்டு சென்றார்கள். இவர்கள் அம்மக்களுக்குப் பூலோக அரசராகவும் பாரமார்த்திகக் குருநாதராகவும் இருந்துவந்தும், தங்களுக்குரிய வேலையை மற்றெல்லா மனிதரையும் போலவே செய்து முடிப்பதில் சற்றும் தயங்குவது கிடையாது. இவர்கள் தங்கள் வேலையாட்களையும் சம அந்தஸ்துடனே தான் நடாத்திவருவார்கள். அனஸ்ரலி மதீனாவில் நபிபெருமானிடம் பத்துவருட காலமட்டும் சேவகம் புரிந்து வந்தும்,— அங்கிருந்த பொழுதுதான் இப்பெருமானார் அரப்நாடு முழுமைக்குமே அரசரா யுயர்ந்துவிட்டார்கள்— ஒருபொழுதுகூட ஒரு வசை மொழியேனும் கேட்டதில்லை யென்று கூறியிருக்கின்றார்கள். இம் மஹான் ஒருவரையும் ஒருபோதும் அடிமையாய் வைத்துக்கொண்டது கிடையாது. எவனேனும் இவர்கள்பால் அடிமையாய்க் கொண்டுவந்து விடப்பட்டால், அக்கணமே இவர்கள் அவனுக்கு விடுதலையளித்து விட்டுவிடுவார்கள்.

தர்மம் செய்வதில் நபிகள் நாயகம்ஸல் எவராலும் எட்ட முடியாத அத்துணை உச்ச ஸ்தானத்திலே உயர்ந்து நின்றார்கள். யாசகன் ஒருவன் பிச்சை கேட்டால், அவனை இவர்கள் வெறுமனே திருப்பியனுப்பமாட்டார்கள். தாங்கள் ஆகாரமின்றிப் பட்டினி கிடப்பதா யிருப்பினும், தங்களுணவைப் பசித்த முகம் பார்த்துப் பகிர்ந்து கொடுத்துவிட்டுச் சும்மா இருந்துவிடுவார்கள். தங்கள்வயத்தில் பணமொன்றையும் எப்பொழுதும் சேமித்து வைக்கமாட்டார்கள். இம் மஹானுபாவர் மரணத்தறுவாயில் இருந்தபொழுது,

தங்க ளில்லத்தில் இருந்துவந்த ஒரு சில துட்டுக்களை யும் தருவித்து, ஏழைகளுக்கு விநியோகம் செய்து தீர்த்துவிட்டார்கள். ஆண்டவனது சிருஷ்டியினமாகிய வாயில்லாப் பிராணிகள்பாலும் நபிகள் நாயகம் பெரிதும் இரக்கங்காட்டியே வந்தார்கள். ஒரு நாயின் நீர் வேட்கையைத் தணித்திடுவான் வேண்டிக் கிணற்றி லின்று தண்ணீர் மொண்டு கொடுத்த மனுஷியொருத்தி தனது கருணைக்காகச் சுவர்க்கத்தைப் பெற்றுக்கொண்டா ளென்று இப் பெருமான் ஒரு முறை செப்பி யிருக்கின்றார்கள்; மற்றொரு முறை, ஓர் இறந்து போய்விட்ட ஸ்திரீ நரக வேதனையால் துன்புற்று வருந்தியதாய்த் திருவாய் மலர்ந்தருளினார் கள்: ஏனென்றால், அம்மாது ஒரு பூனையைக் கட்டிப் போட்டுப் பசியால் வாடிவதங்கச் செய்திருந்தாள். நபி பெருமான்[ஸல்] தங்கள் பிள்ளைமைப் பருவத்தி லிருந்தே விதவைகள், அனாதைகள், ஏழை எளியோர் கள், உதவியற்றோர்கள் ஆகிய மக்கள்பா லெல்லாம் அத்தியந்த பக்ஷம் பாராட்டி வந்தார்கள். அநேகமாய் அடக்கியொடுக்கப்பட்டார் மாட்டுச் சகலவித உதவிக் காகவும் தையாராய்க் காத்துக்கொண்டு நிற்பார்கள். ஆண்களுக்கு விரோதமாய்ப் பெண்களுக்காகவும், எஜமானருக்கு விரோதமாய் அடிமைகளுக்காகவும், ஆள்வோருக்கு விரோதமாய் ஆளப்பட்டோருக்காக வும், அரசருக்கு விரோதமாய்க் குடிமக்களுக்காகவும் அன்னவர்களின் உரிமைகளுக்காக வாதுபுரியத் துணிந்து நிற்பார்கள். நீக்கிரோவ (ஹபஷீ) அடிமை கள் [குறைஷித் தலைவர்களேபோலச் சம அந்தஸ்தே

வழங்கப்பெற வேண்டுமென்று வாதித்து நிற்பார்கள். ஒடுக்கப்பட்டோரின், இன்னம் நசுக்கப்பட்டோரின் பிரதிநிதியாய் வந்து, நபிபெருமான்ஸல் உதவிபுரிய முன்னணியிலே நிற்பார்கள். மேலும் இப்பெருமானுர் குழந்தைகள்பால் அத்தியந்த பிரியம் பாராட்டி வருவார்கள்; எனவே, இவர்கள் வீதிவழியே நடந்துசெல்லுங்கால், எதிர்ப்படும் சிறுசிறு குழந்தைகளையெல்லாம் தட்டிக்கொடுத்து முத்தமிட்டுச் செல்வார்கள். ஒருபோழ்தும் தவருது பிணிவாய்ப் பட்டோரைப் போய்ப் பார்த்து, அன்னுர்க்கு உபசார வார்த்தை சொல்லி, யோக க்ஷேமமும் விசாரிப்பார்கள். இம் மஹான் எவரது பிரேத ஊர்வலத்துடனும் உடன் நடந்தே செல்வார்கள்.

மகா சாந்தகுணத்துடனும் பணிவுடனும் ஒழுகி வந்தும், நபிபெருமானுர்ஸல் மிகவுந் தீரபுருஷருக்குள்ள மட்டற்ற தைரியத்துடனேதான் நடந்துகொண்டார்கள். என்னெனின், எப்பொழுதுமே இப்பெருமான் எதிரிகளைக் கண்டு எள்ளத்துணையும் அச்சங்கொண்டது கிடையாது. மக்காவிலிருந்த மறமாக்கள் நபிபெருமானது உயிரைப் போக்கி விடுவதென்று சதியாலோசனைச் சூழ்ச்சிசெய்த பொழுதுங்கூட இவர்கள் அந்நகர வீதிகள்தோறும் அல்லும் பகலாய் அச்சஞ் சிறிதுமில்லாது அலைந்து திரிந்த வண்ணமேயிருப்பார்கள். அதுகாலைத் தாங்கள்மட்டுமே ஓரிரு சிஷ்யர்களுடனே மக்காவில் அந்தக் கடுங்கோபம் நிலைறந்துள்ள பகைவர் மத்தியிலே தனித்திருந்துகொண்டு, ஏனையவெல்லா முஸ்லிம்களையும் மதீனாவிற்குப் புறப்

பட்டுச் சென்றுவிடுமாறு கட்டளையிட்டு விட்டார்கள். ஹிஜ்ரத்தின்போது தௌர்க் குகையுள் தனித்திருந்தக்கால், அக்கொலைபாதகர்கள் அந்தக் குகையின் வாயில்வரை வந்துவிடுகிறார்கள்; அன்னாரின் காலடிச் சப்தமும் வெளியிலே கேட்கின்றது; எவனேனும் அக்குகையினுள்ளே எட்டிப்பார்த்தால், நபிகட்டிலகமும் ஹஜ்ரத் அபூபக்ருடனேரலி அகப்பட்டுக்கொள்வர்; ஆனாலும் அப்படிப்பட்ட நேரத்திலும் நம்பெருமானார் (சல்அம்), "ஆண்டவனும் நம்முடன்கூட இருக்கிறான்," என்று கூறித் தங்கள் பிரதம சிஷ்யருக்குத் தைரியமூட்டுகிறார்கள். என்ன இணையில்லாத் தைரியம்! என்ன இடையீடில்லாத் தெய்வ நம்பிக்கை!!

உஹதின் யுத்தகளத்தில் இவர்களுடைய சேனையனைத்தும் ஒருவகைப் பொறியுள்ளே சிக்கித்தவிக்க நேர்ந்தபொழுது, நபிபெருமானார்சல் தங்களுக்கு என்ன நேர்ந்தாலும் நேரட்டுமென்று சிறிதும் இலக்ஷியம் செய்யாமல், அங்குச் சூழ்ப்பிப்போய்க் கலைந்துநின்ற போர்வீரர்கள் எல்லாரையும் மீட்டும் வந்து ஒன்று சேருமாறு உரக்கக் கூவி யழைத்தார்கள். பின்பு ஹுனைன் யுத்தகளத்தில் முஸ்லிம் சைன்யமுழுதும் ஓட்டம்பிடித்துப் பின்னிடைந்து சென்ற வேளையில் நபிகணாயகர், "நானே அல்லா(ஹ்)வின் தூதன்," என்று கூவிக்கொண்டே, எதிரிகளை நோக்கித் தனியே முன்னேறிச் சென்றார்கள். ஒருநாளிரவில், எதிரிகள் மதீனாவின் மீது படையெடுத்துவந்து நுழைந்துவிடப்

போகிறார்க ளென்னும் வதந்தி பலமாயுலவத் தலைப் பட்டது. அப்பொழுது அந்நகரத்து எல்லைப்புறத்துக் குச் சென்று சோதனைசெய்து திரும்பிய முதல்மனிதர் நபிகள் நாயகமாகவேசல் காணப்பட்டார்கள்; அதுவும் ஒரு கல்லணை* இல்லாக் குதிரைமீ தூர்ந்து சவாரி செய்து வந்தார்கள். ஒருநாள் ஒரு பிரயாணத்தின் பொழுது நபி பெருமானார் தனியே ஒரு மரத்தின்கீழே அயர்ந்து கண்படைகொண் டிருந்தார்கள்; அது பொழுது எதிரியொருவன் வந்து வாளையுருவி, " இப் பொழுது உம்மை என்னுடைய கரத்தினின்று காப் பாற்றக் கூடியவன் எவனோ?" என்று உரக்கக் கூவிப் பயமுறுத் தாட்டினான். அதுகாலை நபிகட்டிலகம் (சல்அம்) சற்றும் சலனமடையாது அதிக அமைதி யுடனே, "அல்லா(ஹ்) ஒருவனே!" என்று விடை யிறுத்தார்கள். அக்கணமே அவ்வுடைவாள் அவனது கரத்தினின்று கீழே நழுவிற்று; உடனே நம்பெருமா னார் அவ்வாளைத் தங்கள் கரத்திற் பிடித்து, " இப் பொழுது உம்மை என்னுடைய கரத்திலின்று காப் பாற்றக் கூடியவன் எவனோ?" என்று எதிர்த்து வின வினார்கள்; இதற்கந்த எதிரி, "தாங்கள்தாம்!" என்று கூறிக் கெஞ்சினான். அப்பொழுது எம்பிரானவர்கள், 'எதிரிகள்மாட்டு இரக்கங்காட்ட என்னிடமிருந்து நீ கற்றுக்கொள்," என்று சொல்லி, அவனை வாளா அனுப்பிவிட்டார்கள்.

---

*கல்லணை— கலணை— ஜேணம்.

நபிகள் நாதர்சல் ஓர் இணையற்ற சத்தியசந்தராகவும் எப்பொழுதுமே வார்த்தை சுத்தமுள்ளவராகவும் இருந்துவந்தார்களென்பதை அக்கால அரப்நாடு முழுவதுமே ஏகோபித்து ஏற்றுக்கொண்டிருந்தது. இம்மஹான் எப்பொழுதுமே எத்தகைய பொய்ம் மொழியும் புகன்றதில்லையென்று இவர்களுடைய ஜன்மசத்துருவும் ஒத்துக்கொண்டேயிருக்கிறான். ஒருமுறை இவர்கள் தங்கள் வாட்படையை அடகு வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது; அப்பால் அதனை மீட்கவேண்டிய காலம் (கெடு) வந்துற்றபொழுது, இவர்கள் அக்குறித்த தவணையின் படியே அதிகமான சிரமத்துடனே பணமும் அதிகமாகவே கொடுத்து அந்தக் கட்கத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். ஹுதைபிய்யா உடன் படிக்கையில் காணப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் மக்காக் குறைஷியரின் வேதனையினின்றுந் தப்பியோடி மதீனா வந்துபுகும் முஸ்லிம்களை யெல்லாம் புகலிடமளிக்காமலே வெளிப்படுத்துவதென்பது ஒரு பரம சங்கடமான காரியமா யிருந்தும், எம்பெருமானார்சல் அவ்வாறே சற்றும் தயங்காது செய்து தீர்த்தார்கள். இம்மஹானுடைய இணையில்லா இடுக்கணழியாமை* யையும் சிறிதும் துளக்குறாத மனோதிடத்தையும் கண்டு இறும்பூதெய்தாத சரித்திராசிரியர் எவருமே இங்குக் காணப்பட வில்லை. இனி என்னசெய்வோமென்று ஏங்கி யொடுங்கிவிடும் நெஞ்சழிவும் ஈடழியுந்தன்மை

* துன்பகாலத்து மனங்கலங்காமை.

யும் இவர்கள் மாட்டுச் சற்றும் காணப்பட்ட தில்லை. நாலு திக்கிலும் காரிருளும் கடும்பகைவர்களின் கொடுங்கோன்மையுமே மிகவும் நெருங்கிச் சூழ்ந்து நின்றும், மஹான் முஹம்மத் நபிகளுநாயகரவர்கள் சல் மட்டும், இறுதியிலே சத்தியந்தான் வெற்றிபெறுமென் னும்* தத்துவத்தை ஒரு விநாடியும் விட்டுக்கொடாது மிகவும் கெட்டியாய்ப் பற்றிப்பிடித்த வண்ணமே அல்லும்பகலும் அனவரதமும் சதா சிந்தாகுலரா யிருந்துவந்தார்கள்.

அல்லா(ஹ்) ஜல்லஷானஹூ வதஆலாவே இம் மஹானுபாவருடைய ஆவிக்கு என்றென்றும் நல் லருள் பாலித்தருளக் கடவாஞக ! ஆமீன் ! ஆமீன் !!

* * *

"திட்டமாக, அல்லா(ஹ்)வையும் இறுதித் தீர்ப்பு நாளையும் நம்பி, அல்லா(ஹ்)வை அதிகம் ஞாப கப்படுத்திக் கொள்கிறவனுக்காக, அல்லா(ஹ்)வின் திருத்தூதரிடத்தே உங்களுக்கோர் உயரிய (அழகிய) முன்மாதிரி இருக்கின்றது." — (குர்ஆன் 33 : 21)

* * *

"அல்லாஹூத் தஆலாவுக்கு அதிக உவப்பான வர் யாவர் ? அவனுடைய சிருஷ்டிப் பொருள்கட்கு எவர்பாலிருந்து அதிகமான நன்மை யுண்டாகின் றதோ, அவரே அப்படிப்பட்ட உவப்பான மனிதரா யிருக்கின்றார்." — (நபி பெருமான் திருவாக்கு)

---

*" சத்தியமேவ ஜயதி" என்பதே இவர்களது மஹாவாக்யம்.

# அஹ்மத்<sup>ஸல்</sup> நபியைப்பற்றி அன்னிய ரநேகர் அறைவன

நபிமார்கட் கெல்லாம் நாயகமாய் விளங்கும் அஹ்மத்முஜ்தபா முஹம்மத் முஸ்தபா ரஸூல்ஸல் அவர்கள் பொது மக்களை ஏமாற்றவந்த ஒரு வெளிவேஷக்காரரென்று அயல்மதவாதிகள் ஒருசிலர் அறைந்து வருவது மெய்தானு வென்று ஈண்டுச் சிறிதே யாம் துருவிப்பார்க்கக் கடவோம்: அப் பெருமானுர் தங்களை ஒரு நபியென்று கூறிக்கொண்டது முழுவதும் வெறு மனப்பிரேமைதானு? அன்னுர் தங்களுக்கு ஆண்டவன்பாலிருந்து வஹீயென்னும் வேதஞான வெளிப்பாடு வானவர் ஜிப்ரீல்அலை மூலமாய் வந்துகொண்டிருந்ததென்பதும் வெறு மனோராஜ்ஜியம் தானு? இதனைக் குறித்துத் தாமஸ் கார்லைல் என்னும் ஆங்கில மேதாவி யாது கூறியுள்ளாரென்று இதன்கீழ்ச் சிறிதே கூர்ந்து நோக்கக்கடவோம் :—

"முஹம்மதைக்ஸல் குறித்து, அவரொரு மந்திரக்கார மாய வேஷதாரி யென்றும், அசத்தியமே உருவாய்த் திரண்டுருண்டு வந்த தீய அவதாரமூர்த்தி யென்றும், அவரது மார்க்கமுழுதும் போலித்தனத்தாலும் சித்தபிரேமையாலும் ஒன்றுசேர்க்கப்பட்ட ஒரு வெறுங் கதம்பமென்றும் கூறிக்கொண்டிருக்கும் நம்முடைய தற்போதைய சித்தாந்தமானது மெய்யாகவே இதுபொழுது எவருக்கும் பொருத்தமற்றதாகவே காணப்படாநின்றது. அம்மனிதரைச்சுற்றி (நமது) நல்லெண்ணம் குடிகொண்ட குதூகலத்தால் குவிக்கப்பட்டுக் கிடக்கும் பொய்க்கூற்றுக்களனைத்தும் நமக்கே

அவமானத்தை விளக்கக் கூடியனவா யிருக்கின்றன. முஹம்மதின்^ஸல் செவியினின்று பட்டாணிக் கடலை களைக் கொத்தி யெடுக்குமாறு பழக்கப்பட்டிருந்த புருவே அவருக்கு வேதோபதேசம் செய்யவந்த வானவரென்று கருதப்பட்டு வந்ததென்று கூறப்பட்டு வரும் கதைக்குவேண்டிய சாக்ஷியம் யாங்குள தென்று குரோட்டியஸை நோக்கிப் போக்காக் வினவி னர்; குரோட்டியஸ் அதற்குச் சாக்ஷியம் யாண்டுமில்லை யென்று கூறிவிட்டார்! அத்தகைய கதையையெல் லாம் உதறித் தள்ளுதற்குரிய அமயம் உண்மையிலே இதுபொழுது உதயமாய்விட்டது. அம்மனிதர் கூறிய விஷயம் இப்பன்னிரு நூற்றாண்டுகளாகவே பதி னெண்கோடி* மக்களுக்கு இன்றும் ஜீவவாழ்க்கைக் குரிய வழிகாட்டியாய் இருந்துவருகின்றது. இந்தப் பதினெண்கோடி மக்களும் நம்மைப்போலவே ஆண் டவனால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளார்கள். இதுபொழுது வேறெந்த விதமான வார்த்தையைக் காட்டினும் முஹம்மதின்^ஸல் வார்த்தையையே ஆண்டவனுடைய அதிகமான அடியார்கள் நம்பிவருகிறார்கள். இஃது— எல்லாம் வல்லவனின் எத்தனையோ சிருஷ்டிகளெல் லாம் வாழ்ந்து மரித்துவந்த இஃது — ஒரு தௌர்ப் பாக்கிய -ஆன்மஜால வித்தையா யிருந்ததென்று நாம் எண்ணிக்கொள்ள வேண்டுமோ? என்னைப் பொறுத்தமட்டில் யான் அத்தகைய கற்பனையை ஏற் றுக்கொள்ளச் சித்தமாயில்லை. இதனைப் பார்க்கினும்

---

* இப்பொழுது இவ்வுலக முஸ்லிம்களின் மொத்தத்தொகை 60 கோடி யென்னப்படுகிறது.

வேறு எண்ணிறந்த விஷயங்களை யான் சடிதியில் நம்பி விடுவேன். போலித்தன (பொய்வேஷ) மென்பது அவ்வாறு வளர்ந்து ஈண்டு அங்கீகரிக்கப்படக் கூடுமாயின், இவ்வுலகினைக் குறித்துத்தான் என்ன சொல்வதென்று ஒன்றுமே புலப்படாது ஒருவன் முழுதும் திகைப்படைந்து நிற்பான்.

“அந்தோ! அத்தகைய (பொய்யான) சித்தாந்தங்களெல்லாம் மிகமிக வியசனிக்கத் தக்கனவாகவே காணப்படா நின்றன. ஆண்டவனது மெய்யான சிருஷ்டி தத்துவத்தில் ஏதேனும் ஒருசிறிது ஞானத்தை நாம் அடைய விரும்புவோமாயின், அவற்றினை (அந்த நபியின் சார்பாய்க் கூறப்பட்டு வரும் பொய்க் கதைகளை) அடியோடு நம்பாதிருக்கக் கடவோம்! அவையனைத்தும் ‘சந்தேகாஸ்பதத்திற் குரிய காலத்தின்’ விளைபொருளா யிருக்கின்றன; அவை மகாதுக்ககரமான ஆன்ம பாரிசவாதத்தையும், அம்மக்களின் ஆத்மாவின் நடைப்பிணமான தன்மையையுமே குறித்துக் காட்டுகின்றன; (அவற்றைப் பார்க்கினும்) மகாமோசமான சித்தாந்தம் இத் தரணியின்கண் ஒருபோதும் பிரகடனப் படுத்தப்பட்டதே யில்லையென்று தான் யான் எண்ணுகின்றேன். ஒரு பொய்ம்மனிதன் ஒரு மதத்தை ஸ்தாபிப்பதா? ஏன்! ஒரு பொய்ம் மனிதன் ஒரு செங்கல் வீட்டை நிர்மாணிப்பதே முடியாதே! சாந்து, செங்கல், இன்னம் என்னென்ன வஸ்துக்களை உபயோகிக்கின்றானோ, அவையெல்லாவற்றின் குணகுணங்க ளனைத்தையும் நன்குணர்ந்து, அவற்றின்படி அவன் மெய்யாகவே நடவாமற் போய்

விடுவானுயின், அவன் கட்டுவது ஒரு வீடாய் முடிய மாட்டாது; ஆனால், அஃதொரு குப்பைமேடாகவே காணப்படும். பதினெண் கோடி மக்களைத் தன்னுள்ளிருத்தக்கூடிய முறையிலே பன்னிரு நூற்றாண்டுகளாக அது நிலைநிற்காது; நேரே அது கீழே இடிந்து வீழ்ந்துவிடும். ஒரு மனிதன் ‘இயற்கை’யின் சட்ட திட்டங்களுக்குத் தன்னைக் கட்டுப்படுத்தியே யாதல் வேண்டும்; அவ் ‘வியற்கை’யுடனும், விஷயாதிகளின் சத்தியத்துடனும் மெய்யாகவே லயித்துப் போதல் வேண்டும்; இன்றேல், ‘இயற்கை’ யென்பது அவனை நோக்கி, ‘ இல்லை! ஒரு போதுமில்லை !’ என்றே விடை கொடுத்துவிடும். போலித்தனங்களெல்லாம் போலித் தனங்களாகவே யிருக்கும். ஆ என்னே ! ஒரு காக்ளியாஸ்ட்ரோ, பல காக்ளியாஸ்ட்ரோக்கள் போன்ற* பிரசித்தி பெற்ற உலகத் தலைவர்கள் தங்கள் போலித்தனத்தால் ஒருநாளே தழைத்தோங்கி நிற்கலாம். அஃதொரு தப்புக் கையெழுத் திடப்பட்ட ‘ பாங்க் நோட்’டாகும்; அவர்கள் தங்கள் பிரயோஜனமற்ற கரத்தினைவிட்டு (அந்த நோட்டை) வெளியிலே செல்லச் செய்துவிடுகிறார்கள்; பிறகு அவர்களல்ல, ஆனால் மற்றவர்களே அதன் பொருட்டு வேதனைப்படவேண்டியதாய் (நிர்ப்பந்தம்) ஏற்பட்டு விடுகிறது. பிரெஞ்ச்சு ராஜப்புரட்சிக் கலகங்களும், அவை போன்ற வேறு பல கிளர்ச்சிகளும், தப்புக் கையெழுத்

* சமீபத்தில் காபூலில் மன்னனைப் கிளம்பிய “ பச்சாயி சாக்குப் ” போன்றவர்கள்.

திடப்பட்ட 'நோட்டுக்கள்' தப்புக் கையெழுத்திடப் பட்டனவே யென்று மகாஉத்வேகத்துடனே முழங்கிக்கொண் டிருக்குமாறு 'இயற்கை' யென்பது அக்கினி ஜுவாலைவிட்டெரிய ஆரம்பிக்கின்றது.

"ஆனால், ஒரு பெரிய மஹானைப்பற்றி யென்றாலோ, அன்னவர் சத்தியத்தினின்று வேறுபட்டிருத்தல் கூடுமென்று நம்புவது அறவே முடியாதென்றே அவரைக் குறித்து யான் வற்புறுத்திக் கூறத்துணிவேன்........

"ஆகவே, இந்த முஹம்மத்சல் வெறும் சூன்ய வித்தை(க்காரர்) என்றேனும், போலி வேஷதாரி யென்றேனும், வேண்டுமென்றே பேரவாவுடன வேலை பார்த்துவந்த தந்திரக்கார ரென்றேனும் நாம் ஒரு போதும் கருதமாட்டோம்; நாம் அவரை அவ்வாறு கருதத் துணியோம்........அம் மனிதருடைய வார்த்தைகள் அசத்திய மொழிகளல்ல; இத்தரணியில் அன்னவர் இழைத்துவந்த காரியங்களும் அசத்தியச் செயல்களல்ல; 'சூன்ய' மல்ல; வெறும் 'வேஷ' மல்ல; 'இயற்கை'யின் சொந்தப் பெரிய அகடுக்குள்ளிருந்தே வெளியாக்கப்பட்ட அக்கினிவேகந் தாங்கிய ஓர் 'ஆன்மா'வின் திரண்ட உருண்டையாகும். இவ்வுலகினையே உத்வேசத்தால் கிளப்பி விடுதற்கு இவ்வுலக சிருஷ்டி கர்த்தாவே அதனை அவ்வாறு ஆக்ஞாபித்திருந்தான்."

—தாமஸ் கார்லைல்.

* * * *

நபிகள் திலகம்^ஸல் அயோக்கியத் தனமாகவும் (நஊதுபில்லாஹ்) அசத்தியத் தனமாகவும் வெளி வேஷம் பூண்ட மக்கள்க ளனைவரையும் ஏமாற்றத்துக் குள்ளாக்கி வந்தார்களென்று எதிர்மதவாதிகள் கூறி வருவதை யெல்லாம் நாம் கூர்ந்து நோக்குவோமாயின், அவ்வாறு அம்மஹானுபாவர் பொய்ந்நடிப்பு நடித்து வந்திருப்பின், அதனால் அன்னவருக்கென்ன புண்ணியம் விளைந்திருத்தல் கூடுமென்னும் தத்துவத்தை உட் புகுந்து ஆராயவே உள்ளம் பெரிதும் உந்துகின்றது. ஐசுவரிய அவாவினலா அப்பெரியார் அவ்வாறு நடித்து வந்தாரென் றெண்ணுகின்றீர்கள்? இல்லை! கதீஜா பிராட்டியாருடன் விவாகபந்தம் ஏற்பட்டதிலிருந்தே அப் பெருமானர் ஒரு பெருந்தனிகராக உயர்ந்து விட்டார்கள். அவர் தமக்கு "வஹீ வருகிறதென்று வேஷம்போட" ஆரம்பித்ததற்கு முன்னே பல வருடங்களாகவே அன்னர் தமது ஐசுவரியத்தைப் பெருக்கிக்கொள்ளச் சிறிதும் ஆர்வங்கொண்டு அலைந் தன ரில்லை. ஆனல், கௌரவம் பெறும்பொருட்டா அவ்வாறு செய்துவந்தார்கள்? இல்லை! என்னெனின், இதற்கு முன்னரே அப்பரிசுத்த ஆன்மா ஞானத்திலும் நீதத்திலும் அம் மக்கமாநகர் முழுதும் இணையற்றுப் பொலிந்து "அல் அமீன்" என்னும் எவருக்கும் கிட்டாத இனிய பட்டத்தையும் பெற்று விளங்கினர். அந்த அரபுநாடு முழுவதும் உயர்ந்து விளங்கிய குறைஷி வர்க்கத்தின் காண்முளையாய்த் தோன்றி, நன்னெறியிலும் மிதவாழ்க்கையிலும் அதிகம் புகழ் பெற்று மிளிர்ந்தார்கள். இல்லை! அதிகாரப் பிரிய

மென்று கருதுகின்றீர்கள்? கஃபத்துல்லாவின் மேற்பார்வை முழுதும், அதனால் ஏற்படக்கூடிய அந்நகரத் தலைமைப்பதவியே அக் குறைஷி வம்சத்திலே தான் பற்பல தலைமுறைகளாகவே இருந்துவந்தது; எனவே, எம்பிரான்ஸல் இத்தகைய கௌரவமிக்க தலைமைப் பதவியை மிகமிக எளிதிலே அடைந்திருத்தல் கூடும்.

ஆனால், நபிபெருமான்ஸல் தங்களூரில் அதற்கு முன்னே வழக்கத்தி லிருந்துவந்த அப் புராதன விக்கிரஹ வணக்கத்தைத் தாக்கத் துணிந்ததன் காரணத்தால் மேற்கூறிய எல்லாவிதமான இலாபங்களையும் இல்லாது இழந்துவிட வேண்டிய அத்தியாவசிய முழுதும் ஆண்டே முளைக்கத் தலைப்பட்டு விட்டது. அப் பண்டை மதத்தின் மௌட்டியத்தினாலேதான் பொதுவாக அம்மக்காவாசிகளனைவர்க்கும், சிறப்பாகக் குறைஷிக ளெல்லார்க்கும் சகலவிதமான கௌரவங்களும் உண்டாய்க்கொண் டிருந்தனவென்பது நுங்களனைவர்க்கும் நன்கு தெரியக் கிடக்கின்றது. ஆகவே, அதனைத் தகர்க்கத் துணிவதால் குறைஷிகளின் குரோதம் ஒருபக்கல் முளைக்க, மக்காவாசிகளனைவரின் மனஸ்தாபமும் மற்றொருபக்கல் அதிகம் தழைத்தோங்க ஆரம்பித்ததோடு நில்லாது, அந்தக் கஃபாவின்மீதும் அங்குள்ள விக்கிரஹங்களின் மீதும் நிரம்பிய நம்பிக்கை வைத்துள்ள அவ்வரப் நாட்டு மக்கள்க ளெல்லாருமே நபிபிரான்ஸல் அவர்கள் மீது அளவிறந்த வெறுப்புக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். எனவே, இத்தகைய இன்னல்களையெல்லாம் எதிர்த்துக்கொண்டு எம்பிரான்ஸல் அவர்கள்

தாங்களொரு நபியென்று பொய்வேடம் புனைதற்கு என்ன வித அத்தியாவசியம் ஏற்பட்டு விட்டதென் றெண்ணுகின்றீர்கள்? ஆனால், அப் பெருமானருக்குக் கிடைத்த நுபுவ்வத்துத்தான் மேற்கூறப்பட் டுள்ள எல்லாவிதமான நன்மைகளைப் பார்க்கினும் அதிகமான ஆதாயத்தை இவ்வுலகின்கண் ஆரம்பத்தில் கொடுத் துக்கொண் டிருந்ததா? இல்லை! அதுவு மில்லை!! நுபுவ்வத் வந்தவுடன் நபிகளுயகத்துக்கே ஆரம்பத் தில் சந்தேகம் ஜனித்துவிட்டது; ஆதலின், அப் பெருமானார் ஆரம்ப காலத்தில் அதிக இரகசிய மாகவே தங்கள் பிரசாரத்தைச் செய்துவந்தார்கள். அதன் பயனாகப் பல ஆண்டுகள் மட்டும் போதிய வெற்றி அவர்களுடைய இஷாஅத்துல் இஸ்லாம் ஊழி யத்திற்குக் கிடைத்திலது. எத்துணைக் கெத்துணை எம்பிரான்ஸல் தங்களுடைய வஹீயென்னும் வேத ஞானத்தை மிகவதிகம் வெளிப்படுத்தத் துணிந்தார் களோ, அத்துணைக் கத்துணை அவ்வேழை முஸ் லிம்க ளனைவராலும் இளியில்லா வண்ணம் எள்ளி நகையாடப்பட்டுப் பற்பலவிதமான இன்னல்களுக் கும் இடையூறுகளுக்கும், துன்பங்களுக்கும் துயரங் களுக்கும் ஆளாக்கப் பட்டதோ டமையாது, எம் பிரான்ஸல் அவர்களது உயிருக்குங் கூட உலைவைத்து விட அம்மக்காவின் மறமாக்கள் பெரிதும் துணிந்து விட்டார்கள். இதனால் எம்பெருமானின் இகலோகச் செல்வாக்கனைத்தும் அதுசமயம் அஸ்தமித்து விட் டதே போல் காணப்பட்டு ஹஜ்ரத் அபூபக்ர்ரலி உது மான்ரலி போன்ற செல்வர்களுங்கூடத் தங்கள் செல்

வாக்குமுழுதும் அடியோடு இழக்கப்பெற்று வெறு மையான அடிமைகளே போலத்தாம் அதிகமாக அவ மதிக்கப்பட்டு வந்தார்கள். எனவேதான், ஆரம்ப காலத்தில் பலமுஸ்லிம்கள் அன்னியக்கிறிஸ்தவர்நாடா கிய ஹபஷா (அபிஸ்ஸீனியா)வுக்குள் சென்று புக லிடம் தேடிக்கொண்டார்கள்; ஆண்டும் அக் குறை ஷியர் அம் முஸ்லிம்களைத் துரத்திக்கொண்டே சென் ருர்கள். பிறகு, பன்னிருவருடப் பிரசாரத்தின் பய ஞகவும் தக்கமுடிபு விளையாதது கண்டு, இறுதியாக எம்பிரான்^ஸல் அவர்கள் தங்களுயிர் காப்பான் வேண் டிக் கரந்துறைந்து, சுமார் 325 மைலுக்கு வடக்கி லுள்ள மற்ருேர் அன்னியர்நகர் புக்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்ளுகிருர்கள். புதிதாகத் தங்களுடைய அதிருஷ்டத்தை மீட்டு மொருமுறை சிருஷ்டிசெய்து கொள்ளுதற் கியலாத 40-ஆவது பிராயத்திற்கு மேலே ஏன் அப் பெருமானுர்^ஸல் தங்களுக்கு முன்னமே யிருந்துவந்த எல்லாவிதமான இகலோக பாக்கியங்க ளனைத்தையும் அடியோடு உதறித்தள்ளி யெறிந்து விட்டுப் பன்னிரண்டு ஆண்டுகள்மட்டும் அப் பாமர விடர் படர் நடர் போன்ற மூடர்களுட னெல்லாம் அதிகம் இடறுபடை யடைந்து மல்லாடித் திரிதல் வேண்டும்?—(இவை வாஷிங்ட்டன் இர்விங்குடைய சில ஆராய்ச்சிகள்)

* * * *

"ஆ இல்லை! அக் கொடும் 'பாலைவனத்தின்' ஆழிய மனப்பான்மையுள்ள 'குமாரர்' தமக்குரிய தேஜஸுடன் கூடிய நேத்திரங்களுடனும், திறந்த

சௌஜன்ய ஆழிய ஆன்மாவுடனும் பேராசை யென்பதைப் பார்க்கினும் வேறான எண்ணங்களையே வகித்திருந்தார். ஒரு மோனவிரதம் பூண்ட பெரிய மனிதர்! உண்மையாகவே யல்லது, வேறுவிதத்தில் நடக்க முடியாத மனிதர்களுள் அவ ரொருவர். அன்னாரை 'இயற்கை' யென்பதே உண்மையா யிருக்குமாறு நியமித் திருக்கின்றது. மற்றையோர் கர்ணபரம்பரையான ஐதிகங்களைக் கொண்டும் நியதிகளைக் கொண்டும், அவற்றினுள்ளே வாழ்தலையே திருப்தியெனக் கண்டு, உயிர்வாழ்க்கை புரிந்துவருங்கால், அம்மனிதரொருவரே அவ்வைதிக நியதிகளுள்ளே ஒளிந்துகொள்ளப் பிரியமில்லாதவரா யிருந்துவந்தார்; அவர் தம்முடைய ஆன்மாவைக் கொண்டும், விஷயாதிகளின் மெய்ம்மையைக் கொண்டும் தன்னந்தனியே நிற்கின்றார். நான் முன் சொன்னவாறே, அந்தப் பெரிய 'ஜீவியத்தின் மர்மம்' தனக்குரிய பயங்கரத்துடனும் ஜோதியுடனும் அன்னவர்மீது தன் பிரகாசத்தை வீசிக்கொண்டிருந்தது; 'இதோ நானிருக்கின்றேன்!' என்னும் மறுத்துரைக்க முடியாத விஷயத்தைக் கர்ண பரம்பரையான ஐதிகங்களால் மறைத்துவிடல் முடியாது. நாம் பெயர்கூறிய வண்ணம் அத்தகைய மெய்ம்மை யென்பது ஒவ்வோர் உண்மையிலும் ஏதோசிறிது தெய்விகத்தைப் பெற்றேயிருக்கின்றது. அத்தகையமனிதரது வார்த்தை 'இயற்கை' யின்சொந்த 'ஹிருதயத்தி'னின்றுநேராகவரும் 'தொனி' யாகவே யிருக்கிறது. மனிதர்கள் அதற்கே, மற்றெதற்கு மன்று, செவிசாய்க்கின்றனர்; செவிசாய்த்தல்

வேண்டும் ;—ஏனையவெல்லாம், ஒப்பிடப்பட்டு நோக்கப்படுங்கால், வெறுங் காற்றேயாகும். ஆதிமுதற்கொண்டே அவருடைய சஞ்சாரங்களிலும் அலைச்சல்களிலும் ஓராயிரம் எண்ணங்கள் அன்னவர்பால் இருந்துவந் திருக்கின்றன : நான் யார்? மனிதர்கள் 'பிரபஞ்சம்' என்று பெயரிட்டழைக்கும் யான் வசித்துவரும் இந்த ஆழமறிய முடியாத இவ்'வஸ்து' யாதா யிருக்கின்றது? 'உயிர்த்திருக்கை' என்பது யாது? 'மரணமடைவ' தென்பது யாது? யான் எதை நம்புதல் வேண்டும்? யான் எதைச் செய்தல் வேண்டும்? ஹிரா மலையின் ஸீனுய்மலையின் பயங்கரமான கற்பாறைகள், பாலைவனத்தின் கொடிய தனியிடங்கள் யாதும் விடைகொடுத்தில. தலைக்குமேலே மௌனத்துடனே உருண்டுகொண்டு கிடக்கும் அப்பெரிய 'வானமும்' தனக்குரிய நீலவர்ணக் கிரணம்வீசும் நக்ஷத்திரங்களுடன் விடை கொடுக்கவில்லை. எங்குமே விடை கிடைத்திற் றிலது. அம்மனிதரது சொந்த ஆத்மாவே, ஆண்டு வதிந்துவந்த ஆண்டவனது 'தேவ ஞான ஜோதி'யின் உதயத்தைக் கொண்டே விடை கொடுக்க வேண்டிய திருந்தது!"

—தாமஸ் கார்லைல்.

* * * *

அத்தகைய நபிகள் திலகம் முஹம்மத் முஸ்தபா ரஸூல்[ஸல்] அவர்களால் அவ்வாறு நிலைநிறுத்தப்பட்ட இச்சத்திய சன்மார்க்கம் மன்பதைக்கு யாது நன்மை புரிந்துள தென்று உசாவப் புகுமிடத்து, ஸர் வில்லியம் மூய்ர் துரையே இவ்வாறு இறும்பூதெய்தி இயம்பியிருக்கின்றார் :

" அபூத்தாலிப் குறைஷிகாளால் இழைக்கப்படும் துன்பங்களைச் சகிக்க மாட்டாதவராய் முஹம்மதிடம் அவருடைய உண்மையார்த்தப் பிரசாரத்தைச் செய்ய வேண்டா மென்று வேண்டிக் கொண்டார். ஆனால், அன்னவர், 'நான் சொல்வதை மறுப்பவர்கள், என் வலக்கரத்தில் சூரியனையும், இடக்கரத்தில் சந்திரனையும் கொணர்ந்து வைத்து, என்னுடைய உண்மையான பிரசாரத்தைப் பண்ணவேண்டா மென்று சொன்னாலும், யான் இதனை விட்டுவிடப் போவதில்லை. யான் இதில் வெற்றியடைவேன்; அல்லது இவ் விஷயத்திலேயே மரணமடைவேன்...' என்று கூறினர். ஒரு தீவேபோல் காணப்படும் அராபிய பாலைவனத்தில் மல்கிக் கிடந்த எத்தனையோ துர்க்கிருத்தியங்களை யெல்லாம், இனி எப்பொழுதுமே அரேபியாவின்பால் தலைகாட்ட முடியாதவாறு இஸ்லாம் செய்துவிட்டது என்பதை யாம் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளுகிறோம். இஸ்லாத்தின் " அல்லாஹு அக்பர் " என்னும் பேரொலியானது விக்ரஹ ஆராதனையே ஆங்கில்லாமற் செய்துவிட்டது. ஏகதெய்வப் பிரச்சினையும், அவனுடைய சம்பூரண குணவிசேஷங்களுமே முஹம்மதைப் பின்பற்றிய உம்மத்தானவர்களின் சரீரத்தினுள்ளே ஊறிப்போய்விட்டன. இஃது எத்துணைத்தூரம் உறுதியா யிருந்ததென்றால், இந்தப் பிரச்சினையை இவர்களே தாம் சொந்தமாக உண்டுபண்ணியதே போல் தென்பட்டது. இவ்வாறுதான் இஸ்லாமும் போதித்துக்கொண் டிருக்கிறது. இந்த இஸ்லாத்தை ஏற்றுக்கொள்பவர்கள்

முதன்முதலாய் ஆண்டவன்மீது பூரணநம்பிக்கையும் பிரியமும் பக்தியும் கொள்ளல் வேண்டும். சமூகாசார நல்ல நடவடிக்கைகளும் இன்னாரிடம் குறைவாய்க் காணப்படவில்லை. எல்லா மூமின்களும் சகோதரர்ளே என்னும் வார்த்தையே அன்னருள் ஒவ்வொருவரின் மனத்திலும் பதியும்படி செய்யப்படுகின்றது. இதில் அகதிகளை ஆதரிக்க வேண்டுமென ஆக்ஞை விடுக்கப் படுகிறது. அடிமைகளா யிருப்பவருடன் நல்லவிதமாய் நடக்க வேண்டு மென்றும், தீமைகளின் சமீபத்திலும் நெருங்கவே கூடா தென்றும் இஸ்லாம் போதித்துக்கொண் டிருக்கிறது."

ஸர் வில்லியம் மூய்ர்.

* * *

"முஹம்மதின் சல் குணாதிசயங்களைக் குறித்து முடிவு செய்தற்கு வேண்டிய இறுதியம்சம் யாதெனின், 'பொது மக்களின் சுகவாழ்க்கையில் அவரது செல்வாக்கு நன்மையைச் செய்திருக்கின்றதா? அல்லது தீமையைச் செய்திருச்கின்றதா?' என்று ஆராய்ச்சி செய்து பார்ப்பதே யாகும். அவருடைய கிறிஸ்தவ அல்லது யூதமத மாகொடிய, அல்லது மகா மதமூர்க்க முள்ள பகைவர்கள், தங்களுடைய சொந்தக் கொள்கையைப் பார்க்கினும் அடுத்த படியிலேயே வைத்தற்குரிய அத்துணைப் பரிபூரணமான அனுகூல முள்ள கொள்கையினைப் போதிக்கவே அவர் ஒரு பொய்ச்செய்தியைக் கூற முன்வந்தன ரென்று நிச்சயமாக ஒத்துக்கொண்டு விடுவார்கள். அவர்களுடைய முற்காலத்திய வஹீக்களின் மெய்ம்மையும் தூய்மை

யும், அவற்றின் ஸ்தாபகர்களின் நல்லொழுக்கமும் அற்புத சக்தியுமே அவர் (நபிபெருமான்) தம்முடைய மதத்தின் அஸ்திபாரமென்று அதிக பக்திசிரத்தையுடன் நம்பியிருந்தார். அந்த ஏகபராபரனது ஆலயனத்தின் முன்னே ஆங்கிருந்துவந்த விக்ரஹங்களனைத்தும் தகர்க்கப்பட்டொழிந்தன; மனிதப்பிராணிகளின் உதிரம் சிந்திவந்ததனைத்தும், பக்திமார்க்கத்தின் புகழத்தக்க, அல்லது பிழையற்ற வணக்கங்களென்னப்படும் தொழுகையைக் கொண்டும், நோன்பைக் கொண்டும், தான தர்மங்களைக் கொண்டும் பிராயச்சித்தம் செய்து வைக்கப்பட்டன; இன்னம், அன்னவர் கூறிவந்த மறுவுலக வாழ்க்கையின் சம்மானங்களும் தண்டனைகளும் ஓர் அறியாத் தனம் குடிகொண்டவரும் விரகதாபம் பூண்டிருந்தவருமாகிய பரம்பரையாருக்கு மகா பொருத்தமுள்ள வருணனைகளாகவே காணப்படாநின்றன. ஒருகால் முஹம்மத் ஸல் தம்முடைய தேசமக்களின் உபயோகத்துக்கென்றே (மட்டும்) ஓர் ஒழுக்க முறையினையும் தேசீய முறையினையும் கற்றுக் கொடுக்க முடியாதவரா யிருந்துவந்தார்; ஆனால், அம் முஸ்லிம்களுக்குள் தாராளத் தன்மையையும் நேசப் பான்மையையும் (அதிகம்) நுழைத்து வைத்தார்; சமூகாசார சத்தொழுக்கங்களை நடை முறையில் அனுஷ்டித்து வருமாறும் ஆணையிட்டுவைத்தார்; இன்னம், அன்னவருடைய சட்டதிட்டங்களைக் கொண்டும் சன்மார்க்க நன்னடக்கையைக் கொண்டும் பழிவாங்கும் தாகத்தினையும், விதவைகளையும் அநாதக் குழந்தைகளையும் ஹிம்சிக்கும் துர்க்குணத்தினையும் அடக்கி வைத்

தார். விரோதப் பான்மையி லிருந்துவந்த வர்க்கத்தினரெல்லாம் இஸ்லாத்தில் ஒன்று சேர்க்கப்பட்டுப் பணிவுடனே நடந்துவருமாறு திருத்தி யமைக்கப் பட்டனர்.''

—கிப்பன் துரை.

* * *

“மூஸா[அலை] தம்முடைய தேசமக்களான யூதர்களிடம் புதுப்பித்ததே போலத்தான், முஹம்மதின்[சல்] லக்ஷியமும் தம்முடைய தேசமக்களாய அரபிகளிடம் அவர்களுடைய பொதுவான பிதாமகராகிய இப்ராஹீமின்[அலை] பரிசுத்தமான சன்மார்க்கத்தைப் புதுப்பிப்பதாகவே யிருந்துவந்தது. இதில் அவர் மிகமிக அதிகமான வெற்றியையே யடைந்து விட்டார். குழம்பிக்கிடந்த விக்கிரஹ மூடக்கொள்கைகளின் குவியலின் ஸ்தானத்தில் அன்னவர் ஒரு பரிசுத்தமான ஏக இறைவன் கொள்கையினையே நிலைநிறுத்தி வைத்தார்; தம்முடைய தேசமக்களிடம் காணப்பட்டுவந்த சில மா கொடிய துராசாரங்களைக் களைந்தெறிந்தார்; மற்றுஞ் சிலவற்றை மாற்றியமைத்தார். ஒழுக்கத்தின் அந்தஸ்தை அவர் பொதுப்படையாகவே உயர்த்திவைத்தார்; பொதுமக்களின் சமூகப்பழக்கத்தை முன்னேறுமாறு செய்துவைத்தார்; வணக்கத்தில் நிதானபுத்திக்கும் பகுத்தறிவுக்கும் ஒத்தவையான சடங்குகளையே நுழைத்து வைத்தார். இறுதியாக அவர் (தம்முடைய) இத்தகைய முறையாலெல்லாம் ஆகாயத்தில் மிதந்துகொண்டு கிடந்த பரமாணுக்களே போன்ற ஏதேச்சா பிரியர்களாய் அலைந்து திரிந்து

கொண்டிருந்த காட்டுமிருண்டிகளாய் விளங்கிவந்த அனந்த பிரிவுகளையெல்லாம் ஒருவகைக் கட்டுப் பாடுள்ள தேசீயவாதிகளாய்ப் பிணைத்து, பனீ இஸ் ராயீல்கள் எப்பொழுதும் கன்ஆன் (கானுன்) பிர தேசத்தைக் கைப்பற்றிக் கொள்ளுவான் வேண்டிப் பிரயத்தனம் செய்துவந்ததே போல், இவ்வுலகத்தின் ராஜ்யங்களனைத்தையும் தங்களுடைய ஆட்சியின் கீழும் தங்களுடைய மதத்தின் கீழும் அடக்கிக் கொணரு மாறு எப்பொழுதும் ஆயத்தமா யிருக்குமாறும் ஆவலுட னிருக்குமாறும் தையார்செய்து வைத்துவிட் டார்.''

—ரெவரெண்டு ஸ்டீபன்ஸ்.

* * * *

''அயலவர்கட்கும் அநாதக் குழந்தைகட்கும் அன்பு காட்டுவது குறித்தும், இஸ்லாத்தில் சேர்க்கப்பட்ட தன் பின்னர் அடிமைகளை முஸ்லிம்கள் மாட்டுக் காண்பிக்கப்படும் மேதையுடனும் மரியாதையுட னுமே நடாத்துவது குறித்தும் குர்ஆனும் திருப்பித் திருப்பியும் மிக்வும் அழுத்தமான பாஷையைக் கொண்டும் ஆணையிட்டுக்கொண்டே யிருக்கின்றது. மனிதரல்லாத மற்றைப் பிராணிகளிடத்துப் பக்ஷம் பாராட்ட வேண்டிய கடமையும் மறக்கப்படவில்லை; இன்னம், முஹம்மதிய மதமும் புத்தமதமும் பைத்தி யக்காரர்களுக்காகவும் நோயாளிகளுக்காகவும் பைத்தி யாலயங்களும் வைத்தியசாலைகளும் ஏற்படுத்தும் கௌரவத்தில் கிறிஸ்து மதத்துடன் பங்கெடுத்துக் கொண்டிருப்பது வந்தனத்துடன் ஒப்புக்கொள்ளப் பட வேண்டியதாகவே இருந்துவருகிறது.''

—மேற்படியாரே.

* * * *

"முஹம்மதின்ஸல் காலத்தில் அரப்நாட்டில் அதிகம் காணப்பட்டுவந்த ஒழுங்கீனங்களும், குர்ஆன் வேதத்தால் மிகக் கடுமையாகக் கண்டிக்கப்பட்டு அடியோடு தடுக்கப்பட்ட குறைபாடுகளும், மதுபானம், கணக்கற்ற வியபிசாரம். பலதாரமணம், பெண் சிசுக்களை ஹதம்செய்தல், எல்லையில்லாது சூதாடுதல், அளவுக்குமீறி அதிகமான வட்டிவாங்குதல், குறிபார்த்தல், ஜோஸியங்கேட்டல் போன்ற காரியங்களில் மூடநம்பிக்கை வைத்திருத்தல் ஆகியவைகளேயாம். இத்தகைய கொடிய பழக்கங்களுள் சிலவற்றை ஒழித்துவிட்டதும், மற்றையவற்றை மிதப்படுத்தியதும் அராபியரின் ஒழுக்கத்தை அதிகம் அபிவிருத்தி செய்ததேயாகும்; இதுவே, அந்தச் சீர்திருத்தக்காரரின் உற்சாகத்தையும் செல்வாக்கையும் ருஜூப்பித்தற்குரிய ஆச்சரியகரமானதும், கண்ணியம் வாய்ந்ததுமான சாக்ஷியமாய்க் காணப்படாநின்றது. பெண்சிசுக்களை ஹதம் செய்யாவண்ணம் அடியோடு தடுத்துவிட்டதும், மதுபானத்தையும் அவ்வாறே ஒழித்துவிட்டதுமே அவருடைய ஊழியத்தின் மகா பிரசித்திபெற்ற வெற்றிகளாய் நின்றிலங்குகின்றன.

"முதன் முதலாக, முஹம்மத்ஸல் தம்முடைய சொந்த ஜனங்களுக்கே ஒரு மஹா பெரிய பேருபகாரியாய் விளங்கி வந்தாரென்பது சர்வதாராளமாக ஒத்துக்கொள்ளப்படல் வேண்டும். தேசீயக்கட்டுப்பாடென்பதும், பகுத்தறிவுக்கொத்த மார்க்கமென்பதும், பரிசுத்தமான நல்லொழுக்கங்களென்பனவும் அறியப்படாதிருந்த அத்தகைய அந்தகார தேயத்தின்

கண்ணே அவர் தோன்றலாயினர். ஆகவே, அம் மூன்றையும் ஆங்குப் புகுத்தினர். அவர் ஒருவரே மஹாமேதாவித் தனத்தைக் கொண்டே ஒரே மூச்சில் தந்தேயத்தினருடைய ராஜீய வாழ்க்கையையும், மதக் கொள்கையினையும், ஒழுக்க நடக்கைகளையும் ஏககாலத்தில் சீர்திருத்தம் செய்துவிட்டார். அநேகம் எதேச்சையான உட்பிரிவினர் மல்கிக்கிடந்த அத் தேசத்தில் அன்னவர் ஒரே ஜாதியையே நிலைநிறுத்திச் சென்றார்; அநேகங் கடவுளரிடத்தும் அநேகந் தலைவரிடத்தும் பராட்டப்பட்டுவந்த ஒருவகை மூடக் கொள்கை இருந்துவந்த இடத்தில் அவர் எல்லாம் வல்ல ஒரே தெய்வத்தினிடத்தே, ஆயினும், அருள்மயமான ஆண்டவனிடத்தே நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரே பகுத்தறிவுக்கொத்த மார்க்கத்தை ஏற்படுத்தி வைத்தார்; அத்தகைய கடவுளின் மேற்பார்வைக்குரிய கருணையின் கீழே எப்பொழுதும் வாழ்ந்துவருமாறும், அவனையே சம்மானத்துக்குரிய எஜமானனென்று கருதிவருமாறும், அவனே தீயோர்களைத் தண்டிக்கக் கூடியவனென்று அஞ்சிக் கொள்ளுமாறும் மனிதர்களுக்குக் கற்பித்துக் கொடுத்தார். அவருடைய காலம்வரை அரப்நாட்டில் தழைத்தோங்கி வந்த அநேகவிதமான அசப்பியமுள்ள அருவருக்கத் தக்க துராசாரங்களை யெல்லாம் அவர் மிகக் கடுமையாகத் தாக்கி ஒடுக்கி அடக்கிவைத்தார். கண்மூடித் தனமாக ஆங்கு நடைபெற்றுவந்த வியபிசார வாழ்க்கையின் ஸ்தானத்தில் சர்வஜாக்கிரதையுடன் ஒழுங்கு படுத்தப்பட்ட நான்குதார மணத்தை நிலைநிற்கச் செய்

தார்; இன்னம் பெண்சிசுக்களை உயிருடன் புதைப்ப தென்னும் கொடியவழக்கம் அறவே ஒழிக்கப்பட்டுப் போய்விட்டது.

"இஸ்லாம் மார்க்கம் சிறுகச் சிறுகத் தன்னுடைய ஜயபேரிகையை அந்த அரப்நாட்டின் எல்லைகளுக்கப் பால் முழக்கத் தொடங்கியபோது, அதனால் ஸ்வீகரிக் கப்பட்ட எண்ணிறந்த பாமர ஜாதியார்களெல்லாரும் அவ்வண்ணமாகவே அதன் நற்பிரயோஜனங்களில் பங் கெடுத்துக்கொண்டு வந்தார்கள். துருக்கியர், இந்தியர், நீகிரோவர், மூர்ஜாதியார் ஆகியோர் தங்களுடையவிக்ர ஹங்களை வெறுத்துத் தள்ளவும், தங்களுடைய வரை துறையற்ற சடங்குகளையும் சாங்கியங்களையும் ஒழித் துத் தள்ளவும், ஒரே கடவுளின் வணக்கத்தின் பக்கலே நோக்கி நிற்கவும், கண்ணியமான அனுஷ்டானங் களுடன் ஒழுங்கான உயிர்வாழ்க்கையை நடாத்தி வர வும் கட்டாயப் படுத்தப்பட்டார்கள். அதற்குமுன்னே அதிக ஞானவிகாசம் பெற்றிருந்த பாரசீகர்களின் மத நம்பிக்கையும் பரிசுத்தமாக்கப்பட்டது: நன்மையும் தீமையும் இரண்டு சரிசமானமுள்ள சக்திகளல்ல வென்றும், ஆனால், நியாயமும் அநியாயமும் ஆகாயத் திலும் பூமியிலும் காணப்படும் எல்லா விஷயங்களை யும் ஆட்டிவைக்கின்ற சர்வஞ்ஞனாகிய ஒரே பரிசுத்த அரசனது ஆதிக்யத்தின் கீழேதான் ஒன்றாகக் காணப் படுகின்றன வென்றும் அவன் (அப்பாரசீகன்) அறிந்து கொண்டான்.

" அக்காலத்தி லிருந்துவந்த பாமர ஜாதியார் களுக்கு, குறிப்பாக முஹம்மதின் சல் காலத்தில் அந்த

அரப்தேசத்து மக்களேபோன்று சற்றேறக்குறைய அதேநிலைமையில் இருந்து வந்த ஜாதியார்களுக்கு— இற்றைநாளிலும் சிறிதளவு நாகரிகத்துடன், அல்லது அதுவுமில்லாத அநாகரிகத்துடன் பகுத்தறிவுக்கொத்த மதமொன்றில்லாது ஆபிரிக்காவிலிருப்பதேபோன்று வாழ்ந்துவரும் ஜாதியார்களுக்கு — நிச்சயமாகவே இஸ்லாம் மார்க்கம் ஓர் ஆசீர்வாதமாகவும், அந்தகாரத்தினின்று ஒளியின் பக்கலும், ஷைத்தானுடைய அதிகாரத்தினின்று ஆண்டவனது ஆதிக்கத்தின்பக்கலும் திரும்புதற்குரிய நற்சகுனமாகவும் காணப்படுகின்றது."

—மேற்படியாரே.

*          *          *          *

இனியொரு கிறிஸ்தவ ஆசிரியர் இவ்வாறு எழுதியிருக்கின்றார் :—"மற்றொருபுறத்து, மூடநம்பிக்கைகளை உதறித்தள்ளத் தையாராயிருப்பவர்களுக்கு முஹம்மதிய மதம் ஒரு நேர்த்தியான பகுத்தறிவுக்கொத்த மார்க்கத்தைக் காண்பிக்கின்றது. இயற்கையான உலகத்தில் காணப்படும் ஒரேவிதமான சட்டத்தின் ஆட்சியே ஆண்டவது ஒருமைத்தன்மையில்— சர்வவல்லமையுள்ள ஒரேதெய்வத்தின் தன்மையில் — பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றது. அந்தப் பெரிய மகாதெய்வத்திற்குரிய குணாதிசயத்தின் உயரிய தன்மையானது, மனிதவர்க்கத்தின் அபிவிருத்திக்கும் ஆதுரத்திற்கும் ஏற்றவாறு சிருஷ்டிக்கப்படுகின்ற தெய்வத்திற்குரிய— உருவங்களும் படங்களும் மட்டுமேதா மல்ல—எல்லா விதமான வணக்கவகைகளும்,

வாத்தியகோஷங்களும் மற்றெல்லா விதமான புரோ கிதத் தனங்களுங்கூட அடியோடு அழிக்கப்பட்டு விடு தலினால் அங்கீகரிக்கப்பட்டு நிற்கின்றது. இஸ்லாத் தில்மிக எளிதான மூலத்திலிருந்தே எழுப்பப்படுகின்ற ஓர் எளிய பகுத்தறிவிற்கொத்த வணக்கமேயல்லது, வேறொன்றும் காணப்படுவதில்லை; உயிர்வாழ்க்கை யின் நல்லொழுக்கமும் மயக்கமற்ற நிதானத்தன்மை யும் ஆங்கு நன்கு உபதேசிக்கப்படுகின்றன; மது பானம் விலக்கப்பட்டிருக்கிறது; மனிதர்களின் சமத் துவம் ஒரு வசீகரமான முறையிலே உபதேசிக்கப்படு கின்றது; இன்னம், இவ்வுலகத்தின் நல்லொழுக்க மானது மறுவுலகத்தில் கிடைக்கக்கூடிய (பகுத்தறி வுக்கொத்த) 'பிர்தெளஸால்' ஸம்மானமளிக்கப்படு கிறது. எனவே, அத்தகைய மதம், ஒரு மதத்தை உசாவிக்கொண்டலையும் மக்களுக்கு மிகச் சடுதியில் ஒரு நல்ல மதமாகவே புலப்படுகின்றது.''—(தி ஏஷி யாட்டிக் குவார்ட்டர்லீ ரெவியூ, அக்டோபர், (1888).

*　　*　　*　　*

''முஹம்மதியமதம் இவ்வுலகத்திற்கு ஒருவகைச் சீர்திருத்தப்பட்ட, கிறிஸ்துமதமாக — கிறிஸ்துமதத் தின் சீர்கெட்ட நிலைமைக்கொரு மறுப்பாக—பண்டை முன்மாதிரிகளின்மீது நிலை நிறுத்தப்பட்ட ஒரு பரி சுத்த மதமாக— பிராசீன அந்தஸ்துக்குத் திரும்பிய ஒரு மார்க்கமாக உதயமாயிற்று.............................. ஆனால், அதன்மீது முன்னரே சுமத்தப்பட்டிருந்த அக்காலத்திய கொடுமையான மூடநம்பிக்கைகளுக்கு மாற்றமாக அதன்பால் எல்லாவிதமான பகுத்தறிவுக்

கொத்த தன்மைகளும் காணப்பட்டுவந்தன ; அள வற்ற தாளாண்மையும், உற்சாகமும் நிரம்பியுள்ள மனிதர்களே போன்றிருந்த ஒருவகை ஜாதியினரால் அம்மார்க்கம் வெளிக்குக் கொணரப்பட்ட கார ணத்தை உற்றுநோக்குங்கால், அஃதொரு பெரிய வெற்றியை அடைந்துவிட்டதென்பதில் ஒருசிறிதும் ஆச்சரியத்திற் கிடமில்லை. ......... முஹம்மதியர்கள், அக்காலத்தில் நாகரிகம்பெற்று விளங்கிய தேயங்க ளென்னப்பட்டுவந்த கிரேக்க ரோம ராஜ்யத்தினைக் கைக்கொண்ட பொழுது, அவர்கள் அந்த ராஜ்யத தின் நாகரிகத்தையும் கல்வியையும் உடன் ஸ்வீகரித் துக் கொண்டார்கள். ஆதலினுல்தான், தம்முடைய முன்னேர்கள் இன்னம் மஹா பாமரத்தன்மை மிக்க மாக்களாய் விளங்கிவந்த காலத்தில் அவர்கள் இவ்வுல கினுக்கு ஒருயரிய மதத்தினை அளித்ததோடு, சட்ட கலா ஞானத்தையும், அறிவுநூல் விற்பன்னத்தையும், மற்றும்பல கலாஞானத் தெளிவுகளையும்கொடுத்துதவி யிருக்கின்றனர்கள். ஆகவே, முஹம்மதிய மதம் இவ் வுலகில் நிலைநிறுத்தப்பட்டதன்பின்பு ஆயிரம் ஆண்டு களுக்கு அதிகமாகவே ஒவ்வொரு காரியமும் அன்ன வரின் இடையரு முன்னேற்றத்துக்கு அனுகுண மாகவே இருந்துவந் திருக்கிறது ; அதுவேயுமன்றி, அவர்கள் இப்பாருலகினில் காணப்படும் குறைந்த நாகரிகமுள்ள பகுதிகளில் இன்னமும் அபிவிருத்தி யடைந்துகொண்டே வருகின்றனர்கள்."

—அதே ரெவியூ.

* * * *

அதே மாசிகை மேற்கொண்டும் இவ்வாறு வரைகின்றது : " முஹம்மதியமதம் இன்னதுதானென்று வரையறுத்துக் கூறுவது அதிக கஷ்டமான காரியமேயாகும்..........நிச்சயமாகவே மனிதர்களின் உயிர் வாழ்க்கைகளையும் குணாதிசயங்களையும் வெளித்தோற்றத்தில் நல்லவிதமாகவும் மரியாதைக் குரியனவாகவும் செய்துவிடுவதில் அஃது அதிக சாமர்த்தியம் வாய்ந்ததாகவே காணப்படாநின்றது. மனிதபுத்திக்கும் பகுத்தறிவுக்கும் வெறுப்பைத் தரத்தக்க எப்படிப்பட்ட நம்பிக்கைகளின் மீதும் உறுதிகொள்ள வேண்டுமென்னும் கஷ்டசாத்தியமான கொள்கையொன்றும் அதனிடத்துக் காணப்படாமையான், முஹம்மதியர்களுக்குள் நிரீசுவரக் கொள்கையின் பக்கல் சார்ந்துவிடக் கூடிய தன்மையொன்றும் காணப்படாம லிருப்பதே அதற்கொரு மிகப்பெரிய அனுகூலமா யிருந்துவருகின்றது....

" ஒருகால் கிறிஸ்தவர்களுடன் ஒப்புநோக்குங்கால், முஹம்மதியர்கள் வெளித்தோற்றத்தில் ஒழுங்காகக் காணப்படுவது மதுபானமறுப்பின் காரணத்தினாலேயே யிருக்கலாம். நம்முடைய கீழ்த்தரக் கிறிஸ்தவ மக்கள்களுள் அத்துணை அதிகமானவர்களைத் தாழ்மையுறச்செய்து கீழ்மையாக்குவது 'குடி' யாகவே இருந்து வருகிறது. நமக்குள்ளே மதுபானத் தடைமுறை இல்லாம லிருப்பதோடு, நம்முடைய சம்ஸ்காரங்களென்னப்படும் கருமங்களில்கூட மதுசாரத்தை உபயோகித்து நாம் ஒருமுறையில் அதனைக் கண்ணியப்படுத்தி வருகிறோம். சாராயம் கிறிஸ்துவின் இரத்

தத்திற்குப் பிரதிநிதியாய் இருக்கிறதென்று (இதற்கே நாம் அத்துணைப்பெரிய கௌரவத்தையளிக்கின்றோம்) உபயோகிக்கப் படுவதுதான் மிகக் கேவலமான மூட நம்பிக்கையா யிருப்பதோடு, மதுபான விஷயத்தைக் குறித்து ஆராய்ச்சி செய்தற்கும் அதன் கஷ்டத்தை மிகவும் அதிகமாகப் பெருக்கிவிடுகின்றது."

* * * *

அப் பத்திரிகையே இவ்வாறும் எழுதியிருக்கின்றது:— "முஹம்மதியர்கள் ஒருபோதும் குடிப்பதேயில்லையென்று கூறுவது முடியாது; ஆனால், அவர்கள் மிகமிக அருமையாகவே அவ்வாறு செய்கின்றார்கள். அநேகவிதமான தீய ஒழுக்கங்களில் இறங்கியிருக்கும் அநேகவிதமான கெட்ட முஹம்மதியர்கள் இல்லையென்று, குறிப்பாக அரைத் திருத்தத்துடன் இஸ்லாத்தைத் தழுவியிருக்கும் மௌட்டியமிக்கமுஹம்மதியர்கள் பால் அத்தீயகுணம் இல்லையென்று ஒருபோதும் கூறுவது முடியாது; ஆனால், அவர்களனைவரையும் ஒருமிக்கத் திரட்டிப்பார்க்கு மிடத்து, நாகரிகமடைந்திருக்கும் முஹம்மதிய தேசங்களில் காணப்பட்டுவரும் ஜனத்தொகையானது அதிகமான நல்லொழுக்கத்துடனும் கம்பீர நடக்கையுடனுமேதான் காணப்படாநின்றது. அவர்கள்பால் காணப்படும் குற்றங்குறைகளெல்லாம் முஹம்மதிய மதம் அபிவிருத்தி யடைந்து வந்த இடைக்காலத்தில் முக்கியமாக முளைத்திருக்கின்றன; ஆனால், நம்பால் காணப்படும் நல்லொழுக்கங்களெல்லாம் நம்முடைய மதத்தைக் காட்டினும் நம்முடைய காலத்தின் கூறுபாட்டாலேயே விளைந்திருக்கின்றன."

* * * *

ஊல்வராம்ட்டன் என்னும் நகரத்தில் கூடிய "மாதாகோயில் மகாநாட்டில்" ரெவரெண்டு கானன் ஐஸக் ட்டெய்லர் என்னும் மாபெரும் பாதிரியார் கூறியிருக்கும் அடியிற்காணும் ஆராய்ச்சியும் மததாராளமுள்ள அனைவர்க்கும் அதிக பயன்படுமென்றே யாம் கருதுகின்றோம்:—

"உலகத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் ஒரு பிரசாரமதமாக இஸ்லாம் மார்க்கம் கிறிஸ்து மார்க்கத்தைப் பார்க்கினும் அதிக ஜயகரமுள்ளதாகவே காணப்படுகின்றதென்று ரெவரெண்டு கானன் ஐஸக் ட்டெய்லர் கூறினார். (ஆச்சரியம்!) அஞ்ஞானத்தினின்று திருப்பப்படுங்கால், மனிதர்கள் கிறிஸ்தவர்களாக மாறுவதைப்பார்க்கினும் முஸ்லிம்களாகவே அதிகம் மாறிக்கொண்டிருப்பதோடு நில்லாது, சில பிராந்தியங்களில் கிறிஸ்துமதம் இஸ்லாத்தின்முன் நிச்சயமாகவே பின்னிடைந்து கொண்டே செல்கின்றது; ஆனால், முஹம்மதிய ஜாதியார்களைக் கிறிஸ்துமதத்தின்பக்கல் திருப்புவதென்பதோ மிகவுங் கேவலமாகவே அபஜயமடைந்து வருகின்றது. நாம் மேற்கொண்டு அபிவிருத்தி யடையாமற் போயினும், இப்பொழு திருந்துவரும் நிலைமையினையும் நிர்வகித்துக் கொள்வதுகூட ஒரு முடியாத காரியமாய்ப் போய்விட்டது. இஸ்லாம் மார்க்கம் மொராக்கோவிலிருந்து ஜாவாவரையும், ஜான்ஜிபாரிலிருந்து சீனுவரையும் பரந்துகிடக்கின்றது; ஆபிரிக்காவின் ஊடேயும் அஃது அசுரவேகத்துடனே பறந்துசெல்கின்றது. காங்கோவிலும் ஜாம்பஸியிலும் அஃது இடம் பெற்றுக்

கொண்டு விட்டது ; இப்பொழுது நீகிரோவர்களின் மஹாபலம் பொருந்திய பிராந்தியமாய் விளங்கிவரும் உகாந்தாவும் முஹம்மதிய மதத்தை அங்கீகரித்துக் கொண்டு விட்டது. இந்தியாவில் மேல்நாட்டு நாகரிகம் ஹிந்து மதத்தை வற்றச்செய்து வருவதானது இஸ்லாத்திற்கே வழிகோலிக்கொண்டு செல்கின்றது. இந்தியாவி லுள்ள 25½ கோடி மக்களுள் (இதுபொழுது 40 கோடி) 5 கோடி மனிதர்கள் முன்னரே முஸ்லிம்களா யிருக்கிறார்கள். —(இப்பொழுது 10 கோடி முஸ்லிம்கள்). ஆபிரிக்காவி லுள்ள முழு ஜனத்தொகையில் பாதிக்குமேல் முஸ்லிம்களே. இஸ்லாத்தைப்பற்றி முதலில் பிரசாரம் செய்வது குறித்து ஆராய்ச்சி செய்துபார்க்க வேண்டுவதின்று ; ஆனால், நவ் முஸ்லிம்களின்மீது இது தன்னுடைய பிடியை என்றும் நிலைத்திருக்குமாறு இறுகப்பிணிப்பது குறித்துத்தான் ஆராய்ச்சிசெய்து பார்த்தல் வேண்டும். கிறிஸ்துமதம் தன்னுடைய பிடியில் இறுகப்பிடிக்கும் தன்மையை வகித்துக்கொண் டிருக்கவில்லை. இந்தியாவிலும் ஆபிரிக்காவிலும் இஸ்லாத்தின் முன்னே அது பின்னிடைந்து கொண்டே போகின்றது ! ஜமைய்க்காவி லுள்ள நீகிரோவர்கள் பெயரளவில் மட்டுமே கிறிஸ்தவர்களாய் இருந்துகொண்டு, "ஒபாய்" மதத்திற்கே திரும்பிக்கொண் டிருக்கிறார்கள் ; ஆனால், இஸ்லாம் மார்க்கத்தின் பக்கல் ஒருமுறை திருப்பப்பட்ட எந்த ஆபிரிக்காக் கூட்டமும் மீட்டும் தனது அஞ்ஞான மார்க்கத்தின் பக்கல் திரும்பிப் பார்ப்பதுமில்லை ; கிறிஸ்துமதத்தைத் தழுவச் சம்மதிப்பதுமில்லை......"

*　*　*　*

"கிறிஸ்து மார்க்கத்தைப் பார்க்கினும் அதிக மாகவே இஸ்லாம் மார்க்கம் நாகரிகத்துக்குப் பாடு பட்டு வந்திருக்கிறது. பாதிரிமார்கள் கூறிவரும் சமா சாரங்களை நம்பும் விஷயத்தில் யாம் சிறிது சந்தேகங் குடிகொண்டவராகவே யிருந்துவருகிறோம்; இஸ் லாம் செய்திருக்கும் காரியமுடிபுகளைக் குறித்து ஆங்கில உத்தியோகஸ்தர்கள் அல்லது பார்ட் டன், போப் ஹென்னஸ்ஸி, கால்ட்டன், பால்கிரேவ், தாம்ஸன், அல்லது ரீட் போன்ற தேச சஞ்சாரிகள் கூறியிருக்கும் கூற்றினை யெடுத்துக் கொள்ளுங் களேன். ஒரு நீகிரோவனுல் முஹம்மதியமதம் தழு விக்கொள்ளப் பட்டவுடனே விக்கிரஹத்தொழும்பு, பைசாச பூஜை, உயிரற்ற பொருள்களை வணங் கல், நரமாம்ச போஜனம், மனிதபலி, சிசுஹத்தி, சூன்யவித்தை ஆகியவெல்லாம் உடனே ஒழிந்து போய் விடுகின்றன. அதன் பின்பு அச்சுதேசக் குடி கள் நல்லமுறையில் உடையுடுத்தத் தொடங்கிவிடு கிறார்கள்; அசுத்தமென்ப தொழிந்து சுத்தமே குடி கொண்டு விடுகிறது; அதுவேயுமன்றி, அவர்கள் சுய மரியாதையும் சுயகண்ணியமும் அடைந்துவிடுகிறார் கள். விருந்தோம்புத லென்பது ஒரு மதக்கடமை யாய் விடுகிறது; மதுபானமென்பது அருகிப்போய் விடுகிறது; சூதுவிளையாடல் தடுக்கப்பட்டு விடுகிறது; அமிதமான நர்த்தனங்களும், ஸ்திரீ புருஷர்கள் பொதுப்படையாய்க் கலந்து கொள்ளுதல் ஆகிய வையும் ஒழிந்துபோய்விடுகின்றன; பெண்ணின் கற் பென்பது ஒரு சற்குணமாக மதிக்கப்பட்டு வருகிறது;

சோம்பலின் ஸ்தானத்தில் சுறுசுறுப்பே குடிகொண்டு விடுகிறது; வரைதுறையற்ற ஒழுங்கீன மென்பது சட்டவரம்பிற்கு இடங் கொடுத்துவிடுகிறது; சமாதானமும் நிதானபுத்தியும் தலைதூக்க ஆரம்பித்து விடுகின்றன; உதிரச்சண்டைகளும், பிராணிகளுக்கும் அடிமைகளுக்கும் கொடுமை யிழைப்பதும் தடுக்கப்படுகின்றன. மானுஷீக தர்மமும், உதாரகுணமும், சகோதரவாஞ்சையும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. பலதார மணமும் அடிமைவர்த்தகமும் ஒழுங்கு செய்யப்பட்டு, அவற்றால் விளையக்கூடிய கொடுமைகள் மட்டுப்படுத்தப்பட்டன.

"மற்றெல்லாவற்றையுங் காட்டில் இஸ்லாமே இவ்வுலகினில் மதுபானத்தை மிக்க வன்மையுடனே அடியோடு விலக்கியிருக்கும் ஒரு சமாஜமாகும்; ஆனால், ஐரோப்பாவின் வர்த்தகாபிவிருத்தி யென்பது "குடி"யையும், வேறுபல தீமைகளையும், மக்களின் வீழ்ச்சியையும் அபிவிருத்தி செய்வதாகவே கருத்துக் கொள்ளுகின்றது; ஆனால், இஸ்லாம், எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளும் ஞானத்துடன், மிக்க நல்ல முறையில் உடுத்தல், உடலும் உடையும் பரிசுத்தமாயிருத்தல், சத்தியம், சுயமரியாதை ஆகியவற்றுடனுங் கூடிய ஒரு மேலான நாகரிகத்தை நுழைத்து விடுகின்றது. தன்னடக்கத்தையும் நாகரிகத்தையும் கற்றுக் கொடுப்பதில் அதன் சக்தி மகா ஆச்சரியகரமாகவே காணப்படாநின்றது. (ஐரோப்பாவின்) அதிகமான ஐசுவரியங்களும் அருமையான உயிர்களும் ஆபிரிக்கா கண்டத்தின்மீது அளவிறந்து சொரிந்ததன் பலன்

தான் எத்துணை அற்பமாயிருக்கிறது ! கிறிஸ்து மதத்தில் சேருவோர் ஆயிரக்கணக்கிலிருக்க, இஸ்லாத்தில் சேருவோர் பத்திலக்ஷக் கணக்கில் இருக்கின்றனர். இவையெல்லாம் நாம் கூர்ந்து நோக்க வேண்டிய நிச்சயமான விஷயங்களாகும். அவை (நமக்கு) மகா அதிருப்திகரமான விஷயங்களாகவே புலப்படும் ; ஆனால், அவற்றினை ஒதுக்கித் தள்ளுவது ஒருபெருங் குற்றமேயாகும்...... இஸ்லாம் மார்க்கம் கிறிஸ்துமத அம்சங்களுடன் கூடி, ஆபிரகாம், மோசே ஆகியவர்களின் மதத்தினது ஒரு பிரதிரூபமாகவே இருந்து வருகிறது. யூதமதம் ஒரு தனிப்பட்ட வர்க்கத்தினருக்கே உரியதாகும். இஸ்லாம் யூதமதத்தைப் போன்று ஒரே ஜாதியினருக்காகவே கட்டுப்பட்டில்லாது, முழுவுலகுக்குமே பரவக்கூடிய ஓர் ஏகாண்ட மதமாய் அமைந்திருக்கிறது.

"...முஹம்மதின் ஸல் உபதேசத்தில் கிறிஸ்துமதத்துக்கு நேர்முரணாயிருப்பது ஒன்றுமில்லை. அது யூத மதத்துக்கும் கிறிஸ்து மதத்துக்கும் நடுமையத்தில் நிற்கின்றது. இந்தச் சீர்திருத்தம் செய்யப்பட்ட யூத மதம் (இஸ்லாம்) ஆபிரிக்காவின் மீதும் ஆசியாவின் மீதும் இத்துணை வேகத்துடன் பறந்து செல்லுதற்குக் காரணம் யாதெனின், ஆபிரிக்காவிலும் சிரியா நாட்டிலும் இருந்துவந்த மத ஆராய்ச்சிக்கார்கள் கிறிஸ்து மதத்தின் ஸ்தானத்தில் ஆன்மதத்துவ சாஸ்திர ஆராய்ச்சிக்குரிய சித்தாந்தங்களை நுழைத்துவிட்டதேயாகும். வரைதுறையற்ற ஒழுக்கஹீனத்தை, ஆணும்பெண்ணும் விவாகம் செய்துகொள்ளா திருப்

பதைக்கொண்டு அவர்கள் தடுத்துவிடப் பிரயத்தனப் பட்டார்கள். உலகத்தை விட்டு ஒதுங்கி யிருப்பது தான் விமலநிலை யென்று கருதப்பட்டு வந்தது; ஆனால், பாதிரிமாரின் சன்னியாச வாழ்க்கையென்பது மலம் நிரம்பியதாகவே காணப்பட்டது. பொது மக்கள் ஏராளமான சமயாபிமானத் தியாகிகளையும், திருத்தொண்டர்களையும், வானவர்களையும் வணங்கத் தலைப்பட்டு, உண்மையில் பலதெய்வ வணக்கக்காரர் களாகவே இருந்து வந்தார்கள். இஸ்லாம் வந்து இத்தகைய அளவிறந்த அபரிசுத்தத்தையும், மூட நம்பிக்கையையும் அடியோடு இல்லாமலாக்கிவிட்டது. வெறு மதசம்பந்தமான விவாதங்களுக்கு விரோத மாய் அஃதொரு (நல்ல) கிளர்ச்சியா யிருந்துவந்தது; மத வைதிகத்தின் கிரீடம் பிரமசரிய வாழ்க்கையே யென்று பிசைபடக் கூறப்பட்டுவந்த ஒரு தத்துவத் திற்கு அஃதோர் ஆண்மைத்தனம் வாய்ந்த மறுப் பாகவே விளங்கிவந்தது. மதத்தின் மூலக்கொள்கை யாகிய ஆண்டவனது ஒருமைத் தன்மையையும் பெரு மையையும் அது நன்கு வெளியில் கொண்டுவந்து விட்டது. சன்னியாச வாழ்க்கை இருந்துவந்த ஸ்தா னத்தில் மானுஷீக ஆண்மைத் தன்மையை அது நிலை நாட்டிற்று. அஃது அடிமைகட்கு ஆதரவை யூட் டிற்று; மக்கட்பூண்டிற்குச் சகோதரத்துவத்தைக் காட்டிற்று; இன்னமும், மனித இயற்கையின் மூலா தாரத் தத்துவத்தை நன்கு அங்கீகரித்துக் கொண்டு விட்டது.

"......இஸ்லாத்தினால் உபதேசிக்கப்படும் ஒழுக் கங்கள் சாதாரண மக்களால் அறிந்துகொள்ளக்

கூடியனவாகவே அமைந்து கிடக்கின்றன:—அவை மதுபான விலக்கு, பரிசுத்தம், சதிபதி விரதம் நீதம், இடுக்கணழியாமை, மனோதைரியம், பரோப காரம், விருந்தோம்பல், வாய்மை, ஆண்டவன் நாட் டத்திற்கு முற்றிலும் சிரஞ்சாய்த்தல் ஆகியவையாம் அத்தகைய சாதாரணமக்கள் முக்கிய மூலாதார ஒழுக்கங்களாகிய நான்கு காரியங்களை மேற்கொண் டொழுகுமாறும், ஏழு மஹா பாதகங்களை விட் டொழிக்குமாறும் கற்றுக்கொடுக்கப்படுதல் கூடும் மனித சகோதரத்துவத்தைக் குறித்துக் கிறிஸ்தவம் கூறும் இலட்சியம் மிகமேலானதே; ஆனால், இஸ்லாம் ஓர் அனுஷ்டானத்துக் குரிய சகோதரத்துவத்தை,— எல்லா முஸ்லிம்களும் சமுதாயச் சமத்துவமுள்ளவர்க ளென்பதையே உபதேசித்துக்கொண் டிருக்கிறது இதுதான் இஸ்லாத்தினால் அளிக்கப்படுகின்ற பெரிய தொரு 'லஞ்ச'மாகும். இஸ்லாத்தைத் தழுவும் ஒரு நவ்முஸ்லிம் உடனே ஒரு பிரத்தியேகமான சமூகா சாரத்துக்குள் சேர்த்துக்கொள்ளப் படுகின்றார்; உடனே 15 கோடி முஸ்லிம்களுக்குரிய (இதுபொழு துள்ள உலக முஸ்லிம்களின் தொகை 60 கோடியா கும்) அவ்விசாலமான சமாஜத்தின் அங்கத்தினராக ஆய்விடுகின்றார். கிறிஸ்து மதத்தைத் தழுவிக்கொள் ளும் ஒரு மனிதன் அச்சமூகத்தில் சம அந்தஸ்துள்ளவ னாகக் கருதப்படுவதில்லை; ஆனால், முஸ்லிம் சகோத ரத்துவம் ஓர் உண்மையான சகோதரத்துவமாகவே அமைந்து கிடக்கின்றது. 'அருமையார்ந்த அன்பிற் குரிய சோதரர்' என்பதை நாம் வாசிக்கும் மேஜை

யின்மீது அதிகம் காண்கின்றோம்; ஆனால், தினசரி வாழ்க்கையில் அதை மிக மிகக் குறைவாகவே பார்க்கிறோம்..........

"சிற்சில காரியங்களில் முஸ்லிம்களின் நல்லொழுக்கம் நம்முடையதைப் பார்க்கினும் மேலானதாகவே இருக்கிற தென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கடவோம். ஆண்டவன் நாட்டத்திற்கே முற்றும் தலைசாய்த் திருத்தலிலும், மதுபானம் செய்யாதிருத்தலிலும், தானதர்மத்திலும், சத்தியத்தைக் கடைப்பிடித்தலிலும், நன்னம்பிக்கை கொண்டவர்களெல்லாரும் சகோதரர்களே யென்று கொண்டாடப் படுதலிலும் நாம் அன்னவர்களைப் பின்பற்றி யொழுகக்கூடிய முறையிலேயே அவர்கள் நமக்கொரு முன்மாதிரியாய் விளங்கிவருகிறார்கள். இஸ்லாம் மார்க்கம், கிறிஸ்தவர் நாடுகளில் காணப்பட்டுவருகின்ற முக்கிய மூன்று சாபக்கேடுகளாகிய மதுபானஞ்செய்தல், சூதுபோர் விளைதல், வியபிசாரம் புரிதல் ஆகியவற்றை அடியோடு ஒழித்திருக்கின்றது."

—(லண்டன்டைம்ஸ் 8-10-1887)

* * * *

"தம்முடைய தேசமக்கள்க ளனைவரும் நெடுங்காலமாகவே ஆழ்ந்துகிடந்த மாகெடிய கயமைத்தனமான விக்கிரஹத் தொழும்பை அறவே யொழித்து, அதன் ஸ்தானத்தில் அத்தேசமுழுவதுமே ஏகேசுவரவாதத்துக் குரிய அத்துணைப் பெரிய, என்றும் நின்றிலங்கக்கூடிய சீர்த்திருத்தத்தை நிலைநிறுத்திச்சென்றவரும், தம்முடைய தேசத்தின் ஒழுக்கநிலையை உயர்த்தி,

ஸ்திரீகளின் கண்ணியத்தை மேலோங்கச் செய்து, பலதார மணத்தையும் அடிமைத் தொழிலையும் மிக மிகச் சுருக்கிச் செப்பஞ்செய்து, எத்தகைய தீயஒழுக்கத்தினையும் சிசுக்களை உயிருடனே புதைத்தலையும் அடியோடு நிறுத்திவிட்டவரும், அந்த அராபிய சமூகத்தினர்பால் காணப்பட்டுவந்த மஹாகொடிய பாதகங்களனைத்தையும் மிக்க உக்கிரத்துடன் கண்டித்து, அறவே இல்லாமற் செய்துவிட்டவரும், ஓர் உறங்கிக் கிடந்த ஜாதியினரிடை உயிர்ப்புத்தன்மையை உண்டு பண்ணிவிட்டு, ஒருவரோ டொருவர் யுத்தம் புரிந்து கொண்டு பன்னூற்றுக் கணக்காகச் சிதறுண்டு போய்க் கிடந்த கூட்டத்தினர்களையெல்லாம் என்றென்றும் நிலைத்திருக்கக் கூடிய உற்சாகமிக்க ஊழியத்தின்பக்கல் நன்கு கிளப்பி விட்டவரும், மானிட ஹிருதியத்துள்ளே எவ்வெப்பொழுதும் வீழ்ந்து கொண்டிருந்த, பல்வேறு வகையாகச் சிதறுண்டு கிடந்த பிரகாசத் துணுக்குக்களையெல்லாம் ஒன்ருகத் திரட்டி ஒருமுகப் படுத்தியவரும், எத்துணைப்பெரிய இடறுபடைகளையும் பொருட்படுத்தாதும் இனி நிகழப்போவது என்னவோவென்று சிறிதும் அச்சங் கொள்ளாதும் இருந்துவந்த, மகாதைரிய சீலத்துடனும் எப்பொழுதும் சுயநலமென்பதையே ஒரு சிறிதும் பாராட்டாது பரநயப் பற்றுடனேயே பாடுபட்டுவந்த ஒரே கடைப்பிடியுடனும், எத்தகைய தியக்கமும் தாமதமும் மயக்கமும் கொள்ளாது ஒரே ஊக்கத்துடனும் உற்சாகத்துடனுமேயே தமது கைங்கரியத்தை இடைவிடாது நிறைவேற்றிக்கொண்டு வந்த

வருமாகிய அத்துணைப் பெரிய பேரூக்க சாலியாகிய ஒரு மாபெரும் சீர்திருத்தக்காரர் ஒரு வெறும் வெளி வேஷக்காரராகவே இருந்துவந்தா ரென்றேனும், அவருடைய உயிர்வாழ்க்கை முழுதும் வெறும் போலித்தனமான நயவஞ்சகத் தனமாகவே இருந்து வந்த தென்றேனும் வாய் கூசாது வழுத்துவ தற்கு எவரே முன்வரத் துணிவரென்று யாம் வினவு கின்றேம்.

"அவருடைய ஜீவியமுழுதும் அசத்தியமென்றே அறிந்து கொண்டிருந்த ஒருவகைப் புரட்டையே தம் முடைய உள்ளத்துக் குள்ளிருந்தே வெளிப்படுத்தி, அதனைப் பொய்யாகவே ஆண்டவன் தூதுச் செய்தி யென்று அன்னவர் கற்பனையாகவே கூறிக்கொண் டிருந்தாரென்று எவ்வாறு நாம் மனோராஜ்யம் செய்து விடுதல் சாலும்? அவ்வுத்தமோத்தம மஹானுபாவர் உள்ளொன்றும் புறம்பொன்று மாகவே அவரது ஆயுட்கால முழுவதும் பொய்ந்நடிப்பு நடித்துவந்தா ரென்று கூறுவதானது, அப்பெருமானார் தம்முடைய காரியத்தின் மீது கொண்டிருந்த அசைக்கமுடியாச் சத்தியக்கடைப் பிடியாலும், அப் பரமாத்தமாவின் மெய்யையும் பொய்யையும் நன்கு நிதானித்துக் கண்டு பிடித்துவிடக்கூடிய அத்துணை நெருக்கமான முறையில் அல்லும் பகலும் அனவரதமும் அப்பெருமானது சன்னி தானத்திலேயே வாழ்ந்துவந்த எண்ணிறந்த சஹாபாக் கள் (தோழர்கள்) தங்கள் ஞானசிரியர்பால் கொண்டி ருந்த பக்திவிசுவாசத்தினாலும் துளக்கமுறா நன்னம் பிக்கையாலும், இறுதியாக அப்பெருமானார் கங்கணங்

கட்டியெழுந்த காரியத்தில் தங்கள் ஆயுட்காலத்திற் குள்ளேயே அடைந்துவிட்ட அத்துணைப் பெரிய ஜய பேரிகையினுலும் உதைத்து ஒதுக்கித் தள்ளப்பட்டுப் போகவில்லையா? இவ் வுலகின்கண் எத்துணைப் பெரிய பொய்வேடக்காரனும் அத்துணைப் பெரிய காரியத்தை முழுவெற்றியுடனே சாதித்திருக்க முடியாதென்றும், தன்னுடைய கைங்கரியத்தின் சத்தியத்தின்மீதும், தான் எடுத்துக்கொண்ட கருமத்தின் நன்மையின் மீதும் உண்மையான உறுதியுள்ள நம்பிக்கையைப் பெற்றிராத ஒருவன் பல நெடிய வருடங்கள் மட்டும் தொடர்ந்துகொண்டே வந்த எண்ணிறந்த எதிர்ப்புக் களினூடே யெல்லாம் சிறிதும் மனம் துணுக்குறாது, வெற்றியின்போதும் தோல்வியின்போதும், செல்வாக் கின்போதும் அஃதில்லாதபோதும், உச்சஸ்தானத்தி லிருந்தபோதும் உலகத்தை விட்டுப் பிரிய நேரிட்ட போதும் ஒரே தன்மையினனுகவே இருந்திருப்பது முடியாதென்றும் நாம் கூறத் துணிவோமாயின், அதி லென்ன ஆச்சரிய மிருக்கின்றதென்று நீங்கள் சந் தேகிக்கின்றீர்கள் ?

"யூத மதத்தைப் பற்றியேனும் கிறிஸ்து மதத் தைப் பற்றியேனும் எனக்குத் தெரிந்திருப்பதைக் கொண்டு ஆராய்ச்சி செய்து பார்க்குமளவில், முஹம் மதால்[சல்] உபதேசிக்கப்பட்ட மதமானது மற்றொன் றைப் பார்த்துப் பின்பற்றக் கூடியதாக மட்டு மேனும் வேறு பல மதங்களிலிருந்து சாரம் திரட்டக் கூடியதாக மட்டுமேனும் இருந்ததாகக் காணப்பட வில்லை ; ஆனுல், எல்லாவித நன்மைகளுக்கும் மூல

காரணமாய் விளங்கும் அந்த 'ஆதிமூலத்'திடத்திருந்து வேதஞான ஜோதி வெளிப்படக் கூடுமென்பது வாஸ்தவமே யாயின், அஃது (இஸ்லாம்) அத்தகைய வேதஞான ஜோதியாலேயே வெளிபடுத்தப்பட் டிருக்கின்றது. தந்நலத் தியாகமும், கருமத்தில் கொண்ட கண்ணிய நம்பிக்கையும், தமது காரியத்தில் கொண்டுள்ள அசைக்க முடியாத உறுதியும், உலகத்தில் காணப்பட்டு வரும் தீமைகளையும் கேடுகளையும் அதிகம் ஊடுருவிக் கூர்ந்து பார்க்கக் கூடிய தன்மையும், அவற்றினை யொழிப்பதற்கு மிக மிக மேலான உபகரணங்களைக் கண்டுபிடித்து அவற்றினையே உபயோகித்து வருவதென்பதும் வேதஞான ஜோதி அடையப்பெற்றாரின் வெளிப்படையான பகிரங்கச் சின்னங்களென்று கொள்ளப்படக்கூடுமாயின், முஹம்மதின்ஸல் கைங்கரியமும் வேதஞான ஜோதியைக்கொண்டே உற்சாக மூட்டப்பட்ட தென்று மிக்க பணிவுடனே கூறுதற்கு நான் மெய்யாகவே துணிகின்றேன்."

—டாக்டர் லீட்னர்.

* * * *

ரெவரெண்டு டாக்டர் மார்க்கஸ்டாஸ் என்பவரும் கீழ்க்காணுமாறு மிக்க உறுதியுடனே உரைத்திருக்கின்றார் :— "ஆனால், முஹம்ம தென்பவர்ஸல் எந்தவிதமான கருத்தைக் கொண்டும் ஒரு தீர்க்கதரிசியாய் இருப்பது முடியாதா? நிச்சயமாகவே தீர்க்கதரிசிகள்பால் காணப்படக்கூடிய மஹா முக்கியமான இருவகைக் குணவிசேடங்களை அன்னவர் பெற்

ிருந்தார்: அவருடைய சகோதர மக்களால் கண்டு கொள்ள முடியாதிருந்த தெய்வத்தின் உண்மையினை அவர் கண்டு கொண்டார். அதுவேயுமன்றி, அந்த உண்மையினைப் பஹிரங்கப்படுத்தற்கு அன்னவர்பால் ஒருவகைத் தடுக்கமுடியாத அந்தரங்க உத்வேகம் இருந்துகொண்டே யிருந்தது. இரண்டாவதாகக் கூறிய குண விசேஷத்தில் முஹம்மத்[சல்] இஸ்ரவேல் கூட்டத்தில் தோன்றிய தைரியசாலிகளான தீர்க்க தரிசிகளுள் ளெல்லாம் மகா தைரியசாலிகளாய் விளங் கிய தீர்க்கதரிசிகளுடனே ஒப்புநோக்கிக் காண்பிக்கப் படலாம். சத்தியத்தின் பொருட்டு அவர் தமது உயிருக்கே அபாயத்தைத் தேடிக் கொள்பவராய்க் காணப்பட்டு வந்தார்; பலஆண்டுகள் வரை அவர் ஒவ்வொரு நாளும் துன்புறுத்தப்பட்டே வந்து, இறுதி யில் நாடுங் கடத்தப்பட்டார்; சொத்துப் பறிமுதல், சோதர மக்களின் நல்லெண்ணத்தை யிழத்தல், இல்லை, அவருடைய நண்பர்களின் நம்பிக்கையையுங் கூட இழத்தல் ஆகிய சங்கடங்களுக் குள்ளெல்லாம் ஆளாகிவந்தார்; சுருக்கிச் சொல்லுமிடத்து, அன்ன வர் மரணம் ஒன்றைத்தவிர்த்து மற்றெல்லாக் கஷ்ட நிஷ்டூரங்களையும் வேறெவரும் பட்டுவருவதே போலத் தான் பட்டுவந்தார்; அம் மரணத்தினையும் அவர் ஊரைவிட் டோடியதனாலேயே தவிர்த்துக் கொண் டார்; ஆயினும், அவர் சற்றும் மனந்துளக்குறுமலே தம்முடைய உபதேசத்தைப் புரிந்துகொண்டே சென் றார். எத்தகைய இலஞ்சமேனும், எத்தகைய பய முறுத்தாட்டலேனும், எத்தகைய ஆசை வார்த்தைக

ளேனும் அன்னவரை மௌனமுற் றிருக்குமாறு அடக்கிவிடத் துணியவில்லை. 'எனக்கு விரோதமாக அவர்கள் சூரியனை என் வலக்கரத்தின்மீதும் சந்திரனை என் இடக்கரத்தின்மீதும் கொணர்ந்து நிறுத்திய போதினும், யான் என்னுடைய கருமத்தினைமட்டும் கைவிடத் துணியேன் !' என்று மிக்க உறுதியுடனே கூறினர். ஆண்டவனது ஏகத்துவத்தைப் பகிரங் கப்படுத்தும் விஷயத்தில் கொண்டுள்ள இத்தன்மைத் தாய விடாப் பிடிவாதமும், அவருடைய கருமத்தின் மீது வைத்திருந்த இத்தன்மைத்தாய நம்பிக்கையுமே இஸ்லாத்தை நிலைநிறுத்துவதற்கு உபகரணங்களாய் விளங்கிவந்தன.

"விக்கிரஹ வணக்கக்காரர்களின் மத்தியிலே வேறு மனிதர்களும் ஏகேசுவர வாதிகளாய் இருந்துவந் திருக்கிறார்கள். ஆனால், வேறெவரும் ஓர் உறுதி வாய்ந்து, என்றும் நிலைத்திருக்கக்கூடிய ஏகதெய்வ மதத்தினை நிலைநிறுத்திச் செல்லவில்லை. இவருடைய விஷயத்தில் காணப்படும் கீர்த்தி யாதெனின், ஏனை மக்களும் அவ்வுண்மையில் நன்னம்பிக்கை கொள்ள வேண்டுமென்று இவர் கொண்டிருந்த ஒரே தீர் மானமே யாகும். மற்ற மனிதர்க ளெல்லாரும் ஒரு பிரத்தியேக மதநம்பிக்கையில் உறுதிகொண் டிருப் பதே போதுமென்று திருப்தியுற் றிருக்குங்கால், முஹம்மதை[சல்] மட்டும் ஓர் உக்கிரப் பிரசாரகராகச் செய்துவிட்டது யாதென வினவப் புகுவோமாயின், சத்தியத்தின்மீது அன்னவர் கொண்டிருந்த உறுதி யின் ஆழமும் வன்மையுமே யல்லது, வேறொன்றாக

வும் இல்லையென்றே நாம் விடையிறுக்கக் கட வோம். ஏக தெய்வத்திற்கும் பலதெய்வங்களுக்கும், அந்தப் பார்வைக் கெட்டாப் பராபரச் சிருஷ்டிகர்த் தாவுக்கும் ஈங்குள்ள கரடுமுரடான அருவருப்புள்ள கல்முள்களுக்கும் கட்டைகளுக்கும் இடையில் அவர் மனத்தில் காணப்பட்டுவந்த வேறு பாடானது அள விறந்ததாகவே இருந்துகொண் டிருந்தது. அவர் களுடைய புராதன மதமானது இவருக்குச் சாக்காட் டையும் அந்தகாரத்தையுமே அதிகம் அளித்துக் கொண் டிருந்தது; ஆனால், இவருடைய மதமோ, உஜ்ஜீவித்தலையும் ஞானப்பிரகாசத்தையும் நல்கிக் கொண் டிருந்தது.

"......அந்தப் பெருந்தனிகராய் விளங்கிய வர்த்த கரைத் தம்முடைய சுகசௌகரியம் வாய்ந்த இல்லத் தையும், அவருடைய அருமை நிரம்பிய இல்லக்கிழத்தி யையும் துறந்து சென்று ஹிராவின் பயங்கரமான குகையுள்ளே ஏககாலத்தில் பலமாதங்கள்வரை தம் முடைய வாசஸ்தானத்தை ஏற்படுத்திக் கொள்ளு மாறு கட்டாயப்படுத்திய, அந்த உயிருள்ள ஆண்டவ னது உண்மையை ஆராய்ச்சி செய்யுமாறு தூண்டிய நன்னோக்கத்தினை எவரே ஐயுறத்துணிவர் ? ஏசாயா வேனும் எரேமியாவேனும் (பொது மக்களின்) மனத் திற்குப் பிடிக்காத சத்தியத்தை வெளியிலெடுத்துக் கூறக்கூடிய அந்தப்பெரிய கருமத்தினின்று பின்வாங் கினார்க ளென்பதை நாம் மரியாதையுடன் உற்று நோக்கும் போழ்து, சிற்சில வேளைகளில் தம்முடைய புதிய உணர்ச்சிகளும் எண்ணங்களும் பைசாசத்தின்

பொறியா யிருக்குமோ வென்று அவர் எண்ணிவிடக் கூடுமாறும் வேறுசில வேளைகளில் ஒரு சினேகமய மான உச்சியிலிருந்து தம்மையே கீழ்நோக்கி உருட் டிக்கொள்வதனுல் இனிவரும் எல்லாவிதமான சங்க டங்களையும் ஒழித்துக் கொள்ளலாமென்று சந்தோஷ மாக எண்ணிவிடுமாறும் அத்துணை அதிகமான இத் தகைய ஜவாப்தாரித்தனத்தைக்கொண்டு பளுவாக்கப் பட்டும், அப்பெரிய கைங்கரியத்தை முடித்துவைப் பதற்குத் தம்மால் முடியாதென்று தூண்டப்பட்டும் நின்ற முஹம்மதின் ஸல் அத்துணை உரோஷமுள்ள மனப்பான்மையினையும் நாம் மரியாதையுடன் ஏற் றுக்கொள்ளுதலே வேண்டும்...

"ஆண்டவனுடைய தீர்க்கதரிசியென்று அவர் கூறிவந்ததெல்லாம் முதன்முதலாக மெய்யாகவே யிருந்துவந்ததுடன், அவர் அறிந்திருந்த முறைமை யின்பிரகாரம் அஃதொருகால் சரியாகவேயும் இருந்து வந்திருக்கிறது."

* * * *

ரெவரெண்டு பாஸ்வொர்த் ஸ்மித்தும் இவ்வாறு இயம்பி யிருக்கின்றார்:— "அரசாங்கத்தின் தலைவராக வும், மதவிஷயத்தின் தலைவராகவும் இருந்துகொண்டு, அன்னவர் ஏககாலத்தில் ஸீஸராகவும் போப்பாகவுமே விளங்கி வருகின்றார்; ஆனுல், அவர் போப்புக்குரிய படாடோபங்க ளில்லாத ஒரு போப்பாகவும், ஸீஸ ருக்குரிய சைன்யங்க ளில்லாத ஒரு ஸீஸராகவுமே விளங்கிவந்தார். ஒரு நிரந்தரப்படை யில்லாமலும், மெய்காப்பாளர் ஒருவரு மில்லாமலும், அரண்மனை

யொன்று மில்லாமலும், ஒரு நிரந்தரமான வருவாய்க்கு வழியில்லாமலும், எப்பொழுதேனும் ஒருவர் ஆண்டவனது அதிகாரத்தைக் கொண்டே தாம் இவ்வுலகின்கண் ஆட்சிபுரிந்துவந்ததாகக் கூறிக்கொள்ள உரிமைபெற்றிருப்பராயின், அத்தகையினர் முஹம்மதாகவே[ஸல்] இருந்து வந்தார்; என்னெனின், அவர் எல்லாவிதமான அதிகாரத்தையும், அதற்குரிய உபகரணங்களில்லாமலும், அதற்கு வேண்டிய உதவிகளில்லாமலுமே செலுத்திவந்தார்.

"சரித்திரத்தில் காணப்படும் ஒருவகை முழுதும் ஒப்புவமையற்ற அதிருஷ்டத்தைக்கொண்டே முஹம்மத்[ஸல்]—ஒரு ஜாதியாரையும், ஓர் அரசாங்கத்தையும், ஒரு மதத்தினையும்—ஆகிய மூன்று காரியங்களை ஒரே காலத்தில் நிலைநிறுத்திச் சென்றவராவார். எழுதப் படிக்கத் தெரியாத ஓர் உம்மீயாயிருந்தும், ஒரு செய்யுளாகவும், சாதாரண வணக்கத்திற்குரிய ஒரு கிரந்தமாகவும், ஒரு பைபிளாகவும் ஒரே புத்தகத்தில் விளங்கி, நடையின் பரிசுத்தத்திற்கும், ஞானத்தின் மேன்மைக்கும், சத்தியத்தின் உயர்விற்கும் ஓர் அற்புதமாகவே இன்றும் முழுமன்பதையின் ஆறிலொரு பங்கினரால் (இப்பொழுது மூன்றிலொரு பங்கு) கருதப்பட்டுவரும் ஒரு கிரந்தத்தை அவர் இயற்றியிருக்கின்ருர். அது முஹம்மதால்[ஸல்] உரிமை பாராட்டப்பட்ட ஒரே அற்புதமாய்க் காணப்பட்டது ;— தம்முடைய நிரந்தரமான அற்புதமென்று அன்னவர் அதனைக் கூறிவந்தார்;— மேலும், மெய்யாகவே அஃதோர் அற்புதமாகவே இருந்துவருகின்றது. ஆனால், அக்காலத்தின்

சமய சந்தர்ப்பங்களையும், அவருடைய சிஷ்யர்கள் அன்னவர்மாட்டு வைத்திருந்த அளவிறந்த மேதை மரியாதைகளையும் நன்கு நோட்டமிட்டு, அவரை மாதா கோயிலின் பாதிரிமார்களுடனேனும் மத்தியகாலத் திருத்தொண்டர்களுடனேனும் ஒப்பு நோக்குங்கால், முஹம்மதைக் குறித்து^ஸல் என் மனத்தில் தோன்றும் மகாஅற்புதமாய்க் காணப்படுவது, அவர் ஒருபோதும் அற்புதம் விளைக்கக்கூடிய சக்தி தமக்குண்டென்று கூறிக்கொள்ளாததாகவே யிருக்கிறது. தம்மால் செய்யக் கூடுமென்று எதனை அவர் கூறினாரோ, அதனை அன்னவர் செய்து முடிப்பதாகவே அவருடைய சிஷ்யர்கள் கண்டுவந்தார்கள். அவர் எப்பொழுதும் செய்யாதனவும், தம்மால் செய்யமுடியுமென்று எப்பொழுதும் கூறிக்கொண்டிராதனவுமான, அப்படிப்பட்ட அற்புதச் செய்கைகளை யெல்லாம் அவர்கள் (அச் சிஷ்யர்கள்) அவர்மீது சுமத்தாதிருத்தல் முடியாது. அதனைப் பார்க்கினும் வேறென்ன சிறந்த மேலான சாக்ஷியம் அவரது யதார்த்தமான தன்மையைக் குறித்து வேண்டப்படுதல் கூடும்? முஹம்மத்^ஸல் தம்முடைய இறுதி நாள்வரை, அவர் ஆரம்பத்தில் கூறிய பட்டமொன்றனையே, அஃதாவது, தாமொரு தூதர், அல்லாஹ்வின் அடிமையே யென்று கூறியதையே— மகோன்னதத் தத்துவ சாஸ்திரமும், மகா மெய்யான கிறிஸ்துமதமும் பின்னொருநாள் இதனை அன்னவருக்கு அளிக்குமென்றே யான் உறுதியாக நம்புகின்றேன்— கொண்டாடி வந்திருக்கின்றார்."

* * * *

“ உலகப் பெருமதங்கள் ” என்ற நூலில் ஆல்பிரட் டபிள்யூ. மார்ட்டின் என்பவர் பின்வருமாறு வரைகின்றார் :—

“ ஆதிகாலத்திய இஸ்லாமிய பிரதிநிதிகளுக்கு இவ்வுலகம் கணக்கிலடங்கா வகையிலே கடமைப்பட்டதா யிருக்கின்றது. என்னெனின், இவர்களே அரிய பொக்கிஷங்களாகிய மத்தியகால கிரேக்க இலக்கியங்களினின்று புதிய மொழிபெயர்ப்பையு முண்டாக்கி, கலாஞானக் காலத்தைத் துரிதப்படுத்தி அமைத்தவர்கள். அதுவேயுமன்றி, இவர்கள், மிகவும் புகழுடன் விளங்கும் தாஜ்மஹால், அல்ஹம்ரா முதலிய விடங்களில் சித்திர, சிற்பக்கலைகளின் உன்னதத்தைக் காட்டியிருக்கிறார்கள். இவர்களே கணித சாஸ்திரம், வான சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம் இவைகளிற் சிறந்து விளங்கியவர்கள். இவர்களே ‘ ஸாரஸென் ’ (ஸ்பெயின்) ராஜ்யத்தில் கல்லூரிகள் பல அமைத்தவர்கள் ; பாக்தாதிலும் காஹிராவிலும் உலகப்பிரசித்திபெற்ற நூல் நிலயங்களை நிலைபெறுத்தியவர்கள். லண்டன்மா நகரம் குடிசைகள் நிறைந்து, அதன் தெருக்களெல்லாம் துர்நாற்றம் வீசிச் சுவாசம் விடுதற்கும் முடியாதிருந்த அக் காலத்திலே, கார்டோவா (கர்த்தபா) நகரம் அழகிய சுத்தமான வீதிகளுடனும், காட்சித் தோட்டங்களுடனும் சிறப்புற்று விளங்கிற்று. பெரும் பான்மையான மக்களால், சீன அக்ஷரங்கள் அதிகம் உபயோகப்படுத்தப் பட்டாலும், அரபு பாஷையே அதிகம் பேசப்பட்டு வந்தது. இனி அரபு பாஷையானது உலகத்தையே தன்னுள்

ளாக்கிக் கொள்ளும். இவ்வரபுமொழி குன்றுமாயின், இஸ்லாம் மதமும் குன்றிவிடுமென்றே கூறவேண்டும். இன்றும் நாம், முஸ்லிம்கள் செய்யக் கற்றுக்கொடுத்த படியேதான் நெசவுத்தொழில் செய்து தரையையும், சுவர்களையும் அலங்காரம் செய்கிறோம்; அவர்கள் கற்றுக் கொடுத்ததைக் கொண்டுதான் நறுமணக் கலவைகள் செய்து சுகந்தவின்பத்தால் மகிழ்வுறுகிறோம்; அவர்களால் வரையப்பட்ட உயரிய கணித நூல்களி னின்றுமே நாம் நம் குழந்தைகளுக்குக் கணிதம் கற்பிக்கின்றோம்.

"ஜீவராசிகள்மாட்டு அன்புடன் நடத்தலும் மயக்கம் தரும் மதுபானவகைகளை நீத்திருத்தலுமே மிகவும் பிரதானமான இஸ்லாமிய போதனைகளாகும். கொடிய குடிப்பழக்கமே உஷ்ணதேசங்களில் மிகவும் வியாபித்திருக்கிறது. இதனைத் தடுப்பான்வேண்டிக் கிறிஸ்து மதம் மதக்கட்டளை யொன்றும் ஈயாததுடன், புதிய ஆகமத்தில் இப்பழக்கத்திற்கு அனுமதியும் தரப்படுவது முஹம்மதின் ஸல் எதிர்ப்புக்குக் காரணமாகும். ஆபிரிக்கக் கூட்டத்தினருக்கு மதுபானத்தை அறவே ஒழிக்கும் கொள்கை காரணமாகக் கிறிஸ்து மதத்தைப் பார்க்கினும் இஸ்லாம் மதமே மிகவும் சிறந்ததாகுமென்று ஹார்வார்டு கல்லூரியின் மாஜீ அத்தியக்ஷராகிய எலியட் என்பவர் தம் பிரசங்கமொன்றில் கூறியிருக்கின்றார். கான்ஸ்டாண்ட்டிநோபிளில் 20 வருஷம் வசித்துவந்த ஜெனரல் வியூவாலஸ் என்பவர் கிறிஸ்தவக் குடியர்களைப் பிரதிதினமும் தாம் கண்டுவந்ததாகவும், ஆனால், ஒருநாள்கூடக் குடித்த ஒரு முஸ்லி

மையும் தாம் கண்டதேயில்லை யென்பதாகவும் கூறுகின்றார். கிறிஸ்தவர்கள் அதிகமாயுள்ள நகரங்களைத் தவிர்த்து, அவர்கள் தேசங்களில் வேறு கிறிஸ்தவ நகரத்தில் 'ஜீவஹிம்சையைத் தடுக்கும் சங்கங்கள்' காணப்படுவதில்லை. துருக்கிய சமாதிபீடங்களில் கூடச் சலவைக் கற்களின் நாற் புறங்களிலும் மழைத்தண்ணீர் தேங்கும் வண்ணம் வாய்க்கால் விடப்பட்டிருக்கிறது. இஃதேனெனின், பறவைகள் தங்கித் தண்ணீர் அருந்துவதற்கே யாம். எப்படிக் கிறிஸ்தவர்கள் இயேசு மலைமீதுசெய்த பிரசங்கத்தைப் பின்பற்றி ஒழுகாதது மதத்தைக் குறைவுபடுத்தி விடாதோ, அப்படியே எல்லா முஸ்லிம்களும் மதக்கட்டளைகளுக்கு ஒப்பநடவாமை யென்பதும் மதத்திற்கு இழுக்காகாது. ஒரு மதத்தின் உயரிய தத்துவங்கள் பொதுமக்களால் அனுஷ்டித்தொழுகக்கூடிய எல்லையைச் சற்றுக் கடந்ததாகவே யிருக்கும்.

"குழந்தைப் பருவத்தில் கீழ்ப்படிதல் என்பது எப்படி அத்தியாவசியமாய் வேண்டப்படும் சிறந்த குணமாகின்றதோ, அஃதேபோல் இஸ்லாம் மார்க்கத்தை ஜனங்களின் தேவைகளை நன்குணர்ந்து, அதற்கொத்த விதத்திலே எம்பிரான் முஹம்மத்[சல்] அமைத்திருக்கின்றார்கள். ஆகவே, விதிகளுக்குக் கீழ்ப்படிதல் என்பது இம்மதத்தின் அபிவிருத்தித் தன்மையைக் காட்டுகின்றது. தங்காலத்திலிருந்த சமூகங்களை மதபோதனையிலும், நன்னெறியிலும் உயரச்செய்து, முரண்பட்ட கொள்கையினரை யெல்லாம் ஒன்றுபடச்செய்து, யூதமதமோ கிறிஸ்துமதமோ சாதிக்க

முடியாததை எம்பிரான் முஹம்மத்சல் அவர்கள் சாதித்து விட்டார்கள். இவ்வித உயரிய மதத்தை நிறுவியதிலும், மேற்கூறிய நாகரிகத்தொண்டை முற்றுப் பெறச் செய்ததிலும் எம்பிரான் முஹம்மத்சல் அவர்கள் அந்த அரபுநாட்டுக்குமட்டும் பெருஞ்சேவை செய்ததோடில்லாது, இவ்வுலகினுக்கே பெருந்தொண்டாற்றியவ ராகின்றார்கள்."

* * * *

"இஸ்லாத்தின் சரித்திரம், ஒழுக்கத்தின் உச்சஸ்தானத்தினின்று வழுவிய நிலைகளைச் சிறிது வெளிக்காட்டிக்கொண் டிருப்பினும், இன்னம் அநேகம் பிரகாசமுள்ள ஏடுகளையே தனக்குள்ளே பெற்றுக்கொண்டிருக்கின்றது. தன்னுடைய கீர்த்தி நிரம்பிய நாட்களில் இஸ்லாம் மதப்பொறுமை யற்றதாக இருந்து வந்த தில்லை; அஃது இவ் வுலகத்தின் நன்மதிப்பை அதிகம் பெற்று விளங்கிற்று. மேல்நாடு முழுவதும் அந்தகாரத்துள்ளே ஆழ்ந்து கிடந்தக்கால், கீழ்த்திசையடிவானத்தில் ஒரு ஜோதிமயமான நக்ஷத்திரம் உதயமாகி, நைந்து புலம்பிக்கொண்டிருந்த இவ்வுலகினுக்குப் பிரகாசத்தையும் சுக சௌகரியத்தையும் அளிக்கத் தொடங்கிற்று. இஸ்லாம் ஒரு பொய்யான சமயமன்று. ஹிந்துக்கள் இதனை மரியாதையுடனே படித்துப் பார்க்கட்டும்; பிறகு என்னைப் போலவே அன்னவர்களும் அதன்மீது அபிமானம் அதிகம் பாராட்டத் தலைப்படுவார்கள்."

—எம். கே. காந்தி.

* * * *

"பிரெஞ்சு ராஜப்புரட்சிக் கலகம் தோன்றுவதற்குப் பன்னெடுங்கால முன்னரே இஸ்லாம் சுதந்தரத்துக்கும், சமத்துவத்துக்கும், சகோதரத்துவத்துக்கும் கொடிபிடித்து நின்றது."

—அறிஞர் வஸ்வானி.

* * * *

"இஸ்லாம் விசுவ சகோதரத்துவத்தை—சம்பூர்ணக் குடியாட்சி முறையையே உபதேசிக்கின்றது; இதனை நோக்கியே மேல்நாட்டுலகம் மிகமிகச் சமீபித்துக்கொண்டிருக்கிறது. அதிகம் விரிந்து கிடக்கும் பல்வேறு மதக் கொள்கைகளின் குவிந்துவரும் உச்சி இஸ்லாமாகவே அமைய அதிருஷ்டம் பெற்றிருக்கின்றது."

—ஸரோஜனி தேவி.

* * * *

"தென்னுபிரிக்காவிலுள்ள ஐரோப்பியர்கள் இஸ்லாத்தின் அபிவிருத்தி கண்டு திகில்கொள்கிறார்களென்று எவரோ ஒருவர் கூறியிருக்கின்றார்.—ஸ்பெயின் தேசத்தை நாகரிகமடையச் செய்த இஸ்லாம், ஸ்பெயினுக்குள் ஞானத் திவர்த்தியைக் கொண்டு சென்று உலகினுக்கே சகோதரத்துவச் சித்தாந்தத்தை உபதேசித்த இஸ்லாம்; இதனைக் கண்டுதான் அவர்கள் திகில் கொள்கிறார்கள். ஆம்; தென்னுபிரிக்காவிலுள்ள ஐரோப்பியர்கள் இஸ்லாத்தின் அபிவிருத்தி கண்டு திகில் கொள்கிறார்கள்; என்னெனின், சுதேச ஜாதியினர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டு

விடுவார்க ளாயின், அவர்கள் வெள்ளை ஜாதியார்களுடன் சமத்துவம் கோருவார்க ளென்னும் விஷயத்தைக்கண்டே யஞ்சுகிறார்கள். ஏனென்றால், ஜூலூ ஒருவன் கிறிஸ்துமதத்தினைத் தழுவிக் கொள்வானாயின், அதனாலேயே எல்லாக் கிறிஸ்தவர்களுடனும் சம அந்தஸ்தைப் பெற்றுவிடுவ தில்லை யென்பதை யான் கண்டிருக்கிறேன். ஆனால், அவன் இஸ்லாத்தினை ஏற்றுக்கொண்ட வுடனேயே ஒரு முஸல்மானுடைய அதே கோப்பையில் அருந்துகிறான்; அதே தட்டையில் புசிக்கிறார்கள். இதனைக் கண்டே அவர்கள் திகில் கொள்கிறார்கள்."

—எம். கே. காந்தி.

* * * *

"பண்டைக்கால ஐரோப்பிய உலகம் காட்டுமிராண்டிகளின் படையெழுச்சியினால், வாயால் வர்ணித்துக் கூறமுடியாத அத்துணைக் காரிருள் கம்மிய ஆழிய அந்தகாரத்துள் நிவர்த்திசெய்ய முடியாத மந்தாரத்துள் மூழ்கிக் கிடந்த போழ்து, இஸ்லாம் அவ்வெடிப்புக்குள் தலையிட்டுப் பேரிலக்கிய ஞானத்தின் அடிமுளைகளை உற்சாகம் மிக்க கவலையுடன் போஷித்து அவற்றினைச் சத்தியத்தினாலும் சுதந்தரத்தினாலும் உண்டு பண்ணப்பட்ட பரமாணு மண்டலத்தில் பூத்துப் பழுத்துப் பலன் தருமாறு வளர்த்திராதிருப்பின், நவீன நாகரிகமென்பது என்னவா யிருக்குமென்று யான் வினவுகின்றேன்."

—டாக்டர், பீ. ஸீ. ரே.

* * * *

"முஹம்மத்^ஸல் ஒரு யுத்தவீரர்; ஒரு சுத்த வீரர். அவர் தமது கட்சத்தினைப் பற்றி, எதிரிகள் தம்மைத் தடுத்துத் தங்களுக்குரிய தீய நெறியினை விடாது பற்றித் திரியும்வரை அவர்களுடனே யுத்தம் புரிவார். ஆனால், வெற்றி கிடைத்து, எதிரியின் யுத்தகலன்களும் பிடுங்கப்பட்டவுடன் அவருடைய (நபி பெருமானுடைய) மனநிலையும் உடனே திடீரென்று மாறுதலடைகின்றது. அந்த வன்மைமிக்க எதிரி பகைவனாயில்லாது போய்விடுகிறான்; அவன் மன்னிப்பைக் கொண்டே எதிர்கொண் டழைக்கப்படுகிறான். உண்மையில் வெற்றிகொண்டவரே தோல்வி யடைந்தவனது நட்பினை விழைகின்றார். இதுதான் முஹம்மதின்^ஸல் ஒழுக்க முறையாகும்;— தாராள மனத்துடன் கூடிய வீரத்தனம் மிக்க ஒழுக்க முறையாகும். பிற்காலங்களில் ஐரோப்பாவின் மத்தியகால முழுதும் 'சுத்த வீரத்தன' மென்பது அதிக கௌரவத் துடனே கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால், அஃது அரப் நாட்டிலேயே முதன்முதலாக ஜனித்து, அவ்விடத்திலேயே முஹம்மதால்^ஸல் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. முஹம்மதே^ஸல் முதல் சுத்தவீரராவார்."

—டாக்டர், ஹியூகோ மார்க்கஸ்.

*  *  *  *

"அந்த...வால்யூம்கள், நபிகள் திலகத்தின் அநேகந் தோழர்களுடைய செய்கைகளில் காணப்படும் அந்தரங்க விஷயங்களை அறிந்து கொள்ளுதற்கு எனக்குப் பெரிதும் அபிருசியை யளித்துக்கொண் டிருக்

இன்றன. அவர்களுடைய உயிர்வாழ்க்கைகள் எவ்வாறு மாந்திரீக சக்தியால் சுறுக்குண்டனவே போல், திடீரென மாறுதலடைந்து விட்டன வென்பதும், அவர்கள் நபிபெருமான் மாட்டு எத்துணை யதிகமான பக்தி விசுவாசம் மேற்கொண்டிருந்தன ரென்பதும், இவ்வுலக ஐசுவரியங்க ளிடத்து அவர்கள் எத்துணை அலக்ஷிய புத்தியுள்ளவர்களாக ஆய்விட்டன ரென்பதும், அவர்கள் தங்கள் உயிர்வாழ்க்கையின் மகாஎளிய தன்மையினைக் காண்பித்தற்கே எவ்வாறு தங்கள் சக்தி முழுதையும் செலவு செய்தார்க ளென்பதும், செம்பொன்னின் பேராசையால் எவ்வாறு அவர்கள் அலைக்கப்படாமலே யிருந்துவந்தார்க ளென்பதும் தங்களால் புண்ணியமென்று கருதப்பட்ட ஒரு காரியத்தில் அவர்கள் எவ்வாறு தங்களுடைய சொந்த உயிர்களையும் அலக்ஷியம் செய்து வந்தார்க ளென்பதும் ஆகிய வை யெல்லாம், அவற்றுடன் ஆழிய நம்பிக்கையையும் உடன்கொண்டு செல்லத்தக்க முறையிலே அத்துணை அழகிய விவரப்பெருக்குடன் வருணிக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய உயிர் வாழ்க்கைகளை ஒருவர் பார்வையிட்டு விட்டு, இஸ்லாத்தின் இக்காலப் பிரதிநிதியா யுள்ளவர்களின் உயிர்வாழ்க்கைகளையும் உற்றுநோக்குவாராயின், அன்னவர் மிக்க வருத்தத்துடன் கூடிய கண்ணீர்ச் சொட்டையே உகுக்க வேண்டியவ ராகின்றார்.

"நான் தோழர்களை விடுத்து, நபிபெருமானிடமே வந்து சேர்ந்தேன். மௌலானா ஷிப்லீ அவர்களால் எழுதப்பட்டுள்ள அந்த மாபெரிய

இரண்டு வால்யூம்களும் மெச்சத்தக்க காரியமாகவே காணப்படுகின்றன. அந்த இரண்டாவது வால்யூமை யான் படித்து முடித்தபொழுது, அந்தப் பெரிய ஜீவியத்தைக் குறித்து இன்னம் அதிகம் படிக்க எனக் கில்லையே யென்று யான் வருந்தினேன். அக்காலத் திய ஜீவவாழ்க்கையில் இஸ்லாத்திற் கென்று ஒரு ஸ்தானத்தை அடையப் பெற்றது வாளாயுதமன் றென்றே யான் எப்பொழுதும் மில்லா வண்ணம் நன்குணர்ந்து கொண்டு விட்டேன். அதுதான் (அவருடைய) கடுமையான எளிய வாழ்க்கையும், நபிபெருமானது முழுத் தன்னலத்துறவும், வாக்குறுதி கள் விஷயத்தில் அதிக பக்தியான நன்மதிப்பும், அவருடைய நண்பர்களிடத்தும் சிஷ்யர்களிடத்தும் அவருக்கிருந்துவந்த விசுவாசமும், அவருடைய அஞ் சாமையும், அவருடைய தைரியமும், ஆண்டவன் மீதும் தம்முடைய கைங்கரியத்தின் மீதும் இருந்து வந்த அவருடைய உறுதியான நம்பிக்கையும் ஆகி யவைகளேயாம். இவைகளே யல்லாமல் வாளாயுதமே அவருக் கெதிர்ப்பட்ட ஒவ்வோர் இடையூற்றினையும் ஒதுக்கித் தள்ளிக்கொண்டுபோய் ஒவ்வொரு முட்டுக் கட்டையின்மீதும் வெற்றிபெற்று விளங்கவில்லை."

—எம். கே. காந்தி.

* * * *

"இஸ்லாம் ஒரு சன்மார்க்கம்; ஆனால், அஃ தொரு சன்மார்க்கத்தைப் பார்க்கினும் மிகவும் மேம் பட்டதாகவே இருந்து வருகிறது; என்னெனின்,

இப்பூவுலகின் கண்ணே இஃதொரு பிரம்மாண்டமான அரசியற் சக்தியாய்க் காணப்படாநின்றது. இஸ்லாம் ஒரு சமுதாயத் திட்டம்; ஆனால், அஃதொரு சமுதாயத்திட்டத்தைப் பார்க்கினும் நிச்சயமாகவே மிக்க மேம்பட்டதா யிருந்துவருகிறது; என்னெனின், இதற்குள்ளே பல்வேறு நெடுந்தூரப் பிரதேசங்களிலும் பல்வேறு ஜாதியார்களுள்ளேயும் இருந்தெல்லாம் விசுவாசங்கொண்டவர்கள் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இஸ்லாம் இணையற்ற மாதிரியிலே ஒருயர் தனிச் சமயமா யிருந்துவருகிறது; இஸ்லாத்தின் விசுவ சகோதரத்துவத்திற் குள்ளேயல்லாமல் வேறெங்குமே காணப்படாத மாதிரியில் அஃதொரு நூதன விதமாக அமைந்து கிடக்கின்றது. எனவே, இஸ்லாத்தின் பக்கல் நேரே வந்து அண்மி ஒருபொழுதும் தெரிந்து கொள்ள மாட்டாத அப்படிப்பட்ட மனிதர்கட்குத் தெரிவிக்கக் கூடிய முறையிலே இலக்ஷணித்து எடுத்துக் காட்ட இயலாத மாதிரியிலே அஃதொரு விதமாக அமைந்து கிடக்கின்றது. ஆனாலும், இப்போதைய உலகிலே அழுத்தமாக அங்கீகரிக்கப்பட்டு, ஆராய்ச்சி செய்யப்பட்டு, நன்கு கருதப்படுதற்குரிய ஒரு சக்தியாகவும், ஒரு சமயமாகவும், ஒரு திட்டமாகவும், ஒரு சகோதர ஏற்பாடாகவுமே இஸ்லாம் இப்பொழுது அமைந்து கிடக்கின்றது.''

—ஜான் எஸ். ஹோய்லாந்து.

* * * *

"நபிநாயகம் மனிதர்களை அறியாமையினின்றும் விக்கிரஹ ஆராதனையினின்றும் விடுதலைசெய்யும் நன்னோக்குடனேயே எல்லாக் காரியத்தையும் செய்து வந்தார்கள். அன்றியும், தமக் குள்ளே புகுந்து கொண்டு கிடக்கும் உயரிய ஏக தெய்வக் கொள்கை யைப் பஹிரங்கமாய்ப் பிரசாரம் புரிய வேண்டுமென் பதும் அவர்களின் முக்கிய நோக்கமா யிருந்துவந்தது. முஹம்மதைப்(சல்அம்) பின்பற்றிய மேலான முஸ்லிம் களின் நடையும் முறையும் குணமும் எத்துணையோ விதத்தில் மேலானவையா யிருக்கின்றன வென்றால், அம் முஹம்மதைப்பற்றி அதிகம் நாம் கூறவேண்டுவ தின்று."

—ஜீ. எம். ராட்வெல்.

* * * *

"யான் மெத்தப் பயபக்தி விசுவாசத்துடனே இதைச் சொல்ல முன்வருகின்றேன். உண்மையில் சகல நன்மைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள பரி சுத்த மேலான ஒரு சன்மார்க்கம் ஆண்டவனிடத் திருந்து வெளியாயிருக்கிற தென்றால், அது முஹம் மதுடையசல் மார்க்கமாகவே இருக்கிறது. பரோப காரமும் நம்பிக்கைக்குரிய மனோ திடமும் நன்மை தீமையின் முழு ஆராய்ச்சியும் தீமையை விலக்கக் கூடிய நல்வழிகளுமே தெய்விகத்துக்குத் தக்க அடை யாளமா யிருக்கின்றன வெனின், முஹம்மதுடைய மிஷ்ஷனே தெய்விகமான தென்பதில் சந்தேக மில்லை."

—டாக்டர், லட்டீஸ்.

* * * *

" முஹம்மத்சல் எவ்வழியிலும் நபியல்லவா? அவர் நபியாயிருக்கிறரென்பதற்குப் போதிய இரண்டு விசேஷங்கள் நிச்சயமாய் அவரிடத்தில் காணப்பட்டன. முதலாவது, தந் தேசத்தவர் பார்க்க முடியாமலிருந்த தெய்வத்தின் உண்மையான பிரகாசத்தை அவர் கண்டிருந்தார். அன்றியும், அவருடைய மனத்துள் சத்தியத்தையே பின்பற்றி நடக்கும்படி தூண்டிக்கொண்டிருக்கும் உண்மையான ஒரு சக்தியும் இருந்து கொண்டிருந்தது. "

டாக்டர், மார்க்ஸ் டியூட்ஸ்.

*  *  *  *

"முஹம்மத் (சல்அம்) தந்தேயத்தினர் தம்முடைய பிதாமாஹர் ஹஜ்ரத் இப்ராஹீம் கலீலுல்லாவுடைய உண்மையான சன்மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டுமென்றே எண்ணினர். மூஸா தந்தேச யூதர்களுக்குள் ஒரு புத்துணர்ச்சியை உண்டுபண்ணியதே போல் இவரும் இப்ராஹீமின் மார்க்கத்தைப் புதுப்பித்து வைத்தார். அஃதுடனே அவர் தமது நோக்கத்தில் பூரண வெற்றியையு மடைந்தார். "

—பாதிரி ஸ்டீபன்ஸ்.

*  *  *  *

" முஹம்மதைக்சல் குறித்து, அவருடைய ஞாபகத்திற்கு அறிகுறியாய் உள்ள இம்மாதத்தில் (ரஜப் மாதம்) தியானம் செய்துகொண்டிருந்தபோது, யான் அம்மனிதரது அளவிறந்த சக்தியைக் கண்டு இறும்பூதெய்தினேன். கட்டுப்பாடற்று, ஒழுக்க

வீன முற்று, குடியர்களாக, கற்களையும் இந்திரிய உணர்ச்சிகளையும் வணங்கிக்கொண்டு கிடந்த மனிதர்களின் மத்தியிலே முஹம்மதென்னும்[சல்] இம்மனிதர் எழுந்து நிற்கின்ருர் ;— அநேகமாகத் தனியாகவும், தைரியத்துடனும், அனைவரையும் அறைகூவி அழைத்துக்கொண்டும், மரணத்திற்குரிய பயமுறுத்தாட்டல்களை யெல்லாம் மகா அலட்சியத்துடனே எதிர்த்துக்கொண்டும் நிற்கின்ருர். அந்தப் போராட்டத்தில் ஓர் உறுதியுள்ள வீரராக நிமிர்ந்து நிற்பதற்கு அவருக்கு எது பலத்தைக் கொடுக்கின்றது ? அம்மனிதர்கள் இம்மனிதரது உபதேசத்திற்குச் செவிசாய்க்கின்ருர்கள். இவருடைய வார்த்தைகளில் காணப்படும் மந்திரீகசக்தி எங்கிருந்து வருகின்றது ? அடிமைகளையெல்லாம் இவர் விடுவிக்கின்ருர் ; ஒடுக்கப்பட்டாரையெல்லாம் இவர் 'மேன்மக்க'ளுடனே சரிசமானமாக ஆக்கி விடுகின்ருர் ; ஆனால், இங்கே இந்தியாவிலோ நாம் தீண்டப்படாதாரின் உரிமைகளுக்காக இன்னம் போராடிக்கொண்டும், ஒதுக்கப்பட்ட ஜாதியார்களைக் கடவுளரின் ஆலயங்களுக்குள் அனுமதிக்க இன்னம் முடியாமலிருந்துகொண்டும் வருகின்ரும். ஆயின், முஹம்மதென்னும் (சல்அம்) மனிதர் தம்முடைய உயிர்வாழ்க்கைக்குரிய உத்வேகத்தை எங்கிருந்து பெற்றுக் கொண்டார் ? இந்தியா தேசம் இன்னமும் மதுபானத்தின் தீமையினுல் கறையாக்கப் பட்டே வருகின்றது ; நம்முடைய மறியல் வேலைகளெல்லாம் ஓர் எல்லைவரையில் மட்டுமே சென்று அதற்கப்பால் செல்ல முடியாமல் தயங்கி நிற்கின்றன. முஹம்ம

தென்னும் மனிதர், பண்டை ஆதாரபூர்வமான நூல்கள் கூறிக்கொண்டிருக்கும்வண்ணம் எல்லாவகை மதுபானமும் 'பாய்க்காட்' செய்யப்பட வேண்டுமென்று உத்தர விட்டார். உடனே மதீனாவின் வீதிகளில் அம்மனிதர்கள் எல்லாரும் மதுவகைகளுக்குரிய அந்த ஜாடிகளனைத்தையும் எடுத்தெறிந்து உடைத்து விட்டார்கள். முஹம்மதிற்கு^சல் அவருடைய மக்களின்மீது இப்படிப்பட்ட "ஹிப்னட்டிஸப்" பிடிப்பின் இரகசியம் எங்கிருந்து வரலாயிற்று? அவர்களெல்லாரும் சிதறுண்டு போய்க் கிடந்தார்கள்; அப்படிப்பட்டவர்களை அவர் ஓரே ஜாதியினராகப் பிணித்து வைத்தார். அவர்கள் அரை மிருகப் பிராயத்தினுள்ளே ஆழ்ந்து தாழ்ந்து கிடந்தார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் கைதூக்கிவிட்டு, எதேச்சையடையச் செய்து, நாநா தேச மக்கள்களின் முன்னே அவ்வனந்தர அரபிகளைப் பெரியோர்களாகவும், ஞானவான்களாகவும், பலசாலிகளாகவும் ஆக்கிவிட்டார். அரப் தேசமென்பது நாகரிக உலகத்திற்கெல்லாம் தலைமை ஸ்தானத்தைத் தாங்கி நிற்கத் துவக்கிக் கொண்டது. அரபிகள் அப்பால் ஞானத்தின் ஜோதியை எங்கெங்கும் தாங்கிச் செல்லக் கூடியவர்களாய் விட்டார்கள். அரபிக் கலாஞானமே ஆசியா கண்டத்திலும் ஒருவகை நூதனப் புனருத்தாரணத்தையும், ஒரு புதிய சிஷ்டாசார நிபுணத்துவத்தையும் வளர்க்க ஆரம்பித்துக் கொண்டது. ஏ முஹம்மத்! மகரிஷிகளின் கீழ்ப்படிதலுள்ள ஓரூழியனாகிய யான் உமக்கே முழுப் பணிவுடனும் மரியாதையுடனும் வழி

பாடு செய்கின்றேன். ஆண்டவனுடைய உண்மை நபியொருவருக்குப் பணிவதே போலத்தான் யாமும் நும் முன்னே பணிந்து நிற்கின்றேம். அந்த மகா சக்தியானது ஆதியந்தமற்ற அந்த அகண்டாகாரப் பொருளிடத்திருந்தே அருளப்பட்டிருந்தது. எனவே, இனிப் பிறக்கப்போகும் நூற்றாண்டுகளெல்லாமுங் கூடத் தேச சரித்திரத்தின் ஓர் ஆழமற்ற இணையற்ற மகானென்று உமக்கே வந்தனை புரிந்து சிரம் வணங்கி நிற்கும்.

திரு. ட்டி. எல். வஸ்வானீ, ஹைதராபாத் (சிந்து)

---

## நபிபிரான் கொடுமையிழைத்தன ரென்னும் குற்றச்சாட்டுக்கள்

"ஆதலின், அல்லாஹ்வினின்று (பிறந்து)ள்ள கருணையினாற்றான் நீர் அவர்களைத் தயையுடன் நடாத்துகின்றீர்; மேலும் நீர் கடுமையான வன்னெஞ்சராக இருந்திருப்பின், நிச்சயமாகவே அவர்கள் நும்மைச் சுற்றிலுமிருந்து சிதறுண்டு போயிருப்பார்கள்" (குர்ஆன், 3 : 158).

### துவேஷத்தினால் குற்றங்காண்டல்

நபிகள் பெருமான்மீது குற்றஞ் சாட்டும் மேல்நாட்டினர் நியாயவுணர்ச்சியை அடியோடு இழந்துவிட்டனர் என்றே காண்கின்றனர். அவர்கள் நபிபிரான் சரிதைபற்றிச் செய்யப்புகுந்த குணதோஷ ஆராய்ச்சிகள் யாவும், "அம்மஹானது பெருமைக்குப்

பங்கம் விளைப்பதும் பாதகமானதுமான விஷயம் எது வாயிருப்பினும் அது சத்தியமானதென்றே அங்கீகரித்தல்" என்னும் நிபந்தனைக் குட்பட்டதாகவே காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக, சமீப காலத்தில் "எக்ஸ்பான்ஷன் ஆப் இஸ்லாம்" என்னும் புத்தகத்தில் அதன் ஆசிரியர் மிஸ்டர் கியாஷ் என்பார் எழுதி யிருப்பவற்றை எடுத்துக்கொள்ளலாம். நபிகள் பெருமானாரது ஆக்ஞையால் நடந்தேறிய "சதிமானப் படுகொலைகள்" என்று சில சம்பவங்களைக் குறிப்பிட்டு, இவற்றின் காரணமாக, "கொடியர்", "வன்கண்ணர்", "நம்பிக்கைத்துரோகி" என்னும் அடைமொழிகளால் அப் பெருமானாரை இவர் தூற்றுகின்றார்—(பக். 29). இவ்வாசிரியர் தமது குற்றச்சாட்டிற்கு ஸர் வில்லியம் மூயிர் என்பாரது கிரந்தத்தினின்றே விஷயங்களைச் சேகரித்திருக்கிறார். இவர் அரப் நூல்கள் சிலவற்றிலிருந்து ஆதாரம் காட்டியிருக்கின்றாராயினும், நல்லொழுக்க சீலமே உருக்கொண்டாலன்ன நற்றவச் சிரேஷ்டர் என்று நாற்பது கோடி மக்களாற் கொண்டாடப்படும் ஒரு மஹானைக் கண்டனஞ் செய்யுமுன்னர், தாம் எடுத்தாளும் ஆதாரங்கள் மெய்யானவை தாமா? என நுணுகி ஆராய ஒரு சிறிதும் முயன்றாரில்லை. "சதிமானப் படுகொலைகள்" என்று இவர் குறிப்பிடும் சம்பவங்கள் ஐந்தாகும்; ஆறாவதாமொரு குற்றச்சாட்டு பனூ குறைலா என்னும் யூத வம்சத்தினரைப் பற்றியது. இறுதியாக நபிபிரான் அவர்கள் மீது சுமத்தப்படுவது மூயிர் கூட அறியாததும், ஒரு பெண்

ணைக் கற்பழிக்க இடங்கொடுத்தனர் என்பதுமான ஒரு வீண்பழியே யாகும். இக் குற்றச்சாட்டுக்களைப் பற்றி ஈண்டுச் சுருக்கமாக யாம் ஆராய்வாம்.

### முஸ்லிம்கள் நிந்தனையைச் சகித்திருக்க வில்லையா ?

“படுகொலைகள்” என்று கூறப்படும் ஆறு சம்பவங்களுள் ஐந்து யூதர்களைப் பற்றிய வென்பதே இங்கு முதன்முதலாக நமது கவனத்தை ஈர்க்கும் அம்சமாகும். யூதர்கள் “வேதக்காரர்கள்” ஆக இருந்தமையால், முஸ்லிம்கள் விக்ரஹத் தொழும்பர்களோடு நடந்துகொண்டதைக் காட்டினும் வேதக்காரர்கள் மாட்டு மிக்க நேயம் பாராட்டியே நடந்து வந்தனர். முஸ்லிம்களை மக்காவின்கண் பதின்மூன்று ஆண்டுகள் மிகக் கொடிய ஹிம்சைக் குட்படுத்தியவர்களும், அப்பால் அவர்களை அடியோடு அழித்தொழிக்கும் பொருட்டு மதீனுவுக்குப் படையெடுத்துச் சென்றவர்களுமாகிய அராபிய விக்ரஹத் தொழும்பர்களை வெறுமையாக விட்டுவிட்டு, தமது வேதத்தின் பற்பலவிடங்களில் மிக்க கண்ணியத்துடனே குறிப்பிடப் பெற்றுள்ள தீர்க்கதரிசிகளைப் பின்பற்றியவர்களான வேதக்காரர்களை முஸ்லிம்கள் படுகொலை புரிந்தனர் என்று கூறுதல் எத்தகைய விபரீதக் கூற்ருயிருக்கிற தென்பது நடுநிலை வகிக்கும் அறிஞர்களது சிந்தனைக் குரிய விஷயமாகும். இங்குப் பிரஸ்தாபிக்கப்படும் யூதர்கள் யாவரும், வேறு எத்தகைய பெரும் பிழையேனும் செய்தது காரணமாகவன்றி, முஸ்லிம்கள் நெஞ்சம் புண்படுமாறு வசைக்கவி பாடிய குற்றம்

காரணமாகவே படுகொலை புரியப்பட்டன ரென்று ஸர் மூய்ரும், மிஸ்டர் கியாஷும் சாதிக்கின்றனர். கவி பாடுதல் யூதர்களது விசேஷ இலட்சணமா யிருக்க வில்லை ; இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் நிந்திக்கும் கவிகளுள் பெரும்பாலன, யூதர்களாலன்றி, விக்ரஹத் தொழும்பர்களான அரபிகளாலேயே பாடி வெளி யிடப் பெற்றன. உண்மையில், கவி பாடுதல், யூதர் களாலன்றி, அரபிகளாலேயே கைக்கொள்ளப் பெற்ற பெருவழக்கா யிருந்தது ; இஸ்லாத்தை அவமதித் திகழும் கருவிகளாகப் பரிகசப் பாக்களையும் வசைக் கவி களையும் மேற்கொண்டவர்கள் அரபிகளேதாம். மானி டர் யாவரினும் சிறந்த சத்தியவந்தரும் கருணையங் கடலுமாய் விளங்கிய ஒருவரை வன்கணாளரென்றும் நம்பிக்கைத் துரோகி யென்றும் நிந்திப்பதற்குத் தாம் ஆதரவாய்க் கொண்ட சாஸனங்கள் நம்பிக்கைக் குரியவை தாமா வென்று பரிசீலனை செய்துபார்க்க மேற்கூரிய ஆசிரியர்கள் இருவருள் ஒருவரேனும் துணிந்தன ரில்லை. இவர்கள் இவ் விஷயத்தை நுணுகி ஆராய்ந்திருப்பார்க ளாயின், தம்மை மிகக்கேவலமாக நிந்தித்து வசைக் கவிகளால் துன்புறுத்தியவர் யூத ராயினும் விக்ரஹாராதனையை மேற்கொண்ட அரபிக ளாயினும், அந் நிந்தனையை முஸ்லிம்கள் பொறுமை யோடு சகித்துக்கொண்டிருந்தன ரென்று உணர்ந் திருப்பார்கள். யூதர்கள், கிறிஸ்தவர்கள், விக்ரஹத் தொழும்பர்கள் ஆகியவர்களுள் எவர் தம்மைத் தூஷிப்பினும் முஸ்லிம்கள் அதனைச் சகித்துக்கொள்ள வேண்டுமென்று நிச்சயமாகவே குர்ஆன் தெளிவான

கட்டளை பிறப்பித் திருக்கிறது. முஸ்லிம்கள் எதிரி களோடு யுத்தம் புரியத் தொடங்கின காலத்திற்குப் பின்னர் வெளியான திருவாக்கியம் ஒன்று வருமாறு :— "மேலும் நுங்களுக்கு முன் வேதம் அருளப் பெற்றவர்களினின்றும், விக்ரஹாராதனை புரிபவர் களினின்றும் நிச்சயமாகவே நீங்கள் மிகுதியான நிந்தனையைச் செவிமடுப்பீர்கள் ; மேலும் நீங்கள் பொறுத்திருந்து (தீமையைவிட்டு நுங்களைப்) பாது காத்துக் கொள்வீர்களாயின், நிச்சயமாகவே இது நிர்ணயிக்கப்பட வேண்டிய காரியங்களுள் ஒன்ருக இருக்கிறது" (3 : 185). இவ்வாக்கியமானது ஹிஜ்ரீ மூன்ரும் ஆண்டில் நடைபெற்ற உஹுத் யுத்தத்தைப் பற்றிய பிரஸ்தாபம் அடங்கிய அதிகாரத்தில் உள் ளது ; எனவே, இஃது அவ்வாண்டிற்கு முற்பட்ட காலத்தில் வெளியானதாக இருத்தல் முடியாது ; மேற்கூறிய "படுகொலைகள்" என்னப் படுபவை நடைபெற்றகாலம் இதுவேயாகும். நபிகள் பெருமா ஞரும் அவர்களைப் பின்பற்றிஞேரும் குர்ஆன் ஷரீபின் கட்டளைக்கு நேர்விரோதமாக ஒழுகியிருத்தல் எங் ஙனம் சாலும் ? அத்திருமறையின் ஆணையை நபிகள் பிரான் மீறி நடந்திருத்தல் ஒருபோதும் முடியாது ; முஸ்லிம்கள் மிகுதியான இழிவுரைகளைக் கேட்க நேரிடுமென்றும், அவர்கள் அந் நிந்தனையைச் சகித்துக் கொள்ளுதலோடு அமையாது, அத்தகைய தீமையைக் கூடப் புரிவதினின்று தம்மைக் காத்துக்கொள்ள வேண்டுமென்றும் விக்ரஹாராதனைக் காரரான அரபி களுடனும் யூதர்களுடனும் யுத்தம் நடந்து கொண்

டிருக்கும் காலத்தே கட்டளையிடப்பட் டிருக்குங்கால், நிந்திப்பவரைக் கொன்று வீழ்த்துதல் என்னும் பிரச்சினை எழுந்திருக்கவேனும் இடமுண்டா? இப்படிப்பட்ட பரிஷ்காரமான உத்தரவிற்கு முரணாக நடக்குமாறு நபிகள் பெருமான் அனுமதி யளித்தலோ, அன்றி முஸ்லிம்கள் அங்ஙனம் நடத்தலோ சாத்தியமாமா? இஃது ஒருபோதும் முடியாத காரியமாகும்; எனவே, தம்மைப் பழிப்பவர்களைக் கொலைபுரியும்படி நபிகணாயகர் ஏவினரென்று பலஹீனமான ஆதார நூலாசிரியர்களாகிய இப்னு ஹிஷாம், அல்லது வாக்கிதீ கூறுகின்றனரெனின், அவர்கூற்று அபத்தமானதென்று நிராகரிக்கப்பட வேண்டுமேயன்றி, அப்பெருமானரது நடவடிக்கைகளைப் பற்றிய நூல்கள் யாவற்றினும் சிறந்த ஆதார பூர்வமானதென யாவராலும் ஒப்புக்கொள்ளப்பெற்ற குர்ஆன் ஷரீபின் சாட்சியத்தை நிராகரித்தல் முறைமையாகுமா? ஹிம்சை புரிந்த பகைவரை எதிர்த்து அமராடுதற்குக் குர்ஆன் அனுமதி கொடுத்ததாயினும், நபிபிரான் அவர்களைப் பழிப்பான் ஒருவனைக் கொல்லுதற்கு இடங்கொடுக்க மறுத்து விட்டது; அன்றியும், அஃது எதிரியின் நிந்தனையைப் பொறுமையோடு சகித்திருக்கும்படி வேண்டுகின்றது. வசைக்கவிகள் இயற்றினதற்காக ஜனங்களைக் கொல்லும்படி நபிபிரான் உத்தரவு பிறப்பித்து, அதே தருணத்தில் அக்கவிகளது நிந்தையைப் பொறுமையாலன்றி வேறு எவ்வகையாலும் எதிர்க்கலாகாதென விலக்கினரென்று கூறுதல் புத்திக்குப் பொருத்தமற்ற பொய்க் கூற்றேயாகும்.

### பண்டிதை அஸ்மா — மாதர் கொலை விலக்கு

மேலே குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களை ஈண்டுத் தனித்தனியே ஆராய்வாம். மிஸ்டர் கியாஷ் குறிப்பிட்டுள்ள முதற் சம்பவம் ஔஸ் வம்சத்தினளாகிய அஸ்மாவைப் பற்றியதாகும். இவள் தன்னைச் சார்ந்தவர்களும் பத்ர் யுத்தத்தில் வீழ்ந்தவர்களுமாகிய சிலரைக் குறிப்பிட்டு, அவர்களைக் கொன்று வீழ்த்திய "பாதகன்" என்று நபிகள் பெருமானை நிந்தித்துக் கவி பாடிய பண்டிதையெனச் சொல்லப்படுகிருள். இந் நிந்தனையின் பொருட்டாக இவள் உமைர் என்னும் முஸ்லிம் ஒருவரால் கொல்லப்பட்டாளென்றும், நபிகள்பிரான்[சல்] இச் செய்கையை அங்கீகரித்த தன்றிக் கொலை புரிந்தவரைப் போற்றினரென்றும் ஒருசெய்தி கூறப்படுகிறது. இந் நிகழ்ச்சிக்கு ஆதாரமாக வாக்கிதீ, இப்னுஹிஷாம், இப்னுஸஅத் ஆகியோரது நூல்கள் காட்டப்பட்டிருக்கின்றன. நிந்திப்பவரைக் கொல்லுதற்குக் குர்ஆன் அனுமதி அளிக்கவில்லையென மேலே விளக்கப்பட்டிருத்தலாலும், மாதர்கள் உண்மையாகவே முஸ்லிம்களை எதிர்த்துப் போர்புரிய நேர்ந்தாலுங்கூட அவர்களைக் கொல்லலாகாதென நபிகள் பெருமானர் பல்காலும் பிறப்பித்த தெளிவான உத்தரவுகளாலும் இவ் வாதாரங்கள் நம்பிக்கைக் குரியன அன்றென்பது பெறப்படும்; மிகச் சிறந்த ஆதார நூலாகிய புகாரீயில் "போர் நிகழுங் காலத்து மாதரை வதைத்தல்" (கித்தாபுல் ஜிஹாத்) என்னும் அதிகாரத்தில் இப்னுஉமர்[ரலி] வாயிலாய்க் கிடைத்த

பின் வரும் நாயகவாக்கியம் காணப்படுகிறது: "நபிகள் பெருமானார்சல் அவர்கள் நடாத்திய ஒரு போரில் மாதொருத்தி கொல்லப்பட்டிருந்தாள்; ஆதலின், மாதரையும் குழந்தைகளையும் கொல்லலாகாதென அப்பெருமானார் விலக்கினார்கள்." சத்துருக்களின் சைன்னியத்துடன் உண்மையாகவே சேர்ந்துறையும் பொழுதுங்கூட மாதரை வதைக்கலாகாதென்று கட்டளையிட்டருளிய நபிகணாதர், கேவலம் இழிவுரையாடியதற்காகவேனும் வெறுப்பு விளைக்கும் கவியியற்றியதற்காகவேனும் ஒரு மாதைக் கொன்றதை அங்கீகரித்தல் அல்லது கொன்றவரைப் போற்றுதல் எங்ஙனம்? பெண்டிரை வதைத்தலுக்கு விரோதமாய்ப் பெருமானார் செய்திருந்த கண்டிப்பான உத்தரவை அவர்களது தோழர்களும் எத்துணை நன்குணர்ந்தவர்களா யிருந்தார்களெனின், தமக்கும் அபுல்ஹுகைக்குக்கும் இடையே அவனுடைய மனைவி குறுக்கிட்ட பொழுது, "ஒரு பெண்ணை வதைக்கவொண்ணாதென்று நபிகள் பிரான் இட்டிருந்த கட்டளை ஞாபகத்திற்கு வந்தமையால்," அத்தோழர்கள் ஓங்கிய வாளாயுதங்களைப் பிரயோகிக்காது நிறுத்திக்கொள்ள நேர்ந்தது.—(பத்ஹுல்பாரி; அத். அபுல்ஹுகைக்கின் வதை). இத்தகைய தெளிவான அத்தாட்சி யிருக்குங்கால், ஒருவன் துவேஷபுத்தி படைத்தவனா யிருந்தாலல்லது, நிந்தனைப்பாக்கள் இயற்றிய குற்றங்காரணமாக ஒரு மாதைக் கொல்லும்படி நபிகள்பிரான் உத்தரவிட்டு, அவ்வாறு கொன்றவரைப் புகழ்ந்தனர் என்னும் ஒரு செய்தியை ஆதாரபூர்வ

மானதென அங்கீகரித்தல் இயலாது. ஐயமின்றியே இஃதொரு போலிக் கட்டுக்கதையாகும்.

ஆகவே, யுத்தமுனையிலாயினும் பெண்டிரைக் கொல்லுதலை நபிகள் பெருமான் கண்டித்து விலக்கின ரென்னும் உண்மை அணுத்துணை ஐயத்திற்கும் இட மின்றியே பெறப்படுகின்றது. இவ்விஷயத்தில் இஸ் லாத்தின் ஹதீது நூலாசிரியர் யாவரினும் மிக்க நம்பிக் கைக்குரியவர் என்று அறியப்பட்ட இமாம் புகாரீயின் நூலாதாரம் காட்டப்பட்டிருக்கிறது. "போர் நிகழுங் காலத்து மாதரை வதைத்தல்" என்னும் அத்தியாயத் தில் இந் நாயகவாக்கியம் காணப்படுகிறது; எனவே, இவ்விலக்குவிதி போர் முனையிலும் அனுஷ்டிக்கப்பட வேண்டியதாகும் என்பது நன்கு புலப்படும். இச் சம்பவத்தையும் இவ்வுத்தரவையும் பற்றிய செய்தி புகாரீயில் மாத்திரம் காணப்படுவதா யில்லை; சிஹாஹ் சித்தா (நம்பிக்கைக்குரிய 6 ஹதீதுத்தொகுதிகள்) என் னப்படும்நூல்கள் ஆறனுள் ஐந்து நூல்களில் இச் செய்தி பதிவுசெய்யப் பெற்றிருக்கின்றமையால், இது மெய்யான செய்தி என்பது நிராட்சேபமாய் ஒப்புக் கொள்ளப்படவேண்டியதாகும். அன்றியும், மாதரைக் கொல்லலாகா தென்னும் இவ்விலக்கு இஸ்லாத்தின் விசேட விதிகளுள் ஒன்றாகு மெனப் பிற்காலச் சட்ட நிபுணர்கள் அங்கீகரித் திருக்கின்றார்கள். எனவே, மாலிக், ஔஜாஈ இமாம்களின் அபிப்பிராயப்படி எத் தகைய காரணத்தாலும் பெண்டிரையும் குழந்தை களையும் வதைத்தல் கூடாது; இமாம் ஷாபிஈ அவர் களுடையவும், கூபாவைச் சார்ந்த நிபுணர்களுடையவு

மான கருத்தின்படி, ஒரு மாது உண்மையிலே ஆயுதந் தாங்கிப் போர் புரிபவளாயிருப்பின், அவளை எதிர்த்து வதைத்தல் ஆகும் என்பது பெறப்படுங்கால், மற்றொரு நிபுணரின் அபிப்பிராயப்படி, அவள் போர் வீரர்களுள் ஒருத்தியாய் நிற்கும் காலத்தும் கொல்லும் உத்தேசத்துடன் ஒருவனைத் தாக்கினாலன்றி அவளை வேண்டுமென்று வதைபுரிதல் சட்டப்படி குற்றமாகும்—(அபூதாவூதுக்கு வியாக்யானமாகிய ஔனுல் மஃபூத்; அத். மாதரைவதைத்தல்). ஆனால், மாலிக், ஔஜா இமாம்களது கருத்தின்பிரகாரம், மேற்கூறியவாறு எக்காரணத்தானும் ஒரு மாதைக் கொல்லலாகாது; இவ்விதியை இந்த நிபுணர்கள் எத்துணைத் தூரம் வலியுறுத்துகின்றார்களெனின், போர்புரிந்த ஒரு சைன்யவகுப்பானது மாதரும் குழந்தைகளும் உறையுமிடத்து அடைக்கலம் புகநேர்ந்தாலும், அல்லது அவ்வகுப்பானது பெண்டிரும் சிறுவரும் இருக்கும் ஒரு கோட்டையை அல்லது படவைச் சரணடைந்தாலும், அக்கோட்டையை அல்லது படவைநோக்கிச் சுடுதல் அல்லது அவற்றிற்கு நெருப்பிடுதல் சட்டபூர்வமான குற்றமாகும்—பத்ஹுல்பாரீ; அத். அஹ்லுத்தார்—யாபித்துன்). இத்தகைய தெளிவான ஆதாரங்களை நோக்குங்கால், நிந்தனைக்கவிகள் இயற்றியதைத்தவிர வேறு எவ்விதக் குற்றமேனும் காரணமாகவின்றி, போர்நிகழாத சமாதான காலத்தில் ஒரு மாதைக் கொலைபுரியும்படி நபிகள்பிரான் கட்டளையிட்டனர் என்பது மனத்தாற் சிந்திக்கவும் தகாத அபத்த உரையேயாகும்.

### அபூ அபக்

மிஸ்டர் கியாஷ் குறிப்பிடும் இரண்டாவது நிகழ்ச்சி, "அஸ்மா செய்த குற்றத்தையே புரிந்த" ஒரு யூத விருத்தாப்பியரைக் கொலைபுரிந்ததாகச் சொல்லப் படும் கதையாகும். அஸ்மாவின் கொலையைப்பற்றியது போலவே இதுவும் ஓர் ஆதாரமற்ற கற்பிதக் கதை யென்று கூற நாம் சிறிதும் பின்வாங்க வேண்டுவ தின்று. இதற்குக் காரணம் யாதெனின், மாதர் கொலையை விலக்கிய உத்தரவு சிறுவரையும் விருத்தாப் பியரையும் உளப்படுத்தியதா யிருந்தது. புகாரீயில் காணப்படும் பெருமானார் வாக்கியம் மாதரையும் குழந்தைகளையும் மட்டுமே குறிப்பிடுகிற தென்பதும் வயது முதிர்ந்தவர் விஷயம் ஆங்குக் குறிப்பிடப்பட வில்லை யென்பதும் உண்மைதான்; ஆயினும், அனஸ் இப்னு மாலிக்[ரலி] வாயிலாய்க்கிடைத்த ஹதீ தொன்று அபூதாவூதில் காணப்படுகிறது—(அத். துஆஉல் முஷ்ரி கீன்). அது வருமாறு:—"ஒரு விருத்தாப்பியனை யேனும், ஒரு குழந்தையையேனும், பருவம் எய்தாத ஒரு பாலியனையேனும், ஒரு மாதையேனும் வதை புரியாதீர்கள்." அன்றியும், எஜீதிப்னு அபூசுப்யான்[ரலி] என்பாரைச் சேனாதிபதியாக நியமித்து, சிரியாவுக்கு அனுப்பியபோழ்து முதலாவது கலீபாவாகிய செய் யிதனா அபூபக்ர்[ரலி] அவர்கள் பிறப்பித்த உத்தரவினாலும் நபிகள் பெருமானார் விருத்தாப்பியரை வதைபுரிவதை விலக்கியிருந்தனர் என்பது புலனாகின்றது. அவ் வுத்தரவில் இவ்விஷயம் சம்பந்தப்பட்ட பாகம் வரு

மாறு :—" குழந்தைகளையேனும், மாதர்களையேனும், விருத்தாப்பியரையேனும் வதைபுரிய வேண்டாம்" (பத்ஹுல் கதீர்; வால். 5, பக். 202). நபிகளுடைய கரது செய்கையின் ஆதாரங்கொண்டே கலீபா அவர்கள் இப்படிப்பட்ட கட்டளை பிறப்பித்திருக்க வேண்டும் என்பது வெளிப்படை. எனவே, பெண்டிரைக் கொல்லலாகா தென்னும் விலக்கு இருந்திருப்பது போன்றே வய்து முதிர்ந்தவர் சம்பந்தமாகவும் ஒரு விலக்கு இருந்திருக்கிறது. இத்தகைய பரிஷ்காரமான விலக்கு விதியைப் பிறப்பித்த நபிகள்பிரான் அவர்கள் தாமே, விரும்பத்தகாத பாக்கள் யாத்த அற்பப்பிழையின் பொருட்டாக ஒரு யூதக்கிழவனாகிய அபூ அபக்கைக் கொலைபுரியும்படி உத்தர விட்டிருத்தல் முடியாதென்பதை மீண்டும் ஒரு முறை நாம் அழுத்தமாய்க் கூறத் துணிகின்றோம்.

போர்வீரர் மட்டுமே கொல்லப்படலாம்—இப்னுசுன்னா

ஹிதாயா என்னும் நூலில் விளக்கமாகக் கூறப்பட்டிருப்பதற் கிணங்க ஒரு மனிதன் கொலைபாதகனாயிருந்தாலன்றி, அவன் போர்வீரனாக எதிர்த்து நிற்றல் அல்லாத வேறு எக்காரணங் கொண்டும் அவனுடைய உயிரைப் போக்கலாகாது. " அவர்கள் ஒரு மாதையாவது, ஒரு குழந்தையையாவது, வயது முதிர்ந்த ஒருவரையாயது, ஒரு யுத்தத்தில் பங்கெடுத்துக் கொள்ளாத ஒருவரையாவது, ஓர் அந்தகரையாவது கொல்லுதல் கூடாது; ஏனெனில், நமது அபிப்பிராயப்படி, ஒருமனிதனது உயிரைப் போக்குதற்குரிய நியாய

மானது அவன் ஒரு போர்வீரனாக எதிர்ப்பவனாயிருந்த லேயாகும்; அவர்கள் விஷயத்தில் இஃது உண்மை யன்று" (அத். கைபிய்யத்துல் கித்தால்). உண்மையில், ஹனபீ மதுஹபின் சட்டத்திற்கு மூலாதாரமாகிய இம் முடிபானது, நபிகள் பெருமானார் அவர்களது உறுதியான திருவாக்கையே ஆதரவாய்க் கொண்ட தாகும். ரபாஹிப்னு ரபீஃ[ரலி] அபூதாவூத் அவரது வாயி லாய் அறிவித்திருக்கும் செய்தியொன்று வருமாறு:—
"நாங்கள் நபிகளாருடன் ஒரு யுத்தகளத்தில் இருக் குங்கால் ஜனங்கள் ஓர் இடத்திற்குச்சென்று கூடுவதை அவர்கள் கண்டார்கள்; எனவே, ஜனங்கள் அவ்வாறு கூடியது ஏனென்று விசாரிக்கும்படி அவர்கள் ஒரு வரை அனுப்பினார்கள். அத் தூதர் திரும்பிவந்து, 'ஆங்கொரு பெண் கொல்லப்பட்டிருக்கிறாள்' என்று அறிவித்தார். 'அவள் போர்புரிய வில்லையே!' என்று நபிபிரான் அவர்கள் கூறினார்கள். அச்சமயம் காலித்[ரலி] படைத்தலைவரா யிருந்தார்; ஆதலின், நபிபிரான்[சல்] அவர்கள் ஒருவரை அனுப்பி, 'ஒரு பெண்பிள்ளையை யாவது ஒரு கூலியாளையாவது அவர் கொல்லக்கூடாது' என்று காலித்[ரலி] இடம் சொல்லச் சொன்னார்கள்"— (அத். கத்லுன்னிஸா). "அவள் போர்புரிய வில்லையே!" என்று வியந்து கூறியதனால் போர் முனையிலாயிருப் பினும் உண்மையாகவே போர்புரிபவரை மட்டும் வதைத்தல்தான் முறைமையாகுமென நபிபெருமான் அவர்கள் விளக்கி, மாதரோடு கூலியாட்களையும் கொல்லலாகாதென விலக்கியிருக்கிறார்கள்; ஏனெனில், அக் கூலியாட்கள் யுத்தத்தில் தலையிடாதவர்களும்

இதர வேலைகளுக்காக அமர்த்தப் பெற்றவர்களுமாக இருந்தனர். இவ்வாதாரத்தின்மீதே, ஹனபீ மதுஹபின் சட்டமானது, மாதர்கள், குழந்தைகள், விருத்தாப்பியர்களோடு யுத்தம்புரிய இயலாதவர்கள் யாவரையும் விலக்குவிதிக் குட்பட்டவர்களெனத் தீர்மானித் திருக்கிறது. எனவே, நபிபெருமானாரது சொந்தக் கட்டளைகளின் பிரகாரம் ஒருவர் போர் புரிபவரா யிருந்தாலன்றி அவரைக் கொலைபுரிதல் கூடாதகாரியமென்றும், போர்புரியாத ஒருவர் கொல்லப்பட்டா ரென்னும் செய்தியொன்று நம்பிக்கைக் குரிய ஹதீதுத் தொகுதி யென்னப்படும் ஒரு நூலிற் காணப்பட்டாலும் அது பொய்யான அல்லது பிழையான செய்தியென்றுமே நாம் துணியவேண்டியது இன்றியமையாததா யிருக்கிறது. இனி ஜீவியசரிதக் கதைகளைப் பற்றியோ வெனில், இத்தகைய விஷயங்களில் அவை நம்பத்தக்கவையல்ல; ஆதலின், இப்னு சுனைனாவின் கொலையென்பது அபத்தக்கதையென நிராகரித் தகற்றப்படல் வேண்டும். யூதர்களைக் கொலைபுரியும்படி நபிகள்பிரான் பிறப்பித்த ஒரு பொதுவான உத்தரவினால் இக்கொலை நடந்தேறியதென்று கூறப்படுவதொன்றே இது பொய்க்கதை யென்று தீர்மானிப்பதற்குப் போதிய சான்றாயிருக்கிறது; ஏனெனில், இப்படிப்பட்ட பொதுவான கட்டளை குர்ஆன் ஷரீபின் தெளிவான ஆக்ஞைகளுக்கு முரண்பட்டதாயிருத்தல் மட்டுமின்றி, இக் கட்டளை உண்மையில் இடப்பட்டிருப்பின் அதன் முடிவு ஒரு

தளித்த யூதரது கொலையாக மட்டும் நிறைவேறியிருத்தல் முடியாது.

### கஃபிப்னு அஷ்ரப்

இனி நாம் இங்கு ஆராயவேண்டியது ஹதீதுத் தொகுதிகளிற் குறிப்பிடப்பட்டிருக்கும் உண்மையான நிகழ்ச்சிகளாகும். இவற்றுள் முதலாவது கஃபிப்னு அஷ்ரப் சம்பந்தமானது. நபிகள் பெருமானாரைப் பற்றி எவ்வாறு விஷயங்கள் திரித்துக் கூறப்பட்டிருக்கின்றன என்பதை இச்சம்பவம் ஒன்றே புலப்படுத்தத்தக்கதா யிருக்கின்றமையால், இதனைச் சிறிது விரிவாக ஆராய்தல் வேண்டற்பாலதா யிருக்கிறது. கஃபின் தந்தை தை வம்சத்தைச் சேர்ந்தவன்; ஆனால், அவன் மதீனாவிற்கு வந்த பின்னர், பனூ நுலேர் என்னும் யூதவம்சத்தினருக்கு நண்பனாகி, யூதத் தலைவன் ஒருவனுடைய புதல்வியை மணக்கும் அளவு அவ்வகுப்பினர்க் கிடையே செல்வாக்குப் பெற்றான். எனவே, கஃபென்பவன் யூதர்களுக்கும் அரபிகளுக்கும் நெருங்கின உறவினனா யிருந்தான். பெருமானார் அவர்கள் மதீனாவில் குடியேறிய பின்னர் அவர்களோடு யூதர்கள் ஓர் ஒப்பந்தஞ் செய்துகொண்டனர்கள்; யூதர்களும் முஸ்லிம்களும் தத்தம் மதத்தைப் பின்பற்றுவோராகவே ஒரு ஜாதி மக்களேபோல வாழ வேண்டுமென்பதும், மதீனாவைப் பகைவர் தாக்குங் காலத்தும் வேறு எவருடனேனும் தர்மயுத்தம் புரிய வேண்டிய அவசியம் நேருங்காலத்தும் யூதர்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் உதவிபுரியக் கடமைப் பட்ட

வர்களாவர் என்பதும் இவ் வொப்பந்தத்தின் நிபந்தனைகளா யிருந்தன. எல்லா வியவகாரங்களிலும் பெருமானார் செய்யும் தீர்ப்பே முடிவானதா யிருக்க வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆயினும், ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டில் மக்கா வாசிகளான எதிரிகள் மதீனாவின்மீது படையெடுத்துச் சென்ற போழ்து, அவர்களை முஸ்லிம்கள் மாத்திரமே எதிர்த்துப் பொருத வேண்டியதாயிற்று; எதிரிகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பாகத்திற்கும் குறைவான தொகையினராகவும், யுத்தோப கரணங்களிலும் பயிற்சியிலும் எதிரிகளினும் தாழ்ந்த நிலையினராகவும் இருந்தும், பத்ர் என்னுமிடத்தில் நடந்தேறிய போரில் எதிரிகளை முற்றும் முறியடித்து முஸ்லிம்களே வாகைமாலை சூடினர். முஸ்லிம்களின் இவ் வெற்றியானது யூதர்கள் இஸ்லாத்தின்பால் பூண்டிருந்த பகைமையை அதிகரிப்பதாகவே முடிந்தது. மதீனாவில் செய்துகொண்ட ஒப்பந்தப்படி முஸ்லிம்களுக்கு உதவிபுரியக் கடமைப்பட்டிருந்த கஃபு, இது போழ்து, முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்திற்கும் விரோதமாய் எதிரிகளுக்கு ஆக்ரோஷம் உண்டாகுமாறு தூண்டுவதில் தனது நாவன்மையை உபயோகித்தான். இம்மட்டோடு நில்லாது அவன் மக்காவிற்குச் சென்று இஸ்லாத்தின் சத்துருக்களுடன் பகிரங்கமாய்ச் சேர்ந்துகொண்டான். பலமான சைன்னியம் திரட்டி மதீனாவை அதிசீக்கிரம் தாக்கவேண்டுவது அவசியமென அவன் குறைஷியரை வற்புறுத்தித் தூண்டிவிட்டு, மதீனாவின்மீது படையெழுச்சி நேருங்கால் தான் முஸ்லிம்களை எதிர்த்துப் போர்புரிவதாகத் தேவாலயமாகிய கஃபாவில் நின்று சத்தியமுஞ் செய்

தான். இது மட்டுமன்று; நபிகள் பெருமானார் அவர்களை இரகசியமாய்க் கொலை புரிந்து விடுவதென்னும் ஒரு சூழ்ச்சித் தீர்மானத்துடன் அவன் மக்காவினின்று மீண்டான். "லைப் ஆப் முஹம்மத்" என்னும் தமது நூலில், கஃபு எவ்வாறு வதைக்கப்பட்டான் என்பது பற்றி, நுண்ணிய விவரங்கள் ஒன்றையும் விடாது குறிப்பிடும் மூயிர், மேற்காட்டிய உண்மை நிகழ்ச்சிகள் எதனையும் விளக்கிக் காட்டாது ஒளித்து விட்டது கிறிஸ்து மதப் பிரசாரகப் பாதிரியின் குரோத மனப்பான்மையை நிகர்த்ததாயே நிற்கிறது. அன்றியும், இஸ்லாத்தின் மீது அவர் கொண்டிருந்த துவேஷ உணர்ச்சியைப் பின்வரும் வாக்கியங்களால் வெளியிட்டிருக்கிறார்:—

"இஸ்லாத்தின் ஆரம்ப அபிவிருத்தி யானது, கிறிஸ்து மதத்தின் ஆரம்ப அபிவிருத்தியோடு ஒப்பு நோக்குங்கால், நேர் முரணான முறையைக் காரணமாய்க் கொண்டு நிற்கின்றது. இயேசு மத நம்பிக்கையுடையவர்கள் பலர் அடிக்கடி தம்முயிர்களைத் தியாகஞ் செய்தமையால் அம்மதம் தழுவுவோரின் தொகை அதிகரித்ததாய்க் காண்கிறது; இஸ்லாத்தைப் பின்பற்றியவர்கள் ஏனையோருடைய உயிர்களைப் போக்க எத்துணைக் கெத்துணை ஆயத்தமா யிருந்தனரோ, அத்துணைக் கத்துணை அம்மதத்தைத் தழுவுவோர் பெருகின ரென்று தெரிகிறது; இவ்விரு மதங்களுள் ஒன்றைத் தழுவுதல் ஒருவனுடைய உயிருக்கு ஆபத்தா யிருந்திருக்க மற்றொன்றைத் தழுவுதலே உயிரைக் காப்பாற்றக் கூடியதா யிருந்திருக்கிறது."

மேலும், நண்பனாயிருந்த கஃபு போர்புரியும் சத்துருவாக மாறிவிட்டான் என்பது பற்றிய உண்மை

களை மூயிர் மறைத்துவிட்டார் என்ருல், மூலபாஷை நூலாதாரத்தோடு எழுதுவதாய்ப் பறைசாற்றும் கியாஷும் அக் குற்றத்திற்கே ஆளானவரா யிருக்கின்ருர். "சதிமானக் கொலை" என்னப்படும் இச்சம்பவம் நிகழ்ந்த காலத்து, முஸ்லிம்களுக்கும் அல்லாதாருக்கு மிடையே ஒருயுத்தம் நடந்துகொண் டிருந்ததென்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே, கஃபு போர் வீரர்களுள் ஒருவனு யிருந்தனனு? அன்றிப் போரில் சம்பந்தப் படாதவர்களுள் ஒருவனு யிருந்தனனு என்னும் கேள்வி இங்கு எழுகின்றது. அவன் உண்மையாகவே இஸ்லாத்தின் பகைவருடன் சேர்ந்துகொண்டு, முஸ்லிம்களை எதிர்த்துப் போர்புரிந்தவர்களுள் ஒருவனு யிருக்குங்கால் கொல்லப்பட் டிருப்பின், அதனைத் துரோகமென்றேனும், கொடுமையென்றேனும், படுகொலையென்றேனும் அழைத்தல் அடுக்குமா? போரில் சம்பந்தப்பட்ட சத்துருக்களுடன் கஃபு பகிரங்கமாய்ச் சேர்ந்து அவர்களுடைய நண்பனு யிருந்தான் என்பது எல்லாச் சரித்திரங்களாலும் துணியப்படுகிறது; அதுவேயுமன்றி, அவற்றுட் சில அவன் நபிகள்பெருமானை இரகசியமாய்க் கொலை புரியவும் சூழ்ச்சி செய்தானென்றுகூடச் சாட்சியம் பகர்கின்றன. அவ்வாதாரங்களுள் ஒரு சில வருமாறு:—

"அவன் (கஃபு) குறைஷியரிடத்துச் சென்று (பத்ர் யுத்தத்தில்) மாண்டுபோன அவர்கள் உறவினரை அண்மி அழுதுபுலம்பி, நபிபெருமானுடன் யுத்தம் புரியும்படி அவர்களுக்கு ஆத்திரமூட்டினுன்"—(ஜர்க்காலீ, வால். 2, பக். 10).

"அவன் (கஃபு) பகிரங்கமாக நம்மோடு விரோதம் பாராட்டி, நம்மை நிந்தித்து, (முஸ்லிம்களோடு

போர்புரிந்து கொண்டிருந்த) விக்ரஹாராதனைக்காரர் பாற்சென்று, அவர்களை நமக்கு விரோதமாய்ப் படை திரட்டும்படி செய்திருக்கிருன்" (என்று நபிபிரான் சல் நவின்றுள்ளார்கள்)— (ஜர்க்கானீ, வால். 2, பக். 11).

"மேலும் கல்பீ கூறுகிறபடி, அவன் (கஃபு) முஸ்லிம்களை எதிர்த்து யுத்தம் புரிவதாகக் கஃபாவின் திரைக்கு முன்பாகத் தீர்மானித்த ஒரு கூட்டத்தினருள் ஒருவனு யிருந்தான்"— (ஜர்க்கானீ, வால். 2, பக். 11).

"மேலும் அவன் (கஃபு) ஒரு விருந்து நடத்தி, அவன் நபிகள் பெருமானை அழைப்பதென்றும், அவர்கள் வந்ததும் திடீரென்று யாவரும் அவர்கள்மீது பாய்ந்து கொன்றுவிடுவதென்றும் சிலயூதர்களுடன் கூடிச் சதியாலோசனை புரிந்தான்"— (ஜர்க்கானீ, வால். 2, பக். 12).

கஃபு வதையுண்ணப் பட்டதுபற்றி புகாரீயில் காணப்படும் செய்திக்கு வியாக்யானம் எழுதிய பத்ஹுல் பாரீயின் ஆசிரியர், கஃபு மக்காப் போந்து, குறைஷியரைத் தூண்டி, முஸ்லிம்களுக்கு விரோதமாய்ப் போர்புரிய வேண்டுமென்று கஃபாவின் திரைக்கு முன்பாகப் பிரமாணஞ் செய்து, பகிரங்க விரோதியாகி, நபிகள் பெருமானை விருந்துக்கழைத்துக் கொலைபுரியச் சூழ்ச்சி செய்தான் என்னும் மேற்காட்டிய ஆதாரத்தை மேற்கோளாகக் காட்டியிருக்கின்ருர். கஃபின் வதையைப்பற்றிய செய்திகளை இமாம் புகாரீ தாமும் ஹர்ப் (போர்புரிதல்) என்னும் பதம் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்கீழ்க் கொணர்ந்து, அவன் போர் வீரர்களுள் ஒருவனுகக் கருதப்பட்டான் என்று காட்டி யிருக்கின்ருர்கள். அபூதாவூத் இவ்விஷயத்தைப்

"பகைவர் ஆயத்தமில்லா திருக்குங்கால் தாக்குதல்" என்னும் தலைப்பின்கீழ் விவகரித்து, கஃபு முஸ்லிம்களை எதிர்த்துப் போர் புரிதலில் ஈடுபட்டிருந்த சத்துருக்களுள் ஒருவனெனக் கொள்ளப்பட்டவ னென்று காட்டிச் சென்றிருக்கின்றார். "கஃபு முஸ்லிம்களைக் கொலைபுரியும்படி ஜனங்களைத் தூண்டிக் கொண்டிருந்தான்," என்பது இவரது வியாக்யானமாகும்; கஃபைக் கொல்லும்படி அனுப்பப் பெற்றவர்களது செய்கை கிரமமானதுதானா என்று விவாதிக்குங்கால், இவ்வியாக்யான கர்த்தா கூறுவது வருமாறு:—"ஒரு பகைவனுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டதன் பின்னர், அல்லது அவனோடு சமாதானம் செய்துகொண்டதன் பின்னர், அப்பகைவன் விஷயத்தில் இவ்வாறு செய்யலாகாது;.......ஆனால், ஒப்பந்தத்தை முறித்துவிட்டு, முஸ்லிம்களைக் கொல்வதில் மற்றையோருக்குத் துணைபுரியும் ஒருவன் விஷயத்தில் இஃது அனுமதிக்கப்பட்டுள்ளது." மேலும், "தங் தலைவன் கொல்லப்பட்டானென்று யூதர்கள் நபிகள் பெருமானாரிடம் முறையிட்டபோழ்து, அப்பெருமானார், அவன் செய்தவை யாவையென்றும், அவன் தங்களுக்கு விரோதமாய்ப் போர்புரியும்படி எவ்வாறு குறைஷியரைத் தூண்டிவிட்டானென்றும் அவர்களுக்கு எடுத்துக் காட்டி, தங்களோடு நேச உடன்படிக்கை செய்து கொள்ளும்படி கூறினார்கள்; அப்பால் இவ்வுடன்படிக்கையானது அலீ[ரலி] அவர்கள் வசம் இருந்தது," என்று இப்னுஸஅத் கூறுகின்றார். கஃபு தான் செய்திருந்த ஒப்பந்தத்தை முறித்துவிட்டு, நபிபெருமானுடன் போர்புரிந்து கொண்டிருந்த பகைவரோடு சேர்ந்து கொண்டதன் காரணமாகவே வதைக்கப்

பட்டான் என்பதையும், அப்பெருமானுரை நிந்தித்துக்கொண் டிருந்தவர் களாயினும் பகைவருடன் சேராத யூதர்கள் சமாதானத்துடனேயே வாழ்ந்திருந்தனர் என்பதையும், எதிரிகளோடு சேர்ந்துகொண்டமையால் கஃபு பகைவனுகவே கருதப்பட்டான் என்பதையும், சமாதான வாழ்க்கையின் பொருட்டு யூதர்கள் செய்ய வேண்டியிருந்த தெல்லாம் முஸ்லிம்களின் சத்துருக்களோடு சேர்வதில்லையென உடன்படிக்கை செய்து கொள்ளல் மட்டுமே என்பதையும் மேற்காட்டிய ஆதாரங்கள் வெள்ளிடை விலங்கலெண விளக்கிக் காட்டுவனவா யிருக்கின்றன.

இனி எமது ஆராய்ச்சிக்குரிய அம்சம் கஃபை சில முஸ்லிம்கள் திடீரென்று தாக்கிக்கொன்றது ஏன்? என்பதே யாகும். முதன் முதலாக, அவன் கொல்லப் பட்ட விதத்துக்கு நபிபிரான் எவ்விதத்தும் பொறுப்பாளி யல்லவென்பது நன்குணரப்படல் வேண்டும். அவன் மரணதண்டனைக் குரியவனே என்று அப்பெருமானுர் கருதினுர்கள் என்பது உண்மையாயினும், அத்தண்டனை எவ்வாறு நிறைவேற்றப்படவேண்டுமென அவர்கள் எத்தகைய உத்தரவேனும் பிறப்பித்தார்கள் என்பதற்கு ஆதாரம் ஒருசிறிது மில்லை. ஆனுல், ஓர் அறிக்கையின் பிரகாரம், அவனைக் கொல்லலாமா என்று முஹம்மத் இப்னு மஸ்லமா[ரலி] நபிகளுததரிடம் வினவிய போழ்து, அவர்கள் மௌனித்திருந்தார்கள்; மற்றோர் அறிக்கையின்படி, "அவ்வாறு செய்வதாயின் ஸஅதிப்னு முஆதை நீர் கலந்தாலோசிக்கும் வரை அவசரப்படாதீர்," என்று பெருமானுர் அவர்கள் கூறியிருக்கின்ருர்கள்—(ஜர்க்கானீ, வால். 2, பக்கம் 12). இஃது எவ்வாறிருப்பினும், கஃபு எங்ஙனம்

வதைக்கப்பட வேண்டும் என்பதுபற்றிய விவரம் ஒன்றும் நபிகள் பிரான் ஸல் அவர்கள் கூறவில்லை; இவ்வதை இவ்வாறு நடந்ததென்று நமக்குக் கிடைக்கும் விவரங்கள் உண்மைதான் என்றும் சொல்லக் கூடவில்லை; இதுபற்றி மூய்ருக்கும் சந்தேகம்தான். இவ்விவரங்கள் யாவும் உண்மையானவைதாம் என்று கருதப்படினும், இவற்றினோடு நபிபெருமானுக்கு எவ்விதச் சம்பந்தமு மில்லை. அப் பெருமானாரின் பொறுப்பு ஒருபுறமிருக்க, அக்காலத்து, அத்தருணத்து, ஆங்கிருந்த நிலைமையில் வேறு எத்தகைய முறையையும் மேற்கொண்டிருத்தல் முடியாது. இற்றை நாளில் குரோத புத்திகொண்டு குற்றங் காண்போர், முஸ்லிம்கள் அக்காலத்து மதீனாவில் வாழ்ந்த நிலைமை இவ்விருபதாம் நூற்றாண்டில் இவர்கள் வாழும் நிலைமையை ஒத்ததென்று கருதிக்கொள்ளுகின்றனர். ஒரு பகைவன் மீது "நடவடிக்கை" எடுத்துக்கொள்ளவேண்டியிருந்த அவர்கள், அக்காலத்தில் தாம் இருந்த நிலைமையில் சாத்தியமாயிருந்த முறையைக் கைக்கொண்டார்கள். முஸ்லிம்களுடன் யுத்தம் புரிந்து கொண்டிருந்த சத்துருக்களோடு சேர்ந்துகொண்ட கஃபு எல்லா மானுஷீக தெய்விகச் சட்டங்களின் பிரகாரமும் போர்வீரனை ஒரு சத்துருவாகவன்றி வேறு விதமாக நடத்தப்பட்டிருத்தல் முடியாது. அப் போர்வீரனை எதிர்க்கும் பொருட்டு ஒரு பிரிவினரான போர்வீரர் நபிகள் பெருமானாரால் அனுப்பப்பட்டனர்; எல்லா வரலாற்று நூல்களிலும் அப்பிரிவினர் ஒரு ஸரிய்யா (சைன்யத்தின் ஒரு பகுதி) என்றே குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்; எனவே, அவர்கள் அவனோடு

போர்புரியும் பொருட்டு அனுப்பப்பட்டனரென்று நாம் அறிகிறோம்; ஆனால், அச் சத்துருவை எவ்வாறு எளிதில் ஒழிக்க வேண்டும் என்று தீர்மானிப்பது அச் சைன்யப் பகுதியின் தலைவரது அபிப்பிராயத்தைச் சார்ந்த விஷயமாயிருந்தது. அத்தலைவராகிய முஹம்மத் இப்னு மஸ்லமா[ரலி] அது போழ்து இருந்த நிலைமைக் கேற்பச் சிறந்த உபாயமென்று தாம் கருதியதும், அரபிகளால் அங்கீகரிக்கப்பட்டதா யிருந்ததுமான ஓர் உபாயத்தை மேற்கொண்டார். இங்ஙனமின்றி இத்தலைவர் கஃபைப் பகிரங்கமாய்த் தாக்கியிருப்பின், கஃபோடு பனீ நுலைர் என்னும் யூத வர்க்கத்தினர் யாவரும் தாக்கப்பட்டுக் குருதிவெள்ளம் பெருக்கெடுத்தோடியிருக்கும். கஃபு என்பவன் நபிபிரானுடன் செய்த ஒப்பந்தத்தை மீறி, அவர்களை விரோதித்தெழுந்து முஸ்லிம்களை முற்றிலும் ஒழிக்கும்வரை போராடுவதென்னும் சத்துருக்களின் ஒப்பந்தத்தில் கட்டுப்பட்டு, பெருமானாரைக் கொலை புரிவதற்கும் முயன்றான். இக்குற்றம் ஒவ்வொன்றற்கும் அவன் மரணதண்டனை விதிக்கப்படவேண்டியவனே யாவான். இத்தண்டனையை நிறைவேற்றச் சிலர் அனுப்பப்பட்டனர்; இதனை அவர்கள் நிறைவேற்றிய முறையானது, இரகசியமானதாயிருந்த குற்றமுடையதென்றால், பகிரங்கத் தாக்குதல் குற்றவாளியுடன் நிரபராதிகளையும் பாதிக்கத்தக்கதா யிருந்தமையால், அப்பாதகத்தைத் தடுப்பதாயிருந்ததென்னும் சிறப்பினையுமுடையதாயிருந்தது; ஆயினும், இத்தண்டனை நிறைவேற்றப்பட்ட விதத்துக்கு நபிகள் பெருமான்[சல்] எவ்வகையாலும் உத்தரவாதியல்லர் என்பது சரதம்.

அபுல் ஹுகைக்

கஃபின் விஷயத்தை விரிவாக ஆராய்ந்த பின்னர் அபுல் ஹுகைக் (அபூ ராபிஃ) உடைய விஷயத்தைச் சுருக்கியே முடித்துவிடலாம். உண்மையில், துவேஷத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு, இவன் குற்றத்தை மூயிர் ஒப்புக்கொண் டிருக்கிறார். "யூதத் தலைவனாகிய அபுல் ஹுகைக்கின் வதை" என்னும் தலைப்பின் கீழ் அவர் பின்வருமாறு கூறுகின்றார்:—

"பனீ நுலேர் வர்க்கத்தின் ஒரு பகுதியினர், தமது வெளியேற்றத்தின் பின்னர், கைபரில் வசித்த தம்முடைய சகோதரர்களுடன் குடியேறியிருந்தனர். அவர்களுடைய தலைவனான அபுல் ஹுகைக் மதீனாவை முற்றுகையிட்ட கூட்டுச் சைன்யத்தில் முக்கிய ஸ்தானம் வகித்திருந்தவனாதலின், இச் சமயத்தில், அவன் பதவீ வகுப்புக் கொள்ளைக் கூட்டத்தினரைத் தூண்டிவிட்டுக்கொண் டிருந்ததாய்ச் சந்தேகிக்கப் பட்டான். எனவே, கைபர் யூதர்கள்மீது அலீயின் தலைமையில் ஒரு படையெழுச்சி நிகழ்ந்தது............. இத் தாக்குதல்களை நிச்சயமாய் நிறுத்தும் உபாயமாக, அவற்றின் கர்த்தாவாகிய யூதத்தலைவனையே ஒழித்துவிட முஹம்மத் தீர்மானித்தார்............அபுல் ஹுகைக் கொல்லப்பட்டதனால் கைபர் வாசிகளான யூதர்களைப் பற்றி முஹம்மதுக் கிருந்த அச்சம் அகலுமா றில்லை; ஏனெனில், அத்தலைவனது ஸ்தானத்திற்குத் தெரிந்தெடுக்கப் பெற்ற உசைர் என்பான் கத்பான் வம்சத்தினருடன் முன்போன்ற சம்பந்தமே வைத்துக்கொண்டிருந்தது மட்டுமின்றி, மதீனாவின்மீது புதிய போர் தொடுக்கப் பிரயத்தனம் செய்துகொண்டும் இருந்தானென்று அறிவிக்கப்படுகிறது."

பனீ நுலீர் என்னும் யூத வம்சத்தினர் முன்னர் மதீனு வாசிகளாகவும் நபிகள் பெருமானுடன் நேச உடன்படிக்கையால் கட்டுண்டவர்களாகவும் இருந்தனர்; ஆனால், அவர்கள் குறைஷியருடன் கடிதப் போக்குவரவு நடத்திவந்தார்கள் என்னும் சந்தேகம் ஏற்பட்டமையாலும், அவர்களுடைய நேயர்களான ஓர் அராபிக் கூட்டத்தார் முஸ்லிம்களுட் சிலரைக் கபடமாய்க் கொன்று விட்டமையாலும், அவர்கள் செய்திருந்த நேசவுடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்கப்பட்டபொழுது, அவ்வாறு செய்ய மறுத்து விட்டமையாலும் இறுதியாக மதீனுவி னின்று வெளியேற்றப் பெற்றார்கள். அவர்கள் யூதர்களுடைய கோட்டையாகிய கைபரில் குடியேறி, மதீனுவைச் சுற்றிலும் வசித்துவந்த பற்பல வகுப்பினரையும் முஸ்லிம்கள் வசிக்கும் இடங்களைக் கொள்ளையிடும்படி அடிக்கடி தூண்டிவிட்டுக் கொண்டேயிருந்ததனுல், முஸ்லிம்களுக்கு அளவிறந்த துன்பமே விளைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய தலைவனுன அபுல் ஹுகைக், இஸ்லாத்தை அடியோடு நசுக்கியொழிக்கும் நோக்கத்துடனே அரபி வர்க்கத்தினரும் யூத வர்க்கத்தினரும் ஒன்றுகூடித் தொடுத்த அஹ்ஜாப் பெரும்போரில்ஒரு தலைவனுகவும் இருந்தான். இவ்வாறு அபுல்ஹுகைக்கும் யூதர்களும் முஸ்லிம்களுக்கு விரோதமாய்ப் போர்முனைக்குச் சென்றது மட்டுமின்றி, அந்த நேசப் படையினர் பங்கமுற்றுத் திரும்பிச் சென்றதன் பின்னரும், அபுல் ஹுகைக் மதீனுவின் சுற்றுப்புற வாசிகளான அராபிக் கூட்டத்தினருக்கு உதவிபுரிந்து, முஸ்லிம்களின் வாசஸ்தலங்களைக் கொள்ளையடிக்கும்படி

தூண்டிக்கொண்டே யிருந்தான். எனவே, கைபர் வாசிகளான யூதர்கள்மீது நபி பெருமானூர் அவர்கள் ஒரு சைன்யப் பகுதியை அனுப்பியது நியாயமாகவே இருந்தது; ஆனூல், ஹிஜ்ரீ 7-ஆம் ஆண்டில் இவ்வாறு செய்யுமுன்னரே அபுல் ஹுகைக்கை மாத்திரம் வதைக்கும் பொருட்டு ஆறும் ஆண்டில் ஒரு சேனைத் தொகுதியினர் அனுப்பப்பட்டனர். தலைவன் ஒழிக்கப் பட்டதன் பின்னர்க் கலகம் ஓய்ந்துவிடக் கூடுமென்றும், ஏனைய இரத்தஞ் சிந்துதலைக் கூடுமான வரை தடுக்கவேண்டுமென்றும் நபி பெருமானூர் அவர்கள் கருதியதனூற்றான் இவ்வாறு செய்தார்கள் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. ஆயினும், அபுல் ஹுகைக்கின் மரணத்திற்குப் பின்னரேனும் முஸ்லிம்கள் விரும்பியவாறு அமைதி நிலைபெறவில்லை; எனவே, இறுதியாக, கைபரைத் தாக்கி வெற்றிகொள்ள வேண்டியது அத்தியாவசியமாயிற்று. அபுல் ஹுகைக்கின் மீது அனுப்பப்பெற்ற சைன்யப் பகுதியினர் மேற்கொண்டமுறை கஃபு விஷயத்தில் கைக்கொண்ட முறையை ஒத்ததாகவே இருந்திருப்பதற்கு மீண்டும் நபிகள் பெருமான் ஒரு சிறிதும் பொறுப்பாளியாக மாட்டார்கள்.

### பனீ குறைளா

மேற்கூறியவாறு முஸ்லிம்களுக்குப் பற்பல வகையிலும் தீங்கிழைத்து வந்த பனீநுலைர் வர்க்கத்தினரால் பனீ குறைளா வர்க்கத்தினரும் பாதிக்கப்பட்டனர். ஆரம்பத்தில் பனீ குறைளாக்கள் முஸ்லிம்களுக்கு விரோதமான யுத்தத்தில் சேர மறுத்து விட்டார்கள்; ஆனூல், முஸ்லிம்கள் நிச்சயமாகத் தோல்வியடைந்து

அடியோடு ஒழிக்கப்பட்டுப் போவார்களென்று அவர்களுக்குப் பலவிதமாக உறுதி கூறப்பட்டது. இஸ்லாத்தை அழித்தொழிக்கும் பொருட்டு நாலுபக்கங்களிலிருந்தும் புற்றீசல்களைபோல எழுந்த எண்ணிறந்த நேசச்சைன்யத் தொகுதிகளின் வலிமையைத் தடுத்துநிற்க அவர்களாற் கூடவில்லை. அவர்கள் மற்றை எல்லா வகுப்பினரும் ஒருங்குசேர்ந்த நேசப் படையினரோடாவது, அல்லது முஸ்லிம்களோடாவது முடிவாகச் சேர்ந்து நிற்பதுபற்றி நிச்சயமான தீர்மானம் செய்யவேண்டிய சங்கடம் வந்துவிட்டதென்று சொல்லப்பட்டார்கள். இவ்வாறு பனீ குறைளாக்கள் இஸ்லாத்தின் விரோதிகளோடு சேரும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அவர்கள் முஸ்லிம்களுடன் செய்திருந்த ஒப்பந்தத்தை முறித்துவிட்டு, அண்மையில் நடைபெற விருந்த அஹ்ஜாப் யுத்தத்தில் முஸ்லிம்களின் சத்துருக்களாகிய கூட்டரவுப் படையினருக்கு உதவி புரிவதாக அவர்களுடன் நேசவுடன்படிக்கை செய்து கொண்டார்கள். இப்புதிய ஒப்பந்தம் இரகசியமாய்ச் செய்யப்பட்டதாயினும், அமலுக்குக் கொணரப்படாமற் போகவில்லை. பனீ குறைளாக்கள் உண்மையாகவே யுத்தத்தில் கலந்து கொண்டார்கள். இவ்விஷயத்தைப் பின்வருமாறு குர்ஆன் ஷரீப் குறிப்பிடுகின்றது :— “(நேசப்படைச் சத்துருக்களாகிய) அவர்களுக்குத் துணைபுரிந்த வேதக்கார வகுப்பினர்', (33: 26). அவர்கள் போரில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதற்கு சரித்திரச் சாட்சியமும் இல்லாது போகவில்லை. அவர்கள் முஸ்லிம்மாதர்களைத் தாக்குவதற்கும் ஒரு கொடிய சூழ்ச்சி செய்தார்கள். அது முஸ்லிம்களுக்குப் பேராபத்தான தருணமா யிருந்துவந்தது. தமது நகரமாகிய

மதீனாவைச் சூழ்ந்த அகழியின் அக்கரையில் இருபத்து நான்காயிரம் போர்வீரர் இஸ்லாத்தை அழித்தொழிப்பதற்குப் பகீரதப் பிரயத்தனமெல்லாம் செய்துகொண்டிருக்க, நயவஞ்சகர்கள் பலர் தமக்கிடையே இருந்து அதி தீவிரமாய் விஷமம் புரிந்துகொண்டிருக்க அத்தகைய ஆபத்தான தருணத்தில் பனீகுறைளா வம்சத்தினர் செய்த நம்பிக்கை மோசமானது, முஸ்லிம்களின் சங்கடத்தைப் பன்மடங்கில் பெருக்கிவிட்டதாயிருந்தது. எனவே, அகழியுத்தம் ஓய்ந்த பின்னர், இனி வேறு எவரும் இப்படிப்பட்ட துரோகம்செய்யாது தடுக்கும் பொருட்டாக, பனீகுறைளாக்களைத் தண்டிக்கவேண்டியது அவசியமென்று கருதப்பட்டது. அவர்களுடைய கோட்டை முற்றுகை யிடப்பட்டது; சற்று எதிர்த்து நின்ற பின்பு அவர்கள் சரணடைந்தார்கள். ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டில் இது நடந்தேறியது.

### அவர்கள் பெற்ற தண்டனை

அவர்கள் அடையத்தக்க தண்டனை யாதென்று தீர்மானிக்கும்பொருட்டு, பஞ்சாயத்துத் தலைவராக, அவர்களுடைய பழைய நண்பராகிய ஸஅதிப்னுமுஆத் [ரலி] அவ் யூதர்களாலேயே தெரிந்தெடுக்கப் பெற்றார். நபிகள் பெருமான் [சல்] அவர்களே இத்தீர்மானம் செய்ய வேண்டுமென அவர்கள் கோரியிருப்பின், அவர்களுடைய சகோதர வர்க்கத்தினராகிய பனீ கைனுக்காஃகளும் பனீநுலேர்களும் பெற்ற தண்டனையே பெரும்பாலும் அவர்களும் பெற்றிருப்பார்கள். அக் கருணை மூர்த்தியின் கடுமையான ஆக்கினை, அன்னவர்கள் நாடு கடத்தப்படுவதாகவே இருந்திருக்கும். ஆனால், அவர்கள் தாமே தெரிந்தெடுத்த பஞ்சாயத்ததிபராகிய

ஸஅத் ஆபத்துக் காலத்தில் அவர்கள் புரிந்த துரோகம் மிகவுங் கொடியதென்று கருதினர். அக்கொடிய துரோகிகள் கடுமையாய்த் தண்டிக்கப்படாவிடின், எதிர்காலத்தில் செய்யப்படும் கிரமமான ஒப்பந்தங்கள் கௌரவிக்கப்பெருது, அவற்றில் கையொப்ப மிடுவோரால் அவை பெறுமதியற்ற வெறுங்காகிதத்துண்டுகளாகவே கருதப்படுமென்று அவர் நம்பினர். ஆதலின், தோல்வியடைந்த சத்துருவுக்கு அவர்களுடைய வேதமாகிய பழைய ஏற்பாடு (தௌராத்) விதித்துள்ளதைக் காட்டினும் இலேசான தண்டனை விதித்தல் அவர்களுக்குத் தகாதென்று அவர் தீர்மானித்தார். இவ் விஷயத்தில் பழைய ஏற்பாடு விதிக்கும் தண்டனை வருமாறு:—

"அவர்கள் உன்னோடே யுத்தம் பண்ணுவார்களானுல், நீ அதை முற்றிக்கைபோட்டு, உன் தேவனுகிய கர்த்தர் அதை உன் கையில் ஒப்புக்கொடுக்கும்போது, அதிலுள்ள புருஷர்கள் எல்லாரையும் பட்டயக்கருக்கினுல் வெட்டி, ஸ்திரீகளையும் குழந்தைகளையும் மிருகஜீவன்களையும் அப்பட்டணத்திலுள்ள எல்லாவற்றையும் கொள்ளையிட்டு, உன் தேவனுகிய கர்த்தர் உனக்கு ஒப்புக்கொடுத்த உன் சத்துருக்களின் கொள்ளைப்பொருளை அனுபவிப்பாயாக. இந்த ஜாதிகளைச்சேர்ந்த பட்டணங்களா யிராமல், உனக்கு வெகு தூரத்திலிருக்கிற சகல பட்டணங்களுக்கும் இப்படியே செய்வாயாக. உன் தேவனுகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற ஏத்தியர், எமோரியர், கானனியர், பெசிரியர், ஏவியர், எபூசியர் என்னும் ஜனங்களின் பட்டணங்களிலே மாத்திரம் சுவாசமுள்ள தொன்றையும் உயிரோடே வைக்காமல், அவர்களை உன்

நீ தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே சங்காரம் பண்ணக்கடவாய்'' (உபாகமம், 20 : 13—17).

எனவே, ஸஅத்ரலி செய்த தீர்மானத்தின்மீது, மேற்காட்டிய மோசேயின் நியாயப் பிரமாணத்திற் கிணங்க, பனீ குறைளா வர்க்கத்தினருள் ஆடவர்களாகிய முந்நூற்றுவர் மரண தண்டனை விதிக்கப்பட்டு, பெண்டிரும் பிள்ளைகளும் சிறைகொள்ளப்பட்டு, அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இத்தண்டனை கடுமையானதாகத் தோன்றினும், மோசேயின் வேதச்சட்டப்பிரகாரம் தோல்வியுற்ற சத்துருக்களுக்கு, யூதர்கள், இப்படிப்பட்ட தண்டனை விதித்தலே வழக்கமாயிருந்தது. அன்றியும், பனீ குறைளாக்கள் செய்த படுமோசக் குற்றத்தை இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் இழைக்கும் எவருக்கும் நாகரிகம் படைத்த இக்காலத்தும் இதனினும் இலகுவான தண்டனை விதிக்கப்பட மாட்டாதென்றறிக. சமீபத்தில் நடைபெற்ற நியூரம்பர்க் தீர்ப்பைப் பாருங்கள். இத்தீர்ப்பளித்த நியாயாதிபதி குற்றவாளிகளான அவர்களாலேயே தெரிந்தெடுக்கப்பட்டவரா யிருந்தார் ; தண்டனை அவர்களுடைய தெய்விகச் சட்டத்திற்கு முற்றிலும் ஒத்ததாகவே விதிக்கப்பட்டது. மேலும் அவர்கள் இழைத்த பாதகம் மகத்தான ஆபத்தை விளைவிக்கத்தக்தா யிருந்தது. இச்சம்பவத்தை யொட்டி நபிகள் பெருமான்மீது பழி சுமத்துதல் அறிவுடைமையாமோ ? இத்தண்டனை கொடிதென்னும் ஆட்சேபம் மோசேயின் நியாயப் பிரமாணத்திற்கு விரோதமான ஆட்சேபமாகும். இஃது அப்பண்டைக்கால யுத்த தர்மத்தின் கண்டனமாக அமைந்திருப்பது மட்டுமின்றி, இவ்வாறு ஆட்சேபிப்

போர், அப்புராதன தர்மத்தை மேற்கொள்வதும் அதனினும் சிறந்ததும் தயாளமிக்கதுமாகிய புதிய தர்மம் ஒன்று மானிடர்க்கு அருளப்படவேண்டியதன் அவசியத்தைத் தம்மை அறியாமலே ஒப்புக்கொண்டவர்களாகவும் ஆகின்றனர். நபிகள் பெருமானுக்குச் சம்பந்தமற்ற நிகழ்ச்சிகளையொட்டி அவர்கள்மீது குற்றங் கற்பிக்கத் துணியும் கிறிஸ்தவநேயர்கள், தமது கண்டனத்திற்கு இலக்காகி நிற்கும் பழைய ஏற்பாட்டின் விதிகளையும், மானிட சுபாவத்திற்கு மேம்பட்டதும் தாம் மேற்கொள்ளக் கூடாததும் எட்டுச் சுரைக்காயாக இருப்பதுமாகிய புதிய ஏற்பாட்டின் விதிகளையும், இஸ்லாமிய யுத்ததர்மத்தையும் காய்தல் உவத்தலின்றி ஒப்புநோக்குவார்களாயின், தயாளமிக்கதும் அருள் நிறைந்ததும் அன்பு ததும்புவதும் மானிட இயல்பிற்கேற்றது மாகிய ஓர் உத்தம யுத்த தர்மத்தை உலகுக் களித்தருள எவ்வாறு அம் மஹாபுருடரே காரண பூதராய் நின்று விளங்குகின்றனர் என்னும் உண்மையை யுணர்ந்து தமது மயக்கம் அகலப்பெறுவர்.

### கற்பழிக்க அனுமதித்தனரென்னும் கொடிய நிந்தனை

இறுதியாக பனூமுஸ்தலிக் கிளையைச் சார்ந்த மாதரைக் கற்பழிக்க நபிகள் பெருமான் ஸல் இடங் கொடுத்தார்கள் என்று மிஸ்டர் கியாஷ் பிதற்றுவது ஒரு கொடிய பொய்ந் நிந்தனையாகும். மேலும், "எல்லா ஹதீது நூல்களும்" இச்சம்பவத்தைக் குறிப்பிடுகின்றன வென்று இவர் கூறுவது எத்துணைத் துணிகரமான புளுகாயிருக்கிறது! இஸ்லாத்தின்மீது குரோத மனப்பான்மை கொண்ட நூலாசிரியராகிய மூயிர் தாமும் அறியாத இக்குற்றச்சாட்டிற்கு ஹதீது

கிரந்தம் ஒன்றிலேனும் ஆதாரமில்லை; 'முஸ்லிம் சைன்யத்தில் சிலர் சிறைப்படுத்தப்பட்டிருந்த சில மாதர்களைத் தாத்காலிகமாய் மணம் புரிந்து கர்ப்பத்தடை உபாயம் ஒன்றைக் கைக்கொள்ள விரும்பினார்கள்' என்று அபூசஈத்குத்ரீ வாயிலாய்ப் பிறந்த செய்தியொன்றுதான் ஹதீதுத் தொகுதிகளில் காணப்படுகின்றது; ஆனால், அவர்கள் அவ்வாறு செய்தனர் என்பதற்கு ஓர் அற்ப அத்தாட்சியேனும் இல்லை. உண்மையில் அபூசயீதின் அறிக்கையானது அஜ்ல்என்னும் ஒருவகைக் கர்ப்பத்தடையைப் பற்றியதாகும்; இவ்வறிக்கையில் பனூமுஸ்தலிக் மாதர்கள் எவ்வாறு நடத்தப் பெற்றனர் என்பதுபற்றி ஒரு வார்த்தையேனு மில்லை. இஸ்லாம் தோன்றுவதற்கு முந்திய காலத்தில் தாத்காலிக மணங்கள் நடைபெற்று வந்தனவென்பது உண்மையாகும். குர்ஆன் ஷரீபானது இவ்வழக்கத்தை ஒழித்தது; ஆனால், ஒவ்வொரு சீர்திருத்தமும் முறைமையாகவும் படிப்படியாகவும் புகுத்தப்படவேண்டியதா யிருந்தது. யுத்தக் கைதிகளை மணம்புரிதல் சம்பந்தமாக அத்திருமறை வியக்தமான விதி வகுத்திருக்கிறது. மிஸ்டர் கியாஷின் ஆதாரமற்ற அபாண்டக் குற்றச்சாட்டைப் பின்வரும் குர்ஆன் வாக்கியம் மறுத்தொழிப்பதாய் அமைந்து விளங்குகின்றது:—

"மேலும் நுங்களுக்குள் எவரேனும் நன்னம்பிக்கை கொண்டு சுயேச்சை பெற்ற மாதரை மணக்கப் போதுமான சாதனம் தம்வயம் இல்லாதவராயிருப்பின், அவர் நன்னம்பிக்கை கொண்ட பணிப்பெண்டிருள் நுங்கள் வலக்கரங்களுக்குச் சொந்தமானவர்களி னின்றும் (மணம் புரியக்கடவர்); ............

ஆதலின், அவர்களுடைய எஜமானரின் அனுமதியின் மீது அவர்களை மணம்புரிந்து, அவர்கள் சோரநாய கரைச் சேராமலும் வியபிசாரஞ் செய்யாமலும் கற்புடையவர்களாகவும் இருப்பின், அவர்களுக்குக் கிரமமான ஸ்திரீ தனம் (மஹர்) அளியுங்கள்; மேலும் அவர்களை மணம் புரிந்தக்கால் அவர்கள் ஒழுங்கீனமான குற்றம்புரியின், சுயேச்சை பெற்ற மாதர்க்குரிய தண்டனையில் அரைப்பங்கு அவர்கள் பெறுவார்கள்; இது நுங்களுக்குள் தீமையில் வீழ்தலை அஞ்சுவோரின் பொருட்டாக விருக்கும்; மேலும் நீங்கள் விலகிக்கொள்வீர்க ளாயின், (அது) நுங்களுக்கு நலமாகும்; மேலும் அல்லாஹ் (பாபத்தை) மன்னிப்பவனாக(வும்) அன்புடையவனாக(வும்) இருக்கின்றான்"—(4:25).

இனி, பனூமுஸ்தலிக் வர்க்கத்தினரான மாதர்களைப் பொறுத்த மட்டில், எத்தகைய விடுதலைக் கிரயமும் வேண்டப்படாமல் அவர்கள் யாவரும் விடுதலை செய்யப்பெற்றார்கள் என்பதற்கு எல்லா ஹதீது நூல்களிலும் மிகவும் தெளிவான சரித்திரச் சாட்சியங்கள் காணப்படுகின்றன; என்னெனின், அவர்களுள் ஒருவராகிய ஜுவைரிய்யா[ரலி] அம்மையார் விடுதலைபெற்று, நபிகள் பெருமான் அவர்களது வாழ்க்கைத் துணைவியராகும் பாக்கியம் பெற்றார்கள்.

மேலே கூறிப்போந்த நியாயங்களால் எம்பெருமான் முஹம்மது[ஸல்] அவர்கள்மீது அயல் மதவாதிகள் சுமத்துவன யாவும் ஆதாரமற்ற வீண்பழிகளே என்னும் உண்மை பெறப்படும். "காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளே" என்றும், "தீரக் காய்ந்துழி நல்லவுந் தீயவாம்" என்றும் ஆன்றோர் கூறிச்சென்ற முதுமொழிகளுக் கிணங்க, பொறுமைக்

Q7:3
N41



குணம் படைத்த கிறிஸ்தவர் சிலர் இஸ்லாத்தின் மீதும் மானிடவர்க்கத்திற்கு நிகரற்ற மஹோபகாரி யாய்த் தோன்றிய நபிகள் பெருமான்மீது வீண்பழி சுமத்துவதையே தமது மதப்பிரசாரமாய்க் கொண்டி ருக்கின்றனர். இனியேனும் இவர்கள் உண்மைதெளிந் தடங்குவார்களென யாம் நினைக்கின்றேம். இந்நூலிற் கண்ட விஷயங்களை எம் நேயர்கள் யாவரும் ஊன்றிப் படித்து, குறும்புத்தனம் படைத்த எதிர் மதவாதிகள் ஆங்காங்கு எழுப்பும் ஆட்சேபங்களுக்குத் தக்க சமா தானங்கூறி, எம்பிரான் ஸல் அவர்களது இரும்புகழ் எங்கும் பொங்கச்செய்ய வல்ல பண்டிதர்களாக விளங் குவார்களென்றே நாம் நம்புகிறேம். ஆமீன்!

110575

---

## நபிகள் நாயக மான்மியம்

அச்சி லிருக்கிறது. மௌ - ஷிப்லீ நுஃமானீ எழுதியுள்ள சீரத்துன்னபீ என்னும் பெரிய கிரந் தத்தின் அரிய தமிழ் நூல். ந. நா. மா. இரண்டு பாகங்களாக வெளிவரும். முதல் பாகம் சில வாரங்களில் வெளிவந்துவிடும். முன் பதிப்பின் முதல் வால்யூமைவிட இதில் 9 அதிகாரங்கள் அதிகம். மொத்தம் 29 அதி. ஆக இந்த முதற் பாகம் வெளிவரும். அடுத்தபடியில் 2 - ஆம் பாகம் வெளிவரும்.

பா. தாவூத்ஷா சாஹிப்.

ஷாஜஹான் புக் டெப்போ, 30, சாந்தோம், சென்னை-4

# ஷாஜஹான் புக் டெப்போ

30, சாந்தோம் : : சென்னை - 4

" தாருல் இஸ்லாம் " ஆசிரியர்

அல்ஹாஜ் பா. தாவூத்ஷா பீ. ஏ.,

அவர்களால் எழுதப்பட்ட

## ஒரு சில அரிய நூல்கள்

### சஹீஹ் புகாரீ

(தமிழில் புகாரீ சுருக்கம்)

குர்ஆனுக்கு அடுத்தபடியிலுள்ள, " சஹீஹ் புகாரீ " என்னும் மெய்யான ஹதீதுகள் நிரம்பிய கிரந்தத்திலிருந்து 513 ஹதீதுகளும், ஏனைப் பெரிய ஹதீது நூல்களிலிருந்து 177ம் ஆகமொத்தம் 690 ஹதீதுகள் சரியான மொழிபெயர்ப்புடன், அழகிய வியாக்யானங்களுடன், சுமார் 600 பக்கங்களில் வழுவழுப்பான வெண் தூய்மைத் தாளில் நேர்த்தியாக அச்சிடப்பட்டு இப்பொழுது வெளிவந்துள்ளன. காகிதப் பஞ்சக் காரணமாகச் சொற்பப் பிரதிகளே கைவய முள்ளனவாகையால், முந்திக்கொள்பவருக்கே பிரதி கிடைக்கும். பிரதி விலை ரூ. 7 / 8.

### " ஜவாஹிருல் புர்க்கான் " அம்மயத் ஜுஜு

குர்ஆன் ஷரீப் 30-ஆம் பாகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பும் அதன் விரிவான வியாக்யானமும் ஒருங்கே கூடியன. 201 பக்கங் கொண்டதாய்த் தலைப்பில் குர்ஆன் அரப்ஆயத் மிகப் பெரிதாய்ப் போடப்பட்டு, அதன்கீழ் அதன் சரியான செந்தமிழ் மொழிபெயர்ப்பும், பிறகு விரிவான அருந்தமிழ் வியாக்யானமும் (தப்ஸீர்) அச்சிடப்பட்டு, கெட்டியான காலிகோ பைண்டும் செய்யப்பட்டது விலை ரூ. 2—8—0.

### ஷை அம்மயத் ஜுஜு

அரபியிலேயே ஆயாத்துக்களைத் தலைப்பில் போட்டு, அதன் கீழே பெரிய எழுத்தில் அதன் அர்த்தம் மட்டும் எழுதி, மிக அழகான திக் பேப்பரில் அச்சிட்டிருக்கிறோம். இது பள்ளி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடியது. விலை ரூ. 1—4—0.

### அல்ஹம்துதப்ஸீர்-சூரத்துல்பாத்திஹா விரிவுரை

அல்ஹம்து சூராவுக்குத் தப்ஸீர். " அல்ஹம்துசூரா " குர் ஆன் ஷரீபின் தோற்றுவாயே யாயினும், இதுவே அவ்வேதத்தின் முழுக்கருத்

தின் சுருக்கமாக (உம்முல் குர்ஆனுக) இருக்கிறது. எனவே, இந்த அல்ஹம்தின் முழுக்கருத்தையும் அறிந்தால், குர்ஆன் ஷரீபின் பூரா தாத்பரியத்தையும் உணர்ந்தது போலாகும். ஆகையால், குர்ஆனின் கருத்தை யுணருமுன்னே அல்ஹம்தின் ஆழிய கருத்தினை அறிந்துண ருதல் அவசியமேயாம். இன்னம், இச்சிறு நூலில் பல்வேறு மதங்களுக் கும் தக்க ரத்து கூறப்பட்டிருக்கிறது. அனைவரும் ஆவலுடனே அறிந் துணரல் அத்யாவசியமே. மேலேயுள்ள 'அம்மயத்' தப்ஸீரில் இந்த அல்ஹம்து சேர்க்கப்படவில்லை. மிகத் தெளிவாய், முத்துப்போன்ற எழுத்தால், அரப் ஆயாத்தும் அர்த்தமும் "கொட்டையெழுத்தால்" அழகிய தாளில் நேர்த்தியாய் அச்சிட்டுப் பூர்த்தியான பைண்டும் செய் துள்ளது. மலிவான விலை ; தெளிவான உரை. விலை ரூ. 1—0—0.

## மஹான் முஹம்மத் நபி (சல்) இரண்டாம் பதிப்பு

நபிகள் நாயகம் முஹம்மத் நபி (சல் அம்) அவர்களின் (சரித்திர) சம்பந்தமான பூர்விகமானதும் சரியானதும் உண்மையானதுமான சரித் திரம் சுருக்கமாகவும் விளக்கமாகவும் விரிவாகவும் வரையப்பட்டுள்ள அழகிய நூல். இவ்விரண்டாம் பதிப்பில் பல தலைவர்களின் அபிப் பிராயங்கள் சேர்க்கப்பட்டு விரிக்கப்பட்டிருக்கிறது. நேர்த்தியான அச்சு. கிளேஸ் காகிதம். விலை ரூ. 1—12—0.

## அபூபக்ர் சித்தீக் (ரலி) இரண்டாம் பதிப்பு

குலபாயெ ராஷிதீன் என்றழைக்கப்படும் முதல் நான்கு கலீபாக் களுள் முதல்வராய் விளங்கிவரும் ஹஜ்ரத் அபூபக்ர் சித்தீக் அவர்களு டைய ஜீவிய சரித்திரம் தக்க ஆதாரங்களுடன் மிக்க விளக்கமாகவும் விரிவாகவும் எழுதப்பட்டிருக்கிறது. திக் கிளேஸ் காகிதம். விலை ரூ. 2—0—0.

## உமரெ பாரூக் (ரலி) இரண்டாம் பதிப்பு

குலபாயெ ராஷிதீன் என்றழைக்கப்படும் முதல் நான்கு கலீபாக் களுள் இரண்டாவதாய் விளங்கிவரும் ஹஜ்ரத் உமரெ பாரூக் அவர்களு டைய ஜீவிய சரித்திரம் தக்க ஆதாரங்களுடன் மிக்க விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றது. நல்ல முத்துப்போன்ற எழுத்தில் 253 பக் கம் ; நல்ல திக் காகிதத்தில் மிக்க அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ. 2—4—0.

## உதுமான் (ரலி) அலீ (ரலி) சரிதை

குலபாயெ ராஷிதீன் என்றழைக்கப்படும் முதல் நான்கு கலீபாக் களுள் மூன்றாவது நான்காவதாய் விளங்கிவரும் ஹஜ்ரத் உதுமான்

(ரலி), அலீ (ரலி) சரிதை தக்க ஆதாரங்களுடன் மிக்க விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. காகிதப் பஞ்சம் மிக்குள்ள இக்காலத்தில் நல்ல முத்துப்போன்ற எழுத்தில் நல்ல கிளேஸ் காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ. 2—0—0.

[மஹான் முஹம்மத் நபி (சல்) முதல் அபூபக்ர் சித்தீக், உமரெ பாரூக், உதுமான் அலீ (ரலி) முடிய நான்கு நூல்களும், குலபாயெ ராஷிதீன் வரிசை யென்று பெயரிடப்பட்டு ஒரு செட்டாக உப யோகிக்கத்தக்கன.]

## ஈமான் (இஸ்லாத்தின் மூலக் கொள்கைகள்)

இவ்வழகிய நூல் இஸ்லாம் மார்க்கத்தின் ஈமான் சம்பந்தமான மூலக்கொள்கைகளாகிய ஏழு அம்சங்களைப்பற்றி விரிவாகவும் விளக்க மாகவும், புத்திக்கும் யுக்திக்கும் பொருந்தும் வண்ணமாகவும் இனிய தமிழில் எழுதப்பட்டுள்ளது. இஸ்லாத்தில் ஈமான் கொள்ள வேண்டிய விஷய விளக்கமும் அதன் துஆவும் உடன்காணப்படும். 4-ஆம் பதிப்பு; திக் கிளேஸ் காகிதம். விலை அணா 8.

## இஸ்லாம் (சித்திரப் படங்களுடன்) 8-ஆம் பதிப்பு

ஹனபீ, ஷாபிஈ, இருதிறத்தாருக்கும் அத்தியாவசியமானது.

இது முஸ்லிம்க ளெல்லாருக்குமே அத்தியாவசியமான ஒரு மிகச் சிறந்த தமிழ்நூல். இதில் இஸ்லாத்தின் ஐந்து பர்ல்களும் (கடமை களும்) மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் புத்திக்கும் யுக்திக்கும் மிகமிகப் பொருத்தமாகவும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கடமையின் சார்பாய தத்துவமெல்லாம் (மஸ்அலாக்களுடன்) விஸ்தரிக் கப் பட்டிருப்பதுடன், அனுஷ்டானத்திற்கு வேண்டிய விவரங்களைத் தும் சாங்கோபாங்கமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. பல புதிய ஆப் டோன் படங்கள் இந்த எட்டாம் பதிப்பில் சேர்க்கப்பட்டுப் பல பக்கங் கள் அதிகப்படுத்தப்பட்டு, கண் கவரும் பான்மையாய்ச் செய்யப்பட் டிருக்கிறது. விலை ரூ. 2—8—0.

## இஸ்லாமிய ஞானபோதம்

மேனாடுகளில் இஸ்லாத்தின் போதனைகள் தீவிரமாய்ப் பரவுவதற்கு இப்புத்தகத்திலுள்ள விஷய ஞானங்களே உதவியளித் திருக்கின்றன வென்பதில் சிறிதும் ஐயமில்லை. இந் நூலின்கண்ணே இஸ்லாத்தின் பல் வேறு உண்மைத் தத்துவச் சிறப்புக்கள் தூய்மையாக விளக்கப்பட்டிருப்

பதுடன், சிருஷ்டி கர்த்தா ஒருவன் இருக்கிறானென்று இதில் மெய்யாக ருஜூபிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திகரா யிருப்பவருக்கும், கடவுளே இல்லையென்று கூறிக்கொண்டு நாஸ்திகராய்த் திரிபவருக்கும், ஒவ்வொரு முஸ்லிம் ஹிந்து கிறிஸ்தவருக்கும் இந்நூல் பகுத்தறிவுக் கொத்த நன்னூலாகும். விலை ரூ. 4—0—0.

## நாயகத்தின் நற்குணங்கள்

நபிகள் திலகத்தின் குணாதிசயங்களும் நன்னடக்கைகளும் இப்படி இருந்தனவென்று அறிந்துகொள்ள இஃதொரு முதன்மையான நூல். இதனை எல்லா முஸ்லிம்களும் வாசித்தறிதல் வேண்டும். அப்பெருமானாரைப் பின்பற்றி யொழுக விரும்பும் சன்மார்க்கர்களுக் கெல்லாம் அத்தியாவசியமானது. சஹீஹ் புகாரீயும் இந்நூலும் எம்பெருமானாரை உள்ளபடியே உணர்ந்துகொள்ள விழையும் ஒவ்வோர் ஏனை மதத்தின ருக்கும் அத்தியாவசியமானவையே. இதன் விலை ரூ. 1—8—0.

## நாயக வாக்கியம் 451 (புதிய பதிப்பு)

நபிகள் நாயகம்(சல்) அவர்கள் மனிதகோடிகளின் நன்மையைக் கோரித் திருவாய்மலர்ந்தருளிய 451 திருவாக்கியங்களும் (ஹதீது ஷரீபுகளும்) அச்சிடப்பட்டிருக்கின்றன. இவ்வாக்கியங்கள் சிறந்த சன்மார்க்கத்தைப் போதிக்கக்கூடியவைகள். இப்புத்தகத்தைப் படிப்பதனால் சகல முஸ்லிம்களும் நாயகமவர்களின் திருவாக்கியங்களின் உண்மைக் கருத்துக்களை அறிந்து அவற்றின்படி நபிகள் நாயகத்தைப் பின்பற்றி நடத்தற் கேது உண்டாகும். இப்புத்தகம் சட்டைப் பைக்குள் அடங்கும் விதமாக அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1—8—0.

## இஸ்லாம் இணையிலாச் சாந்தி

(முன் 'இஸ்லாம் எப்படிச் சிறந்தது' என்னும் பெயருடன் வெளியிடப்பட்டிருந்த நூலை இப்பொழுது மேற்கண்ட பெயருடன் வெளியிட்டிருக்கிறோம்.)

இது டாக்கா சர்வகலாசாலை அறிஞர் (நவமுஸ்லிம்) ஸிராஜுல் இஸ்லாம் (முன் பெயர் தாஸ் குப்தா) என்பவரால் எழுதப்பட்ட விஷயங்களும், ஏனைப் பல அரிய விஷயங்களும் சேர்ந்து மூன்று பாகங்களாக அமையப்பெற்ற நூல். இந்து மதம், கிறிஸ்து மதம், பௌத்த மதம், ஜைனம் முதலியவற்றுடன் இஸ்லாம் ஒப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. சித்திரப் படங்களுடன் விலை ரூ. 1—8—0.

44109

# ஷாஜஹான் புக் டெப்போ

## பிரசுரங்கள்

" தாருல் இஸ்லாம் " ஆசிரியர்

**அல்ஹாஜ் பா. தாவூத்ஷா பீ. ஏ,**

அவர்கள் எழுதியவைகள்

| | | ரூ. | அ |
|---|---|---|---|
| ஜவாஹிருல் புர்க்கான் அம்மயத் (30-ஆம் பாகம்) | | | |
| வியாக்யானத்துடன் | ... ... | 2 | 8 |
| ஷி அம்மயத் மொழிபெயர்ப்பு மட்டும் | ... | 1 | 4 |
| அல்ஹம்து தப்ஸீர் (ஸூ.பாத்திஹா விரிவுரை) | | 1 | 0 |
| சஹீஹ் புகாரீ—தமிழில் புகாரீ சுருக்கம் | ... | 7 | 8 |
| இஸ்லாமிய ஞானபோதம் | ... ... | 4 | 0 |
| இஸ்லாம் (8-ஆம் பதிப்பு)சித்திரப்படத்துடன் | | 2 | 8 |
| நாயக வாக்கியம் 451 (ஹதீதுஷரீபு) | ... | 1 | 8 |
| குலபாயெ ராஷிதீன் வரிசை : | | | |
| மஹான் முஹம்மத் நபி(சல்) 2-ஆம் பதிப்பு | | 1 | 12 |
| அபூபக்ர் சித்தீக்(ரலி) 2-ஆம் பதிப்பு | ... | 2 | 0 |
| உமரெபாரூக்(ரலி) 2-ஆம் பதிப்பு | ... | 2 | 4 |
| உதுமான்(ரலி) அலீ(ரலி) சரிதை | ... | 2 | 0 |
| ஈமான் (4-ஆம் பதிப்பு) | ... ... | 0 | 8 |
| இஸ்லாம் இணையிலாச் சாந்தி | ... ... | 1 | 8 |
| நாயகத்தின் நற்குணங்கள் | ... ... | 1 | 8 |
| குத்பா பிரசங்கம் | ... | (அச்சில்) | |
| ஜீவவசிய பரம ரஹஸ்யம் | ... | (அச்சில்) | |

30, சாந்தோம், சென்னை - 4